
# முதலாளி

நாடகம்



வேங்கடம்

1064 - N/20
நாட 501
1064 - N/20
4/694

A
694

# முதலாளி

—[ நாடகம் ]—

1064 — N/20

எழுதியவர்:

## வேங்கடம்

[ ஆ. கொ. வேங்கடராமானுஜன் ]
முன்னாள் ஆசிரியர்: "செங்கோல்"
முன்னாள் பொதுச் செயலாளர்,
மாநில தமிழரசுக் கழகம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அன்பளிப்பு

ஆழ்வார் பதிப்பகம்
சென்னை - 17
23, ஏரிக்கரை ரோடு

முதற் பதிப்பு :

மன்மத ஆண்டு, தை மாதம் (பிப்ரவரி 1956)

உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூபாய் மூன்று

இந் நாடகத்தின் எல்லா உரிமைகளும் ஆசிரியரைச் சேர்ந்தவை. இந் நாடகத்தை நடிப்பதற்கும், இதில் வரும் பகுதிகளை உபயோகிப்பதற்கும் ஆசிரியரின் இசைவு பெறுதல் வேண்டும்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

நூல் வரிசை எண்: 283

நன்கொடை எண்: 283

அச்சிட்டோர் :

நாதன்ஸ் பிரஸ்

சென்னை - 2

# காணிக்கை

என்னைச் சிறுவயதில்
போற்றி வளர்த்த எனது
பெரிய தந்தையார்
நம்மாழ்வார்சுவாமி
அவர்களின்
பொற்பாத கமலங்களில்
இந்த நூலை என் அன்புக்
காணிக்கையாகச்
சமர்ப்பித்து வணங்குகிறேன்.

# தமிழ் அன்பர்களுக்கு

வணக்கம்

''முதலாளி'' எனது முதல் நாடக நூல். தமிழ் அன்னைக்கு பய பக்தியுடன் சூட்டி மகிழ்கிறேன்.

எழுதவேண்டும் என்ற ஆர்வம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு ஏற்பட்டதுண்டு. ஆனால் நான் எழுதியது மிக மிக சொற்பம். காரணம், எழுத்துலகத்தைவிட அரசியல் உலகில் அதிக ஆர்வம், ஈடுபாடு கொண்டிருந்ததுதான் எனக் கருதுகிறேன். கடந்த ஓராண்டு காலமாக எனது நேரத்தில் பெரும்பகுதியை எழுதுவதில் பயன்படுத்தி வருகிறேன். அதன் பலன்தான் இந்த ''முதலாளி'' நாடகம். இந்நூலைத் தொடர்ந்து ''காணிநிலம், தாயில்லாப் பிள்ளை, அன்னையும் மகனும், வாழ்வும் தாழ்வும், அன்பளிப்பு, மங்கள தீபம், இவன்தான் மனிதன், பெண்ணும் மண்ணும், தேசத் தொண்டன் ஆண்டியப்பன்'' முதலிய நாடகங்களும் நாவல்களும் வெளிவர விருக்கின்றன என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோஷலிசத் தமிழ் அரசு அமையப் பணி புரியும் தமிழரசுக் கழகத்தின் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களில் நானும் ஒருவன். தலைவர் ம. பொ. சி. அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேறு பெற்றவன். எனக்கு எழுதும் ஆற்றல் ஓரளவாவது வளர்ந்திருக்கிறது என்று வாசகர்கள் கருதினால், அதற்குக் காரணம் தலைவர் ம. பொ. சி. அவர்களின் சிந்தனை, பேச்சு, எழுத்து ஆகியவற்றில் ஊறித் திளைத்ததின் விளைவுதான்.

அணிந்துரை அளித்திருக்கும் திரு. கு. மா. பாலசுப்ரமணியம் அவர்கள் சிறந்த கவிஞர், கதாசிரியர்; பல திரைப் படங்களுக்கு பாடல்கள், உரையாடல்கள் வழங்கி வருபவர். எல்லாவற்றுக்கும் மேலாக எனது அரிய நண்பர். அவருக்கு எனது நன்றி.

இந்நூல் வெளிவர அளவற்ற ஆர்வம் காட்டி ஆதரவு அளித்த பழைய மாம்பலம் எனது அன்புக்குகந்த நண்பர்கள் அனைவருக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய நாதன்ஸ் பிரஸ் உரிமையாளர் திரு. பி. என். வைத்தியநாதன் அவர்களுக்கும், அச்சுக் கோத்து, அச்சிட்டு, பைண்டு செய்யும் பணியில் ஈடுபட்ட தொழிலாளி அன்பர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றி.

அன்பன்

**வேங்கடம்**

(ஆ. கொ. வேங்கடராமாநுஜன்)

# அணிந்துரை

தமிழ் இலக்கிய உலகிலே, நண்பர் வேங்கடராமாநுஜன் ஒரு வளர்பிறை; ஆனால், மூன்றாம் பிறையல்ல; முழு வடிவை அடைந்து கொண்டிருக்கும் வட்ட நிலா! ஆம்; பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னே சென்னையிலே நான் "தமிழன்" எனும் வாரப்பத்திரிகையின் துணையாசிரியனாக இருந்தபோது இவருடன் ஏற்பட்ட அறிமுகம், நாளுக்கு நாள் வளர்பிறையாக – நட்பாக – வளர்ந்தோங்கியது. அது போலவே, இவருடைய எழுத்தாற்றலும் வளர்ந்து வந்திருக்கிறது.

அன்று இவர் ஒரு கதாசிரியர்; – "கொ. வே. ரா." எனும் பெயரால் பல பத்திரிகைகளிலே இனிய சிறு கதைகளை வழங்கியவர். பின்னர், "செங்கோல்" வாரப் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர்; அதிபருங்கூட. அத்துடன் "கேரளத்துக் கட்டழகி", "என் கதை" முதலிய பல குறுநாவல்களையும் புனைப்பெயருடன் இயற்றியிருக்கிறார். இவ்வாறு வளர்ந்து வந்த இலக்கிய சேவையினால், தமிழ் நாடக உலகுக்கு இவர் அளிக்கும் முதற் காணிக்கைதான் இந்த "முதலாளி".

"நான் ஒரு நாடகம் எழுதியிருக்கிறேன்" என்று திரு. அனுஜன் (**வேங்கடம்**) கூறியபோதே, நான் நிச்சயமாக எதிர்பார்த்தேன் – அதிலே, நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்கள் பல இருக்கு மென்று. காரணம், "கலை என்பது கலைக்காக மட்டுமல்ல; வாழ்க்கைக்காகவும்தான்" என்னும் சீரிய நோக்குடைய தமிழரசுக் கொள்கையாளர்களிலே குறிப்பிடத்தக்க ஒருவர் திரு. அனுஜன்! ஆகையால், வெறும் பொழுது போக்கு இலக்கியத்தை உருவாக்குவது இவருடைய பண்பாக இருக்கமுடியாதென்பதே என் உறுதி.

அந்த நம்பிக்கை வீணாகவில்லை. தமிழன், நாட்டுப் பற்றிலும், மொழிப் பற்றிலும் சிறந்தவன் மட்டுமல்ல — உழைக்காமல் கொழுக்கும் ஊதாரித்தனத்தை வெறுப்பவன், — பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தத் துடிப்பவன், — அநீதியையும் அக்கிரமத்தையும் அழிக்கத் தயங்காதவன் — என்பனவற்றை, வசந்தன், கோபால், பூங்காவனம், கோமதி போன்ற கதா பாத்திரங்களின் மூலம், அழகாகவும் பொருத்தமாகவும் இந்த நாடகத்தில் விளக்கியிருக்கிறார் திரு. அனுஜன்.

அதே சமயத்தில், எளியோரை எத்திப் பிழைக்கும் இனத்துரோகிகளும், — பணம் படைத்தவர்களுக்கே 'பராக்' சொல்வதன் மூலம் பகட்டாக வாழ விரும்பும் பதவிப் பித்தர்களும், — புகழுக்காகவும், சுக போகங்களுக்காகவும் மனச்சாட்சியையே விற்றுவிடும் புல்லுருவிகளும் கூட இங்கே சிலர் இல்லாமலில்லை என்ற குறிப்பையும் வேதனையோடு பாலு, கோகிலம் போன்ற சில கதா பாத்திரங்களின் மூலம் சித்தரித்திருப்பதுடன், அத்தகையோரின் ஏமாற்றமான முடிவையும் இதமாகக் கூறி எச்சரித்திருக்கிறார்.

'சந்தேகப்பேர்வழி ஐயம்பெருமாள்' எனும் கதா பாத்திர உருவகம், நாடகாசிரியரின் நகைச் சுவையான — புதுமையான கற்பனைத் திறனுக்கு நல்ல சான்று! நாடகம் முழுவதிலும், சமூகத்திலுள்ள இழிவான போக்குகளை இடித்துரைக்கும் சமயங்களிலெல்லாம், அநேகமாக எல்லாப் பாத்திரங்களுக்குமே, மறைமுகமான முறையிலும், வாசகர் மனதில் பதியும் வகையிலும் நாகரிகமான வசனங்களை அமைத்திருப்பது பாராட்டத் தக்கது; நம் பண்பிற்கு மாறாதது.

நாடகத் துறையில் திரு. அனுஜனுக்கு இது முதல் முயற்சியானாலும், தமிழ் மக்களிடையே இந்த "முதலாளி" அமோகமான ஆதரவைப் பெறுவார் என்றே நம்புகிறேன். இன்னும், மென்மேலும் சிறந்த நாடகங்கள் பலவற்றைத் தொடர்ந்து நமக்களிக்கும் ஆற்றல் வளரவேண்டுமென்று திரு. அனுஜனை அன்போடு வாழ்த்துகிறேன்.

14—2—'56
சென்னை

**கு. மா. பாலசுப்ரமணியம்**

## உங்களைச் சந்திப்போர்

**சோமசுந்தரம் :**

கோவை இளங்கோ நூல் ஆலையின் மானேஜிங் டைரக்டர் - பணத்தைச் சேர்ப்பதிலும், கௌரவத்தைப் பெருக்குவதிலும் கண்ணுங் கருத்து மாயிருப்பவர்.

**வசந்தன் :**

சோமசுந்தரத்தின் ஒரே மகன் - அமெ ரிக்காவில் படித்தவன் - புதுமையில் மோகம் கொண்டவன்.

**வரதன் :**

வசந்தனின் மாற்றுப் பெயர் இளங்கோ மில்லில் யாருக்கும் தெரி யாமல் தொழிலாளியோடு தொழி லாளியாக வேலை செய்யும்போது இப்பெயரை வைத்துக் கொள்ளு கிறான்.

**கோபால் :**

சோமசுந்தரம் பங்களாவில் வேலைக் காரன்-சிறு வயதில் தாயை இழந்து விட்ட வசந்தனைத் தூக்கி வளர்த் தவன். அந்தக் குடும்பத்தில் ஒரு வனுகக் கலந்து விட்டவன்.

**செந்தாமரை :**

கோபாலின் மனைவி. பதிக்கேற்ற சதி.

**கோகிலம் :**

வசந்தன் அமெரிக்காவிலிருந்து திரும் பியதும், அவனை மணந்து கொள்ளக் காத்திருக்கும் கல்யாணப் பெண்! அலங்காரப் பிரியை. காதல் வேறு, கல்யாணம் வேறு என்ற எண்ணத் தால் நிலை தடுமாறியவள்.

**பாலு :**

மில் மானேஜர் - கோகிலத்தின் கல்லூரித் தோழன் - அவளுடைய திரை மறைவுக் காதலன் - அயோக்கிய சிகாமணி.

**சொக்கலிங்கம் :**

பாலுவின் சமையல்காரன் -அப்பாவி- கண்டதைக் கண்டபடி சொல்லி விடும் கருர்ப் பேர்வழி.

**முருகேசன் :**

மில் தொழிலாளி - வறுமையில் அடி பட்டவன். பொறுமையும் பெருந் தன்மையும் நிறைந்தவன்.

**கோமதி :**

முருகேசனின் மகள். பெண்களுக் குரிய சகல லட்சணங்களும் பொருந் தியவள். உழைத்துப் பிழைக்கும் உத்தமி. வசந்தனின் காதலி.

**பூங்காவனம் :**

முருகேசனின் மகன் - சிறு வயதி லேயே வீட்டை விட்டு ஓடிவிட் டவன் - அனுபவக் களஞ்சியம்.

**ஐயம்பெருமாள் – பெருமாள் :**

இருவரும் மில் தொழிலாளர்கள் - ஐயம்பெருமாள் எடுத்ததற்கெல் லாம் சந்தேகப்படுபவன் - பெருமாள் அதற்கு நேர்மாருனவன் - இருந் தாலும் இருவரும் இணைபிரியாத தோழர்கள்.

**மற்றும் சிலர்**

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் :

கோவை — பம்பாய் — சென்னை

நூலகம்
தீர்பால்துறை.

# முதலாளி

— நாடகம் —

★

## காட்சி 1

O

கோவை இளங்கோ நூல் ஆலையில் ஒரு ஆடம்பர மான ஹால் — மில் டைரக்டர்களின் கூட்டம் நடை பெறுகிறது. மானேஜிங் டைரக்டர் சோமசுந்தரம் பேசிக்கொண்டிருக்கிறார்.

**சோமசுந்தரம் :** (ஒரு மடக்கு தண்ணீர் குடித்துவிட்டு).... இது இப்படியிருக்க, நமது மில் தொழிலாளர்களின் தொல்லையோ சகிக்க முடியவில்லை. பொங்கலுக்கு போனஸ் தரவேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்கள். தராவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று பூச்சாண்டி காட்டு கிறார்கள். இந்தத் தொந்தரவுகளை யெல்லாம் பார்த்துப் பார்த்து எனக்குப் பெரிய தலைவேதனையாகி விட்டது. ஏதோ ஐந்து வருஷங்களுக்கு முன்பு அமெரிக்காவுக்குப் படிக்கப்போன நம்ம பையன் வசந்தன், இன்னும் ஒரு வாரம் பத்து நாட்களுக்குள் திரும்பி வந்து விடப் போகிறானே; அவனிடம் இந்த மில் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாகக் காலம் கழிக்கலாம் என்று நான் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தால், இந்தக் கூலிக் காரப் பசங்கள் போடுகிற கூப்பாடும் கும்மாளியும், ஆடுகிற ஆட்டமும் பாட்டமும்; அப்பப்பா! மகாப் பெரிய வயிற் றெரிச்சல்! ம்ம்....இந்த விவரங்களை யெல்லாம் நமது மானேஜர் பாலு விவரமாக எடுத்துச் சொல்லுவார்.

[தமது ஆசனத்தில் அமருகிறார் — மானேஜர் பாலு எழுந்து நின்று நாசூக்காகக் கனைத்துக்கொண்டு]

**பாலு :** மதிப்புக்குரிய முதலாளி அவர்களே, கனம் தங்கிய இளங்கோ மில் டைரக்டர்களே, அதைப் பற்றி யெல்லாம் உங்களுக்குக் கவலையே வேண்டாம். அற்ப விஷயம்; அடியேன் இருக்கிறேன்; கவனித்துக் கொள்

கிறேன். இந்தத் தொழிலாளித் தோழர்கள் இருக்கிறார்களே, அவர்களைத் திருப்தி செய்ய ஆண்டவனே அவதாரம் எடுத்து வந்தாலும் ஆகாது! நம்மால் ஆகுமா? நாம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்; அவர்கள் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள்! 'கூலியைக் குறைக்காதே, வயிற்றிலடிக்காதே! - சம்பளத்தை உயர்த்து, முதலாளிகள் ஒழிக!' — இப்படிக் கூச்சல் போடத் தெரிகிறதே தவிர, வேறு ஒரு நல்ல பேச்சுப் பேசத் தெரிகிறதா அவர்களுக்கு?

*1-வது டைரக்டர்:* எப்படித் தெரியும் என்கிறேன். காலந் தான்.... ('மாறிப்போச்சே' என்பதாக கைகளால் சைகை காட்டுகிறார்)

*பாலு:* மாறிப்போச்சு! இருந்தாலும் மரியாதை தெரிய வேண்டாமா? மாளிகைச் சீமான்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை அறியாத மடையர்கள்! ஏதோ ஒழுங்காக வேலையைச் செய்வோம், கிடைத்த கூலியைப் பெற்று மகிழ் வோம் என்கிற பெருந்தன்மை மருந்துக்குக்கூட இல்லையே என்றுதான் நான் வருந்துகிறேன்.

*2-வது டைர:* இப்பச் சொன்னீங்களே இதுதான் நூத்திலே ஒரு....இல்லே, இல்லே....ஆயிரத்திலே ஒரு பேச்சு.

*பாலு:* எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்! இந்தத் தொழி லாளர் கிளர்ச்சிகளைத் தலையெடுக்க விடாமல் மண்டையி லடித்துத் தடுத்து நிறுத்த, என் சிற்றறிவுக்கு எட்டிய வரையிலே ஆராய்ச்சி செய்து சின்னஞ்சிறு திட்டம் ஒன்று தீட்டியிருக்கிறேன். அதாவது அந்தத் திட்டம் என்ன வென்றால், நம் சுற்று வட்டாரத்திலிருக்கும் மில் முதலா ளிகள் அனைவரும் ஒன்று சேரவேண்டியது; பிரமாண்டமான பிரசார இயக்கம் ஒன்று ஆரம்பிக்க வேண்டியது; 'போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற நீதி வாக் கியத்தை, தொழிலாளர் மனதில் ஆழமாகப் பதியும்படி போதித்துக்கொண்டே இருக்க வேண்டியது. லட்சக் கணக்கிலே துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு—

*3-வது டைர:* விமானங்களைக் கொண்டாந்து, அதிலே யிருந்து வீசு வீசுன்னு வீசிப் போடணும் வீசி!

*பாலு:* பிறகு பாருங்களேன்! 'பொங்கல் வருது; போனஸ் கொடு; அமாவாசை வருது; அலவன்ஸ் கொடு!'— என்றெல்லாம் அலறிச் சாகிற அனாதைப் பயல் ஒருவன்கூட அகப்படமாட்டான்.

*4-வது டைர:* ஆகாகா! அபாரமான யோசனையாயிருக்கே!

**பாலு :** எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்! இப்படி யெல்லாம் பிரசாரம் செய்யாமல் விட்டு விட்டதால்தான், இந்தத் தொழிலாளித் தம்பிகள் கண்டதுக்கெல்லாம் அனுராகம் இழுத்துத் தொண்டை கிழியக் கத்துகிருர்கள்.

**3-வது டைர :** அட, கத்திட்டுத்தான் போகட்டுமேய்யா! இங்கே யாருக்கு என்ன வந்திருக்கு என்கிறேன்.

**பாலு :** கத்தட்டும் கத்தட்டும்! தாராளமாகக் கத்தட்டும்! அவர்கள் பாட்டுக்குக் கத்திக் கத்தி தொண்டை வறண்டு செத்து, காலப் போக்கிலே இது தவறு என்று மண்டையில் ஏறி பிறகு திருந்தி விடுவார்கள்.

**3-வது டைர :** இப்படித் திருந்துறதுக்குத் தானேய்யா கத்துற சுதந்திரத்தை தாராளமாக் கொடுத்திருக்கு!

**பாலு :** வேறெதற்கு. ஆகவே, ஆயிரக்கணக்கிலே போன சாக அள்ளிக் கொடுக்க நமக்கு இப்போது அவகாசமில்லை; அபிப்பிராயமும் கிடையாது!

**4-வது டைர :** அதுதான் ரொம்பச் சரி!

**பாலு :** அதை விட மிகவும் முக்கியமான காரியம் நம் முன்னே நிற்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன் அமெரிக்காவுக்குச் சென்று, அரும் பெரும் இயந்திர ஞானக் கலைகளைக் கற்றுத் தேர்ந்து, நிகரற்ற அறிவாளியாக அண்மையிலே ஊர் திரும்ப விருக்கும் நம் அன்புக்குகந்த முதலாளி யவர்களின் அருமைக் குமாரர் உயர் திருவாளர் வசந்தன் அவர்களுக்கு, நமது மில்லில் குதூகலமான, மகத்தான வரவேற்பளித்து உபசரிக்க வேண்டும் என்பது நம் எல்லோருடைய அவசரத் திட்டம்.

**1-வது டைர :** அதைத் தானேய்யா முதலிலே கவனிக்கணும். அதை விட்டுப்போட்டு, நாம பாட்டுக்கு எதையோ பேசிக்கிட்டிருந்தா?....

**பாலு :** என்ன செய்வது? இழவெடுத்த பசங்களின் தொல்லை ஏறுமுகமாக இருக்கிறதே தவிர இறங்குமுகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறதே!

**3-வது டைர :** திரும்பிப் பார்க்கும்; நீங்க சொல்லுங்க.

**பாலு :** எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்! இந்த வட்டாரத்தில் யாரும் எப்போதும் செய்து பார்க்காத—நாம் இது வரையில் கண்டும் கேட்டும் அறியாத அவ்வளவு பெரிய

அளவிலே ஆடம்பரமான வரவேற்பும், அற்புதமான விருந்தும் செய்ய வேண்டும் என்பது நமது முதலாளியவர்களின், நெடுநாளைய ஆசை!

1-வது டைரக்டர்: நம் நீண்ட நாள் கோரிக்கையும் அதுதான்!

பாலு: ஆகவே, பந்தல் அலங்காரம் எப்படியிருந்தால் பார்ப்பவர் கண்களைப் பறிக்கும்! அதற்கு எவ்வளவு செலவழிக்கலாம்....

2-வது டைரக்டர்: இதைக் கேக்கணுமா என்ன? ஆகிற தொகையைச் செலவழிச்சாப் போச்சு!

பாலு: செலவழிக்கத்தான் போகிறோம். ம்.... பன்னீர் பாட்டில்கள் எத்தனை வேண்டும் — ரோஜா மாலைகள் எத்தனை தேவை — விருந்துக்கு யாரிடம் 'ஆர்டர்' கொடுக்கலாம் — அதற்கு எத்தனை ஆயிரம் ரூபாய் செலவாகும் — நாம் கண்டு களிக்க நாட்டியக் கச்சேரி ஒன்று வேண்டுமா, வேண்டாமா....

வயதான டைரக்டர்: வேண்டாமா? சரித்தான் போங்க! நாட்டியக் கச்சேரி இல்லாத விருந்து ஒரு விருந்தா? அது ருசிக்கத்தான் செய்யுமா? பார்க்கிறவங்க சிரிச்சிட்டில்லே போவாங்க. நடனம் அவசியம் வேணுமய்யா வேணும். அது இல்லாமே ஏதாவது செஞ்சிடப் போறீங்க? பிறகு நம்ம மில்லுக்கு இருக்கிற மதிப்பே போயிடும்.

பாலு: அப்படியானால், எந்தக் குமாரிக்கு, எத்தனை ஆயிரத்தைக் கொடுத்துக் கொண்டுவருவது என்றெல்லாம் நாம் பற்பல திட்டங்களைத் தீட்டித் திணறிக் கொண்டிருக்கிற நேரத்திலே, பொங்கலுக்கு போனஸ் வேண்டுமாம், போனஸ்! பொக்கிப் பசங்கள்! கூட்டம் கூட்டி கூச்சல் போட்டு கலாட்டா செய்கிறார்கள்.

3-வது டைரக்டர்: செய்யட்டுமே! அப்படியே நடுங்கிக்கிட்டா இருக்கோம்?

பாலு: நாமா நடுங்குவோம்? அவர்களுக்குப் புத்தி ரொம்ப மட்டமாக இருக்கிறதே என்றுதான் இரக்கப்படுகிறோம்! 'என்னடா, நமது முதலாளி அவர்கள் மாசம் பிறந்தால் சம்பளத்தை எண்ணிக் கீழே வைக்கிறாரே; இதனால் நமது குடும்பங்களெல்லாம் பசியறியாமல் காலம் தள்ளுகின்றனவே; இப்பேர்ப்பட்ட தர்மப் பிரபுவின் ஒரே மகன்—ஆசைப் புதல்வன்-செல்வக் குமாரன், சீர் நிறைந்த அமெரிக்காவுக்குச் சென்று, சிறப்பாகக் கல்வி கற்று திரும்பி வரப் போகிறாரே; மகனைப் பிரிந்து மனவாட்டம் கொண்டிருந்த நம் முதலாளியவர்கள் இப்போது மகிழ்ச்சியுடன் இருக்கி

ரூர்களே; தமக்கு மாபெரும் கௌரவமும், அதனுல் இந்த இளங்கோ மில்லுக்கு இணையற்ற பெருமையும் வரக்கூடிய வகையிலே மகத்தானதொரு வரவேற்பு விழாக் கொண்டாடி மனம் பூரிக்கட்டுமே; இந்த சமயத்திலே நாம் போய் போனஸ் கேட்டு அவரைத் தொந்தரவு செய்யலாமா என்கிற உணர்ச்சி கொஞ்சமாவது இருக்கிறதா இந்தத் தொழிலாளர்களுக்கு என்று கேட்கிறேன்!

**3-வது டைர :** அப்படிக் கேளுங்க, நல்லா மண்டையிலே அடிச்சிக் கேளுங்க!

**பாலு :** பிறகென்ன? இந்தப் பொங்கலுக்கு போனஸ் இல்லையென்ருல், அடுத்த பொங்கலுக்கு வாங்கிக்கொண்டால் தீர்ந்தது!

**4-வது டைர :** இது தெரியுதா அந்தக் கூலிக்காரப் பசங்களுக்கு? பொங்கலுக்குப் பொங்கல் போனஸ் வாங்குறதிலே, ஒரு பொங்கல் தவறிட்டா குடியா முழுகிப் போயிடும்.

**2-வது டைர :** சுத்தக் கோமாளிப் பசங்க! அவ்வளவுக் குள்ளேதானே இருக்கு அவங்க புத்தியும், அது ஓடுகிற ஓட்டமும்!

**பாலு :** ஆகவே, கனவான்களே, போனஸ் விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது கவனிக்க நமது இளங்கோ மில்லின் லாபக்கணக்கு இடந்தரவில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முன் இருக்கும் அவசர காரியம் ஒன்றே ஒன்றுதான்—வசந்தன் வரவேற்பு விழா. அவர் இங்கு வந்து சேரும் தேதி பற்றிய தந்தியை நமது முதலாளியவர்கள் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்த வண்ணமிருக்கிருர்கள். தந்தி கிடைத்ததும் விழா ஏற்பாடுகளை விரைவாகச் செய்ய உத்தரவிட்டுள்ளார்கள்.

**வயதான டைர :** ஒரு விஷயம் மறந்துடப்படாது. அது தான் ஒரு குட்டியைப் பிடிச்சிக் கொண்டாந்து....

**பாலு :** டான்ஸ்தானே; கட்டாயம் நடக்கும். உங்கள் உத்தரவுப்படி செய்யக் காத்துக் கிடப்பவன்தானே நான். வண்க்கம். (உட்காருகிருன்)

**வயதான டைர :** (உட்கார்ந்தபடியே) நான் ஏன் இதை இவ்வளவு அழுத்தமாச் சொல்றேன்னு, முந்திமாதிரி என்னுலே ஓடியாடித் திரிய முடியலே. வயசாயிடுச்சு பாருங்க! நாலு இடங்களுக்குப் போயி டான்சு, கச்சேரி, அது இதுன்னு பார்க்க உடம்பு அவ்வளவா சரிப்படலே. நம்ம மில்லுக்குள்ளேயே ஒரு நாட்டியக் கச்சேரின்னு நடந்தா

அலையாமேக் கொள்ளாமே சாவகாசமா உட்கார்ந்து ரசிச்சுப் பார்க்க சௌகரியமாயிருக்கும். செலவோடு செலவா, கூட ஒரு ஐயாயிரம் ஆனு ஆயிட்டுப் போகுது. நாமென்ன குறைஞ்சா போயிடுவோம்? நாட்டியத்தைக் கண்டிப்பா நடத்திடுங்க.

[ எல்லோரும் கைதட்டி மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்கின்றனர் ]

**சோம :** (எழுந்து நின்று) நண்பர்களே, இன்னொரு முக்கியமான விஷயம். நமது மானேஜர் பாலு கடந்த மூன்று வருஷங்களாக, நமது மில் லாபகரமாக நடப்பதற்குப் பல வழிகளிலும் பாடுபட்டிருக்கிறுர். அவர் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தாலும் அவர் இதுவரையில் மாதம் ஐநூறு ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு வேலை செய்து வந்தது, அவரது பெருந்தன்மையைத்தான் காட்டுகிறது. ஆகவே, நான் ஒய்வு பெறுவதற்கு முன், அவருடைய ஊதியத்தை ஓராயிரமாக உயர்த்த முடிவு செய்திருக்கிறேன்.

**4-வது டைர :** முடிவு என்னங்க? தாராளமாக் கொடுங்க! பாடுபடுற மனுஷன்; பணத்தைப் பார்த்தா முடியுமா?

**சோம :** அதுவும் சரிதான். இன்று முதல் நமது மானேஜரின் சம்பளம் மாதம் ஆயிரம் ரூபாய். (பாலு பக்கம் திரும்பி) என்ன பாலு, மகிழ்ச்சிதானே?

**பாலு :** (எழுந்து - பணிவுடன்) எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்! (கை தட்டல்)

●

## காட்சி 2

○

சந்தேகப் பிராணி ஐயம்பெருமாளும், அவன் நண்பன் பெருமாளும் தெருவழியே செல்லுகின்றனர் - இருவரும் இளங்கோ மில் தொழிலாளர்கள்.

**ஐயம்பெருமாள் :** இந்தா பாரு பெருமாளு, நான் சொல்றது என்னண்ணு, சந்தேகத்தை மனசுக்குள்ளேயே வச்சிருக்கக்கூடாது. வச்சிருக்கிறவன் உருப்படமாட்டான்! இதிலே சந்தேகமில்லே.

**பெருமாள் :** சரி.

**ஐயம் :** இதுதான் சன்மார்க்க நெறி!

**பெரு :** ரொம்பச் சரி!

ஐயம் : சரிதானே? சந்தேகமில்லையே?

பெரு : அதுதான் சரின்னு சொல்லிட்டேனே!

ஐயம் : சொல்லிட்டே; இருந்தாலும் இதிலே உனக்கு ஏதாவது சந்தேகம் இருக்குமோ என்னமோன்னு எனக்கு சந்தேகமாயிருக்கு.

பெரு : சனியனை விட்டொழி!

ஐயம் : அப்பச்சரி, ஒழிச்சாச்சி! வா. (சென்று நின்று திரும்பி) ஆமா, கொண்டாட்டம் ரொம்ப பலமா இருக்குமோ?

பெரு : எங்கே?

ஐயம் : நம்ம மில்லுலே.

பெரு : எதுக்கு?

ஐயம் : ஆங், அப்படிக் கேளு என் ராஜா! இப்பத்தான் நீ என் கூட்டாளி. எந்த ஒரு விசயத்தையும் சந்தேகத்துக்கு எடமிருக்கிற சங்கதியான்னு அடிக்கொரு தரம் ஐயப்பாடுகளை எழுப்பிக்கிட்டு ஆராய்ச்சி செய்துக்கிட்டே போனுத்தான்—

பெரு : அழிவு காலத்துக்கு அருகாமையிலே போய்ச் சேரலாம்.

ஐயம் : (அலுத்துக் கொண்டவனாய்) நல்லாச் சொன்னே போ! அறிவாளியாகலாம் பெருமாளு, அறிவாளியாகலாம்!

பெரு : உதாரணத்துக்கு உன்னைத்தாம்பா சொல்லணும்.

ஐயம் : (மகிழ்ச்சியுடன் நடந்தவாறு) தாராளமாச் சொல்லு; உள்ளத்தைத்தானே சொல்றே! (நின்று திரும்பி) ஆமா, இப்போ நீ என்ன கேட்டே?

பெரு : கொண்டாட்டம்னு சொன்னியே, அதுதான் எங்கே, எதுக்குன்னு கேட்டேன்.

ஐயம் : அதுதானே கேட்டே? சந்தேகமில்லையே?

பெரு : இருக்க இடமே இல்லை!

ஐயம் : ஆங், அதுதான் சரி! ம்....வந்து....நம்ம முதலாளி மகன் சீமையிலிருந்து வரப்போறாருன்னு பேசிக்கிடுறாங்களே, அவருக்கு நம்ம மில்லுலே வரவேற்புக் கொண்டாட்டம் ரொம்ப முறுக்கா இருக்குமோ?

பெரு : ஆயிரக்கணக்கிலே பணத்தை அள்ளி வீசப் போறாங்களே; பிறகு ஆடம்பரத்துக்குக் கேக்கவா வேணும்?

ஐயம்: ஆங்....! அப்புச்சரி வா! (சிறிது சென்று நின்று திரும்பி) ஆமா, இவங்க ஆடம்பரத்துக்காக ஆயிரக்கணக்கிலே செலவழிக்கிறுங்களே, அவதிப்படுற நமக்கெதுக்கு போனஸ் கொடுக்க மறுக்கிறுங்க?

பெரு: மனசு வரலே.

ஐயம்: மனசுதான் வரலையா? இல்லே, மற்றப்படி ஏதாவது சந்தேகப்பட எடமிருக்கிற சங்கதி இருக்கா?

பெரு: எந்த சங்காத்தமும் இல்லே!

ஐயம்: இருக்கும்பா, இடம் கொடுத்துப் பாரு!

பெரு: இடம் கொடுக்க எங்கே இடம் இருக்கு?

ஐயம்: இல்லையா? அப்பச்சரி, வா! (சென்று நின்று திரும்பி) ஆமா, போனஸ் கொடுக்கலேன்னு நாம என்ன செய்றது?

பெரு: வேலே நிறுத்தம்.

ஐயம்: அப்டீன்னு....?

பெரு: நம்ம சங்கத்திலே தீர்மானமாகி இருக்கு.

ஐயம்: இருக்கில்லே? சந்தேகமில்லேயே?

பெரு: கொஞ்சங்கூட இல்லே.

ஐயம்: அப்பச்சரி—ஆமா, இந்தத் தீர்மானம் திடீர்னு மாறுவதற்கு ஏதாவது இடமிருக்கோ?

பெரு: (எரிச்சலுடன்) இடமிருக்கும்போது பார்க்கலாம். இப்ப நீ நட!

ஐயம்: அட, என்னப்பா நீ; மனுசன் சந்தேகப்பட்டுக் கேட்டா....

பெரு: மண்டைதான் ரெண்டாகும். அட, ஐயம்பெருமாளு போ! உன் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க எவனுலே முடியும்? சாட்சாத் சர்வேசுவரன்தான் வரணும். நின்னு தவம் பண்ணு! (போகிருன்)

ஐயம்: (தனிமொழி) அட! பையனுக்கு ஏன் மூக்குக்கு மேலே கோபம் வருது? ம்....ஆமா, இந்தக் கோபமாகப்பட்டது மூக்குக்கு மேலே வருதா? இல்லே....செச்சே! இது மகாப் பெரிய சந்தேகமாவில்லேஇருக்கு!ம்....(செல்லுகிருன்)

## காட்சி 3

O

மில் முதலாளி சோமசுந்தரம் பங்களா—வேலைக்காரன் கோபால் வெளியில் சுற்றிவிட்டு வருகிறான்—சமையல் கட்டுக்கு முன்புறமிருக்கும் ஸ்டூலில் கம்பீரமாக உட்கார்ந்து, மேல் துண்டால் விசிறிக் கொள்கிறான். அவன் முகத்திலே மகிழ்ச்சியும், குதூகலமும்.

**கோபால்:** செந்தாமரை! ஏ....செந்தாமரேய்! (உரக்க) ஏ, செந்தாமரை! அட, மனுசன் கத்திக்கிட்டிருக்கான்; அசையிறாளா பாரு!

**செந்தாமரை:** (அடுப்பங்கரையிலிருந்து வெளியே வந்து) ஏன்? செந்தாமரைக்கு என்ன வந்திருக்காம்? எப்ப பாரு, செந்தாமரை, செந்தாமரை! ஏன் இப்படி உசுரு போற மாதிரி கத்துறே?

**கோபால்:** (எழுந்து) அப்ப, நான் கத்தினது உன் காதிலே விழுந்திருக்கத்தானே செய்யுது?

**செந்:** காது வெடிச்சிப் போயித்தானே விழுந்தடிச்சி ஓடியாந்திருக்கேன்.

**கோபால்:** வேகமாக வர்றதுக்கு என்னான்னு கேக்கிறேன். 'செந்தாமரை'ன்னு என் குரல் கேட்ட மாத்திரத்திலே 'டக்'குன்னு என் முன்னாலே வந்து நிக்க வேண்டாமா? இல்லே, நிக்க வேண்டாமாங்கிறேன்.

**செந்:** ஏது, ஒரு நாளுமில்லாத திருநாளா இண்ணைக்கென்ன அதிகாரம் ரொம்ப பலமாயிருக்கு?

**கோபால்:** இண்ணைக்கு மட்டும் என்னடி? இனிமே எண்ணைக்கும் என் அதிகாரம் ரொம்பக் காரமாத்தான் இருக்கும்; தெரிஞ்சுக்கோ! நெஞ்சிலே பயத்தை வச்சி வேலை செய்! போ, போயி கொஞ்சம் தண்ணி கொண்டா, ஓடு! தலைக்கு மேலே வேலை கெடக்கு.

**செந்:** அட எழவே! அதைக் கொஞ்சம் எறக்கி வச்சிட்டுப் போயி மொண்டு குடியேன்.

**கோபால்:** மொண்டு குடிக்கிறதா? நானா? என்னையாடீ சொல்றே? அதெல்லாம் இனிமே நடக்காதடீ, நடக்காது! உங்கொப்பனாணை நடக்காது!

**செந்:** நடக்காட்டிக் கெட!

**கோபால்:** நாளுடை கிடக்கிறது? ஏது ஆளை முன்னேப் பின்னே தெரியாமேப் பேசுறே? டிஸ்மிஸ் பண்ணிப் போடு வேன் பார்த்துக்கோ, டிஸ்மிஸ்!

**செங்:** அப்படியா? அதைத்தான் கொஞ்சம் செய்து காட் டேன்! வேடிக்கையாவது பார்க்கிறேன்.

**கோபால்:** அட, வேடிக்கை பார்க்கிருளா மில்லே வேடிக்கை! விவரங் கெட்டவ. இந்த வீட்டிலே யிருந்து வேலே யில்லேன்னு வெளியே பிடிச்சித் தள்றது. அதுக்குப் பேரு தான் டிஸ்....மிஸ்!

**செங்:** அட, என் தொரையே! இதுக்கு இப்படி ஒரு பேரா? இந்தா பாரு, உனக்குப் புண்ணியமாப் போகுது. கொஞ்சம் அப்படியே செய்திடேன். ஒரு ரெண்டு மாசம் எங்க அம்மா வீட்டுக்குப் போயி....

**கோபால்:** போவடி, போவே! ஓகோண்ணுணும்! சீமையி லிருந்து சின்ன முதலாளி வரப்போற நேரமும் அதுவுமா....

**செங்:** இப்போ நீ தானே சொன்னே, என்னமோ டிசு மிசுப் பண்ணிப் போடுவேன்னு.

**கோபால்:** சும்மா, என் அதிகாரம் எவ்வளவு தூரத்துக்கு இருக்கு என்கிறதைக் காட்டுறதுக்குச் சொன்ன, அதுக் குள்ளே அம்மா வீட்டுக்கில்லே பறக்கப் பார்க்கிரு, அம்மா வீட்டுக்கு!

**செங்:** அவ்வளவு தூரத்துக்கு வந்திடுச்சா அதிகாரம்?

**கோபால்:** வரலேடி, வரப்போகுது; ஊக்கும்! இனிமே எந்தப் பயலாவது என்கிட்டே வாலேக் கீலே நீட்டிப் பார்த்தா வில்லே தெரியும். ஒட்ட நறுக்கிடமாட்டேன் நறுக்கி!

**செங்:** ஏ, அம்மாடியோவ்! இவ்வளவு பெரிய அதிகாரம் எங்கிருந்து வரப்போகுது? சனியன்!

**கோபால்:** அப்படிக் கேளேன் விவரமா! இப்போ சீமை யிலிருந்து வரப்போறது யாரு தெரியுமில்லே?

**செங்:** ஏன், தெரியும்.

**கோபால்:** சின்ன எஜமான்.

**செங்:** அதை யாரு கேட்டா? எழவு அதிகாரத்தைக் கேட்டா?

**கோபால்:** அதைத்தானே சொல்லிக்கிட்டு வர்றேன். அவரை அம்புட்டுப் புள்ளேயிலிருந்து தூக்கி வளர்த்தது யாரு தெரியுமோ? நானு. என் கையாலே சோறு தின்னு

வளர்ந்த புள்ளே. யாரு? சின்னவரு. இதெல்லாம் உனக்கென்னடி தெரியும்? நீ நேத்து வந்தவ, என் பெண்டாட்டியா.

**செங் :** இதைத்தான் ஆயிரம் தடவை சொல்லிட்டியே.

**கோபால் :** ஐயாயிரம் தடவைகூடச் சொல்வேன்; அதை யாருடீ உன்னைக் கேட்டா? அவரு ஆகாசக் கப்பல்லே யிருந்து எறங்கி தரையிலே காலெடுத்து வைக்கிறதுதான் தாமசம். பிறகு பாரு என்னை! என்னைப் பார்த்தா அப்படியே கிடு கிடுன்னு—

**செங் :** நடுங்கிக்கிட்டு நிப்பே!

**கோபால் :** (அழுத்தமாக) மத்தவங்க நடுங்கணும்!

**செங் :** ஆமா, அவரு வந்ததும் இவரு தலையிலேதான் கிரீடத்தைத் தூக்கி வைக்கப் போருங்க. இவரு அப்படியே ராச தர்பார் பண்ணப் போருர். சும்மா கிடக்கிறதில்லே!

**கோபால் :** போடீ பைத்தியம்! உனக்கென்னடி தெரியும்?— நீ நேத்து வந்தவ. என் மேலே சின்னவருக்கு உசுருன்னு உசுரு ஒரேடியா உசுரு. இந்தக் கோபால், வேணும்னு வேணும்! வேண்டாம்னு வேண்டாம்! போகலாம்னு போகலாம்! கூடாதுன்னு, கூடாது! இப்படி நான் சொன்னுச் சொன்னபடி. நான் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட் டார்ன்னு போயேன்!—என் மேலே, அவருக்கு ஒரு அலாதியான பாசம்!

**செங் :** (கேலியாக) அப்டீங்களா! அப்போ அங்கேயிருந்து இந்த அன்புக் களஞ்சியத்துக்கு ஒரு அபாரமான பரிசு—

**கோபால் :** வரவே வராது! ஏன்னு, அயல் தேசத்திலே கொண்டு போயி, நம்ம பணத்தைப் போட்டு அனுவசியமா சாமான் வாங்குறது அவ்வளவு உசிதமில்லே, கூடாதுன்னு நம்ம வசந்துத் தம்பிக்கு ரொம்ப நல்லாத் தெரியும். படிச்சவரு பாரு! அதனுலேதான்—

**செங் :** அமெரிக்காவிலே கொண்டு போயி ஆயிரக் கணக்கிலே பணத்தைக் கொட்டிப் படிச்சிட்டு வர்ருராக்கும்?

**கோபால் :** அட, இவ யார்டா இவ; ஒண்ணுமே புரியாமே பேசுரு. ஏன் படிக்கப் போனுருன்னு என்னைப் போல தெரிஞ்ச மனுசன்கிட்டே கேட்டுத் தெரிஞ்சிக் கோயேன்! இந்த பாரு செந்தாமரை, சுத்துப் பட்டுலே இருக்கிற முதலாளிமார்களெல்லாம், நம்ம சின்ன முதலாளியைப் பார்த்து, 'அடேயப்பா, அமெரிக்காவிலே படிச்சவராக்

கும்'ன்னு அப்படியே மலேச்சிப்போயி நிண்ணு, தலே கிறு கிறுண்ணு சுத்தி—

**செங் :** செத்துச் சுண்ணும்பாகி—

**கோபால் :** அட சட்! மூக்குக்கு மேலே விரலே வச்சி அப்படியே மயங்கணும். அதுக்குத்தான்....

**செங் :** அப்டீ சுத்திட்டு வர்றது!

**கோபால் :** சுத்திட்டு வர்றதா! சூச்சமில்லே சூச்சம்—(தெரியாதென்று செந்தாமரை சைகை காட்ட)—அட, அது தாண்டி, நம்ம மில்லுக்குள்ளே பெரிசு பெரிசா, கரகரன்னு அது பாட்டுக்கு ஓடிக்கிட்டே இருக்கு பாரு, அதுதான் சூச்சம்—அந்த சூச்சங்களுக்குள்ளே இருக்கிற சூச்சுமத்தை யெல்லாம் தெரிஞ்சிக்கிட்டு வர்றது. இனிமே வெளி தேசதுக்காரங்களெல்லாம் நம்ம சின்ன முதலாளிகிட்டே வந்துதான் கத்துக்கிட்டுப் போகணுமாக்கும்! தெரியுமா?

**செங் :** அதுக்கு அளவோடே வில்லே செலவழிக்கணும்; அச நாடு பாரு! ஆயிரம் ஆயிரமாவா பணத்தைப் பறக்க விடுறது?

**கோபால் :** ஏது ஏது, ரொம்ப அதிகப்பிரசங்கித்தனமாப் பேசுறே! ஊம்! அதைப்பற்றி யெல்லாம் பேச உனக்கு ஆயுசு பத்தாது. வர்யை மூடிக்கிட்டுப் பேசாமேக் கிட!

**செங் :** இப்ப நானு குதிச்சிக்கிட்டு இருக்கேன்? நீதான் துள்ளுறே, ராச தர்பாரிலே எகிறிக் குதிக்கப் போறவன் மாதிரி!

**கோபால் :** மாதிரி என்னடி மாதிரி! எகிறிக்— ('டே, கோபால்' என்று சோமசுந்தரம் கூப்பிடும் குரல்—அதைக் கேட்டு திடுக்கிட்டுக் குதித்து) குதிக்கப் போறவனேதான்! ம்....ம் பெரியவரு வந்துட்டார் போலிருக்கே. இரு, இரு, பிறகு பேசிக்கிடுறேன்.

[ போகிறுன். பின்னுலிருந்து செந்தாம்ரை ஒழுங்கு காட்டியவாறு செல்கிறுள் ]

●

## காட்சி 4

○

இளங்கோ மில் தொழிலாளியான முருகேசன், வேலே செய்துவிட்டுத் தெரு வழியே செல்லுகிறுன். காரில்

சென்று கொண்டிருந்த மில் மானேஜர் பாலு, முருகேசனைக் கண்டு இறங்கி அவனருகில் வருகிறான். முருகேசனுக்குக் கலக்கம் ஏற்படுகிறது.

**பாலு:** (அருகில் வந்து கொண்டே) என்னப்பா, முருகேசா! ஏது, பார்த்தும் பார்க்காதது போலப் போறே? ரொம்ப அவசரம் போலிருக்கு.

**முருகேசன்:** ம்....ஒண்ணுமில்லேங்க....சங்கத்திலே எங்க கூட்டம் நடக்குது. அதுக்குத்தான் போகலாம்னு....

**பாலு:** ஓகோகோ! போனஸ் கொடு கூட்டமா? (முருகேசன், 'ஆமாம்' என்பதாக தலையாட்டுகிறான்) கொடுக்காட்டா என்ன பண்ணப் போறாங்களாம்?

**முரு:** (சிறிது அலுப்புடன்) ஊம்....என்ன பண்ணப் போறோம்? ஏதோ எங்க கஷ்டத்தைச் சொல்லிக் கேட்கிறோம். கொடுத்தா சரி. கொடுக்காட்டா....

**பாலு:** வேலை நிறுத்தம் செய்வீங்க. அவ்வளவுதானே?

**முரு:** அதைத் தவிர வேறே நாங்க என்ன செய்ய முடியும்?

**பாலு:** செய்யுங்க, செய்யுங்க! இந்தத் தடவை வேலை நிறுத்தம் கிலைநிறுத்தம், அப்டீ இப்டீன்னு ஏதாவது ஆரம்பிச்சீங்களோ, அவ்வளவுதான்! மில்லுக் கதவை இழுத்துச் சாத்தித் தாப்பாப் போட்டுடப் போறேன். பட்டினி கிடந்து செத்தாத்தான் இந்தக் கூச்சல் போடுற பசங்களுக்குப் புத்தி வரும்.

**முரு:** நாங்க எப்போ வாழ்ந்திருந்தோம், இப்போ சாகிறதுக்கு! எண்ணைக்கும் செத்துக்கிட்டுத்தானே இருக்கோம்.

**பாலு:** என்ன முருகேசா இது! நீ கூட 'நாங்க,நாங்க'ன்னு பேசி அவங்களோடே சேர்ந்து வீணுக் கெட்டுப் போறே? நீ நல்ல மனுசன்; நம்ம ஆளு!

**முரு:** அப்படிச் சொல்லக் கூடாதுங்க! நீங்களோ முதலாளி; நான் தொழிலாளி. தங்கம் தங்கமா உங்க கையிலே செல்வம் வந்து தேங்கும். நானே, வயிற்றுக்குச் சோறும் தங்கியிருக்க நிழலும் நிரந்தரமாக் கிடைக்காதான்னு ஏங்கித் தவிக்கிற வெங்கன்.

**பாலு:** அட சரித்தாம்பா நிறுத்து! பணக்காரனும் பின்னெண்ணும். எனக்கு அந்த பேதமெல்லாம் கிடையாது— உன்னைப் பொறுத்த வரையிலே! என்னமோ தெரியலே, உன்னைக் கண்டா பேசணும், பழகணும்—அப்டீன்னு தோணுது. காரை விட்டுக் கீழே இறங்கியில்லே வரச் சொல்

லுது. இது ஏன்? அதுதான் தெரியலே! இப்ப பாரு, நீ பஞ்சத்திலே அடிபட்டு பட்டிக்காட்டை விட்டுப் போட்டு, இந்த ஊருக்கு வந்து சேர்ந்தே. உன்னைப் பார்த்ததும் என்னையும் அறியாமே உன் மேலே இரக்கப்பட்டு மில்லுலே வேலை போட்டுக் கொடுத்தேன். இது ஏன்? அதுதான் தெரியலே! ஏதோ ஒரு பிரியம். அவ்வளவுதான். ம்....உன் மகள் கோமதிக்குக்கூட ....

**முரு :** உங்க கையாலேதான் வேலை போட்டுக் கொடுத்தீங்க.

**பாலு :** பாத்தியா, பாத்தியா! இப்படியெல்லாம் செய்ற மனுசன்கிட்டே, நீ என்னடான்னு நன்றி கூடப் பாராட்ட மாட்டேங்கிறே? ம்....

**முரு :** இந்த ஏழை நன்றி பாராட்டி என்னத்தைச் செய்யப் போறேன்.

**பாலு :** அட, அஞ்சு பத்து தூக்கியா கொடுக்கச் சொல்றேன்? அடிக்கடி வர்றது, பாக்கிறது, பேசுறது, போறது. இது கூடவா செய்யக் கூடாது?

**முரு :** ஊம்....இந்தக் கூலிக்காரன் உங்க கிட்டே வந்து என்னத்தைப் பேசப் போறேன்.

**பாலு :** கூலிக்காரனும் பின்னெண்ணும். குணந்தானேப்பா பெரிசு! ம்....கோமதி சௌக்கியமா யிருக்கில்லே.

**முரு :** (சிறிது கலவரமடைந்து) ஏதோ இருக்குங்க!

**பாலு :** சந்தோஷம், சந்தோஷம்! சௌக்கியமாஇருந்தாச் சரி! ஆமா, அதுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வச்சிடப் படாது? காலா காலத்திலே செய்ய வேண்டியதைச் செய்துட்டா உனக்கும் ஒரு கவலை தீர்ந்தாப்லே இருக்கும்; இல்லையா? ஊம்....அதைக் கூட நான் சொல்வானேன்? உனக்குத் தெரியாத யோசனையா?

**முரு :** என்னமோ,அது தலையிலே எப்படி எழுதியிருக்கோ?

**பாலு :** அதுக்கென்ன வந்திருக்கு? அருமையான பெண்ணுச்சே! ம்.... ஏதோ உன்மேலே இருக்கிற பிரியத்தினுலே சொல்றேன். நீ வேறே ஒண்ணும் வித்தியாசமா நினைக்கக் கூடாது! ம்....வந்து....உனக்கு ஏதாவது பணம் கிணம் தேவைப்பட்டா, கேட்கக் கூசிக்கிட்டு பேசாமே இருந்திடாதே! சொந்த மனுஷாள் கிட்டே கேக்கிற மாதிரி வந்து கேளு; வாங்கிக்கோ! என்ன நான் சொல்றது? சரிதானே!

**முரு :** (அதிக கலவரமடைந்து) ஏதோ பார்க்கிறேன். அப்போ உத்தரவு கொடுக்கிறீங்களா?

**பாலு :** புறப்பட்டாச்சா? அப்பச் சரி, நானும் புறப்பட வேண்டியதுதான். ஞாபக மிருக்கட்டும் முருகேசா, நீ நமக்கு வேண்டிய ஆளா இருக்கணும்; நாலும் கிடைக்கும். இந்தக் காலத்திலே முருகேசா, குறிப்பறிஞ்சி பிழைச்சிக்கிட்டாத் தான் பிழைச்சபடி. என்ன நான் சொல்றது? அப்ப நான் வரட்டுமா?

**முரு :** சரீங்க.

**முரு :** (பாலு சென்ற பின்—தனிமொழி) இந்த மனுஷன் நம்மகிட்டே வந்து குழையக் குழையப் பேசி, எந்தப் படுகுழி யைத் தோண்டி வச்சிருக்கானோ? அட, ஆண்டவா, இப் பேர்ப்பட்ட ஜன்மத்தையும் படைச்சி, அதுக்கு உன்னைப் பத்திய எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமே வேறே வச்சி ருக்கயே! இது என்ன திருவிளையாடலோ? (செல்லுகிருன்)

●

## காட்சி 5

○

பாலுவின் அறை—வேலைக்காரன் சொக்கலிங்கம் அறை யைச் சுத்தப்படுத்தி தூசி தட்டிக் கொண்டிருக்கிருன்.

**சொக்கலிங்கம் :** (வெறுப்புடன்) சேச்செச்சே! பெரிய எமகண்டமாவில்லே போச்சு! கண்ட கழுதைகளெல்லாம் (**கோகிலம்** அறைக்குள் உல்லாசமாக நுழைகிருள்) இங்கே வந்து அடைஞ்சிக்கிட்டு.... (கோகிலம் திடுக்கிட்டு நிற்கிருள்) சேச்செச்சே! இந்த வீடே களை கெட்டுக் குட்டிச் சுவராப் போயிடும் போலிருக்கே!

**கோகிலம் :** (ஆத்திரத்துடன்) ஏய்!

**சொக் :** (திரும்பிப் பார்த்து பயந்தவனுய்) ஓ!.... நீங்களா?

**கோகி :** என்ன இது; கழுதை குதிரைன்னு, மட்டு மரி யாதை யில்லாமே?

**சொக் :** அதில்லம்மா, வந்து சில கழுதைகள் இடம் மாறித் தட்டுக் கெட்டுப் போயி அலையுது. அதைப்பத்தி ஆத்த மாட்டாமே ரெண்டு புலம்பிக்கிட்டிருக்கேன்.

**கோகி :** மூடு வாயை! நீ தான் இந்த வீட்டுக்கு எஜமான் போலிருக்கு?

**சொக் :** இல்லவே இல்லை. இப்போ வருவாரு — இன்னும் கொஞ்ச நேரத்திலே.

**கோகி:** அதிகப்பிரசங்கி! உன்னை விடக் குறைஞ்சவங்க இங்கே யாரு வர்ருங்கண்ணு நினைச்சே?

**சொக்:** கண்டிப்பா இது ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயம்; செய்றேன்!

**கோகி:** வாயை மூடு! (உட்கார்ந்து கொண்டே) கண்ட கழுதைகளெல்லா மில்லே இங்கே வந்து அடையுதாம்!

**சொக்:** இல்லாமே, பொய்யாம்மா சொல்றேன்?

**கோகி:** (ஆத்திரம் பொங்க) என்னைத் தவிர, வேறே எந்த கழுதை இங்கே வருதுன்னு கேக்கிறேன்.

**சொக்:** சரியாப் போச்சு போங்க! நீங்க அர்த்தத்தை தலைகீழா நிண்ணுல்லே பார்த்திட்டீங்க. நான் சொல்றது அதில்லம்மா! கட்டிலுக்குள்ளே இருக்க வேண்டிய மூட்டைப் பூச்சிக்கு கண்ணுடி மேஜைக்குள்ளே என்ன வேலை? அதைத் தான் இடம் மாறி தட்டுக் கெட்டுப் போயி அலையிற கழுதைங் கண்ணு ரெண்டு திட்டுத் திட்டி—

**கோகி:** (எரிச்சலுடன்) கட்டையிலே போனே!— வீட்டுக்கு வர்றவங்களை வாங்க உக்காருங்கண்ணு மரியாதையா உபசரிக்கிறதை விட்டுட்டு—

**சொக்:** நீங்கதான் தினம் தவருமே வர்றீங்களேம்மா? இனி நான் எதுக்குக் குறுக்கே— வாங்க போங்கண்ணு—

**கோகி:** சரித்தான் நிறுத்து! உன்னைச் சொல்லி என்ன செய்ய? மட்டு, மரியாதை, அடக்கம், ஒடுக்கம் எதுவுமே இல்லாத உன்னை ஒரு வேலைக்காரன்னு வச்சிருக்கிருரு பாரு, அவரைச் சொல்லணும்.

**சொக்:** அப்பச்சரி, சொல்லுங்க! எனக்கு வேலை இருக்கு; நான் வர்றேன். (போகிருன்)

**கோகி:** (சொக்கலிங்கம் போனபின் ஆத்திரத்துடன்) சுத்த மடையன்!

**பாலு:** (வந்து, அதிர்ச்சியுற்று நின்று) ஊம்....அடியேன் பாலு!

**கோகி:** (கோபத்துடன் அவன் பக்கம் திரும்பி) நல்ல வேளை! நீங்க வேறே அடிப்பேன்னு சொல்லாமே, அடியேன்னு சொன்னீங்களே அது வரையிலே க்ஷேமந்தான்!

**பாலு:** (உட்கார்ந்து கொண்டே) ம்.... அப்படிச் சொல்ல இன்னும் காலம் வரலையே?

**கோகி:** அப்போ வருதாக்கும்?

**பாலு :** யாரு கண்டா, காலம் செய்ற கோலத்தை! ஆச்சு இன்னும் நாலு நாள்தானே! தானுத் தெரிஞ்சி போகுது.

**கோகி :** என்னத்தைத் தெரியப் போகுது?

**பாலு :** அதுதான் வரப் போருனில்லே, சீமையிலிருந்து சின்னப்பய, சிங்காரிச்சி உன்கூட குந்த வைக்க.

**கோகி :** வந்தா வரட்டுமே! நாமதான் நாமத்தைக் குழைச்சி ரெடியா வச்சிருக்கமே!

**பாலு :** அதுதான் தயாராயிருக்கே! இருந்தாலும் எனக் கென்னமோ ஒரு சந்தேகம்.

**கோகி :** பழசாப் போனதா; புதுசா வந்திருக்கா?

**பாலு :** ரெண்டுமில்லே! எப்பவும் இருக்கிறதுதான்.

**கோகி :** இந்தச் சந்தேகமே வேண்டாம்ன்னு நானும் தொளாயிரத்துத் தொண்ணூத்தெட்டுத் தடவை—

**பாலு :** சொன்னுலும், யாரையும் சந்தேகக் கண் கொண்டே பாரு! அப்பத்தான்—

**கோகி :** நாசமாப் போக முடியும்!

**பாலு :** என்கிறது தப்பு – பெரிய மனுஷன் ஆக முடியும்!

**கோகி :** அப்படீன்னு நீங்க சொல்றீங்க.

**பாலு :** அதுதான் இல்லே. இதெல்லாம், என்னைப் போல வருங்காலப் பெரிய மனிதர்களுக்காக, மாஜிப் பெரிய மனிதர்கள் வாயால் சொல்லாமல், காரியத்திலே செய்து காட்டி சூசகமாகத் தெரிவித்திருக்கிருர்கள். இதுதான் நான் கற்ற பாடம்; கடைப் பிடிக்கும் கொள்கை; அமல் நடத்தும் திட்டம்!

**கோகி :** அப்பப்பா! உங்க சந்தேகக் கண்ணை அப்படி என்னதான் குத்திக்கிட்டிருக்கோ?

**பாலு :** அப்படிக் கேளு, சரியான கேள்வி! வசந்தன் வந்ததும் அவனைச் சுத்தித்தான் வசந்தம் வீசும்ன்னு நீ பாட்டுக்கு அவனையே சுத்திக்கிட்டிருந்தயோ, அவ்வளவுதான்!

**கோகி :** உசுரை விட்டுடுவீங்க?

**பாலு :** அப்படிச் செய்றவன் என் மாதிரி மனுஷனு இருக்க மாட்டான்.

**கோகி :** ஒருவேளை என்மேலே இருக்கிற பிரியத்தினுலே—

**பாலு :** மனமுடைஞ்சி போயிடுவேன்னு நினைக்கிறே. அது வந்து கோகிலம், ஆளை ரொம்ப தூரம் நிதானிச்சிப் பார்த்துத்தான் தெரிஞ்சிக்கிடணும். உனக்கெல்லாம் அவ்வளவு தூரத்துக்கு அனுபவம் பத்தாது பாரு!

**கோகி :** பிறகு?

**பாலு :** அமெரிக்கப் படிப்பாளியே அடைக்கலம்ன்னு இருந்தியோ, அவ்வளவுதான். அடியேன்....அடிப்பேன்!

**கோகி :** (திடுக்கிட்டு) ஊம்!

**பாலு :** அதாவது இப்படி! (கொஞ்சுதலோடு லேசாகக் கன்னத்தில் தட்டுகிருன்)

**கோகி :** அப்ப! கொஞ்ச நேரத்துக்குள்ளே என் கதியே கலங்கிப் போச்சே கலங்கி!

**பாலு :** அதுக்கு இன்னும் ஆரம்பமே ஆகலேயே! கடல் கடந்தவன் வந்தால்தானே கலங்கும் படலம் தொடங்கும்.

**கோகி :** நான் ஒண்ணும் கலங்க மாட்டேன். எல்லாம் கணக்கா நடந்துக்கிடுவேன்.

**பாலு :** கணக்குத் தப்பாப் போயிடப் போகுது!

**கோகி :** ஏன் போகுது? கடலேத் தாண்டி மீண்டு வரப் போற காசுக்கார கனவானுக்கு என் கழுத்து இருக்கவே இருக்கு, காலியா—தாலிக் கயிற்றைச் சுற்றிக் கட்ட இப்பவே ரிசர்வ் பண்ணி வச்சிருக்கு! காதலுக்கு இருக்கவே இருக்கு (பாலுவைக் காட்டி) இந்தக் கண்கண்ட தெய்வம்.

**பாலு :** இருக்கு, இருக்கு. இல்லாமே இது எங்கே போகப் போகுது?

**கோகி :** இப்படித்தான் நான் கனகச்சிதமாக் கணக்குப் போட்டு வச்சிருக்கேன். பணம் – அதனுலே வர்ற பவிசு – இதுக்கு ஒரு கல்யாணம்! காதல் – அதிலே கிடைக்கிற இன்பம் – இதுக்குத் திரை மறைவிலே உறவு! இதுதான் என் கணக்கு.

**பாலு :** கணக்கென்னமோ, கணக்காத்தான் இருக்கு. ஆனல், விடைதான் வில்லங்கத்திலே மாட்டிக்கிட்டு, பின்னமா வந்து தொலேயுமோ, என்ன எழவோண்ணு—

**கோகி :** திகைக்கிறீங்களாக்கும். கணக்குன்னு அதுக்கொரு விடை கண்டிப்பா வந்துதானே ஆகணும். எந்த பின்னமாயிருந்தா நமக்கென்ன? இந்தக் கணக்கிலேதானே நாம காலேஜிலே மண்டையைப் போட்டு உடைச்சிக்கிட்டோம்!

**பாலு :** உடைச்சோம், உடைச்சோம்! அங்கே படிக்கப் போயித்தானே இந்த மர்திரியெல்லாம் சல்லீசா கணக்குப் போடத் தெரியுது!

**கோகி:** பிறகு பேசுறீங்களே! காலேஜிலே நாம கத்துக் கிட்டதைத்தான்—

**பாலு:** மறக்காமே கடைப்பிடிச்சிக்கிட்டு வர்றமே!

**கோகி:** அதை மறக்க முடியுமா பாலு?

**பாலு:** உன்னுலே முடியாதுன்னுதான் எனக்குத் தெரியுமே! நீ மறந்திருந்தா, உங்க அப்பா கிட்டே என்னைப் பத்தி அளந்து கொட்டுவியா? அவர் உங்க் மாமா கிட்டே அள்ளி வீசுவாரா? அவர் உடனே, நான் இப்பத்தான் பெரிய புலிண்ணு நினைச்சிக்கிட்டு, 'ஆகா, அப்படியா சமாச்சாரம்! அந்த ஆளைப் பிடிச்சிக் கொண்டா'ன்னு, என்னைப் பிடிச்சி இந்த இளங்கோ மில்லுலே குந்த வைப்பாரா? ஆகா, நம்ம காலேஜ் சிநேகிதம் இருக்கு பாரு கோகிலம்? அதை மறக்கவே முடியாது கோகிலம், மறக்கவே முடியாது!

**கோகி:** அதோடு மட்டுமில்லே ராஜா, அதைக் கொஞ்சம் முடியும் மறைக்கணும்.

**சொக்கலிங்கம்:** (குரல் மட்டும்) இந்தா பாரு, மூடி மறைக்கிற வேலையை வச்சிக்கிட்டயோ, அவ்வளவுதான்! முக்காட்டைப் போட்டுக்கிட்டுப் போகவேண்டியதுதான் – முக்காத் துட்டைக் கண்ணுலே பார்க்கமாட்டே! ஆமா! (கோகிலம் – பாலு அதிர்ச்சி யுறுகின்றனர். அவர்கள் முன்பாக வந்து கொண்டே) தண்ணியை ஊத்துனு, ஊத்தினேன்னு தைரியமாச் சொல்லேன்! ஏன் மறைக்கிறே? (கோகிலம் – பாலு தெளிவடைய,சொக்கலிங்கம் வீட்டுக்குள் நடந்து கொண்டே) ஆழாக்குப் பாலுலே உழக்குத் தண்ணியை ஊத்தி, ஊரை ஏமாத்துறது எத்தனை நாளைக்கு என்கிறேன்.

**பாலு:** டேடேய், என்னடா அது?

**சொக்:** (சென்றவன் நின்று) ஒண்ணுமில்லைங்க – நம்ம பால்காரன். ஆழாக்கைத் தூக்கி உழக்கிலே போட்டு, உழக்கைத் தூக்கி ஆழாக்கிலே போட்டு, எப்பப் பார்த்தாலும் ஊரை ஏமாத்துறதே தொழிலாப் போச்சு. இப்படி ரொம்பப் பேரு கிளம்பிட்டாங்க.

**பாலு:** டேய், அவன் மட்டுந்தான்-அப்படிச் செய்ருனு?

**சொக்:** எவன் செஞ்சா என்னங்க? அவன் மூஞ்சியிலே மனுசன் முழிப்பானு? (போகிருன்)

**கோகி:** (சொக்கலிங்கம் போனபின்) ஏது, இவன் ஒருத்தன் போதும் போலிருக்கே, நம்ம சங்கதியை அரங்கேத்தி ஆட்டம் காட்ட!

**பாலு :** அட, நீ யொண்ணு! இவன் எத்தனே நாளா இங்கே வேலேக்காரன்னு தெரியுமில்லே? இருந்தும் முதல்லே என்னேப் பத்திப் புரிஞ்சிக்கிட்டிருக்கானு பாரு? சுத்த வெகுளிப்பய! நக்கீரத்தனம் நாட்டுக்கு நல்லது; ஆனு நமக்கு சரிப் படாத சங்கதின்னு அவன் என்னத்தைக் கண்டான்? சரி, நாம புறப்படலாமா?

**கோகி :** ஆகா, அதுக்கு மேலே வேறே வேலே?

**பாலு :** ஆமாமா, இருக்கிறதே நாலு நாளு. அதையும் அனுவசியமா வேஸ்ட் பண்ணலாமோ? புறப்படு.

**கோகி :** அது சரி, இண்ணைக்கு என்ன நம்ம திட்டம்?

**பாலு :** எதிர்ப்பட்ட எந்த சினிமாவோ, டிராமாவோ, பார்க்கோ, பாசறையோ, எல்லாம் நம்ம திட்டம்தான். இப்போ புறப்பட வேண்டியதுதான் நம் முதல் புரோகிராம்!

[இருவரும் கை கோத்துக்கொண்டு செல்லுகின்றனர்]

●

## காட்சி 6

○

தெரு வழியே ஐயம்பெருமாளும் அவன் நண்பன் பெருமாளும் செல்லுகின்றனர்.

**ஐயம்பெருமாள் :** (நடந்தவாறு) நான் அண்ணேக்கே சொன்னேன்; தீர்மானம் திடீர்ன்னு மாறினுலும் மாறும்; எதுக்கும் சந்தேகத்துக்கு இடம் கொடுத்துப் பாருன்னு. நீ என்னடாண்ணு சண்டைக்கு வந்தே. (நின்று திரும்பி) இப்போ என்ன ஆச்சு?

**பெருமாள் :** எல்லாம் நல்லதுக்குத்தான் ஆச்சு. நீ நட!

**ஐயம் :** நல்லா நடக்கச் சொன்னே போ! இப்போ இது நல்லதுக்குத்தான்னு நாம என்னத்தைக் கண்டோம்? இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுப் பார்க்கலாமில்லே?

**பெரு :** யாரு கிட்டே?

**ஐயம் :** அட, உன்கிட்டே தாம்பா. எனக்கு வர்ற சந்தேகத்தைத் தீர்த்து வைக்க நீ தானே தோதான ஆளு.

**பெரு :** நல்ல தேளு போ! இப்போ உன்கிட்டே எவ்வளவு பணம் இருக்கு?

**ஐயம் :** என் கிட்டேயா?

பெரு : ஆமா, ஆமா.

ஐயம் : வந்து....எதுக்குக் கேக்கிறே? கைமாத்து, கிய் மாத்து....

பெரு : அட, அதெல்லா மில்லப்பா, இப்போ உன் கையிலே எவ்வளவு இருக்கு? அதைச் சொல்லு முதல்லே.

ஐயம் : என்கிட்டே ஏது பணம்? சம்பளம் வாங்கின மறு நாளே மாசக் கடன்காரர்களுக்குக் கொடுத்துத் தீர்த்தாச்சே! இருந்தா, ஒண்ணு அரை இருக்கும், சில்லரைச் செலவுக்கு.

பெரு : அவ்வளவுதானே கையிருப்பு? சந்தேக மில்லேயே?

ஐயம் : அதுக்கு எடமே இல்லே!

பெரு : சரி; மளிகைக் கடைக்காரன் கடன் கொடுத்தா எத்தனை நாளைக்குப் பொறுப்பான்?

ஐயம் : எத்தனை நாளைக்கா? பத்தாம் தேதி பாக்கியை எண்ணிக் கீழே வைக்கலே, அவ்வளவுதான்; நம்ம அடுப்பிலே பூனை படுக்கும்.

பெரு : இந்த லட்சணத்திலே நாம திடீர்னு வேலைநிறுத்தம் செய்றது எங்கே? நீடிச்சி நிண்ணு வெற்றி யடையிறது எப்படி?

ஐயம் : இது யோசனை செய்ய வேண்டிய சங்கதிதான்!

பெரு : இதைத்தான் அந்த முருகேசன் நம்ம சங்கக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லி, சீமையிலிருந்து சின்ன முதலாளி வர்ற வரையிலே வேலை நிறுத்தத்தை ஒத்திவைக்கலாம்னு வாதாடுனரு.

ஐயம் : ஆங்....அதுதான் சரி.

பெரு : அதோடே பொங்கலுக்கு இன்னும் நாள் இருக்கு. அதுக்குள்ளே சின்னவரும் வந்துடுவார்னு சொல்றுங்க. அவர் வந்துட்டா, அவர்தான் மில்லுக்குப் பொறுப்பாகவும் இருக்கப் போறவரு. அதனலே அவரையும் ஒரு வார்த்தை போனஸ் கேட்டுப் பார்த்துட்டு, பிறகு நம்ம வழியிலே நாம இறங்குறதுதான் நல்லது. இல்லேயா?

ஐயம் : நல்லது, நல்லதுண்ணு நாலு தடவை சொல்லிட்டு நட, நாம் போகலாம்! (சென்று திரும்பி) ஆனலும் பெருமாளு, எனக்கு இந்த இடத்திலே ஒரு சந்தேகம் வந்து முளைக்குது.

பெரு : எங்கே இருந்து?

காமராசர் ...

ஐயம் : எங்கே இருந்தா — இப்போ, சின்னவரு வரப்போற நேரத்திலே நாம கிளர்ச்சி செய்தா என்ன ஆகும்?

பெரு : வரவேற்புக் கொண்டாட்டம்—

ஐயம் : திண்டாட்டத்திலே முடியும். இல்லையா? ஆதனலே நாம வேலை நிறுத்தம் செய்யாமே இருக்கிறதுக்காக, நம்ம முருகேசனைப் பிடிச்சி, அவரு கையிலே ரெண்டு சில்லரையைத் திணிச்சி—

பெரு : சேச்சே! அதெல்லாம் இருக்காது!

ஐயம்: அட, இருக்கும்னு சந்தேகத்துக்கு இடம் கொடுத்துப் பாரேன்! ஏன்னு, நம்ம மானேஜருக்கும் முருகேசனுக்கும் கொஞ்சம் நெருக்கம். அவங்க ரெண்டு பேரும் அடிக்கடி காதைக் கடிச்சிக்கிடுறதாக அதைக் கண்டவங்க பேசி, காத்து வாக்கிலே பரவி என் காது வரையிலே எட்டியிருக்கு. அதுக்குத் தான் இப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்பிக்கிட்டு ஆராய்ச்சி செய்றேன்.

பெரு : ஆராய்ச்சியா இது? ம்....அப்புறம்?

ஐயம் : அடுத்தபடியாக இந்த முருகேசனுகப் பட்டவர், வேலை நிறுத்தத்தை ஒத்தி வைக்கணும்னு விடாப்பிடியாக நிண்ணதுக்குக் காரணம், மானேஜர் கை வழியா இவர் கைக்கு ஏதோ கொஞ்சம் வந்து சேர்ந்ததுதான். இப்படி சந்தேகப்பட எடமிருக்கான்னு எனக்கொரு சந்தேகம் வந்து சேருது.

பெரு : ஓகோ! முதல்லே முளைச்ச சந்தேகத்திலே யிருந்து இப்படி ஒரு கிளை பிரியுதோ? ம்....மேக்கொண்டு?

ஐயம் : சந்தேகத்தைக் கிளப்பி ஆராய்ந்து பார்த்து அறியணும்,

பெரு : தீய்யெடுத்து வை!

ஐயம் : எதிலே?

பெரு : உன் தலையிலே! (போகிருன்)

ஐயம் : (தனிமொழி) அட, இவன் யாருடா இவன்! மனசுக்குள்ளே இருக்கிற சந்தேகத்தை மடார்ன்னு விட்டா, இவன் பாட்டுக்குப் படார்ன்னு போயிடுருன்! ம்....இவனை நம்ம வழிக்குத் திருப்பி நாலும் தெரிஞ்சவனுக்கணும்னு நான் பார்த்தா, இவன் நழுவிக்கிட்டே இருப்பான் போலிருக்கே! ம்....நானு விடுறவன்? (போகிருன்)

●

## காட்சி 7

O

முருகேசன் வீடு — முருகேசன் மகள் கோமதி மில்லில் வேலை செய்து விட்டு வருகிறுள். முருகேசன் இரவு வேலைக்குச் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருக் கிருன்.

**கோமதி:** (வீட்டுக்குள் நுழைந்து கொண்டே சிறிது கடு மையாக) அப்பா....அப்பா!

**முருகேசன்:** (உள்ளே இருந்து வந்துகொண்டே) வந்துட்டே யாம்மா? சரி, அப்போ நான் புறப்பட வேண்டியதுதான்.

[துயர மிகுதியால் கோமதி பேச நா எழாமல் நிற்கிருள்— முருகேசன் அவளைக் கவனிக்காமல் கையிலிருக்கும் சட்டையைப் பிரித்துப் போட்டுக் கொண்டே]

**முரு:** வந்தும்மா....இண்ணைக்கு அப்டீ சந்தைப் பக்கமாப் போயிருந்தேன். ரெண்டணுவைக் கொடுத்து நல்ல முறுக்கா வாங்கிட்டு வந்தேன். அடுப்புக்கிட்டே உறியில்லே, அதிலே வச்சிருக்கேன். போயி, எடுத்துச் சாப்பிடம்மா, போ!

**கோமதி:** என்னப்பா இது? பெரிய தொல்லையாப் போச்சு! இதெல்லாம் நமக்கெதுக்கு?

**முரு:** (வேறு பக்கம் திரும்பிய வண்ணம் கொடியிலிருக் கும் பழைய துணிகளை ஆராய்ந்தபடியே) பரவாயில்லம்மா. ஏதோ, பழைய ஞாபகம் வந்தது. நீ குழந்தையா யிருக்கும் போது, நான் மாட்டு வண்டி ஓட்டிக்கிட்டு சந்தைக்குப்போனு, ஏதாவது பலகாரம் வாங்கிட்டு வருவேன் பாரு; அதை நினைச்சிக்கிட்டேன். அந்த மட்டிலே ஆசையோடே வாங்கிட்டு வந்தேன். போம்மா, போயி எடுத்துச் சாப்பிடு! ம்....ஒருத் தன்தான் கண்ணுலே படாமே ஓடிப்போயிட்டான். நீ ஒருத்தி யாவது எனக்குக் குழந்தையாயிருக்கயே!

**கோமதி:** (ஆத்திரத்துடன்) ஆமா, போங்கப்பா! வெட் டிப் பேச்சையும், வீண் விவகாரத்தையும் விலைக்கு வாங்கிக் கிட்டு....

**முரு:** (திடுக்கிட்டுத் திரும்பி சந்தேகத்துடன் கோமதியைப் பார்த்து) இப்போ, நீ என்னம்மா சொல்றே?

**கோமதி:** பிறகு என்னப்பா நீங்க; சங்கத்திலே போயி தலைவரையே எதுத்துப் பேசுவானேன்?

**முரு:** ஓகோகோ! சரியாப் போச்சு! நீ அதைச் சொல் றியா?

**கோமதி:** வெளியிலே தலைகாட்ட முடியுதா? நாலு பேரைப் போல நாமும் இருந்துட்டுப் போறதை விட்டுட்டு நமக்கெதுக்கு இந்த வீண் வம்பெல்லாம்? எதுத்துப் பேசி என்னத்தை ஆகப் போகுது?

**முரு:** எதுத்தாம்மா பேசினேன்? என் அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

**கோமதி:** அப்டீன்னு சொல்றவங்களை ஒருத்தரைக்கூடக் காணோம்!

**முரு:** வேறே என்னம்மா சொல்வாங்க? ஏழைப்பட்டவன் நியாயத்தைச் சொன்னு எதுத்துப் பேசுறுன். இருக்கப்பட்டவன் – நாலு பேருகிட்டே செல்வாக்கைத் தேடிக்கிட்டவன் அதிகாரம் பண்ணிஞ அதுக்குப் பேரு கண்டிச்சித் திருத்துருன். இப்படித்தானேம்மா லோகம் சொல்லும்.

**கோமதி:** இதுதான் தெரிஞ்ச சங்கதியாச்சே! பிறகு ஏம்பா பேசணும்?

**முரு:** என்னமோ என் மனசு கேக்கலே. நினைச்ச மாத்திரத்திலே வேலை நிறுத்தத்தை வச்சிக்கிட்டா, நாலு நாளையிலே நம்மவங்க நாலு பிரிவாப் பிரிஞ்சி, ஒருத்தனுக்குத் தெரியாமே ஒருத்தன் வேலைக்குப் போயி, போராட்டம் வயித்துப் போராட்டமா ஆயிடுமேன்னு பயந்துதான் நான் சொல்லப் போனேன்.

**கோமதி:** இதெல்லாம் தலைவருக்குத் தெரியாதாக்கும்?

**முரு:** தலைவரென்னம்மா, நம்மளைப் போல தொழிலாளியா? ஏதோ, பாட்டாளியைப் பத்தி படிச்சிப் பார்த்தவரு – இருந்து பார்த்தவரில்லே! அவருக்கு நம்ம நிலைமை உள்ளது உள்ளபடியா தெரிஞ்சிருக்க முடியுமா? கூலிக்காரன் சங்கத்துக்குக் கூலிக்காரன் தலைவனுயிருந்தா, நம்ம நிலவரம் அறிஞ்சி அதுக்குத் தகுந்த படியா நடவடிக்கை எடுப்பான். அப்படி யில்லாதபோது, நாமதானே நம்ம நிலைமையைச் சொல்லியாகணும். நல்லதுக்குத்தான் நான் சொன்னேன்.

**கோமதி:** நாம் பண்ணிட்டதாகவில்லே இப்போ சொல்றுங்க. இருக்கிற பொம்பளைத் தொழிலாளிங்க அத்தனை பேரும் என்னைப் பிச்சிப் பிடுங்குறுங்க. சாடைமாடையாக் குத்திக்காட்டிப் பேசுறதைப் பார்த்தா எனக்கு அழுகை அழுகையா வருதப்பா!

**முரு:** என்னம்மா செய்றது? எதுக்கும் தலையாட்டிவிட்டுப் போறதுக்கு தைரியமே தேவை இல்லை. உண்மை பேசுறதுக்குத் தானேம்மா உறுதி வேணும்.

**கோமதி :** ஆமா, இந்த உறுதியினுலே ஊர்ப்பட்ட பகை, ஏச்சு, பேச்சு, எல்லாத்தையும் ஏத்துக்கிட்டுச் சீரழிய வேண்டியதிருக்கு.

**முரு :** ஒருத்தன் தானேம்மா சீரழிவான். அதனுலே லோகமெல்லாம் சீர்ப்பட்டு வருமே!

**கோமதி :** ஆமா, லோகம் சீர்படுதேண்ணு சீரழிஞ்சி...

**முரு :** உன்னத பதவிக்குப் போனவங்க எத்தனையோ பேரம்மா! உயிரோடே இருக்கிற வரையிலே ஒரு சுகத்தையும் கண்டிருக்க மாட்டாங்க. வறுமையிலே வாடி வதங்கி, பிழைக்க வழி இல்லாமேப் பரிதவிச்சி, எங்கே போனுலும் ஏச்சுப்பட்டு, ஏமாத்தப்பட்டு, - ஆனுலும், உண்மையோடு நடக்கணும் என்கிற உறுதியினுலே, உதைபட்டுச் செத்தவங்க எத்தனையோ பேரம்மா! அவங்களாலேதான் இந்த லோகம் இம்மட்டோடே லோகமாயிருக்கு.

**கோமதி :** அவங்களெல்லாம் பெரியவங்க; தலைவருங்க. அதுமாதிரி நடக்கணும்னு, நம்மாலே முடியுமா?

**முரு :** நான் பேரு பெற்ற பெரிய மனுஷங்களைப் பத்திச் சொல்லலேம்மா. அவங்களெல்லாம் உண்மையைப் பத்திப் பிரசாரம் செய்றவங்க - அதனுலே விளம்பரமானவங்க. நான் சொல்றது உண்மையோடு நடக்கிறவங்களை - அதனுலே ஊரு பேரு தெரியாமே செத்து மடிஞ்ச ஜீவன்களைப் பத்திச் சொல்றேம்மா.

**கோமதி :** நல்லாச் சொன்னீங்க போங்க! காலம் போற போக்குத் தெரியாமே பேசுறீங்களேப்பா! இந்தக் காலத்திலே மனசுலே படுறதை, மனசுக்குள்ளேயே வச்சிக்கிட்டாத் தான் மதிப்பு. வெளியிலே சொன்னு ஆபத்து; அக்கம் பக்கமெல்லாம் பகை.

**முரு :** இப்படியெல்லாம் ஆபத்து வரும்; பகை வளரும்னு உள்ளதைச் சொல்லாமே அமுக்கி வைக்கிறதினுலே என்ன ஆகுது தெரியுமோ? உண்மையே உருமாறிப் போகுது.

**கோமதி :** என்னப்பா, நீங்க! பிறந்த ஊரிலே பிழைக்க வழியில்லாமே இங்கே வந்து சேர்ந்தோம். நாம இருக்கிற நிலைமையிலே நமக்கெதுக்கப்பா இந்தத் தத்துவமெல்லாம்? தலைவரை எதுத்துப் பேசி மீள முடியுமா?

**முரு :** அப்படி நான் என்னத்தை எதுத்துப் பேசிட்டேன்னு நினைக்கிறே? திடீர்னு வேலை நிறுத்தம் செய்து நீடிக்க நமக்கு இப்போ சக்தி இல்லை - அதனுலே முதலாளி மகன் சீமையிலிருந்து வர்ற வரையிலே பொறுக்கலாம்னு சொன்

னேன். உள்ளுக்குள்ளே எல்லோருக்கும் இதே எண்ணம் தான். அப்படியே முடிவும் செய்திட்டாங்க. இப்போ. நான் கெடுத்துப் போட்டேன்னு ஏசுறாங்க. இந்தக் கொடுமைக்கு எங்கே போறது?

**கோமதி :** இதை நீங்க சொன்னதாலே தானேப்பா வினையே வந்து முளைச்சிருக்கு. லஞ்சம் வாங்கிக்கிட்டுப் பேசுற தாக ஏசுறாங்க. இதைத் தலைவரே சொல்லியிருக்கட்டும். ஆகா, நம்ம தலைவர் சமய சந்தர்ப்பம் அறிஞ்சி ரொம்ப சாமர்த்தி யமா நடந்திருக்கிறாருன்னு புகழுவாங்க. இந்தக் காலத்தி லேப்பா, என்ன சொல்றாங்கன்னு யாரு கவனிக்கிறா? அதை யாரு சொல்றாங்க என்கிறதைத்தானே முக்கியமா கவனிச்சி மதிப்புத் தர்றாங்க.

**முரு :** அதென்னமோ, நிஜந்தான். இருந்தாலும் அவனவன் மனச் சாட்சிப்படி நடக்கிறவன் தான் மனுஷன்.

**கோமதி :** என்னமோ போங்க. அப்படி நடந்தா, லோகம் ஏன் இப்படி இருக்கு? (போகிறாள்)

●

## காட்சி 8

○

சோமசுந்தரம் பங்களா — செந்தாமரை கையில் பையுடன் ஒரு பாட்டை முணு முணுத்துக் கொண்டே வருகிறாள். திடீரென்று தாறுமாறாக தபேலா அடிக்கும் சத்தம் கேட்கிறது. உலுக்கி விழுந்து அறைக்குள் எட்டிப் பார்க்கிறாள். அங்கே கோபால், தபேலாவை கண்டபடி அடித்துக் கொண்டே, இங்கிலீஷ் பாட் டொன்றைக் கொலை செய்கிறான் — செந்தாமரை அவன ருகில் செல்லுகிறாள்.

**செந்தாமரை :** (எரிச்சலுடன்) அட, நீ தானா இப்படிப் போட்டு உடைச்செறிஞ்சி உசுரை விடுறது?

[கோபால், அவளைக் கவனிக்காமல் அவன் பாட்டுக்கு தபேலா அடித்தவாறு பாடிக் கொண்டிருக்கிறான்]

**செந் :** இந்தா பாரு, உன்னைத்தான்! அடாடாடா! இதென்ன பெரிய எழவாப் போச்சு! — இந்தா பாரு, உனக்கு இப்போ என்ன வந்திருக்கு? ஏன் இப்படிக் காட்டுக் கத்தலா கத்தித் தொலைக்கிறே? (உரக்க) அட, இந்தா பாரு, உன் னைத்தான்!

**கோபால் :** (கோபமாக தபேலாவை ஓங்கி அடித்து) அட சட், இடியட், ஷட்டப், நான்சென்ஸ், டாமிட், கீமிட், வாமிட், கெட்டவுட்!

**செங் :** அவுட்தான் விழணும் போ!

**கோபால் :** (எழுந்துகொண்டே) மனுசன் குஷியாப் பாடிக் கிட்டிருக்கிற நேரத்திலே குறுக்கே பாஞ்சியில்லே கெடுத்துப் போட்டா.

**செங் :** பாட்டா இது?

**கோபால் :** கேட்டாத் தெரியலே?

**செங் :** தெரியுது!

**கோபால் :** உனக்கென்னடி தெரியும்?—நீ நேத்து வந்தவ.

**செங் :** ஆமா, முந்தா நாத்து வந்தவ! மனுசன் பாடுற பாட்டா இது?

**கோபால் :** இல்லே, மடையன் பாடுறது.

**செங் :** ரொம்பப் பொருத்தமாச் சொல்றே.

**கோபால் :** பொருத்தமில்லாமேப் பேசுற புத்தி இந்த புத்திசாலிகிட்டே கிடையாது என்கிறேன். ஆங்! ம்ம்.... பொருத்தம் ரொம்ப அனர்த்தமாப் போச்சே! சேச்சே!

**செங் :** ஐயோ!

**கோபால் :** அவமானமா படுத்துறே? ம்....

**செங் :** நீ படுத்திக்கிடுறே! எங்கே பார்த்தாலும் தமிழ் தமிழ்ன்னு மணம் கமழுது. இவரு என்னடான்னு, டுங்கிள், டுங்கிள் லிட்டில் இஸ்டாரு....!

**கோபால் :** உன்க்கென்னடி தெரியும்?—நீ நேத்து வந்தவ. சின்ன முதலாளி வந்தவுடனே, அவருக்கு முன்னாலே, இந்த இங்கிலீசுப் பாட்டைப் பாடி சபாஷ் வாங்கலாம்னு நான் சாதகம் பண்ணிக்கிட்டு வந்தா....

**செங் :** ஆகாகா! பெரிய பாகவதரு!

**கோபால் :** இல்லாமே, எனக்கென்னடி வந்திருக்கு?

**செங் :** வந்திருக்கு, வகை கெட்ட தமிழனுக்கு ஒரு எடுத்துக் காட்டா!

**கோபால் :** இருந்தா இருந்துட்டுப் போகட்டும். அதைப் பத்தி நீ கேக்கிறது அனாவசியம். இப்போ நான் கேக்கிற துக்கு பதில் சொல்! இண்ணைக்கு என்ன தேதி?

**செங் :** ஏன், மார்கழி ரெண்டு.

**கோபால் :** அட, சீ! இங்கிலீசுத் தேதியைக் கேட்டா என்னமோ தேதியைச் சொல்ரு.

**செங் :** என்னமோ தேதியில்லே; தமிழ்த் தேதி.

**கோபால் :** அதை யாருடி உன்னைக் கேட்டா? வசந்துத் தம்பி வர்றது எந்தத் தேதின்னு தந்தி வந்ததும் டணூர்னு தெரிஞ்சிக்கிடலாம்னு நான் கேட்டா, இவ என்னமோ தமிழ்த் தேதியாமில்லே தமிழ்த் தேதி!

**செங் :** ஏன்; அதுக்குத் தமிழ்த் தேதி ஆகாதோ?

**கோபால் :** அதெப்டி ஆகும்? அட, மண்டு, மண்டு! இங்கிலீசுப் படிச்சி இங்கிலீசு நாட்டுக்குப் போனவரு, இங்கிலீசுத் தேதியிலேதானே திரும்பி வருவாரு என்கிற இங்கிதம் தெரியாத இந்த ஜன்மத்தை நான் கட்டிக் கிட்டு—

**செங் :** கொட்டைப் பாக்கை மெல்லுற மாதிரி இருக்கோ?

**கோபால் :** இல்லே! கோட்டானைப் பிடிச்சிக் கொஞ்சுற மாதிரி இருக்கு.

**செங் :** இருக்கும், இருக்கும்; ஏன் இருக்காது? அவரு தமிழ்த் தேதியிலே வந்தா என்னவாம்?

**கோபால் :** வந்தா என்னவா? அட, அப்பாவி! இங்கிலீசுப் படிச்சவரைப் போயி தமிழ்த் தேதியிலேயா வரச் சொல்றே! அவர் மதிப்பு என்னுகிறது?

**செங் :** மண்ணுகுறது! பிறந்த நாட்டுத் தேதியை மறந்துட்டு பிறத்தியான் தேதியைக் கட்டிக்கிட்டு அழுகுறது—

**கோபால் :** இந்தக் காலத்து நாகரீகம்!

**செங் :** அப்படி நினைச்சிக்கிட்டுத்தான் நாசமாப் போறோம்.

**கோபால் :** அட, என் சீறிப் பாயிற செந்தாமரை! இப்போ இங்கிலீசை வச்சிக்கிட்டதினுலே என்னத்தைக் குறைஞ்சி போயிட்டோம்?

**செங் :** ரெண்டு சாதியா பிரிஞ்சி போயிட்டோம். படிச்ச சாதி: படிக்காத சாதி.

**கோபால் :** அது வந்து அவங்க அவங்க தலையெழுத்து. இதைப் போயி சொல்ல வந்துட்டா.

**செங் :** ஆமா, தலையெழுத்து! சொந்த மொழி மட்டும் படிச்சவனைப் படிச்சவன்னு இந்த நாட்டிலே எவன் சொல்ருன்? வந்த மொழியைப் படிச்சவனுக்கு இங்கே வாழ்வு, வரவேற்பு, அதிகார வட்டாரத்திலே மதிப்பு. இதுக்குப் பேரு தலையெழுத்தா? தாய் மொழிக்குச் செய்ற துரோகம்.

அந்த மொழி வழிப்பட்ட மக்களை என்றுமே ஒன்றும் தெரியாதவர்களாக வைத்திருக்கச் செய்யும் சூழ்ச்சி, இன்னும் சொல்லப் போனு, நமக்கே நாம செய்துக்கிடுற அவமானம்!

**கோபால் :** செந்தாமரை, அதோடே நிறுத்து! விஷயம் பெரிசா இருக்கும் போலிருக்கு. எதுக்கும் வசந்துத் தம்பி வரட்டும். அவருகிட்டே இந்த விவகாரத்தை வச்சிப் பேசித் தீர்த்து சிக்கெடுத்தாப்லே ஒரு முடிவு செய்துடலாம். அது வரையிலே எனக்கு இங்கிலீசுத் தேதிதான் கணக்கு,

**செந் :** எப்படியாவது போ! எனக்குத் தமிழ்த் தேதிதான் கணக்கு. இங்கிலீசுத் தேதி என்னண்ணு என்கிட்டே கேட்டியோ?—

**கோபால் :** தலையைச் சீவிப் போடுவியோ? அப்டித்தான் கேட்பேன்.

**செந் :** கேக்காதே!

**கோபால் :** கேட்பேன்!

**செந் :** கேக்காதே!

**கோபால் :** எதுத்துப் பேசாதே!

[சோமசுந்தரம், தம் கையில் பிரித்த தந்தியுடன் உற்சாகம் பொங்க அங்கு வருவதை செந்தாமரை கவனிக்கிருள்]

**செந் :** உஸ்....எசமான்!

**கோபால் :** ஊம்! அப்படி வா வழிக்கு. நான் உனக்கு எசமான்தானே! அதனுலேதான் கேட்பேன்னு சொல்றேன்.

**சோம :** டே டேய், என்னடா இது? ஒரே அமர்க்களம்.

**கோபால் :** (திடுக்கிட்டுத் திரும்பி) ம்ம்....ஒண்ணுமில்லே முதலாளி. இவ வந்து விவரமே புரியாமப் பேசுரு. விசயத்தை விளக்கிச் சொல்லி புரிஞ்சிக்கிடுருளான்னு பார்த்தேன். அவ்வளவுதான் விசயம்.

**சோம :** அடடே! அவ்வளவு பெரிய மேதாவி ஆயிட்டயா? இது எத்தனை நாளா?

**கோபால் :** பிறகு என்னங்க எசமான்? சின்ன முதலாளி வர்ற தேதியைப் பத்தி—

**சோம :** அதெப்டிடா உனக்குத் தெரிஞ்சது? இப்பத் தானேடா எனக்குத் தந்தி வந்தது; அஞ்சி நிமிஷம்கூட ஆகலேயே!

**கோபால் :** (மகிழ்ச்சியுடன்) ஆங்....தந்தியா? வசந்துத் தம்பி தந்தியா? சோக்குத்தான், சோக்குத்தான்!

**சோம :** டேடேய்! கொஞ்சம் பொறு! இப்பவே குதிச்சித் தீர்த்துப் போடாதே; கொஞ்சம் பாக்கியிருக்கட்டும்.

**கோபால் :** எப்ப வர்ருருங்க?

**சோம :** இருபதாந் தேதி.

**கோபால் :** இங்கிலீசுத் தேதி தானுங்களே?

**சோம :** பிறகென்ன, பினுங்குக்காரன் தேதியா?

**கோபால் :** அதைக் கொஞ்சம் அவகிட்டே சொல்லுங்க, முதலாளி!

**சோம :** கேட்டுக்கிட்டுத் தானேடா நிக்கிரு.

**கோபால் :** (செந்தாரையைப் பார்த்து முறைப்பாக) பாத்தியா? பாத்தியாங்கிறேன்! இப்பத்தான் தெரிஞ்சவ மாதிரி குதிச்சியே?

**சோம :** இப்போ நீதானேடா குதிக்கிறே?

**கோபால் :** இல்லிங்க எசமான், இங்கிலீசுப் படிச்ச தம்பி இங்கிலீசுத் தேதியிலேதானே வருவாருன்னு நான் சொல்றேன். 'தமிழ்த் தேதியிலே வந்தா என்ன?'—அப்டீண்ணு கேக்கிரு! கொழுப்பில்லே!

**சோம :** போடா சாம்பிராணி! அவ கேட்டதிலே என்னடா தப்பு? அவ கணக்குத்தான் சரி, நம்ம நாட்டுக் கணக்கு.

**கோபால் :** ஆமா, நம்ம மில்லுலே இங்கிலீசு மாசம் பிறந்தாத்தான் சம்பளம்....

**சோம :** அட, அதை யெல்லாம் மாத்தித் தொலைச்சி, நம்ம மாசத்தைக் கணக்குப் பண்ணனும்டா, மண்டு! அதுக்குக் காலம் வரட்டும்; இப்போ நீ போயி ஆக வேண்டிய காரியத்தைப் பாரு!

**கோபால் :** ஆகா, அதுக்கு மேலே வேறே வேலை?

**சோம :** டேய், சும்மா, நீ பாட்டுக்குப் பெருமை அடிச்சிக்கிட்டு அலையாதே! வசந்தன் வர்றதுக்கு இன்னும் நாலே நாலு நாள்தான் இருக்கு. அதுக்குள்ளே அவன் அறையை யெல்லாம்...

**கோபால் :** அப்டீ ஜிலு ஜிலுன்னு ஜொலிக்க வச்சுப் போடுறேன், ஜெலிக்க!

**சோம :** டேய், சுத்தமா வச்சிருந்தா போதும்! ம்....பங்களா முழுக்க....

**கோபால் :** பளபளன்னு சிங்காரிச்சிப் போடுறேன், சிங் காரிச்சி!

**சோம :** ஆமா, இவரு பெரிய சித்திரக்காரரு! அப்படியே சிங்காரிச்சிப் போடுவாரு. டேய், வெள்ளையடிச்சி சுத்தப் படுத்தினப் போதுண்டா; அதுக்கு மேலே உன் திறமையைக் கொண்டு போயிக் காட்டிடாதே! நாலு பெரிய மனுஷாள் வந்து போயிக்கிட்டு இருப்பாங்க. குறையிருக்கு என்கிற பேச்சு வெளியிலே வரப்படாது; ஆமா! மளமளன்னு காரி யம் ஆகணும், (போகிறார்)

**கோபால் :** (செந்தாமரையிடம்) ஏய், கொஞ்சம் தண்ணி கொண்டா! (செருமிக்கொண்டே) தொண்டை ஒரு தினுசா...

**செந் :** (நையாண்டியாகச் சிரித்துக்கொண்டே) வறண்டு போச்சோ? ஐயோ, பாவம்! இங்கிலீசு....

**கோபால் :** சரித்தான் போடி! வரவேண்டிய அதிகாரம் அப்பவே வந்தாச்சு. பயப்படுறாளா பாரு! ம்....

[ செந்தாமரை தலையை ஒரு வெட்டு வெட்டிக்கொண்டு செல்கிறாள். அவளைக் கேலி செய்வதுபோல் தலையாட்டு கிறான் கோபால் ]

**கோபால் :** (தனிமொழி) ஐயோ கூத்தே! பெண்டாட்டி யென்ன புருஷனுக்கு வேலைக்காரி – யாபயந்து நடுங்கிச் சாக!

## காட்சி 9

தெரு வழியே ஐயம்பெருமாளும் – பெருமாளும் செல்லு கின்றனர்.

**ஐயம்பெருமாள் :** (நடப்பவன், நின்று திரும்பி) ஏம்பா, நீ நல்லாப் பார்த்தியோ?

**பெருமாள் :** (வெறுப்புடன்) பார்த்தேன், பார்த்தேன்!

**ஐயம் :** அப்பச் சரித்தான் வா! (சென்று, தயங்கி நின்று) வந்து....தேதியை சரியாப் பார்த்தியோ?

**பெரு :** சரியாத்தான் பார்த்தேன்னுதான் சொல்லித்தான் தொலைக்கத்தான் செய்றனே?

**ஐயம் :** அப்போ நாளைக்கு நமக்கு லீவுதானே? சந்தேக மில்லையே?

பெரு : இல்லே, இல்லே, இல்லே! அடாடாடா! உன் தொண தொணப்பை மனுசன் சகிப்பானு?

ஐயம் : அப்பச் சரித்தான் வா! (சென்று தயங்கி நின்று) வந்து....நடுவிலே எதுவும் மாத்தம் இருக்காதே?

பெரு : (வெறுப்பை அடக்கிக்கொண்டு) இருக்காது!

ஐயம் : முதலாளி விசயம்! டபார்னு மாறும்! அமெரிக்கா விலிருந்து வர்றவரு; அதிலேயும் பறந்து வரப்போருரு; சந்தேகப்பட எடமிருக்கு!

பெரு : எந்த எழவுக்கும் எடமே இல்லே! நாளேக்குக் கட்டாயம் இங்கே இருப்பாரு. நீ நட!

ஐயம் : அப்பச் சரித்தான், புறப்படு! (சென்று நின்று) ம்...எல்லோரும் வெள்ளேயா உடுத்திட்டு வரணும்னு...

பெரு : சொல்லியிருக்காங்க.

ஐயம் : சொல்லியிருக்காங்கயில்லே?—ஒரு வேளே, நோட்டீசு போர்டுலேயே போட்டிருக்கோ?

பெரு : இல்லே, வாயினுலேதான் சொன்னுங்க.

ஐயம் : அப்பச் சரித்தான்! நான் கூட நோட்டீசுப் போர்டைப் பார்த்தேன். ஆனுலும் ஒரு சந்தேகம். வெள்ளேயா உடுத்திட்டு வரணும்னு நோட்டீசுலேயேபோட்டிருக்கா, அல்லது வாய்ப் பேச்சா—அப்டீன்னு கொஞ்சம் சந்தேகம் வந்திடுச்சி!

பெரு : (அதிக வெறுப்புடன்) விடிஞ்சி போச்சி போ! உன்னேப் பிடிச்ச இந்த சந்தேகம் எண்ணேக்கு ஒழியுதோ, அண்ணேக்குத்தான் என்னேப் பிடிச்ச பீடையும் தொலேயும்! நேரமாகுது போ!

ஐயம் : இல்லப்பா, சந்தேகம்—

பெரு : சர்வநாசம்! ஐயோ, ஐயோ! உன் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க எவனுலே முடியும்? இந்த பாரு, இதைப் பத்தி, உனக்கு இதுவரையிலே எத்தனேயோ தடவை சொல்லியாச்சு. இன்னெரு தடவையும் சொல்லித் தீர்த்து ஒழிச்சுப் போடுறேன்! நாளேக்குக் காலேயிலே பத்தரை மணிக்கு நம்ம முதலாளி மகன் வசந்தன், சீமையிலிருந்து வரப் போருரு-விமான மார்க்கமா. பதினேரு மணிக்கு மில்லுலே பெரிய வரவேற்புக் கொண்டாட்டம். அதனுலே நமக்கெல்லாம் லீவு. இத்தனே நாளும் போால இல்லாமே நாளேக்கு நாம எல்லோரும் வெள்ளேயும் சொள்ளேயுமா உடுத்திட்டு வந்து சேரணும்னு சொல்லி யிருக்காங்க. இவ்

வளவுதான் விசயம். இதுக்கு மேலே உன் சந்தேகத்தைக் கட்டிக்கிட்டு நீயே அழு! (போகிறன்)

**ஐயம் :** (தனிமொழி) அட, இவனுக்கெதுக்கு இப்ப கோபம் வரணும்? ம்....இது வேறே சந்தேகமாப் போச்சே! ம்.... மனுசனுக்கு சந்தேகம் வந்தா, அதை மனசுக்குள்ளேயே வச்சிருக்கக்கூடாது; வச்சிருந்தா உருப்பட மாட்டான்னு சொல்லியிருக்காங்க. அதனலே சந்தேகத்தைத் தீத்துத் தெளிவா தெரிஞ்சிக்கிடலாம்னு நான் பார்த்தா, இவனுக்கு ஏன் இப்பக் கோபம் வரணும்? ம்....மனுசனைப் பெரிய சந் தேகத்திலேயில்லே மாட்டி வச்சிட்டுப் போயிட்டான்? ம்.... ஆமா, நாளைக்கு முதலாளி மகன் இங்கே வந்து சேரணும்னு, இண்ணைக்கே பம்பாயிலே வந்து இறங்கி யிருக்கணுமே! ம்.... இறங்கி இருக்கணுமா, வேண்டாமா? ம்.... ஏ, அப்பா! இது மகாப் பெரிய சந்தேகமாவில்லே வந்து முளைச்சிருக்கு! இதை நம்மாலே தீர்த்துக்கிட முடியாது; நாலு பேரைத் தேடிப் பிடிச்சிக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டாத்தான் உருப்பட முடியும். இல்லே, உருள வேண்டியதுதான். (போகிறன்)

●

## காட்சி 10

○

**இளங்கோ மில் முதலாளியின் மகன் வசந்தன்,** ஐந்து ஆண்டுகளாக அமெரிக்காவில் தங்கி படிப்பை முடித்துக் கொண்டு, தன் சொந்த ஊரான கோவைக்குத் திரும்பும் வழியில், பம்பாயில் விமானத்திலிருந்து இறங்கி, ஆடம்பரமான ஒரு ஹோட்டலில் தங்குகிறன். தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் மேல் நாட்டு நாகரீக கோலத்தோடு நுழைகிறன். அவனைத் தொடர்ந்து ஹோட்டல் வேலைக்காரப் பையன் **பூங்காவனம்** பெட்டி, படுக்கை முதலிய சாமான்களைச் சுமந்து வருகிறன். வசந்தன் சிறிது நின்று ஹோட்டல் அறையைச் சுற்றி அலட்சியமாக ஒரு பார்வை பார்க்கிறன். பையன் சுமையை இறக்கி வைத்துக்கொண்டிருக்கிறன்.

**வசந்தன் :** (பையனைப் பார்த்து கம்பீரமாக அதிகாரத்துடன்) பாய், கெட் சம் வாட்டர்! (Boy, get some water)

**பூங்காவனம் :** (பணிவுடன்) எஸ் சார். (போக)

**வச :** கோல்ட் வாட்டர்! (Cold water)

**பூங்கா :** (சென்றவன் நின்று திரும்பி) எஸ் சார்.

வச : கோ ஆண், ரன், கம் சூன்! (Go on, run, come soon)

பூங்கா : எஸ் சார். (செல்லுகிருன்)

வச : (மேஜைமீது பொருத்தி வைக்கப்பட்டிருந்த நிலைக் கண்ணடியில் சிறிது தூசி படிந்திருப்பதைப் பார்த்து) பாய், பாய்! (Boy, Boy!)

பூங்கா : (சென்றவன் அறைக்குள் ஓடோடியும் வந்து அச்சத்துடன்) சார்!

வச : (அருவெறுப்புடன்) வாட் ஏ டர்டி பிளேஸ்! கிளீன் திஸ் மிரர் பஸ்ட் ஆப் ஆல்! (what a dirty place! Clean this mirror first of all)

பூங்கா : எஸ் சார்! (ஒரு துணியை எடுத்து கண்ணடியைத் துடைக்கிருன்)

வச : (சோபாவில் உட்கார்ந்து, சிகரெட் பற்ற வைத்து பத்திரிகை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தவன், திடீரென்று) வேர் இஸ் த வாட்டர்? - கோல்ட் வாட்டர்! (Where is the water? Cold water!)

பூங்கா : (திடுக்கிட்டு நடுக்கத்துடன் கண்ணடியைக் காட்டி) சா....ர்!

வச : (கோபத்துடன்) பிளடி பூல்! ஐ ஆஸ்க்டு யூ வாட்டர், ஆப் அன் ஹவர் பிபோர். ஒய் ஆர் யூ ஸ்டாண்டிங் ஜஸ்ட் லைக் ஏ டாங்கீ? ரன் எவே! கெட் த வாட்டர்! (Bloody fool! I asked you water, half an hour before. Why are you standing just like a donkey? Run away, get the water)

பூங்கா : (நடுநடுங்கி) எஸ் சார்! எஸ் சார்! ஒன் மினிட்! (செல்லுகிருன்)

[வசந்தன் கண்ணடிக்கு முன் உட்கார்ந்து தலைவாரிக் கொண்டிருக்க, பூங்காவனம் தண்ணீர் கொண்டுவந்து மேஜைமீது வைக்கிருன்]

வச : (கண்ணடியைப் பார்த்து, தன் கன்னத்தையும் நாடியையும் தடவியவாறு) வாட்டர் ரெடி? (water ready?)

பூங்கா : எஸ் சார்.

வச : கெட் இட் ஹியர்! (Get it here)

[பூங்காவனம், தண்ணீர் நிரம்பிய கண்ணடிக் கூஜாவை எடுத்து வந்து வசந்தன் முன் நீட்ட, அவன் அதைத் தொட்டுப் பார்க்கிருன்]

**வச :** வாட் இஸ் திஸ்! கோல்ட் வாட்டர்? (What is this! Cold water?)

**பூங்கா :** (பயத்துடன்) எஸ் சார்! கோல்ட்–வெரி கோல்ட்!

**வச :** நான்சென்ஸ்! (Nonsense)

**பூங்கா :** (நடுக்கத்துடன்) யூ....ஆர்டர்....கோல்ட்....

**வச :** டாமிட்! ஐ வான்ட் டு ஹேவ் ஏ ஷேவ். கெட் ஹாட் வாட்டர்! (Damned want to have a shave. Get hot water)

**பூங்கா :** எஸ் சார்....ஒன் மினிட்.

**வச :** டர்ட்டி பெல்லோ! (Dirty fellow!)

**பூங்கா :** (தண்ணீரைக் கொண்டுபோய் மேஜை மீது வைத்துக் கொண்டே, வசந்தன் தமிழன் அல்ல நினைப்பில்) இவன் எங்கேயிருந்துடா வந்து சேர்ந்தான் – ஒட்டைக் கப்பல்லே! (வெந்நீர் கொண்டுவரச் சென்று கொண்டே) நம்மளை உசுரோடே கொண்ணுடுவான் போலிருக்கே!

**வச :** (சிறிது திடுக்கிட்டுப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்து) டேய்!

**பூங்கா :** (அறைக் கதவருகில் சென்றவன் அதிர்ச்சியுற்று நின்று, பயத்தால் உடம்பெல்லாம் நடு நடுங்க) சார்!

**வச :** (புன்முறுவலுடன்) வாடா, இங்கே!

[பூங்காவனம் வெலவெலத்துப் போகிறான். மெள்ள மெள்ள வசந்தன் அருகில் சென்று, அவன் அடித்து விடுவானோ என்ற பயத்தால் எட்ட நிற்கிறான். வசந்தன் எழுந்து அவன் அருகில் செல்லுகிறான்]

**வச :** (அன்பு ததும்ப) நீ தமிழனா?

**பூங்கா :** (அளவற்ற பயத்துடன் இரு கைகளையும் கூப்பி) ஆமா, சார்! தெரியாமேப் பேசிட்டேன் சார்! (வசந்தன் கால்களைப் பிடித்துக் கொண்டு) உங்க காலிலே விழுந்து கும்பிடுறேன்ய்யா! என்னை மன்னிச்சிடுங்க சார்!

**வச :** (நீண்ட காலமாக தாய் மொழிப் பேச்சைக் கேட்காமலிருந்ததால், பையன் பேசுவதை ரசித்துக் கொண்டே) பேசு, பேசு! இன்னும் பேசு! இன்பத் தமிழைக் கேட்டு எத்தனை வருஷமாச்சு! திட்டும்போதுகூட இன்பம் தட்டுதே! பேசு, ம்....!

**பூங்கா :** (கண்ணீர் கலங்க வசந்தன் பாதங்களைத் தொட்ட வண்ணம்) இனிமே பேச மாட்டேன் சார்! தெரியாமே பேசிட்

டேன்ய்யா! மன்னிச்சிடுங்கய்யா! நான் ஏழை; வேலே செஞ்சி வயித்தைக் கழுவுற கூலிக்காரன்; பராரிப் பய! கொஞ்சம் தயவு பண்ணுங்கய்யா!

**வச :** (பையனின் பரிதாபத்தை விட, அவனது தமிழ்ப் பேச்சில் மதி மயங்கியவனுக) ஆஹா ஹா! என் தாய் மொழி யின் இனிமையே இனிமை! பேசு, இன்னும் பேசு!

**பூங்கா :** (பயம் மேலிட்டவனுய்) இனிமேப் பேச மாட் டேன்ய்யா! மானேஜருக்குத் தெரிஞ்சா என்னே வேலையை விட்டேத் தள்ளிடுவாங்கய்யா. நான் பரதேசிப் பய; பஞ்சம் பிழைக்க வந்தவன். எத்தனேயோ நாள் பட்டினி கிடந்து இந்த வேலையைச் சம்பாதிச்சேன். என்னேக் காப்பாத்துங் கய்யா! இல்லாட்டா என் சோத்து வாயிலே மண் விழுந் துடும். ஐயா, ஐயா, என்னே மன்னிச்சிட மாட்டீங்களா? இந்த ஏழை மேலே கொஞ்சம் தயவு பண்ணுங்கய்யா. மானேஜர்கிட்டே சொல்லிடாதீங்க சார்!

**வச :** (அவனது தோள்களேப் பிடித்துத் தூக்கி நிறுத்தி) பேசு, பேசிக்கிட்டே இரு. பேசப் பேசக் கேட்டுக்கிட்டே இருக்கலாம்னு தோணுது.

[தான் வசைச் சொல் வீசி விட்டதால் கோபம் கொண்டு தான், வசந்தன் இப்படி மறைமுகமாகக் குத்திக் காட்டு வதாக எண்ணி பீதியடைகிருன் பூங்காவனம்]

**பூங்கா:** (கண்ணீர் வழிந்தோட, ஒரு கையைக் கட்டிக் கொண்டு, இன்னெரு கையால் வாயைப் பொத்தி) இல்லே சார், இல்லே! இனிமே பேசவே மாட்டேன்! பேசின தெல்லாம் தப்பு! இரஞ்சிக் குடிக்கிற ஏழை; பிழைச்சிப் போறேன்ய்யா!

**வச:** பரவாயில்லே, சும்மா பேசு! தமிழை ஒரு தமிழன் பேசித்தாண்டா கேக்கணும். அதில்தான் தனி இனிமை! பேசு – ஏன் பேசலே? சும்மா பேசு!

**பூங்கா:** இல்லேய்யா, எனக்குப் புத்தி வந்தது. நீங்க நம்ம நாட்டுக்காரங்கன்னு எனக்குத் தெரியாமேப் போச்சு. நான் பாட்டுக்கு முட்டாத்தனமா உளறிட்டேன்ய்யா! (குனிந்து) வேணுமானு ரெண்டு உதை கொடுங்க. மானேஜர் கிட்டே மட்டும் சொல்லிடாதீங்க சார்! பிறகு என் பாடு நாய்கூடப் படாதுங்க! நம்ம ஓட்டலுக்கு வர்ற கனவான்களேப் பேசுற துக்கு உனக்கு அவ்வளவு திமிராடா கழுதை; வெளியே போடா நாயின்னு என்னே விரட்டி யடிச்சிடுவாங்கய்யா. பிறகு நான் என்ன செய்வேன்! ரொம்ப நாள் பட்டினி கிடந்து

செத்து மடிஞ்சவன். இப்போ, பட்டினின்னு என் குலேயே நடுங்குதுங்க!

**வச:** ஏன் இப்படி நடுங்கிச் சாகுறே? பெரிய சர்க்கார் உத்தியோகமா கெட்டுப் போகுது? இதை விட்டா இன்னொண்ணு.

**பூங்கா:** உசுரை விடுறதுகூட லேசுங்க! ஆனு, வேலே கிடைக்கிறது அவ்வளவு லேசில்லே! நிரந்தரமா ஒரு வேலே கிடைக்காதான்னு நாங்க படுற பாடு; அலேயிற அலேச்சல்! ம்....அதிலே அடி பட்டவங்களுக்குத்தான் அந்த வேதனே யெல்லாம் தெரியும் முதலாளி!

**வச:** ஊம்! (மனம் நெகிழ்கிறது – சிந்தனேயில் மூழ்கிய வனுய்) சரி அப்படி உட்காரு! (பூங்காவனம் கீழே உட்காரப் போகிருன் – அருகிலிருக்கும் ஸ்டூலேக் காட்டி) சும்மா அது மேலே உட்காரு! (என்றவாறு சோபாவில் அமருகிருன்)

**பூங்கா:** இல்லீங்க எசமான்; சும்மா....இப்படி கீழேயே இருக்கேன். (தரையில் அடக்க ஒடுக்கமாக உட்காருகிருன்)

**வச:** கண்ணேத் துடைச்சிக்கோ! (பூங்காவனம் துடைத்துக் கொள்கிருன்) கொஞ்சம் சிரி! ஊம், இன்னும் நல்லா – சும்மா சிரிடா! மானேஜரிடம் சொல்லமாட்டேன்; பயப்படாதே! தமிழனேத் தமிழன் காட்டிக் கொடுத்து, அந்தத் தீராத பழியை என் தலேயிலா கட்டிக் கொள்ள வேணும்? (பூங்கா வனத்தின் முகம் மலருகிறது) ஊம், இப்பத்தான் நீ தமிழன்!

**பூங்கா:** இல்லீங்க, நான் எப்பவும் தமிழன்தான்!

**வச:** போடா, தமிழன் அழுவானு? அஞ்சா நெஞ்சம் படைச்சவனுச்சே!

**பூங்கா:** அது எந்தக் காலத்திலேயோ எசமான் எனக்குத் தெரியாதுங்க. இப்போ என்னேப் போல அழுகுணித் தமிழர் கள்தான் ஏராளம்!

**வச:** போடா. நீ அழுமூஞ்சி; மத்தவங்களே ஏன் சொல்றே?

**பூங்கா:** இல்லீங்க, இப்போ என்னேப் போல ஆத்மாக்கள் தான் பெருத்துப் போனுங்க. கூலி கிடைக்காதான்னு காலிலே விழுறவங்களுக்கு வேலே கிடைக்கலே; வேலே கிடைச்சுச் செய்றவங்களுக்குக் கூலி பத்தலே. நிலேமை இப்படி இருக் கும் போது அழுகாமே சிரிக்க முடியுமா?

**வச:** உம்....உன் பேர் என்ன?

**பூங்கா:** பூங்காவனம்.

**வச:** அழகான பேர்–சொந்த ஊரு?

**பூங்கா:** மதுரைப் பக்கம்.

**வச:** இந்த பம்பாயிக்கு எப்படி வந்து சேர்ந்தே?

**பூங்கா:** எப்படியோ வந்து சேர்ந்தேன் முதலாளி. அதை ஏன் கேட்கிறீங்க? ஏழைப்பட்டவன் பிழைப்பிலே அழுகையும் கண்ணீரும் தவிர, அழகும் கவர்ச்சியும் ஏது? அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு எசமான்? துன்பப்படாத மனசு; துயரங்களை ஏன் கேட்கணும்?

**வச:** அறிவாளி மாதிரி பேசுறயே?

**பூங்கா:** எல்லாம், அனுபவம்தான் முதலாளி!

**வச:** ஊம்...அது சரி, உன் கதையைச் சொல்லு! (பூங்காவனம் தயங்குகிறான்) சும்மா சொல்லு!

**பூங்கா:** நாங்க நல்லா பிழைச்சவங்கதான் எசமான். நடுவிலே பஞ்சம் வந்து சேர்ந்தது. நான் பாட்டுக்குப் புறப்பட்டு வந்துட்டேன்; வீட்டிலே கூட சொல்லலே. கண்ட இடமெல்லாம் அலேஞ்சி திரிஞ்சி, கால் நடையா நடந்து, கள்ள ரயிலேறி எப்படியோ இங்கே வந்து சேர்ந்தேன். பாஷை தெரியாமே நான் பட்ட பாடு; பட்டினி கிடக்க முடியாமே நான் கெட்ட கேடு - ஏன் சொல்றீங்க? அதை இப்ப நினைச்சாலும் என் உடம்பு புல்லரிக்குது. கடைசியிலே கடவுள் புண்ணியத்திலே இந்த வேலே கிடைச்சுது. அதிலேயிருந்து கொஞ்சம் நிம்மதி. போன மாசந்தான் ஒரு அஞ்சு ரூபா வீட்டுக்கு மணியார்டரிலே போட்டு விட்டேன். அங்கே யாரும் இல்லேன்னு திரும்பி வந்துட்டது. (துயரம் நெஞ்சை அடைக்க) ம்....அவங்களெல்லாம் எங்கே அலேயிருங்களோ? என்ன பண்ணுறுங்களோ? ம்....நாங்க பிழைக்கவா பிறந்திருக்கோம் எசமான்? இல்லவே, இல்லே! காலமெல்லாம் கண்ணீர் விட்டு, உடம்பு கெட்டு மண்ணோடு மண்ணுக மண்டையைப் போடப் பிறந்திருக்கோம் முதலாளி, மண்டையைப் போடப் பிறந்திருக்கோம்!

**வச:** ம்...! இதனுலேதான் உனக்கு அவ்வளவு பயமா, இருக்கிற வேலேயும் போயிடுமோன்னு?

**பூங்கா:** ஆமாங்க! என்னைப் போல ஏழைகளுக்கு உயிரைக் காப்பாத்துறது அவ்வளவு பெரிசில்லே; இருக்கிற வேலேயைக் காப்பாத்திக்கிடுறதுதான் பெரிசு! உசுரைப் பெரிசா மதிச்சா, சுரங்கத்துக்குள்ளே இறங்கி, யந்திரங்களோடே மல்லுக்கட்டி, கடலுக்குள்ளே மூழ்கி, காடு மேடெல்லாம் சுத்தி, வேலேயும் அதிலே கிடைக்கிற கூலியும்தான் பெரிசுன்னு செய்வாங்களா? ஏதோ, கடவுள் எங்களைக் கை,

காலோடே படைச்சி அனுப்பிட்டான்; காசும் சுகமும் கண்டதாரு? கஞ்சி கிடைச்சாப் போதும். அதுக்குக் கூட பஞ்சம் வரும் போதுதான் பயமாயிருக்கு! ம்....இந்தத் துயரங்களை யெல்லாம் நீங்க ஏன் கேக்கணும்! வேதனை அறியாத மனசு; உங்களுக்கெதுக்கு இந்த வெட்டிப் பேச்செல்லாம்?

**வச:** வெட்டிப் பேச்சில்லே, தம்பி! பாட்டாளி படும் பாட்டை இப்படி யெல்லாம் கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டா, என்னுலே ஆனது ஏதாவது இருந்தா செய்யலாம் பாரு!

**பூங்கா:** இதையெல்லாம் கேட்டும் பார்த்தும் தெரிஞ்சிக்கிட முடியாதுங்க. வேலை செய்றவங்களைப் பார்த்தா, வேடிக்கை பார்க்கிற மாதிரிதான் இருக்கும். வேலைக்காரனுடு வேலைக்காரனு வேலை செய்றவனுக்குத்தான் அந்த வேதனை தெரியும். கூலிக்காரன் அவதி இன்னொரு கூலிக்காரனுக்குத்தான் தெரியும். தொழிலாளியின் துயரம் இன்னொரு தொழிலாளிக்குத்தான் தெளிவாத் தெரியும்.

**வச:** நீ தான் இப்போ விவரமா சொல்றயே! சும்மா சொல்லு; நான் தெரிஞ்சிக்கிடுறேன்.

**பூங்கா:** சொல்றதைக் கேட்டா தெரியாதுங்க. தூரத்திலே நின்னு பூதக் கண்ணுடி வழியா மலை உச்சியைப் பார்க்க முடியும். ஆனு, வனுந்தரத்துக்குள்ளே நுழைஞ்சி, மலை உச்சிக்கு ஏறிப்பார்த்தா எத்தனை முள்ளு காலிலே குத்தும்; எத்தனை பாம்புகள் கொத்த வரும்; எத்தனை மிருகங்கள் நம்மேலே பாய வரும்! பூதக்கண்ணுடி வழியா மலை உச்சியைப் பார்க்கிறவன் வேறே; மலைமேலே கால் கடுக்க ஏறுறவன் வேறே! ரெண்டு பேரும் மலையைப் பார்க்க முடிஞ்சாலும் வித்தியாசம் ரொம்ப! அது மாதிரிதான் தொழிலாளியின் கஷ்டத்தைக் கேட்டுத் தெரிஞ்சிக்கிடுறதும், தொழிலாளியா இருந்து அனுபவிச்சித் தெரிஞ்சிக்கிடுறதும்; இல்லீங்களா?

**வச:** அப்போ, தொழிலாளியா இருந்தாத்தான் தொழிலாளியைப் பத்தி தெரிஞ்சிக்கிட முடியும்; இல்லையா?

**பூங்கா:** ஆமாங்க. அப்படி இருந்தாத்தான், அவங்க சுகம், துக்கம் – செய்ற வேலை, அதிலே கிடைக்கிற கூலி, அதோடே வாங்குகிற திட்டு – குடியிருக்கிற குடிசை, அதுக்குள்ளே இருக்கிற குடும்பம், அது படுற துன்பம் - இந்த விவரங்களெல்லாம் அனுபவத்திலே தெரியும். நீங்க இது வரையிலே தொழிலாளி வீட்டு வாசற்படி கூட மிதிச்சி

ருக்க மாட்டீங்க; இல்லையா முதலாளி? அப்படியிருக்கும் போது அவங்களுக்கு ஆனதை நீங்க என்ன செய்ய முடியும்?

**வச:** ம்...அப்போ, முதலாளி தொழிலாளி ஆகணும்!

**பூங்கா:** ஆமாங்க. ஆனா இப்படி ஆகிறவங்கதான் யாரும் இருக்கமாட்டாங்க.

**வச:** ஏன்?

**பூங்கா:** முதலாளி, தொழிலாளியாகிறது எங்கே? கஷ்டத்தைத் தெரிஞ்சிக்கிடுறது எப்போ? பிறகு அதைப் போக்குறது எந்தக் காலத்திலே? இதெல்லாம் நடக்கக்கூடிய காரியங்களா?

**வச:** ஏன் நடக்காது? போடா, பைத்தியக்காரா! உலகத்திலே எத்தனையோ அதிசயங்கள் நடக்கு. நீ இதைப் போயி சொல்றே! இப்படிச் செய்றதுக்குன்னு எவனாவது பிறந்திருக்கத்தான் செய்வான்.

**பூங்கா:** யாரு இருக்கப் போறா முதலாளி? நாவலா, நாடகமா? எல்லாம் வாயிலே பேசலாம். செய்யும் போதில்லே கஷ்டம்? (வசந்தன் சிந்தனையுடன் கன்னத்தைத் தடவிக்கொண்டிருக்கிறான்) அடடா! நான் மறந்தே போயிட்டேன் பார்த்தீங்களா? (எழுந்து கொண்டே) சுடு தண்ணி கேட்டீங்க, நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருந்திட்டேன். இருங்க, ஒரு நொடியிலே கொண்டு வர்றேன்.

**வச:** (அதே சிந்தனையுடன்) சரி, போ!

[பூங்காவனம் போகிறான்]

**- வசந்தன் மனப் போராட்டம் -**

**பூங்காவனம் குரல்:** உசுரை விடுறதுகூட லேசுங்க. ஆனா வேலை கிடைக்கிறது அவ்வளவு லேசில்லே—நாங்க பிழைக்கவா பிறந்திருக்கோம் முதலாளி? இல்லவே, இல்லை! காலமெல்லாம் கண்ணீர் விட்டு, உடம்பு கெட்டு மண்ணோடு மண்ணாக மண்டையைப் போடப் பிறந்திருக்கோம் முதலாளி, மண்டையைப் போடப் பிறந்திருக்கோம்! — கூலிக்காரன் அவதி, இன்னொரு கூலிக்காரனுக்குத்தான் தெரியும். தொழிலாளியின் துயரம், இன்னொரு தொழிலாளிக்குத்தான் தெள்வாத் தெரியும். இதையெல்லாம் கேட்டும் பார்த்தும் தெரிஞ்சிக்கிட முடியாதுங்க! — முதலாளி, தொழிலாளி ஆகிறதெங்கே? கஷ்டத்தைத் தெரிஞ்சிக்கிடுறது எப்போ? பிறகு, அதைப் போக்குவது எந்தக் காலத்திலே? இதெல்லாம் நடக்கக் கூடிய காரியங்களா?

**வச:** (சோபாவிலிருந்து உணர்ச்சி வசப்பட்டவனாய் எழுந்து) ஏன் நடக்காது? ஏன் நடக்காது?

●

## காட்சி 11

○

சோமசுந்தரம் பங்களாவில் முன்கட்டு - செந்தாமரை வீடு பெருக்கிக் கொண்டிருக்கிறாள் - கோபால், ஒரு கையில் பூக்கூடையுடனும், இன்னொரு கையில் புதுத் துணி மூட்டையுடனும் வருகிறான்.

**கோபால்:** (பரபரப்புடன்) செந்தாமரை, செந்தாமரை! இப்படி வாயேன்! சீக்கிரம் வா! வா, வா, வா!

**செந்:** (அருகில் வந்து) அட, ஏன் இப்படிப் பறக்கிறே? நிதானமாத்தான் கூப்பிடேன்! முதலாளி வர்றதுக்குள்ளே உன் மூளையே குழம்பிப் போயிடும் போலிருக்கே!

**கோபால்:** அது சரி; நான்தான் இப்போப் பறக்கிறேன்; நீ ஏன் இப்படிப் பாயுறே? நிதானத்திலே நிக்கிறதுதானே?

**செந்:** இந்த வக்கணைப் பேச்சுக்கு வேறே குறைச்சலா? எதையும் ஆற அமர இருந்து செய்வாங்கன்னு பேரு. உன்னைப் போலேயா, எதுக்கெடுத்தாலும் படபடத்துப் போயி நிப்பாங்க?

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? - நீ நேத்து வந்தவ. நாளை விடிஞ்சா முதலாளி வரப்போறாரு; அதுக்கு முன்னாலே ஆக வேண்டிய காரியங்களை யெல்லாம் ரைட்டா முடிச்சி ரெடியா வச்சிடலாம்னு நான் பார்த்தா, இவ என்னமோ ஆறணுமாம் - அமரணுமாம்! ஏன், ஒரேடியாத் தூங்கினாப் போச்சு! போடீ அசமந்தம்!

**செந்:** ஆமா, இவரு பெரிய சுறுசுறுப்பு!

**கோபால்:** இல்லாமே; இத்தனை வேலைகளுக்கும் உங்க தாத்தா வந்தா தலை கொடுத்தாரு? ஒண்ணா, ரெண்டா? பங்களா முழுக்க வெள்ளையடிச்சி, வீட்டுக்கு வரப்போற விருந்தாளிகளுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் சேகரிச்சிக் கொண்டாந்து சேர்த்து—

**செந்:** போதும்! ரொம்பப் பிரமாதந்தான் போ!

**கோபால்:** அதை நீ ஒண்ணும் சொல்லவேண்டாம்; சொல்றவங்க சொன்னாப் போதும்! ஊக்கும்! ம்....இத்தனை வேலைகளுக்கும் நடுவிலே இதை வேறே போயி வாங்கிக்கிட்டு வந்து சேர்ந்தேன். (மூட்டையை அவிழ்க்கிறான்)

**செங்:** அதென்ன மூட்டையிலே?

**கோபால்:** அதா? வேறொண்ணுமில்லே! (ஒவ்வொன்ருக எடுத்துக் காட்டி) வந்து....எனக்கு எட்டு முழத்திலே ஒரு வேட்டி, சட்டை, ஜரிகைத் துண்டு!

**செங்:** பிறகு?

**கோபால் :** (பூக்கூடையைக் காட்டி) பூமாலே!

**செங் :** அப்புறம்?

**கோபால் :** அவ்வளவுதான்!

**செங் :** (கோபமாக) சரித்தான்!

**கோபால் :** (குறும்பாக) ஏன் இந்த செந்தாமரை இப்படி வாடுது?

**செங் :** இல்லே, மலருது! இதுக்குத்தான் இவ்வளவு அவசரமா என்னேக் கூப்பிட்டேயாக்கும்?

**கோபால் :** வேறெதுக்கு?

**செங் :** பேசுறதைப் பாரு, பேசுறதை! நீ மட்டும் முதலாளி வர்றபோது சிங்காரிச்சிக் கிட்டுப் போயி நிக்கணும்; நான் பழைய புடவையைக் கட்டிக்கிட்டுக் கெடக்கணும். இது தானே உன் எண்ணம்?

**கோபால் :** புருசன் சொகுசா இருக்கிறதைப் பார்த்து சொக்கி மகிழாத பெண்டாட்டி உண்டோ?

**செங் :** பெண்டாட்டியைத் திண்டாட விட்டுட்டுக் கொண்டாட்ட மாயிருக்கிற புருசனும் உண்டோ?

**கோபால் :** ரெண்டுமில்லே!

**செங் :** இருக்கக் கூடாது?

**கோபால்:** அப்பச் சரி! (சட்டைக் கடியில் மறைத்து வைத்திருந்த புடவையை எடுத்துக் கொடுத்து) இந்தா!

**செங் :** (முகம் மலர்ந்து) எனக்கா?

**கோபால் :** இல்லே! வாடிப்போன செந்தாமரை பல்லேக் காட்டிச் சிரிக்கணும் பாரு, அதுக்கு!

**செங் :** (கொஞ்சுதலாக) ஆமா, இப்படித்தான் ஏமாத்துற தாக்கும்!

**கோபால் :** ஏமாத்துறதிலே எத்தனேயோ ரகம். அதெல்லாம் நமக்கெதுக்கு? ஏமாத்துறதையே தொழிலா வச்சிருக்கிற எத்துவாளிப் பசங்களுக்கில்லே, அது வேணும்! ம்....சரி, சரி, சும்மா பேசிக்கிட்டு நிக்க நேரமில்லே; இந்தப் பூமாலேயை எடுத்துப் பத்திரமா வை! நாளேக்குக் காலேயிலே

மில்லுலே கொண்டாட்டம் முடிஞ்சதும் பன்னிரண்டு மணிக்கெல்லாம் நம்ம சின்ன முதலாளி வீட்டுக்கு வந்துடுவாரு. வந்தவுடனே இந்த மாலையைத் தூக்கி அப்படித்தானே போட்டு, 'வா, தம்பி'ன்னு இப்படிச் சேர்ந்து கட்டிக்கிட்டாத் தான் என் மனசு குளிரும். (செந்தாமரையை கட்டிக் கொள்ளப் போகிறான்)

**செங் :** (விலகி நின்று) அட, இதென்ன கூத்தாப் போச்சி! உஸ்....யாராவது வரப் போறாங்க.

**சோமசுந்தரம் :** (வந்து கொண்டே) கோபால், கோபால்!

**கோபால் :** (உலுக்கி விழுந்து) ம்ம்....இதோ வந்துட்டேன், வந்துட்டேன்! ம்....செந்தாமரை, நான் சொன்னதெல்லாம் கவனமிருக்கில்லே, ஆமா! (சோமசுந்தரம் அருகில் சென்று) என்னங்க?

**சோம :** என்னடா இது, இங்கே வந்து நிண்ணுக்கிட்டே? தவசிப்புள்ளேகளெல்லாம் வந்தாச்சா?

**கோபால் :** மூணு பேர் வந்தாச்சு. இனி ரெண்டு பேர் வரணும். இப்போ வந்துடுவாங்க.

**சோம :** எப்போ வர்றது? இதிலே வேறே பாக்கியா? இந்தா பாரு, நாளைக்கு எனக்கு நிக்கிறதுக்குக் கூட நேரமிருக்காது; ஆமா! எந்தக் குறையும் இல்லாமே, நம்ம பங்களாவைப் பொறுத்த வரையிலே எல்லாக் காரியங்களையும் நீயே கவனிச்சிக்கிடணும்.

**கோபால் :** குறை சொல்றதுக்கு இடமே வச்சிக்கிடமாட்டேன். ஊம்....தப்பித் தவறி இருந்தாலும், நம்ம தம்பிதானே வரப்போறாரு. கோபிச்சிக்கிடவா போறாரு?

**சோம :** அட, இவன் யார்டா இவன்; கோமாளிப் பய! உங்க சின்ன முதலாளி கோபிச்சிக்கிடலேன்னா, விருந்தாளியா வரப்போற மத்த முதலாளிகள் மெச்சிக்கிடுவாங்களாக்கும்? குறை சொல்றதுக்கு இடமில்லாமே காரியங்களைக் கவனிக்கணும்டாண்ணா, அர்த்தமில்லாமே பேசிக்கிட்டிருக்கான், அர்த்தமில்லாமே! (போகிறார்.)

**கோபால் :** ஓகோ, சொன்னப்பிலே விருந்துக்கு வரப்போறவங்களெல்லாம் முதலாளிமார்களோ! குறையிருந்தா சீறத் தானே செய்வாங்க!

**செங் :** இல்லே, உன்னைச் சீராட்டுவாங்க!

**கோபால் :** நீ பாராட்டுவே! சரித்தான் போடீ உள்ளே!

## காட்சி - 12

O

பம்பாய் ஓட்டல் அறையில், வசந்தன் பகல் உணவு அருந்திவிட்டு கையைத் துடைத்துக் கொண்டே, சோபாவில் அமர்ந்து சிகரெட் பற்ற வைக்கிருன். நறுக்கப்பட்ட பழத்துண்டுகள் நிறைந்த கண்ணுடித் தட்டை அவன் முன்பு பணிவுடன் வைக்கிருன், பூங்காவனம்.

**பூங்காவனம் :** அப்போ, நம்ம மில்லுலே ரொம்பப் பேரு வேலே செய்வாங்களே, முதலாளி?

**வசந்தன் :** (பழத்துண்டு ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டே) இருக்கும், ஒரு ரெண்டாயிரம் பேருக்குக் குறையாதுன்னு நினேக்கிறேன்.

**பூங்கா ;** சொன்னுப்லே, நீங்க ஏன் அதையெல்லாம் கவனிச்சிருக்கப் போறீங்க?

**வச :** ஏன்?

**பூங்கா :** பெரிய பெரிய தொழிற்சாலேகளிலே யெல்லாம் முதலாளி, மனுசனுக்கு இருக்க வேண்டிய முக்கியத்துவம் இருக்காது. மத்த மத்த யந்திரங்கள், சக்கரங்கள், சாமான்கள் மாதிரி அவனும் உருப்படிக் கணக்கிலே சேர்ந்துடுவான். அதனுலே தான் நீங்க கவனிச்சிருக்க மாட்டீங்கண்ணு சொன்னேன்.

**வச :** கவனிக்காமே என்ன! நான் ரொம்ப நாளா ஊரிலே இல்லே.

**பூங்கா :** இருந்திருந்தா மட்டும், உருப்படிக் கணக்கு எவ்வளவுன்னு உத்தேசமா உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். மற்றப்படி, ஒவ்வொரு தொழிலாளியைப் பத்தியும் - அவன் எப்பேர்ப்பட்டவன் - என்ன வேலே செய்ருன்—எந்த விதமாப் பிழைக்கிருன் - அவன் குணம் என்ன - என்கிறதை யெல்லாம் கவனிச்சிருக்கமாட்டீங்க. ஏண்ணு, நீங்க முன் காலத்து ராஜாக்கள் மாதிரி மாறு வேஷம் போட்டுக்கிட்டு ஊர் சோதனே செய்தது போலவா செய்திருக்கப் போறீங்க?

**வச :** ஏன், அப்படிச் செய்தால்தான் இதை யெல்லாம் அறிய முடியுமா?

**பூங்கா :** பிறகு இல்லீங்களா? அந்தக் காலத்து ராஜாக்களெல்லாம், ஜனங்க மேலே அன்பு வச்சிருந்தவங்க தான்னு தெரியுது. ஏண்ணு, அவங்களெல்லாம், அரண்மனேக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்து, ஆடம்பரமாக் கொலு மண்ட

பத்திலே வந்து குந்தி, அக்கம் பக்கத்திலே காக்கா பிடிக்கக் காத்துக் கிடக்கிற அலங்கார பொம்மைகள் அளக்கிற கதைகளை யெல்லாம் நம்பி, அதன்படி ஆட்சி செய்ததாகத் தெரியலே! மக்களின் உண்மை நிலையைத் தாங்களே நேரில் தெரிஞ்சிக்கிட சாதாரண மனுசன் மாதிரி வேஷம் போட்டுக்கிட்டுப் போயி ராத்திரி வேளையிலே யாருக்கும் தெரியாமே சுத்திப் பார்த்து, குறைகளைக் கண்டறிஞ்சி நிவர்த்தி செய்திருக்காங்க.

**வச:** அதுக்கு ராத்திரி வேளையிலே வேஷம் போட்டுக்கிட்டுத் தான் போகணுமா? பட்டப் பகலிலே ராஜா மாதிரி போனு, மக்கள் படுற துன்பம் கண்ணிலே படாதா?

**பூங்கா:** படவே படாதுங்க! எப்படிப் படும்? இப்போ பாருங்க; ஒரு பெரிய அரசாங்க அதிகாரியோ, அல்லது அதிகாரம் படைச்ச தலைவரோ ஒரு இடத்துக்கு வருகிருர்னு வச்சிக்கிடுங்க, அண்ணைக்குத்தான் அந்தப் பக்கத்துத் தெருக்களெல்லாம் எண்ணைக்குமில்லாதபடி ரொம்ப சத்தமாயிருக்கும். பாடாவதி ரோடுகளிலே இருக்கிற மேடு பள்ளங்களெல்லாம் ஒரு நிரவலாகும். எங்கேயும் இல்லாத தோரணங்களெல்லாம் அங்கே வந்து அலங்காரமாத் தொங்கும். ஊருக்கு சேவை செய்ருேம்னு விளம்பரப் படுத்திக் கொள்றவங்க, ஊருக்கு முன்னுலே வந்து நிப்பாங்க. சொகுசாப் பிழைக்கிறவங்க அத்தனை பேரும் அவரைச் சுத்தி வட்ட வளையம் போட்டு, மாலைகளைத் தூக்கி கழுத்திலே போட்டு அவர் கண்களை மறைக்கக் காத்துக் கிட்டிருப்பாங்க. எண்ணையைப் பார்த்து எத்தனையோ நாளான தலைகளெல்லாம் அண்ணைக்கின்னு ஒசி எண்ணையைத் தடவிக்கிட்டாவது ஒய்யாரமா வேடிக்கை பார்க்க அங்கே வந்து கூடும். போட்டுக்கிட சட்டை இல்லாதவன், இரவல் சட்டையை மாட்டிக்கிட்டு வந்து நிப்பான். அழுக்குச் சட்டை எப்படியோ வெள்ளைச் சட்டையாகும். இந்த நிலைமையிலே வர்றவரு ஜில்லுனு வந்து இறங்கி, மக்களெல்லாம் ஜில்லுனு இருக்காங்கன்னு நினைச்சிக்கிட்டு, அவர் பாட்டுக்கு ஜில்லுனு போயிடுவாரு. அவராலே சொகுசைத்தான் பார்க்க முடியுமே தவிர சோகத்தைப் பார்க்க முடியுமா? இதனுலே தான் அந்தக் காலத்து ராஜாக்கள் சுய ரூபத்திலே போனு, உண்மை நிலையை அறிய முடியாதுண்ணு, மாறு உருவிலே போயி, மறைஞ்சிருந்து மக்களைக் கவனிச்சி, குறைகளைக் கண்டறிஞ்சி அவற்றைப் போக்கியிருக்காங்கண்ணு, பெரியவங்க சொன்னதைக் கேள்விப்பட்டிருக்கிறேன் முதலாளி.

**வச:** அடடே! அபூர்வமான கருத்தாயிருக்கே! பேஷ், பேஷ்! அஞ்சு வருஷம் அமெரிக்காவிலே படிச்சிட்டுத் திரும்புற எனக்குக் கூட இது புதுசாத்தான் தெரியுது.

**பூங்கா:** நீங்க அமெரிக்காவிலேயா படிச்சிட்டு வர்றீங்க முதலாளி?

**வச:** ஆமா, இதுதான் ஊருக்கு போற வழி.

**பூங்கா:** சரித்தான் போங்க,- நான் வேறென்னமோ வில்லே நினைச்சுட்டேன்.

**வச:** நீ என்ன நினைச்சே?

**பூங்கா:** கொஞ்சப் பேரு முதலாளிமாரு இருக்காங்க முதலாளி, அவங்களுக்குச் சொந்த ஊரிலே பொழுது போகாது. நினைச்சா ஐயாயிரம் பத்தாயிரம்னு எடுத்துக் கிட்டு, அவங்க பாட்டுக்கு 'டூர்' கிளம்பிடுவாங்க. அது மாதிரி தான் நீங்களும் வந்தீங்களோன்னு....

**வச:** அதெல்லாம், அவங்களுக்கு ஒரு ஜாலி.

**பூங்கா:** என்ன ஜாலியோ போங்க. லோகத்திலே முதலாளி, வருந்திப் பாடு படுறவங்களுக்குத்தான் பணத் தோடே அருமை தெரியுது; உழைச்சிச் சேர்த்த பணத்தை உபயோகமாச் செலவழிக்கிறுங்க. மத்தபடி, யாரோ பாடு பட அது யாருக்கோ போய்ச் சேருது பாருங்க, அநியாயமா, அந்தப் பணம் அப்டீ ஜாலியாத்தான் செலவழிஞ்சு போகுது.

**வச:** என்னமோ, அதனுலே யாருக்கு என்ன பிரயோ ஜனம்? அதெல்லாம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது.

**பூங்கா:** உங்க மாதிரி யாரு நினைக்கிறுங்க முதலாளி! அவங்க காலடியிலே கிடந்து மாடா உழைக்கிறவன் பெண்சாதி சாகக் கிடப்பா. மருந்துச் செலவுக்கு ரெண்டு ரூபா மனசாரக் கொடுக்க மாட்டாங்க. அப்பேர்ப்பட்ட வங்க இங்கே வந்தா, நோட்டு நோட்டாப் பறக்க விடுவாங்க.

**வச:** நீ சொல்றது ரொம்பத் தப்பு. இவ்வளவு செலவழிக் கிறவங்க, ஒரு ரெண்டு ரூபாய் கொடுக்க மாட்டாங்க ளாக்கும்?

**பூங்கா:** மனசு வர்றதில்லே முதலாளி. எப்படி வரும்? அவங்க எப்பவாவது வேலேக்காரனு இருந்திருக்கணும்; பெண்டாட்டி சாகக் கிடந்திருக்கணும்; மருந்துச் செலவுக்குக் கூட இல்லாமேத் திண்டாடியிருக்கணும். அப்பத்தானே அவங்களுக்கு அந்த வருத்தம் தெரியும். இல்லாட்டா, அவன் பாட்டுக்குக் கெஞ்சிக் கூத்தாட வேண்டியதுதான். இவங்க

பாட்டுக்கு, 'சரித்தான் போடா, பெரிய நச்சரிப்பாப் போச்சின்னு போக வேண்டியதுதான்.

**வச:** என்ன இருந்தாலும், சாகக் கிடக்கிற சமயத்திலே கேவலம் ரெண்டு ரூபாய்க்கா மேலும் கீழும் பார்த்துக்கிட்டிருப்பாங்க?

**பூங்கா:** ஆமாங்க. நாட்டு நடப்பு அப்படித்தான் இருக்கு. ஏண்ணு, அவங்க செல்வ போகத்திலே பிறந்து, போகத்திலே வளர்ந்து, போகத்தை நோக்கியே போய்க்கிட்டிருக்கிறவங்க. போகத்தைப்பெருக்க எவ்வளவு வேண்டுமானுலும் செலவழிப்பாங்களே தவிர, சோகத்தைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டாங்க. வேலைக்காரன் பெண்டாட்டி சாகக் கிடக்கிற துயரத்திற்கு, அவங்க மனசைக் கரைக்கிற சக்தியில்லை, காரணம், அது அவங்க அனுபவிக்காத சோகம்! மாலை நேரத் தென்றலும் மல்லிகைப் பூ வாசனையும் அவங்க மனசைக் கவர்ந்து விடும். காரணம், அது, காலமெல்லாம் அவங்க அனுபவிக்கிற போகம். எல்லாத்துக்கும் முதலாளி, இருக்கிற சூழ்நிலையைப் பொறுத்து ஏற்படுற மனப்போக்கு தானே காரணம்!

**வச:** ம்....என்னமோ போ! நீ பேசுறதைக் கேட்கக் கேட்க எனக்குத் தொழிலாளிகள் மேலே இரக்கம் ஏற்படத்தான் செய்யுது.

**பூங்கா:** ஆனு, அது நீடிச்சு நிக்கிறதுதான் பெரிசு.

**வச:** ஏன் நிக்காது? என் மில்லுலே வேலை செய்றவங்களுக்கு என்னுலே ஆன உதவிகளை நான் தாராளமாச் செய்யத்தான் போறேன்,

**பூங்கா:** அதுதான் வேணும் முதலாளி, ஆனு, அங்கே போயி நீங்க இறங்கினவுடனே உங்களைக் காக்கா பிடிக்கக் காத்துக் கிட்டிருக்கிறவங்க, உங்களுக்கு இன்பமான காட்சிகளைத் தான் காட்டுவாங்க. துன்பத்தைக் கண்ணுலே படாமே மறைச்சிடுவாங்களே!

**வச:** ஊம்!... (சிந்தனைப் பெருமூச்சு)

**பூங்கா:** தொழிலாளியோடு தொழிலாளியாயிருந்து, அவங்க சுக துக்கங்களிலே பங்கெடுத்துக் கொள்ற முதலாளிதான், தொழிலாளிக்கு மனப்பூர்வமா நன்மை செய்ய முடியும்.

**வச:** அப்போ, என்னுலே முடியாதாக்கும்?

**பூங்கா:** முடியாமே என்னங்க? ஆனு, அவதிப் படுற தொழிலாளிக்கு அருகே, ஆனந்தமாயிருக்கிற முதலாளி

நெருங்கிப் பார்க்கிறது அவ்வளவு லேசில்லே. இடையிலே எல்வளவோ தூரம்! நடுவிலே எத்தனையோ தடைகள்; திரைகள்; முகஸ்துதிகள்! எல்லாவற்றையும் கடந்து சென்றாலும் மனசு, முதலாளி மனசு. தொழிலாளி மனசுக்கும் அதுக்கும் தொலை தூரம்!

[வசந்தன், பெருமூச்சுவிட்டுக் கொண்டு சோபாவில் சாய்ந்து, கண்களை விரல்களால் மூடியவாறு சிந்தனையிலாழ்கிருன்.]

**பூங்கா:** *அப்போ, நீங்க கொஞ்ச நேரம் தூங்குறீங்களா? படுக்கையை விரிச்சுப் போடுறேன்.*

[கட்டிலில் மெத்தை விரிப்பைச் சரிப்படுத்தி, தலையணிகளை ஒழுங்காக எடுத்துப் போட்டு வட்டுச் செல்கிருன் பூங்காவனம். சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்த வசந்தன், எழுந்து, அறைக்குள் அப்படியும் இப்படியும் நடை போடுகிருன். அவன் உள்ளத்திலே எண்ண அலைகள்]

**வச:** *(தனிமொழி) ராஜா — மாறுவேடம் — ஊர்சோதனை!*

**அறிவு—குரல்:** *ஆம்: உலக நிலையை உள்ளது உள்ளபடி அறிய அவர்கள் கையாண்ட உன்னத முறை! குடிசை வாழ் குசேலர்களின் கூக்குரல், கோட்டை வாழ் குபேரர்களுக்கு எட்டாது! கோட்டைக்குள் நுழையவோ குசேலர்களுக்கு அச்சம்; குடிசைகளை நெருங்கவோ குபேரர்களுக்கு அவமானம்! இந்தப் பிளவு நிலை நீடிக்குமானல், வாழ்வோருக்கும் வாழப் பிறந்து வதைவோருக்குமிடையே ஆழமான அகழி அமைக்கப்படுகிறது என்றுதான் அர்த்தம். இதனல் ஆட்சியே ஆட்டம் கண்டுவிடும் என்பது மட்டுமல்ல; அறிஞர்கள், அறிமுகவசதியின்றி அவதிப் படுவார்கள் — அற்பர்கள் விளம்பர வசதியால், அதிகாரம் செலுத்துவர்! ஏர் பிடித்து உழுபவன் சோறின்றித் தவிப்பான் — ஏத்தித் திரிபவன் தின்று கொழுப்பான்! உடல் நோக உழைப்பவன், பலன் இன்றி உழல்வான் — உழைப்பதாகப் பாசாங்கு செய்பவன், ஊரும் நாடும் அறிய, பேரும் புகழும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்வான்! ஊருக்கு உழைப்பவன் உதை பட்டுச் சாவான் — அதை உறிஞ்சிப் பிழைப்பவன் ஒய்யாரமாக வாழ்வான்! நியாயம், அடக்கத்தால் அநியாயமாகும்- அநியாயம், சவடால் பேச்சால் நியாயமாகும்! வசதி படைத்தோர், அநீதிக்கு, நீதி முத்திரை வாங்கி ஒட்டிக் கொள்வர் — வசதியற்ருேர், நீதிக்கும். அநீதிப் பட்டம் கட்டவிடும் கோரத்தைக் கண்டு கண்ணீர் விடுவர்! இந்த நிலை*

யிலே, கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டைவிட கடும் புலி வாழும் காடு நன்றெனு எண்ணத் தொடங்கி விடுவர் மக்கள் – என்பதையெல்லாம் நன்கு அறிந்திருந்த அந்தக் காலத்து அரசர்கள், மாறுவேடம் தரித்தனர்; மக்களைக் கவனித்தனர்; காத்தனர். இந்தக் கடந்த கால வரலாற்றிலே கருத்து இருக்கிறது - ஏழை மக்களின் கண்ணீராலும் செந்நீராலும் எழுப்பப்படும் கோட்டைகள், அந்தப் பாட்டாளி மக்களை எட்டி உதைக்காமல், கட்டிக் காக்க வேண்டும் என்கிற கண்ணிய முறை இருக்கிறது. குறை இருந்தால் நிவர்த்தி, குற்றமிழைத்தால் தண்டனை என்கிற நீதி முறை தவறி விடக் கூடாது என்பதற்காக, அந்தக் காலத்து அரசர்கள், அதிகாரிகளை மட்டும் நம்பி இராமல் தாங்களே தலைமறைவாகத் தலையிட்டிருக்கிறார்கள்.

**வச:** அதெல்லாம் அந்தக் காலத்தில் - இந்தக் காலத்தில் முடியுமா?

**குரல்:** ஏன் முடியாது? இன்றும் கூட எத்தனையோ துப்பறியும் சாகசங்கள் நடைபெறுவதைக் கண்டதில்லையா? கேட்டதில்லையா? படித்த தில்லையா!

**வச:** (சிறிது யோசித்து – புன்முறுவலுடன்) ஆம்; அது தமாஷாகக்கூட இருக்கும்!

●

## காட்சி 13

○

சோமசுந்தரம் பங்களா - முன்கட்டில் சோமசுந்தரமும் பாலுவும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

**பாலு:** எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்தான்!

**சோம:** அதிலே என்ன இருக்கு பாலு? எல்லாம் உங்க திறமை தான்! இந்த சமயத்திலே தொழிலாளிகள் ஏதாவது கூச்சல் கீச்சல் போட்டுக் கலாட்டா செய்வாங்களோண்ணு எனக்கு உள்ளுக்குள்ளே கலக்கம்தான்!

**பாலு:** நான் மாத்திரம் என்ன - அப்படியே கிடு கலங்கியில்லே போயிருந்தேன்! சின்ன முதலாளி வரப்போற நேரமாப் பார்த்து, இவங்க பாட்டுக்கு போனஸ் கொடுண்ணு கூப்பாடு போட்டு, தடியிலே கொடியை மாட்டிக்கிட்டு வந்து நட்டமா நிண்ணு....

**சோம:** நாலு முதலாளிகளுக்கு முன்னுலே நம்ம மதிப்பு மண்ணுதான்!

**பாலு:** இதனுலேதான் எனக்குத் தூக்கமே பிடிக்கலே! இதுக்கென்னடா வழின்னு மண்டையைப் போட்டு உடைச்சிக்கிட்டு உக்காந்தவன், உக்காந்தவன்தான்; மூளையே குழம்பிப் போச்சு! பிறகு ஒரு ஆளைப் பிடிச்சித் தயார் செய்து, அவங்க கூட்டத்தையே ஒரு கலக்குக் கலக்கி, ஏதோ ஒரு தினுசா....

**சோம:** காரியத்தை முடிச்சிட்டீங்க. இதெல்லாம் உங்க வேலையாத்தான் இருக்கும்னு நான் அப்பவே தீர்மானிச்சுட்டேன்.

**பாலு.** (சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு ரகசியமாக) அந்த ஆளுக்குக்கூட ஒரு ஐநூறைக் கொண்டு போயிச் சொருகி—(இயல்பான குரலில்) இதையெல்லாம் உங்க காதிலே போடப்படாது பாருங்க; அதனுலேதான் என் சம்பளப் பணத்திலே இருந்தே சரிக்கட்டி....

**சோம:** நல்ல ஆளையா நீங்க! அதுக்கு உங்க கையிலிருந்தா கொடுக்கணும்! என் கிட்டே சொல்லியிருந்தா ஆயிரமா கொடுத்திருப்பேனே.

**பாலு:** ஆயிரமாக் கொடுப்பதாகத்தான் அவன் கிட்டே சொல்லியிருக்கேன்.

**சோம:** அப்பச் சரி; நான் மில்லுக்கு வந்ததும் இந்தப் பணத்தைத் தனியா வாங்கிக்கிடுங்க. நல்ல வேளை! நீங்க பாட்டுக்குப் பெருந்தன்மையாப் பேசாமே இருந்திடாமே என்கிட்டே சொன்னீங்களே!

**பாலு:** அதுக்கென்னங்க! யாரு பணமா இருந்தா என்ன? நீங்க கொடுத்தாத்தானே என் பணம். அந்த மட்டிலே கலாட்டா இல்லாமே காரியம் முடிஞ்சுதே!

**சோம:** அதைச் சொல்லுங்க முதல்லே! அப்போ இனிமே கூச்சல் கீச்சல்....

**பாலு:** போடுறதுக்கு ஆளே இல்லே!

**சோம:** ரொம்ப நிம்மதி! ஆமா, வசந்தன் வந்த பிறகு ஏதோ வேலே நிறுத்தம் செய்யப் போறதாக....

**கோபால்:** (காப்பித் தட்டுடன் வந்துகொண்டே) முடிவு செய்திருக்காங்க!

**பாலு:** (வெறுப்புடன்) அதெல்லாம் சும்மா, ஒரு ஒப்புக்கு.

**கோபால்:** பிறகு நீங்க எப்படிச் சொல்வீங்க!

**பாலு:** இந்தாப்பா, இது பெரிய விஷயம்! எங்க மூளையே குழம்புது. இதிலே நீ வேறே வந்து குறுக்கே பாயாதே!

**சோம:** டேய், நீ சும்மா இரேண்டா!

**கோபால்:** பிறகு என்னங்க முதலாளி! சின்னவரு வரப் போற நேரத்திலே, எல்லா ஆளுகளுக்கும் போனசைக் கொடுத்து அவங்க மனசெல்லாம் குளு குளுன்னு குளுந்து போயிந்தாவில்லே தேவலே!

**சோம:** அதுக்கு ஆயிரக் கணக்கிலே இல்லே அள்ளிக் கொடுக்கணும்.

**கோபால்:** தேடியா கொடுக்கப் போருேம்?

**பாலு:** (எரிச்சலுடன்) ஒரு செக்கிலே கையெழுத்தைப் போட்டு இப்படி நீட்டேன்!

**கோபால்:** (வெறுப்புடன்) மடக்காமே இருந்தாவில்லே நீட்டுறவங்க, நீட்டுவாங்க.

**சோம:** டேடேய்! போதுண்டா! பெரிய பாரி வள்ளலு; அப்படியே அள்ளிக் கொடுத்திடுவாரு!

**கோபால்:** பாடுபடுறவங்களுக்குக்கொடுக்க பாரி வள்ளலா வரணும் முதலாளி? பரந்த மனசு வேணும்.

**சோம:** சரித்தான் நிறுத்து! சுத்தக் கோமாளிப் பய!

**கோபால்:** இந்தக் காலத்திலே முதலாளி, சும்மா பேசிப் பேசி மயக்குறுங்க பாருங்க, அவங்களுக்குத்தான் சம்பளம் அது பாட்டுக்கு உசந்துக்கிட்டே போகுது. உண்மையா உழைக்கிறவங்களுக்கு அது பாட்டுக்கு எறங்கிக்கிட்டே வருது!

**சோம:** டேய், உன் வாயை வச்சிக்கிட்டு சும்மா இருந்து தொலேயேண்டா!

**கோபால்:** தொலேயிறேன், தொலேயிறேன்! எல்லாத்துக் கும் சின்ன முதலாளி வரட்டும். முதல்லே இந்தத் தொழி லாளிகளுக்குப் போனசைக் கொடுத்துட்டு மறுவேலே பார்க் கிறயா, இல்லேயா தம்பின்னு, ரெண்டுலே ஒண்ணு கரெக்டா கேட்டுப் போடுறேன் கேட்டு! (போகிருன்)

**பாலு:** (கோபால் சென்ற பிறகு) ரொம்ப அதிகப் பிரசங்கியா இருப்பான் போலிருக்கே!

**சோம:** அதெல்லாம் ஒண்ணுமில்லே! சும்மா, பேச்சுத் தான் பெரிசா இருக்கும். வசந்தனே சின்னக் குழந் தையிலிருந்து தூக்கி வளர்த்தவன் பாருங்க. அதனுலே அவன் வரப்போருன்னு தலேகால் புரியாமே ஆடுருன்.

**பாலு:** என்ன இருந்தாலும்...

**சோம:** விட்டுத் தள்ளுங்க, வெகுளிப் பய! அப்போ, வசந்தன் வர்ற வரையிலே வேலை நிறுத்தத்தைப் பற்றிக் கவலை இல்லை.

**பாலு:** வந்த பிறகும்தான் கவலை எதுக்கு? பாதியைக் கொடுத்து முறிச்சாச்சு; இன்னொரு பாதியைத் தூக்கி எறிஞ்சி திருகிக் கொண்ணுட்டாத் தீர்ந்தது! ம்....அவர் வந்துட்டா, அவருக்குத் தெரியாத யோசனையா?

**சோம!** அப்படிச் சொல்லக்கூடாது பாலு! வசந்தன் படிச்சிக்கிட்டிருந்த மட்டிலே அப்படியே அமெரிக்காவுக்குப் போயிட்டான். அவன், மில்லை சரியாக்கூட பார்த்ததில்லே. அதனாலே விசயம் தெரிஞ்ச நீங்க, அவனுக்கு ஒத்தாசையா இருந்து விவரத்தைச் சொன்னாத்தானே, நிர்வாகம் செய்றதுக்குத் தோது; இல்லையா? எதுக்கும் படிப்போடே அனுபவமும் வேணும் பாருங்க. அதனாலேதான் நீங்க எப்பவும் அவனுக்கு ஆதரவா இருக்கணும் என்கிறது என் ஆசை.

**பாலு:** எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்! (எழுந்து) அப்போ, உத்தரவு கொடுக்கிறீங்களா? ம்....பந்தல் அலங்கார வேலைகளெல்லாம் நடந்துகிட்டிருக்கு. நான் போயி நின்னாத்தான்....

**சோம:** ஆமாமா! அதைப் போயி முதல்லே கவனிங்க! எந்தக் குறையும் இல்லாமே...

**பாலு:** உங்க ஆசீர்வாதத்தாலே ஒரு குறையும் இருக்காது! வரட்டுமா? (போகிறான்)

●

## காட்சி 14

○

பம்பாய் ஹோட்டல் அறை—வசந்தன் தொழிலாளி போல் உடை அணிந்து தன் வேஷத்தைக் கண்ணாடியில் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறான்—பூங்காவனம் காப்பித் தட்டுடன் வருகிறான் — முதுகைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் வசந்தனைக் கண்டு, யாரோ என எண்ணி விடுகிறான்.

**பூங்கா:** (பயந்தவனாய், பரபரப்புடன் – இந்தியில்) கோனே தும்? கோன்? சாப் கிதர் கயே? தும் கோன்? சாப், சாப்!

**வச:** (திரும்பி) என்னடா இது, சாப்பும் சோப்பும்.

**பூங்கா:** (ஆச்சரியத்துடன்) ஓ....நீங்களா முதலாளி?

**வச:** ஆமடா, ஆமா!

**பூங்கா:** இதென்ன முதலாளி இப்படி?

**வச:** முதலாளி, தொழிலாளி ஆயிட்டாரு!

**பூங்கா:** அதுக்கு இந்த வேஷம் எதுக்குங்க?

**வச:** நீ தானேடா சொன்னே, முதலாளி, தொழிலாளி ஆனாத்தான், தொழிலாளிக்கு நன்மை செய்ய முடியும்னு.

**பூங்கா:** சரியாப் போச்சு போங்க! நான் சொன்னது வேஷம் போடுற தொழிலாளியில்லே முதலாளி; வேலை செய்ற தொழிலாளி! நாடகத்திலே, பிச்சைக்காரன் வேஷம் போட்டுக்கிட்டு வந்து, 'ஐயா, சாமி, சாப்பிட்டு மூணு நாளாச்சி'ன்னு அழுவான். உள்ளே போயி மூணு மசால் தோசையை முழுசா முழுங்குவான். அது மாதிரியில்லே இருக்கு முதலாளி, உங்க தொழிலாளி வேஷம்!

**வச:** அதெல்லாம் இருக்கட்டும், முதல்லே இந்த வேஷம் பொருத்தமாயிருக்கா? அதைச் சொல்லு.

**பூங்கா:** அதுக்கென்ன வந்திருக்கு? டிராமாக்காரன்கூட உங்ககிட்டே பிச்சை வாங்கணுமே!

**வச:** சரி, இனி வேலையிலே இறங்க வேண்டியதுதான்.

**பூங்கா:** என்ன வேலைங்க?

**வச:** (தமாஷாக) அதையெல்லாம் சொல்றதைக் கேட்டுத் தெரிஞ்சிக்கிட முடியாதுங்க. நீங்க போயி ஒரு தந்தி பாரம் வாங்கிக்கிட்டு ஓடியாங்க. மற்றதைப் பிறகு பார்க்கலாம்.

●

## காட்சி 15

O

தெருவழியே ஐயம்பெருமாளும், பெருமாளும் செல்லுகின்றனர்.

**ஐயம்:** (சென்றவன் நின்று திரும்பி) ஏம்பா, நேரம் ரொம்ப ஆயிடிச்சோ?

**பெரு:** அதெல்லாம் ஒண்ணுமில்லே; நீ நட!

**ஐயம்:** அப்பச் சரித்தான் வா! (சிறிது சென்று நின்று திரும்பி) ஆமா, ஏரோப்ளேன் எத்தனை மணிக்கு வருதாம்?

**பெரு:** உனக்கு இதை எத்தனை தடவை சொல்லணும்?

**ஐயம்:** அட, என்னப்பா நீ! மனுசன் சந்தேகப்பட்டுக் கேட்டா....

**பெரு:** நல்லாக் கேட்டே போ! மனுசனை நச்சு நச்சுண்ணு நச்சிப் போடுவே போலிருக்கே?

ஐயம்: பாத்தியா, பாத்தியா! இப்படித்தான் கோபம் வரக் கூடாதுன்னு, நானும் அடிக்கொரு தரம் சொல்லிக்கிட்டு வர்றேன்.

பெரு: இந்த மாதிரி சந்தேகச் சனியன்களைக் கட்டிக் கிட்டு அழுகாதேன்னு, நானும் அடிக்கொரு தரம் ஆணித்தரமா அறைஞ்சிக்கிட்டு வர்றேன்.

ஐயம்: அட, என்னப்பா இது! சந்தேகத்தை மனசுக்குள் ளேயே வச்சிருக்கக் கூடாது; வச்சிருக்கிறவன் உருப்பட மாட்டான்; இதுதான் சன்மார்க்க நெறின்னு நான் சதா சொல்லிக்கிட்டு வர்றேன். நீ என்னடான்னா சனியன்னு சொல்றே. ஊம்....காலம் அப்படிக் கெட்டுக் கெடக்கு!

பெரு: கெட்டா கெடட்டும்; நீ நடையைக் கட்டு!

ஐயம்: நல்லாக் கட்டச் சொன்னே போ! விமானம் வர்ற நேரத்தை சந்தேகத்துக்கு இடமில்லாமே—

பெரு: தெரிஞ்சிக்கோ! பத்தரை மணிக்கு வருது.

ஐயம்: சரியா பத்தரைக்கு?

பெரு: சந்தேகத்துக்கு இடமில்லாமே!

ஐயம்: ஒரு வேளை பத்து இருபதுக்கு வருதோ?

பெரு: அப்டீன்னு யாரு சொன்னா?

ஐயம்: அட, சந்தேகப்பட்டுக் கேக்கிறேம்பா!

பெரு: சந்தேகப்பட இடம் எங்கே இருக்கு?

ஐயம்: ஆங், எங்கே இருக்கு?

பெரு: (எரிச்சலுடன்) இந்தாப்பா, நீ நட, நேரமாகுது!

ஐயம்: அப்பச்சரி வா! வந்து....விமானம் பத்தரைக்குத் தான் வருதுன்னு நீ நிச்சயமாச் சொல்றே?

பெரு: மண்டையிலே அடிச்சிச் சொல்றேன்.

ஐயம்: அப்பச்சரி, வா! (சென்று நின்று திரும்பி) ஆமா, நாம டீ குடிச்சமே, கடையிலே, அப்போ மணி என்ன பார்த் தோம்?

பெரு: ஒன்பதே முக்கால்.

ஐயம்: ஆமாமா, ஒன்பதே முக்கால். ம்....நீ சரியாப் பார்த்தியோ?

பெரு: ஏன், நீ பார்க்கலையோ?

ஐயம்: பார்த்திதேன், பார்த்தேன்! இருந்தாலும் ஒரு சந் தேகம். மணி ஒன்பதே முக்காலா, கூடுதலா, குறைச்சலா?...

**பெரு:** குறைச்சலில்லே போ! இந்தாப்பா, மணி ஒன்பதே முக்கால்தான். நீ நட!

**ஐயம்:** அப்பச் சரித்தான் வா!

[பின்னல் இரண்டு தொழிலாளிகள் வருகின்றனர். ஒருவர் சந்தணப் பொட்டு அணிந்திருக்கிறுர்.]

**சந்தணப் பொட்டுக்காரர்:** அண்ணேய்! என்னண்ணே, எங்களை வீட்டுட்டு நீங்க பாட்டுக்குப் போறீங்க?

[ஐயம்பெருமாளும், பெருமாளும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்க்கின்றனர்]

**பெரு:** அட, நீங்க் எங்க பின்னுலேதான் வந்துக்கிட்டிருக்கிறீங்களா?

**ச. பொ:** அதையெல்லாம் நீங்க எங்கே கவனிக்கப் போறீங்க? சீமையிலிருந்து வரப்போற முதலாளி மகனை, முன் வரிசையிலே நிண்ணு வரவேற்கப் போறவங்க மாதிரியில்லே போறீங்க!

**பெரு:** நாங்க தானே! கியூ வரிசையிலே இடம் பிடிக்க முந்திக்கிடலாம்ன்னு போருேம். முதலாளி மகன் முகத்தை யாவது பார்க்கலாமில்லே?

**ஐயம்:** ஏம்பா, எனக்கு ஒரு சந்தேகம்.

**பெரு:** வந்திருக்கணுமே!

**ஐயம்:** வந்தாச்சி!

**பெரு:** அப்பச்சரி, எடுத்துவிடு!

**ஐயம்:** (சந்தணப் பொட்டுக்காரரைக் காட்டி) இவரைப் பார்த்தா ஏகத் தடபுடலா இருக்கே; ஏன்?

**ச. பொ:** (தன்னைப் பார்த்துக் கொண்டு) அப்படி ஒண்ணு மில்லையே!

**ஐயம்:** இருக்கு! சந்தணப் பொட்டு மணக்கு! சந்தேகப் பட்டுக் கேக்கிறேன்.

**ச. பொ. வுடன் வந்தவர்:** ஓ, அதுவா? இண்ணைக்கு உக்காந்தா போட்டோ, நிண்ணு போட்டோன்னு அவங்க பாட்டுக்குப் போட்டோக்களை எடுத்துத் தள்ளிக்கிட்டே இருப்பாங்க பாருங்க, அதிலே, எதிலேயாவது கொண்டு போயி முகத்தைக் கொஞ்சம் நீட்டலாம்னுதான், அதை அவ்வளவு தூரத்துக்கு ரிப்பேர் பார்த்துக்கிட்டு வந்திருக்காரு!

[ஐயம்பெருமாள் – பெருமாள் சிரிக்கின்றனர்]

**ச. பொ:** (கோபமாக) ஏய்!

**ச. பொ. வுடன் வந்தவர்:** அட, பொறப்பா! கொஞ்சப் பேரு இருக்காங்க. யாராவது பெரிய மனுஷங்க வந்தா அவங்க பின்னுலேயே அலேஞ்சிக்கிட்டிருப்பாங்க, போட்டோ எடுக்கிருங்கன்னு தெரிஞ்சுதோ, அவ்வளவுதான், ஒட்டைச் சிவிங்கி மாதிரி ஒரேடியாத் தலையைக் கொண்டு போயி நீட்டுவாங்க! அப்பேர்ப்பட்டவங்களிலே இவரும் ஒருத்தரு. வாங்க போகலாம்.

**ச. பொ:** ஏய், என்னைக் கேலியா பண்ணுறே?

**ச. பொ. வுடன் வந்தவர்:** செச்சே! நீ சும்மா வாப்பா! உள்ளதைச் சொன்னு, உனக்கெதுக்கு உடம்பெரிச்சல்?

[நால்வரும் செல்லுகின்றனர்]

●

## காட்சி 16

O

சோமசுந்தரம் பங்களா—கோபாலும் அவன் மனைவி செந்தாமரையும் என்று மில்லாதபடி தங்களை அலங்கரித்துக் கொண்டு வசந்தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**கோபால்:** செந்தாமரை, எனக்கு இப்போ எப்படி இருக்கு தெரியுமா?

**செந்தாமரை:** ஏன், சக்கரவர்த்தி ஆகிற அறிகுறி தெரியுதோ?

**கோபால்:** அதில்லே செந்தாமரை; அப்படியே ஒரே தாவாத் தாவிக் குதிச்சி—

**செந்:** குட்டிக் கரணம் அடிச்சி—

**கோபால்:** நம்ம மில்லுக்குள்ளே பாஞ்சி—

**செந்:** விழுந்தடிச்சி எழுந்திருச்சி—

**கோபால்:** நம்ம சின்ன முதலாளியைப் பார்க்கலாமான்னு என் மனசு கெடந்து அப்படியே பட பட படன்னு துடிச்சிக் கிட்டிருக்கு, போ!

**செந்:** ஏன், போறதுதானே! பிடிச்சிக்கிட்டா இருக்காங்க?

**கோபால்:** பெரிய முதலாளிதான் உத்தரவு போட்டுட்டுப் போயிட்டாரே! சின்ன முதலாளி வீடு வந்து சேர்ற வரையிலே காலெடுத்து வெளியிலே வைக்கப்படாது! வச்சே, தொலேஞ்சே! உத்தரவு!

**செந்:** அதனுலேதான் இப்போ தலைகீழா நிக்கிறேயாக்கும்?

**கோபால்:** ஏய், ஏது மெல்ல வத்தி வச்சிப் பேசிப் பார்க்கிறே! ம்....

**செங்:** இல்லேயில்லே; சின்ன முதலாளி வர்றதை எதிர் பார்த்து, தலேகீழா நிண்ணு தவம் பண்றயேண்ணு, சும்மா, ஒரு பேச்சுக்குச் சொன்னேன்.

**கோபால்:** அதுதானே கேட்டேன். ம்.... இப்போ மணி என்னாச்சி? (சுவற்றில் இருக்கும் கடிகாரத்தைப் பார்த்து எரிச்சலுடன்) சனியன் பிடிச்ச நொண்டிப் பய கடிகாரம்! இவ்வளவு நேரம் ஓடி ஓடி இன்னும் பதினெண்ணைக் கூடத் தொடலேயே? பர பரன்னு அதுபாட்டுக்கு நகருதா பாரு! ம்....ஆச்சு, இதுக்குள்ளே பாதிக் கொண்டாட்டம் முடிஞ்சிருக்கும். இன்னும் கொஞ்ச நேரந்தான். வந்துடுவாங்க!

**செங்:** பதருமேத்தான் வரட்டுமே! மில்லுக்கு வந்தவரு இங்கே வராமே, வேறே எங்கே பறக்கப் போருரு?

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? — நீ நேத்து வந்தவ. எனக்கில்லே தெரியும் அதிலேயிருக்கிற வருத்தம்! ம்.... டீ பார்ட்டிக்கு வந்தவங்களாவது சட்டுப் புட்டுன்னு திண்ணு தொலேச்சி, காப்பித் தண்ணியை எடுத்து ஊத்திக்கிட்டுக் கிளம்புவாங்கன்னு நெனேச்சியா? ஊஹும்! பேச்சிலே இறங்கிட்டா சேத்துக்குள்ளே இறங்கின மாதிரிதான் — போட்டு உழப்பிக்கிட்டுத்தானே இருப்பாங்க! வெட்டிப் பேச்சு! மனுசன் இங்கே தவிச்சிக்கிட்டு நிக்கிறது அவங்களுக்கு எங்கே தெரியப் போகுது!

**செங்:** மூதேவி பிடிச்ச....

**கோபால்:** ஊம்!

**செங்:** கடிகாரம்! மனுசன் படுற பாடு தெரியுதா அதுக்கு? அது பாட்டுக்கு முழிச்சிக்கிட்டு நிக்குதே தவிர, பளிச்சிண்ணு ஓடித் தொலேயுதா பாரு!

**கோபால்:** அது ஏன் ஓடுது? கொழுப்புப் பிடிச்சதாச்சே! அது பிடிச்சாப் போதும். வேலே பின்னடிச்சிக் கிட்டுத்தான் போகும்.

**செங்:** பின்னே போட்டுப் பேசுறயே? அவங்களுக்கு மட்டும் நீ தவிக்கிறது எப்படித் தெரியுமாம்?

**கோபால்:** அதுவும் நெசந்தான். ம்....இந்தா பாரு, செந்தாமரை, சின்ன முதலாளி வந்ததும் நான், 'வா, தம்பீ'ன்னு கேட்டு (நடிப்புடன்) அப்படித்தானே மாலேயைப் போட்டுட்டு இப்படித் திரும்புவேன். நீ என் பக்கத்திலே ரெடியா நிக்க

ணும். தம்பி கிட்டே சொல்லணும் பாரு, இவதான் என் பெண்டாட்டீன்னு. என்ன, தெரிஞ்சுதா?

**செங்:** தெரிஞ்சது, தெரிஞ்சது!

**கோபால்;** ஏண்ணு, நீ நேத்து வந்தவ. அவருக்குத் தெரியாது பாரு, நீதான் என் இல்லக் கிழத்தின்னு!

**செங்:** சரித்தான்!

**கோபால்:** அதுக்குத்தான்! ஊம்....அவரு வந்த பிறகுதான் உன்னைக் கட்டிக்கிடலாம்னு நினைச்சேன்....

**செங்:** ஏன், செய்றதுதானே! யாரு வேண்டாம்ண்ணு?

**கோபால்:** அதுக்கில்லே செந்தாமரை, அதுவரையிலே நீ இருக்கணுமே, அதைச் சொல்லு! வேறே யாரையாவது கட்டிக்கிட்டு நீ பாட்டுக்குப் போயிட்டா நான் கொட்டாவி விட்டுக்கிட்டில்லே குந்தியிருக்கணும்!

**செங்:** நான் ஒருத்திதானு, ஊரிலே உலகத்திலே? எத்தனையோ பேரு!

**கோபால்:** இருக்காங்க, இருக்காங்க! இருந்தாலும் செந்தாமரை, உன்னைப் போல ஒரு ரதி வேணும் பாரு—எனக்குப் பிடிக்கிற மாதிரியா!

**செங்:** நான் ரதின்னு யாரு சொன்னு?

**கோபால்:** யாரு சொல்லணும்?

**செங்:** யாரும் சொல்லலையே!

**கோபால்:** நான் சொல்றேன். எனக்கு மட்டும்தான் நீ ரதி! மத்தவங்களுக்கெல்லாம் நீ மூதேவியாயிருந்தாலும் அதைப் பத்தி எனக்கு அனுவசியம்! (ஹார்ன் சத்தம்) ஆங்!....கார் சத்தம் கேக்கிற மாதிரி இருக்கே! இரு, இரு! (ஹார்ன் சத்தம்—மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து) அப்டீ வா, என் ராஜா! நம்ம கார்தான் வருது.

**செங்:** வருதா?

**கோபால்:** (பரபரப்புடன் இங்கும் அங்கும் நடந்தவாறு) வருதாவா! வந்துட்டாங்க செந்தாமரை, வந்துட்டாங்க! (வெவ்வேறு மாதிரியான ஹார்ன் சத்தங்கள்) ஏ, அம்மாடி! ஏகப்பட்ட கார் வருது போலிருக்கே! ம்ம்....என்னடி மரமாட்டமா நிக்கிறே? ம்ம்....சின்ன முதலாளி ஆளே ரொம்ப மாறிப் போயிருப்பாரில்லே? (ஹார்ன் சத்தம்) வந்தாச்சி, வந்தாச்சி! ஊம்....ம்....இப்போ என்னமோ நினைச்சனே! ஆங்...மாலை, மாலை! மாலை எங்கே? சீக்கிரம் கொண்டா

இப்படி! (செந்தாமரை பரபரப்புடன் இங்கும் அங்கும் தேடுகிருள்) எங்கடி மாலே?

**செங்:** ம்... இங்கேதானே வச்சேன்.

**கோபால்:** உன் தலையிலே வச்சே! எங்கடி மாலே? துப்புக் கெட்டவ! (பல்லைக் கடித்துக் கொண்டு) வந்துட்டாங்களே!

**செங்:** (சிறிது யோசித்து) இரு இரு, இதோ வந்துட்டேன். (உள்ளே ஓடுகிருள்)

**கோபால்:** வீட்டுக்குள்ளே வச்சிட்டா அடம் பண்ணுறே! ம்....இரு, உன்னை என்ன பண்றேன் பாரு! (ஹார்ன் சத்தம்) கிட்டே வந்துட்டாங்களே! பக்கமாவில்லே சத்தம் கேக்குது! ஏ, செந்தாமரை,செந்தாமரேய்! வரட்டும் அவளை—செவிட்டுச் சிங்காரி! (உள்ளே பார்த்து) ஒய்யாரமாவா நடக்கிறே? உன் இடுப்பை ஒடிச்சிப் போடுறேன் ஒடிச்சி!

**செங்:** (மாலையுடன் ஓடோடியும் வந்து) இந்தா, இந்தா!

**கோபால்:** (மாலையை வாங்கிக் கொண்டே) இந்த மட்டிலே ஒண்ணு கொடுத்தேண்ணு? ம்...சரி, சரி! வா, வா, இப்படி நில்லு! ஆளைப் பார்த்தா அழகு போலே வேலையைப் பார்த்தா எழவு போலே! பேரு மட்டும் செந்தாமரை! (வாசலருகில் நின்று மாலையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வெளியே பார்த்தபடி) பக்கத்திலே நிக்கிறேயில்லே?

**செங்:** இதோ நிக்கிறேனே! (எட்டிப் பார்க்கிருள்)

**கோபால்:** (சிறிது திரும்பிப் பார்த்து) அடக்க ஒடுக்கமா, ஒரு ஓரமா நில்லேன்! ஏன், எட்டி எட்டிப் பார்க்கிறே? ம்.... நல்ல வேளை, மாலையாவது கைக்கு வந்து சேர்ந்ததே! கடைசி நிமிஷத்திலே காரியத்தையில்லே கெடுத்திடப் பார்த்தா.

[சோமசுந்தரம் சோர்ந்த முகத்துடன் வருகிருர். அவருக்குப்பின்னுல் வரும் பாலுவைக் கண்டதும் 'ஊம்' என்று மாலையைப் பின்னுக்கு இழுத்து, தொடர்ந்து வரும் மற்றவர்களை ஆவலுடன் பார்த்தவண்ணம் நிற்கிருன் கோபால் — ஒரு நொடியில் அவன் முகத்தில் பெரும் ஏமாற்றம் — சோமசுந்தரம் ஆயாசத்துடன் சோபாவில் தொப்பென்று உட்காருகிருர். உடன் வந்த மற்றவர்களும் அமருகின்றனர். கோபால் ஒன்றும் புரியாமல் விழிக்கிருன்.]

**சோம:** (ஆயாசத்துடன்) ம்....கடைசியிலே இப்படிச் செய்துட்டுப் போவான்னு நான் நினைக்கவே இல்லே!

**பாலு:** ஊம்! யாருதான் நினேச்சா? ஏதோ நினேச்சார்; போயிட்டார்.

**கோபால்:** (பதறியவனுய்) என்ன முதலாளி இது! என்ன சொல்றீங்க? (பாலுவிடம்) என்னய்யா சொல்றீங்க?

**சொம:** டேடேய், நீ ஏண்டா அழுகுறே? - உன்னே வேறே சமாதானப்படுத்தித் தொலேக்கணுமாக்கும். தலேவிதிதான் போ! — உங்க சின்ன முதலாளி ஜப்பானுக்குப் போயிட்டாராம், ஜப்பானுக்கு!

**கோபால்:** அப்ப! போன உசுரு திரும்பி வந்தது! அப்போ முதலாளி வரலீங்களா?

**சோம:** இது என்னடா, புதுக் கேள்வி? பார்த்தாத் தெரியலே! (ஆத்திரத்துடன்) ம்....எல்லாம் பாழாப் போச்சி! ஆயிரக் கணக்கிலே பணத்தை செலவழிச்சி அவ்வளவும் நாசமாப் போச்சு போ!

**கோபால்:** ம்....பணம் போனுப் போகுது. இப்போ தம்பி வரலேயே!

**சோம:** ஆமா, நீயும் அவனும் பாடு பட்டுச் சம்பாதிச்சிக் கிழிச்ச பணம் பாரு! போனுப் போகுதாமில்லே! அவனுக்கு இருக்கிற புத்திதானேடா உனக்கும் இருக்கும். ரெண்டு பேரும் கூட்டாளிங்க பாரு! — ம்...இவனே ஒரு மனுசன்னு மதிச்சி, எங்கெங்கே இருந்தெல்லாம் வந்தாங்க, வரவேற்புச் செய்யணும்னு — அவங்களே யெல்லாம் விட இவனுக்கு ஜப்பான்தான் பெரிசாப் போச்சு — பெரிய ஜப்பான்! சீச்சீச்சீ! கடைசி நிமிஷத்திலே தந்தியைக் கொடுத்துட்டு அவன் பாட்டுக்குப் பறந்துட்டா, இங்கே நம்ம பாடு என்னுகிறது? அதை யோசிச்சுப் பார்த்தானு அவன்?

**கோபால்:** அப்போ, எப்ப வருவாருங்க?

**சோம:** (எரிச்சலுடன்) ஒரு எட்டுப் போயி கேட்டுட்டு வாயேன்! — இவன் வேறே ஊடே ஊடே பேசி மனுசனே உசுரை வாங்குருன். (பாலுவிடம்) பாலு, இவனுக்கு அந்தத் தந்தியிலிருக்கிற விவரத்தைச் சொல்லித் தொலேங்கய்யா. இல்லே, தொண தொணன்னு நம்மளே லேசிலே விட மாட்டான்.

**பாலு:** (எரிச்சலுடன்) அட, என்னப்பா நீ! முதலாளி யோடே மனசு புண்பட்டுப் போயிருக்கேண்ணு. நாங்க கண் கலங்கிப் போயி நிக்கிறோம். நீ என்னடாண்ணு, சும்மா குத்திக் குத்தி கிளப்பிக்கிட்டே இருக்கயே!

**கோபால்:** உங்களுக்கென்ன, இதம் பதம் தெரிஞ்சவங்க, எப்படியும் பேசவீங்க. என்னைச் சொல்லுங்க.

**சோம:** பாலு, அவனோடே விவாதம் எதுக்கு? விவரத்தைச் சொல்லுங்கய்யான்னு...

**பாலு:** (வினயமாக) இதோ சொல்றேன் — கோபால், சின்ன முதலாளி அவருக்குத் தெரிஞ்ச சிநேகிதரோடே பம்பாயிலே இருந்தவாக்கிலே அப்படியே ஜப்பானுக்குப் போயிட்டாராம். ரொம்ப வேண்டிய நண்பர்; அவர் பேச்சை மறுக்க முடியலே; அதனாலே, அவசரமாப் புறப்பட்டுட்டேன்; ரெண்டு மாசத்திலே வந்துடுவேன்; அதிகமானா மூணு மாசமாகும் — அப்டீன்னு தந்தி அடிச்சிருக்காரு. அவர் வரவேண்டிய விமானம் வரவும், இந்தத் தந்தி வந்து சேரவும் சரியா இருந்தது. இதுதான் விவரம்! (சோமுவைப் பார்த்து சந்தேகத் தொனியில்) ஆமா, பாஸ் போர்ட்டு?....

**சோம:** அதுக்கென்ன வந்திருக்கு? அவன்தான் அமெரிக்காவிலே படிச்சி முடிச்சதும் அப்படியே உலகத்தைச் சுத்திட்டு வரப்போறேன்னு பாஸ் போர்ட்டெல்லாம் வாங்கி வச்சிருந்தானே!

**கோபால்:** ஊம்....ஏதாச்சும் அவசரமான காரியமாயிருக்கும்.

**சோம:** (கோபமாக) அதுக்கு இங்கே வந்திட்டில்லே போகணும்! (மற்றவர்களைப் பார்த்து) நல்ல மூளைக்காரனா இருந்தா செய்திருப்பானில்லே?

**1-வது பிரமுகர்:** ஆமாமா!

**2-வது பிரமுகர்:** செய்திருக்கலாம்தான்....

**1-வது பிரமுகர்:** ம்....ஆனது ஆய்ப் போச்சு; விடுங்க.

**சோம:** ம்....நல்லா ஆச்சி; நல்லா விட்டோம்.

**2-வது பிரமுகர்:** (எழுந்து கொண்டே) அப்போ நாங்க வரட்டுமா?

**சோம:** (எழுந்து கொண்டே) புறப்பட்டீங்களா? சரி; என்னை மன்னிக்கணும். உங்களையெல்லாம் அலைய வச்சுட்டேன். ரொம்ப சிரமம்.

**1-வது பிரமுகர்:** அதெல்லாம் ஒண்ணுமே இல்லே. உங்க மனசு முறிஞ்சு போச்சேன்னுதான் நாங்க இடிஞ்சி போயி உக்காந்திருக்கோம். உங்களுக்கு என்ன தேறுதல் சொல்றதுண்ணே எங்களுக்குப் புரியலே. இதனாலேதான்

வரவேற்புக்கு வந்தவங்க ரொம்பப் பேரு, மில்லுலே இருந்த வாக்கிலே அப்படியே போயிட்டாங்க.

**சோம:** (பெருமூச்சு விட்டு) ம்....அவங்களெல்லாம் என்ன லேசான புள்ளிகளா! பத்து லட்சம், இருபது லட்சம், முப்பது லட்சம், கோடீன்னு வச்சிக்கிட்டு மதிப்பாப் பிழைக் கிறவங்க. அவங்களையெல்லாம் அழைச்சி வீணு அகௌரவப் படுத்திட்டேன். நாளைக்கு அவங்க முகத்திலே எப்படி முழிக்கப் போறேனே, தெரியலே!

**1-வது பிரமுகர்:** அதைப் பத்தியெல்லாம் ஏன் கவலைப் படுறீங்க? காரியம் இப்படி ஆகணும்னு இருக்கே. அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?

**சோம:** ம்....நம்மாலே ஆகிறது என்ன இருக்கு?

**2-வது பிரமுகர்:** எல்லாம் அவன் செயல்னு கவலையை விடுங்க. உலகம் சுத்தத் தெரிஞ்சவங்களுக்கு எங்கே போனு என்ன? நினைச்சா, வந்துடுருங்க. ஏரோப்ளேன் வந்த பிறகு, ஜப்பான் என்ன நம்ம புழக் கடைக்குப் போயிட்டு வர்ற மாதிரிதானே! – அப்போ, நாங்க போயிட்டு வரட்டுமா?

**சோம:** (வணங்கி) சரி, போய் வாங்க!

[பிரமுகர்கள் செல்லுகின்றனர்]

**சோம:** ஜப்பானுக்குப் போனவன், இங்கே வரவேற்பு ஏற்பாடுகளெல்லாம் நடக்கே, நாம பாட்டுக்குப் போயிட்டா எப்படி என்கிற எண்ணம் கொஞ்சங்கூட இல்லாமே....

**கோபால்:** இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன்– பம்பாயிக்குப் போயி தம்பியை கையோடே கூட்டிக்கிட்டு வர்றேண்ணு.

**சோம:** ஆமா, இவரு பெரிய உலகம் சுத்திய தமிழரு! ஏண்டா, பம்பாயிக்கு ஒழுங்காப் போயி இறங்கத் தெரியு மாடா உனக்கு?

**கோபால்:** ம்....எனக்கு ஒண்ணும் தெரியாது, ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லிக்கிட்டே இருங்க. ஒரு நாளைக்கு எல்லாம் தெரியுங்கிறதைக் காட்டிப் போடுறேன்.

[இந்நேரம் அங்கு வந்த கோகிலத்தின் கள்ள மனம் துடிக்கிறது. அவளைக் கண்டு பாலு திருட்டு விழி விழிக்கிறுன். கோபால் ஒரு பக்கமாகப் போய் உட் காருகிறுன்]

**சோம:** வாம்மா கோகிலம்! அப்பா வரலே?

**கோகிலம்:** (உட்கார்ந்து கொண்டே) அவர்தான் இடிஞ்சி போயி உட்கார்ந்துட்டாரே.

**சோம:** எல்லோரையும்தான் ஆட்டிப் படைச்சிட்டானே!

**கோகி:** அதுக்கென்ன மாமா, இன்னும் இரண்டு மாசம் தானே!

**சோம:** என்னமோ! அஞ்சு வருஷமாப் பார்க்காமே இருந்தேன். அப்பக் கூடத் தோணலே. இனி ரெண்டு மாசம் போறதுதான் பெரிய எமகண்டமா இருக்கும் போலிருக்கு.

**கோகி:** பெரியவங்க, நீங்களே இப்படிக் கவலைப்பட்டா, எங்களுக்கெல்லாம் தைரியம் சொல்றது யாரு?

**சோம:** நீயாவது இவ்வளவு தைரியமாப் பேசுறயே. அந்த மட்டிலே எனக்குக் கொஞ்சம் நிம்மதியாயிருக்கு.

**பாலு:** அம்மாவுக்கு வயசு கொஞ்சமாத்தான் தெரியுது. ஆனா அனுபவசாலி மாதிரி பேசுறுங்களே!

[பேச வேண்டாம் என்று கோகிலம் ஜாடை காட்டுகிருள்]

**சோம:** என்ன பாலு, கோகிலத்தை உங்களுக்குத் தெரியாது?

**பாலு:** பார்த்திருக்கேன்.

**சோம:** நம்ம எதிர்கால மருமக. தெரியுமில்லே?

**பாலு:** தெரியும், தெரியும்! ஆனா, அவ்வளவாப் பழக்கமில்லே!

[இவ்வளவு நேரமும் இவர்கள் பேசுவது எதையும் கவனிக்காமல், தனக்குத்தானே சிந்தித்துக் கொண்டு கவலையுடன் உட்கார்ந்திருந்த கோபால், திடீரென்று]

**கோபால்:** அப்டீன்னு யாரு சொன்னு?

[கோகிலம்–பாலு ஒருவிதமாகவும், சோமசுந்தரம் வேறு விதமாகவும் திடுக்கிடுகின்றனர்]

**சோம:** டேய், என்னடா அது உளர்றே?

**கோபால்:** (எழுந்து) ஒண்ணுமில்லீங்க. சின்னவரு, சிந்திச்சுப் பார்க்காமே ஜப்பானுக்குப் போயிட்டாருன்னு சொல்றுங்களே; அப்படிச் சொன்னது யாருன்னுதான் கேட்கிறேன்.

[கோகிலம்–பாலு பெருமூச்சு விட்டு தெளிவடைகின்றனர்]

**சோம:** அட, மண்டூகமே போ! – பாலு, இவனை இங்கே வச்சிருக்கிறதிலே புண்ணியமில்லே. பேசாமே ஜப்பானுக்கு

ஒரு டிக்கட் எடுத்துக் கொடுத்து அனுப்புங்க. அவன் கிட்டேயே போய்ச் சேரட்டும்.

**கோபால்:** சேர முடியாதுண்ணு நினேச்சீங்க? அப்படி ஒண்ணும் மெதமா நினேச்சிட வேண்டாம்! டிக்கட் எடுத்துக் கையிலே கொடுங்க. நான் போயி தம்பியைக் கையோடே கூட்டிக்கிட்டு வரலே, என் பேரை மாத்தி வச்சிக் கூப்பிடுங்க! ம்....ஜப்பான் என்ன பெரிசு? அதைச் சுத்தி அக்கம் பக்கத்து நாடெல்லாம் தமிழனுக்குத் தண்ணி பட்ட பாடாக்கும்! போன சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாவில்லே தெரியும்!

[கோபால் செல்லுகிருன் – சோகத்தையும் மீறிக் கிளம்பிய நகைச் சுவையை அனுபவிக்கிருர் சோமசுந்தரம். கோகிலம் – பாலு அருவெறுப்புக் கொள்கின்றனர்]

**பாலு:** (எழுந்து) அப்போ, நான் வரட்டுமா?

**சோம:** சரி.

[கோகிலத்தைக் கடைக் கண்ணுல் பார்த்துக் கொண்டே செல்லுகிருன் பாலு]

**கோகி:** (எழுந்து) அப்போ, நானும் போயிட்டு வர்றேன் மாமா!

**சோம:** அதுக்குள்ளே என்னம்மா அவசரம்?

**கோகி:** இல்லே மாமா, அப்பா எதிர்பார்த்துக்கிட்டிருப் பாரு. நான் போயி அவர் பக்கத்திலே இருந்தாத்தான் அவர் மனசு கொஞ்சம் நிம்மதியா இருக்கும்.

**சோம:** ஆமாமா! ம்.... அப்பா கிட்டே சொல்லு, எதுக்கும் கவலேப்பட வேண்டாம்; இன்னும் ரெண்டு மாசத்திலே வந்துடுவான். வந்ததும் நடத்த வேண்டிய சுப காரியத்தை நடத்திடலாம்னு சொல்லு; என்ன! நீ எதையாவது மனசுக் குள்ளே நினேச்சு ஏங்கிக்கிட்டு இருக்கப் போறே. அதெல் லாம் ஒண்ணும் வேண்டாம்.

**கோகி:** சரி மாமா. (போகிருள்)

●

## காட்சி - 17

○

வசந்தன் வரவேற்பு விழாவுக்காகச் சென்ற ஐயம்பெருமாளும் பெருமாளும் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

**ஐயம்:** நான் சொல்றது என்னண்ணு, சந்தேகத்தை மனசுக் குள்ளேயே வச்சிருக்கப் படாது. வச்சிருக்கிறவன் உருப்பட மாட்டான். இதிலே சந்தேகமில்லே.

பெரு: சரி, சரி, சரி! ரொம்பச் சரி!

ஐயம்: இப்போ, சரீன்னுதான் சொல்லுவே. பிறகு ஏதாவது சந்தேகத்தைப் போட்டு உடைச்செறிஞ்சி, மனசு சமாதானப்படலாம்னு உன்னைக் கேட்டா, என் மேலே சீறிப் பாய வருவே.

பெரு: அதெல்லா மில்லப்பா; நீ பெரிய சந்தேகப் பெருக்கல் வாய்ப்பாடா இருக்கயே. அதுதானே சங்கடமாயிருக்கு!

ஐயம்: நானு பெருக்குறேன்? அதுபாட்டுக்குப் பெருகி வந்து சேருதே! இப்போ பாரு, முதலாளி மகன் வரலே யில்லே? ஏன் வரலே? சந்தேகப்பட எடமிருக்கிற சங்கதிதானே?

பெரு: எங்கே இருக்கு? அவர்தான் ஜப்பானுக்குப் போயிட்டாரே!

ஐயம்: கண்டதாரு?

பெரு: தந்தி வந்திருக்கே!

ஐயம்: எங்கே யிருந்து?

பெரு: பம்பாயிலிருந்து.

ஐயம்: யாரடிச்சா?

பெரு: முதலாளி மகன்.

ஐயம்: அவர்தான் அடிச்சார்ன்னு யாரு அத்தாட்சி?

பெரு: சரியாப் போச்சு! சரி வச்சிக்கோ; சந்தேகம் நம்பர் ஒண்ணு!

ஐயம்: ஒண்ணு? ஒண்ணு! இரண்டாவதாக அவரு எந்த விமானத்திலே வர்றதாக இருந்தாரு?

பெரு: அதுதான் காலையிலே பத்தரை மணிக்கு வந்தாச்சே!

ஐயம்: அதிலேதான் வருவார்னு என்ன இருக்கு?

பெரு: ஏற்கனவே திட்டம் போட்டுத் தகவல் அனுப்பி யிருந்தாரே!

ஐயம்: போட்ட திட்டம் மாறலாமில்லே?

பெரு: மாறலாம்.

ஐயம்: அப்போ, வேறே விமானத்திலே ஏறியிருக்கலா மில்லே?

பெரு: இருக்கலாம்.

ஐயம்: அப்போ, அது எங்கே?

பெரு: எகிறிப் பறந்திருக்கும்.

ஐயம்: எப்படிப் போச்சி?

பெரு: (எரிச்சலுடன்) எரிஞ்சி விழுந்திருக்கும்.

ஐயம்: அது என்னமோ, நிச்சயமாத் தெரியலே! ஆக, சந்தேகப்பட்டுப் பார்க்க வேண்டிய ஆயிட்டத்திலே இதையும் கூட்டு!

பெரு: சரி, கூட்டு! ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு!

ஐயம்: ரெண்டா? ரெண்டு! சந்தேகமில்லையே?

பெரு: இல்லே, ரெண்டு!

ஐயம்: அப்பச்சரி, ரெண்டு! மூன்றுவதாக—

பெரு: உன் மண்டையிலே மூளை இருக்கா?

ஐயம்: ஆங், அதென்ன அப்படிக் கேட்கிறே?

பெரு: இல்லே, இருக்கான்னு சந்தேகப்பட எடமிருக்கில்லே?

ஐயம்: ஊம்....இடமிருக்கா!

பெரு: முதல்லே இந்த சந்தேகத்தைத் தீர்த்து தெளிவாத் தெரிஞ்சிக்கோ! (போகிறுன்)

ஐயம்: அட!

●

## காட்சி 18

○

முதலாளி வசந்தன், தொழிலாளி வரதன் என்ற பெயர் பூண்டு, கையிலே ஒரு தூக்குப் பையுடன் கோவை ரயில் நிலையத்தில் இறங்கி தெரு வழியே நடக்கிறுன். தன்னை யாராவது அடையாளம் கண்டு கொள்வார்களோ என்று அவன் கருத்திலே கலக்கம்.

மனப்புயல்-குரல்: வசந்தன், ஏன் பயப்படுகிறுய்? யாராவது உன்னை அடையாளம் கண்டு கொள்வார்களோ என்ற அச்சமா? பைத்தியக்காரன்தான் போ! நீ என்ன, இப்போது முதலாளி வசந்தனு? அல்லப்பா, அல்ல! – தொழிலாளி வரதன்! வேலை வாங்க வேண்டியவனல்ல; செய்ய வேண்டியவன்! குறிப்பிடத் தகுந்த கனவானல்ல; குறிப்பறிந்து ஏவல் செய்யக் காத்துக் கிடக்கும் கட்டை! மாளிகைச் சீமானல்ல; மண்குடிசை வாழ் மக்களிலே நீயும் ஒருவன்! அறுசுவை உண்டி அருந்தும் பெருந் தனக்காரனல்ல; வெறும் கஞ்சியாவது குடிக்கக் கூலி கிடைக்காதா என்று பிறரிடம் கெஞ்சி நிற்க வேண்டிய பஞ்சை; பராரி!

**வரதன்:** ஆம்; அப்படிப் பட்டவன்தான் என்று பாவலாப் போடுகிறேன். ஆளப் பிறந்தவன் ஆள் மாருட்டத்தால் ஆண்டியாக நிற்கிறேன். பணக்காரன், பரதேசி உருவிலே; முதலாளி இப்போது தொழிலாளி வேஷத்தில்! ஆனல், நான் பிறந்து வளர்ந்த ஊர் இது. என் பூர்வோத்திரம் அறிந்தோர் பலர் — அக்கம் பக்கத்திலே! யாராவது என்னை அடையாளம் கண்டு கொண்டால்....?

**குரல்:** அது நடக்கக் கூடிய காரியமல்ல வசந்தன்! ஐந்தாண்டுகளாக அமெரிக்காவிலே வாழ்ந்த நீ, ஆளே மாறியிருக்கிறுய். காலம் தந்த வாலிப மெருகு, கண்டோர் திகைக்கும் அளவுக்கு உன் உருவ அமைப்பிலே மாறுதலைச் செய்திருக்கிறது. மறந்து விட்டாயா இதை? உனக்கு அறிமுகமானவர்கள் உன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியலாம். ஆனல், அவர்களென்ன ஆண்டிகளா? ஆடம்பரமாக வாழ்வோர்; அண்டிப் பிழைக்கும் பலரை ஆட்டிப் படைக்கும் எஜமானர்கள். ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டார்களே உன்னை! ஏன்? நீ ஏழை — தோற்றத்திலே! — உனக்குத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் தனவான்கள்; காரிலே பறக்கும் கனவான்கள்; கால் நடையாகச் செல்லும் உன்னையா கண்ணெடுத்துப் பார்ப்பார்கள்? கோலந்தான் போ!—உன்னேடு நெருங்கிப் பழகியவர்கள் முதலாளிமார்கள் பெற்றெடுத்த அருமைப் புதல்வர்கள். இப்போது உன் முகம் அவர்கள் அகத்திலே பதியாது — அவ்வளவு அலட்சியமாகப் போய் விடுவார்கள். ஏன் தெரியுமா? நீ பாவலாப் போட்டாலும், பார்ப்பதற்குத் தொழிலாளிதானே!

**வர:** உண்மை! நான் ஏன் பயப்பட வேண்டும்? என் கருத்து வழி நடப்பேன். யாராவது என்னைத் தெரிந்து கொண்டாலும், அதைப் பற்றிக்கூட எனக்கு அக்கறை இல்லை!

**குரல்:** உன்னைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று யாருக்கு என்ன அக்கறை? நீயாகப் பிறரை நாடிச் சென்ருலொழிய உன்னைத் தேடி ஒருவருமே வரமாட்டார்கள். தடுத்து விடுமே உன் தரித்திர வேஷம்! பட்டினி கிடப்பவர்களைப் பார்க்கச் சகிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்வோர், அந்தப் பட்டினிப் பட்டாளத்தின் பேரால் பாராளச் சென்ருேரைப் பேட்டி காண காத்துக் கிடப்பார்களப்பா!

**வர:** பரிதாபமான நிலை! நானும்கூட பராரியாகத்தானே நிற்கிறேன். என்னைக் கண்டு ஏன் என்று கேட்போர் யாருமே இல்லையே!

**குரல்:** இருப்பது அரிது! நீ முதலாளியாக வந்து இறங்கியிருந்தால், எத்தனை சீமான்கள் உன்னை எதிர் கொண்டழைப்பர்! எத்தனை மாலைகள் உன் கழுத்திலே அலை மோதி அலங்கரிக்கும்! எத்தனை வாழ்த்துகள்; எத்தனை வரவேற்புகள்; எத்தனை யெத்தனை பாராட்டுரைகள்! ஆனால், இப்போதோ? 'வா' என்று அழைப்போரை நீ போய்த் தேட வேண்டும். பறந்து வரும் பூச் செண்டுகளை ஏந்தி நுகர்ந்து பார்க்க வேண்டிய உன் கரங்களிலே, இப்போது....

**வர:** கூலி ஒருவன் தூக்கிவரவேண்டிய பை!

**குரல்:** பாரப்பா பார், பணமற்றவனின் பரிதாப நிலையை! பன்னீர்த் துளிகளின் குளுமையான நறுமணத்திலே — பணக்காரப் பிரபுக்களின் பாராட்டுரைகளால் பரவசமடைந்த நிலையிலே — பல்வேறு ரக மக்களும் புடை சூழ பவனி வந்திருப்பாய் - சீமைக்குச் சென்ற நீ, சீமான் மகனாகத் திரும்பியிருந்தால்! சீரழியப் பிறந்த மக்களிலே நீயும் ஒருவனாக வருகிறாயே, உன்னை யார் சீந்தப் போகிறார்கள்?

**வர:** அப்பப்ப! எவ்வளவு வேறுபாடு! எங்கே இருந்தவன், எங்கே வந்திருக்கிறேன்! முதலாளி — தொழிலாளி! செல்வம் தரும் இன்பம் - அது இல்லாத் துன்பம்! அடேயப்பா, எட்ட முடியாத இடை வெளி! நெருங்க முடியாத நெடுந்தூரம்! அடுக்காதிந்த அக்கிரமம்!

**குரல்:** இருந்தாலும் நாம் இங்குதான் வாழ்கிறோம் — அருகருகே — அண்ணன் தம்பிகள் என்று சொல்லிக் கொண்டு!

**வர:** சீச்சீ! (நடக்கிறான் — எதிரில் வரும் ஒரு ஆள் மீது முட்டிக் கொள்கிறான்)

**ஆள்:** (நெற்றியைத் தடவியவாறு) சீ! யாருடா இவன், தடிப்பய! பட்டப் பகல்லே உன் கண் என்ன அவிஞ்சா போச்சி? ஆள் மேலே வந்து விழுகாட்டாப் பார்த்து நடக்கிறது! என் மண்டையில்லே ரெண்டாப் போச்சி! சே!

**வர:** தெரியாமே முட்டிட்டேன்; கோவிச்சிக்கிடாதீங்க.

**ஆள்:** குட்டிச் சுவத்திலே போயி முட்டு — சுகம்மா இருக்கும்! தெரியாமே முட்டிட்டானா மில்லே, தெரியாமே! முட்டாப் பய.

[வரதனுக்கு தன் ரத்தத்தில் ஊறிப்போன முதலாளித்துவ அதிகார உணர்வு தலையெடுக்கிறது — கோபம் பொங்குகிறது. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பேசாது நிற்கிறான்]

**ஆள்:** அட, முறைச்சிப் பார்த்தாப்லே இங்கே பயந்து போவாங்கன்னு நினைச்சே? சும்மா போவானில்லே! செஞ்சது செஞ்சிட்டு, மேக்கொண்டு அஞ்சு பணம் தண்டம் கேக்கிறவனைப் போலே இல்லே பார்க்கிறான்! சரித்தான் போடா! (போகிறான்)

**வர:** (அவனைப் பார்த்துக் கொண்டே நிற்கிறான் – தனி மொழி) ம்....திட்டுகிறவன் திட்டுகிறான். திட்டுப் படுகிறவன் மனசு புண்படுமே என்று நினைக்கிறானா? ஊம்! நான் கூட இந்த உண்மையை இன்றுதானே எண்ணிப் பார்க்கிறேன்! சிச்சிச்சி!

— தெரு - மற்றொரு பகுதி —

[வரதன் நடக்கிறான் – எதிரில் இன்னொருவன் வருகிறான். காதில் சொருகியிருந்த கட்டை பீடியை எடுக்கிறான்]

**அவன்:** ஏம்பா, பெட்டி இருக்கா?

**வர:** (புரியாத நிலையில்) பெட்டியா?

**அவன்:** (துண்டு பீடியைக் காட்டி) பத்த வைக்க.

**வர:** ஓ அதுவா! (வெறுப்புடன்) இல்லை!

**அவன்:** (வரதனின் சட்டைப் பையைக் கவனித்து) ஏய், நீ பெரிய ஆளுதான் போலிருக்கு. ஜேபிக்குள்ளே வச்சிக்கிட்டே ஜோக் பண்றயே!

**வர:** (எரிச்சலுடன்) இல்லே; அது வேறே!

**அவன்:** போயும் போயும் உன்கிட்டே வந்து கேட்டேனே– ஆனை மேலே போறவன்கிட்டே சுண்ணும்பு கேட்ட மாதிரி!

**வர:** இல்லேண்ணா போயேன்!

**அவன்:** அட, போகாமே இங்கேயா குடியிருக்கப் போறேன்? ஒரு குச்சி குடுன்னா, இவன் என்னமோ லா பாயிண்டில்லே பேசுறான், லா பாயிண்டு! – பெரிய சீமான் வீட்டுப் புள்ளே; சிறிப் பாயுறாரு! (போகிறான்)

**வர:** (அவன் சென்ற பின்) நல்ல தொந்தரவு போ! எங்கே திரும்பினாலும் எமகண்டமா? சீச்சீச்சி! மனிதன் படுவானா இந்த வேதனை? – ம்....என் சட்டைப் பையிலே நெருப்புப் பெட்டியா இருக்கு? (அதிலிருந்து தீப்பெட்டி அளவுள்ள திருக்குறள் நூலை எடுத்து) வள்ளுவர் வகுத்த வழி – திருக்குறள் – கருத்தைத் திருத்தவல்ல கருவூலம்! நெருப்புப் பெட்டியா இது? ம்....நெருப்புப் பெட்டிதான்! பீடி பத்த வைக்க உதவாது; மக்களைப் பிடித்துள்ள அத்தனை அனுச்சாரங்களையும் கொளுத்தித் தள்ளும் நெருப்புப் பெட்டகம்! (செல்லுகிறான்)

## — தெரு – இன்னொரு பகுதி —

[வரதன் நடக்கிறன் – கூலிக்காரப் பையன் ஒருவன், அவன் அருகில் ஓடி வந்து கையேந்திய வண்ணம் கெஞ்சுகிறன்]

**பையன்**: ஐயா, ஐயா, நான் தூக்கிட்டு வர்றேன்ய்யா! ஒரு அரையணுக் கொடுங்க, போதும். எங்கிட்டே கொடுங்கய்யா! எவ்வளவு தூரமானுலும் தூக்கிக்கிட்டு வர்றேன். காலையிலிருந்து ஒண்ணுமே சாப்பிடலே; பசிக்குதய்யா! அரையணு கூலி கொடுத்தா, ஒரு இட்டிலி வாங்கித் தின்பேன்ய்யா! ஐயா, ஐயா!

**வர**: (பையன் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்து, காசு எடுத்துக் கொடுத்தபடி) இந்தா, போ, வாங்கிச் சாப்பிடு! ம்....நானே ஒரு கூலி! எனக்கெதுக்கு இன்னெரு கூலி?

**பையன்**: (அளவற்ற மகிழ்ச்சியுடன்) நீங்க நல்லா இருக்கணும். ம்....சும்மாவா கொடுத்தீங்க? வேண்டாங்க, நானே தூக்கிட்டு வர்றேன். இப்படிக் கொடுங்க! சும்மா கொடுங்க!

**வர**: வேண்டாம் தம்பி! பரவாயில்லே; நீ போ! உனக்குப் பசி; ஏதாவது வாங்கிச் சாப்பிடு, போ!

**பையன்**: சரீங்க! நீங்களும் என்னைப்போல பாடு படுறவங்கதான்னு தெரியுது, அதுதான் என் பசி அறிஞ்சி காசு கொடுத்தீங்க. நான் வர்றேன்ய்யா. (போகிறன்)

[செல்லும் அந்தப் பையனையே பார்த்துக் கொண்டு நிற்கிறன் வரதன்]

**அறிவு-குரல்**: ம்....அரையணுக் கூலி! அதற்காக அந்தப் பையன் படும் பாட்டைப் பார்த்தாயா? பணம் படைத்தோர் புகைத்துத் தள்ளும் மலிவான சிகரெட்டின் விலை ஒரு அணு. ஊதித் தள்ளிய மீதியை விட்டெறிகிறர்களே, அது கூட அரையணுப் பெறும். அநியாயமாகக் கரியாகும் அந்த அரையணு ஒரு அபலைக்கு ஒரு வேளை ஆகாரம்! – செத்துக் கொண்டிருக்கும் ஜீவனுக்கு உயிரூட்டும் வரப் பிரசாதம்! ம்....உண்ட மயக்கம் தெளிவடைய புகை புகையாக ஊதித் தள்ளுவோர் ஒரு பக்கம்; உண்ண வழியின்றி தங்கள் உடலையே எரி புகையாக்கிக் கொண்டு மாள்வோர் இன்னெரு பக்கம்!

**வர**: இரண்டு பக்கங்கள்! ஒன்றை யொன்று ஒட்டாது; எட்டிக்கூடப் பார்க்காது! உச்சி மேடு; படுபாதாளம்! மேலே உல்லாசம்; உவகை! கீழே உழைப்பு; இருந்தும் அழுகை!

**குரல்**: இருந்தாலும் நாம் இங்குதான் வாழ்கிறேம் – அருகருகே–அண்ணன் தம்பிகள் என்று சொல்லிக் கொண்டு!

**வர:** (அலுப்புடன்) அய்யோ, அய்யோ! (செல்லுகிருன்)

## — தெரு - மற்றுமோர் பகுதி —

[வரதன் நடக்கிருன்—எதிரிலே ஒருவனும் ஒருத்தியும்—தெருவிலேயே போர்க்களத்தை அமைத்துக் கொண்டு போராடும் தீரர்கள்!]

**ஒருவன்:** (நின்று திரும்பி) என்னும்மே! நான் சொல்லச் சொல்ல ராங்காப் பேசிக்கிட்டே வர்றே? உன் உடம்புக்கு எப்படி இருக்கு?

**ஒருத்தி:** நீதான் இப்ப ராங்கியாப் பேசுறே.

**ஒருவன்:** சரித்தான் போம்மே, வாயை மூடிக்கிட்டு! மனுசனுக்குக் கோபத்தை உண்டாக்கினே, பிறகு பார்த்துக்கோ! உன்னே உண்டு இல்லேண்ணு ரெண்டிலே ஒண்ணு பார்த்துப் போடுவேன்; தெரியுமா? ஏது, ரொம்பத்தானே ஆட்டம் காட்டுறே, ஆட்டம்!

**ஒருத்தி:** நீதான் இப்போ ஆடுறே, திருட்டுச் சாராயத்தைக் குடிச்சவன் மாதிரி!

**ஒருவன்:** (இதைக் கவனித்துக் கொண்டிருந்த வரதனிடம்) ஏம்பா, நீ சொல்லு இந்த நியாயத்தை. இப்ப இவ ராங்காப் பேசுறுளா, இல்லே நான் ராங்கியாப் பேசுறேனு? ரெண்டுலே ஒண்ணு நீ சொல்லு! நான் கேட்டுக்கிடுறேன்.

[வரதன் ஒன்றுமே பேசாமல் திகைப்புடனும் பரிதாபத்துடனும் பார்க்கிருன்]

**ஒருவன்:** இவ எங்கிருந்தோ வந்து சேர்ந்தா.

**ஒருத்தி:** அட, நாசமாப் போறவனே!

**ஒருவன்:** ஏய், குறுக்கே பேசாதே! நான் சொல்லி முடியிற வரையிலே வாயைத் திறந்தயோ, பிறகு பார்த்துக்கோ! ஆமா! – ம்....வந்து தம்பீ, இவளேப் பார்க்கப் பரிதாபமா இருந்தது. சரித்தான் பிழைச்சிப் போறுன்னு, கஞ்சி காச்சக் காசு கொடுத்துக் காப்பாத்திக்கிட்டு வந்தேன். கிரமமா வில்லே இருக்கணும். கிடையாது; கிராக்குத்தனமா நடந்தா! சரித்தான் போயிட்டு வாடீன்னு நான் பாட்டுக்கு வந்துக்கிட்டே இருந்தா, இவ ஏன் என் பின்னலே வந்து வம்பு பண்ணணும்? ஏன், தம்பீ நான் சொல்றது நியாயமா, அநியாயமா? நீ 'பட்டு'ன்னு சொல்லு! நான் கேட்டுக்கிடுறேன். தப்புன்ன ஜோட்டாலே அடி; பட்டுக்கிடுறேன்.

(அவளைப் பார்த்து) இந்தா பாரு, நீ பேசாமேப் போயிடு. இல்லே....

[வரதன் பெருமூச்சு விட்டவாறு மௌனமாக நிற்கிறான்]

**ஒருத்தி:** (ஒருவனைப் பிடித்துப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, வரதன் பக்கமாக வந்து) நீங்க கேளுங்கய்யா நியாயத்தை! இந்த மனுசன் நீட்டி நீட்டிப் பேசுறானே; என்னை எத்தனை நாள் பட்டினி போட்டு சாகடிச்சிருக்கான், இந்த பாவிப்பய மகன்னு கேளுங்க! அறிவு இருந்தா இப்போ இப்படிப் பேசுவானா? வீணா என் தலையிலே ஒரு பழியைத் தூக்கிப் போட்டுட்டு, இன்னொரு சக்களத்தியைப் பிடிச்சிக் கொஞ்சிக் கிட்டு (ஒருவன் நழுவ, அவனைத் தொடர்ந்து சென்றவாறு) இந்தா பாரு, எங்கே போறே? உன்னை விட்டுட்டுத் தேடு வேன்னா நினைச்சே?

**ஒருவன்:** (போய்க்கொண்டே) சரித்தான் போடீ!

**ஒருத்தி:** என் உசுரு போனாலும், உன்னை நான் விடப் போறதில்லே!

[ஒருவனைத் தொடர்ந்து ஒருத்தி செல்ல, வரதன் பிரமித்து நிற்கிறான்]

**வர:** இல்லற நெறி வகுத்த தமிழ் முனியே, உன் நன்னெறிக் குரல் ஒலிக்கும் தமிழ் நாடுதானா இது?

**அறிவு—குரல்:** அந்தத் தீந்தமிழ்த் திருநாடு தான் இது! இல்லறத்தை நல்லறமென நடத்திக் காட்டி, அதை ஏட்டிலேயும் எழுதி வைத்த அந்தப் பேரறிஞன் வள்ளுவன் வாழ்ந்த செந்தமிழ் நாடுதானப்பா இது! வெறும் ஏடுகளால் மட்டும் மக்கள் திருந்தி விடுவார்கள் என்று எண்ணுகிறாயா? கேடு செய்யும் பொருளாதார மேடு பள்ளங்கள் சமமாக்கப் பட வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் எங்குமே இல்லா தொழிய வேண்டும். வாழ வகையற்றவன் வெறியனாகிறான். அவனிடம் நெறியை எதிர்பார்க்க முடியாது; கூடாது! மனிதனுக்கு முதல் தேவை அறநெறி நூல்களல்ல; எரியும் வயிற்றுக்குச் சோறு! கருத்தைக் கவர்ந்து களிப்பூட்டித் திருத்தும் காவியமல்ல; கட்டிக் கொள்ள வேட்டி! இன்பந் தரும் இலக்கியமல்ல; துன்பம் துடைக்கும் தொழில்! வாழ்வை வளமாக்கும் பண்பாடல்ல; இந்தப் பரந்த உலகிலே தனக்கெனத் தங்கியிருக்க ஒரு வீடு! பிறகுதான் நெறி வளர முடியும்; காவியம் மேவி வரும்; இலக்கியம் இன்பம் தரும்; பண்பாடு பரவி நிற்கும்!

**வர:** அதுவரையில் இம்மாதிரி அலங்கோலங்கள்தானா? சீச்சீச்சீ! (போகிறான்)

## — தெரு - வேருெரு பகுதி —

[தெருக்களில் கண்ட பல்வேறு காட்சிகளால் மனம் நொந்து போகிருன் வரதன். சோர்ந்து போய் ஒரு இடத்தில் உட்காருகிருன். அவன் இதயம் கொந் தளிக்கிறது]

*வரதன்:* சீச்சீச்சீ! எனக்கெதற்கு இந்தத் தலைவேதனை? சுகபோகமாக வாழவேண்டியவன் இந்த சோக நரகத்திலே மாள வேண்டுமென்று எனக்கென்ன தலைவிதியா? வெட்டிப் பயல் பேச்சைக் கேட்டதே முட்டாள்த்தனமாகி விட்டது. அதிகப்பிரசங்கி! மனதிலே அலைமோதச் செய்து, என்னையே அலங்கோலப்படுத்தி விட்டான்! சீச்சீச்சீ! எங்கு பார்த் தாலும் அழுகை – அவமதிப்பு – அனுச்சாரம் – அக்கிரமம் – அட்டூழியம்! காலிகளின் நடுவிலே நான் ஏன் இப்படிக் கண் கலங்கி நிற்கவேண்டும்? ம்....கூலிகளாம் கூலிகள்! அவர்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? எஜமானனுக வாழ வேண்டிய எனக்கெதற்கு இந்த எடு பிடி ஆள் வேஷம்?

*அறிவு – குரல்:* நீயாகத் தேடிக் கொண்டதுதானே இந்த வேஷம்! நீ நினைத்தால், நிமிஷத்தில் கலைத்துவிட முடியும். அடுத்த விநாடி நீ ஆள்பவன்! உன் ஆணைக்கு அடங்கி நடப் போர் ஆயிரக்கணக்கான பேர்! அதனுல்தான் அலுத்துக் கொள்கிருய். ஆனுல், கலைக்கமுடியாத இந்தக் கூலி வேஷத் துடனேயே பிறந்து, விடியும் காலம் வராதா என எண்ணி யெண்ணி ஏங்கி, மனம் இடிந்து மாள்வோர் எத்தனை பேர்! உன்னைப் போல் வேஷத்தைக் கலைத்துவிட அவர்களால் எண்ணியாவது பார்க்க முடியுமா?

*வர:* முடியாதுதான். அதனுல்தான் அவர்கள் மீது அதிகமாக இரக்கம் காட்டத் தயாராக இருக்கிறேன்.

*குரல்:* ம்.... இரக்கம்! அது ஒரு சில நிமிடங்களாவது நீடித்து நிற்குமா? அதிலும் சுற்றுச் சூழ்நிலைச் சூருவளிக் காற்ருல் அந்த இரக்க உணர்ச்சிகூட இருந்த இடம் தெரியாமல் பறந்துவிட இடமுண்டு என்பதையும் மறந்து விடாதே, வசந்தன்! இரக்கப்பட வேண்டிய அவசியம் எங்கெல்லாம் குறைவாக இருக்கிறதோ, அங்கெல்லாம் மக்களின் வாழ்வு வளம் பெற்றிருக்கிறது என்று அர்த்தம்!

*வர:* ஆமாம்! எல்லோரும் நன்ருக வாழும்போது யாருக்காக யார் இரக்கப் படுவது?

*குரல்:* அந்த நல்வாழ்வுக் கனவை நனவாக்கப் பாடுபடும் நல்லோரின் அடிச் சுவட்டிலே கால் வைத்துவிட்ட உனக்கு;

முதலில் துணிச்சல் வேண்டுமப்பா, துணிச்சல்! துணிந்து செய்யும் நற்பணிகள்தான் போற்றப்படுகின்றன.

**வர:** அதற்காக இத்தனை தொல்லைகளா? எதிர்ப்படும் காட்சிகளெல்லாம் என்னை அதிர்ச்சியடையச் செய்கின்றனவே! மனிதனல் சகிக்க முடியுமா?

**குரல்:** சகிப்பவன்தான் மனிதன்! நலிந்து வாடும் மக்களுக்கு நன்மை செய்ய முற்படுகிறவன், தன்னை நாடி வரும் எந்த நாசத்தையும் பொருட்படுத்த மாட்டான். இன்ப துன்பம் எதுவும் அவன் கருத்தைச் சிதைத்து விடாது! அப்பேர்ப்பட்ட நல்லவன் இருக்க வேண்டிய இடம் கோட்டைக்கு உள்ளே அல்ல; குடிசைகளுக்கு மத்தியிலே! கேளிக்கைக் கூடங்களில்ல; கூழுக்கு அழுது சாகும் குழந்தைகளுக்கு அருகிலே! உல்லாசக் காரில் அல்ல; உழைத்துண்ணும் உத்தமரில் ஒருவனுக! மடிப்புக் கலையாமல் உடுத்தி மகிழும் மகாப் பிரபுக்களின் மத்தியில் அல்ல வசந்தன்; மனிதராகப் பிறந்தும், மாக்களாக வதைகிறுர்களே, அந்த மக்களின் மத்தியில்தான் இருப்பான்!

**வர:** ஆம், அங்குதான் நானும் வந்திருக்கிறேன்.

**குரல்:** பின், நடுவில் தயங்கி நிற்பது—

**வர:** கோழைத்தனம்! நான் ஒருக்காலும் கோழையாக மாட்டேன்! (போகிருன்)

●

## காட்சி - 19

○

> சோமசுந்தரம் பங்களா — வசந்தன் வராததை எண்ணி வருத்தமடைந்தவனய், கோபால் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிருன் — அவனைத் தேடிக் கொண்டு செந்தாமரை அங்கு வருகிருள்.

**செந்:** சரித்தான், இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக்கிட்டு, நீ பாட்டுக்கு மூலையிலே குந்திக்கிட்டா, உங்க முதலாளி வந்து உன் முன்னலேயா குதிச்சிடுவாரு?

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? — நீ நேத்து வந்தவ!

**செந்:** ஆமா, முந்தா நாத்து வந்தவ. இதை ஒண்ணைக் கத்து வச்சிக்கிட்டே, வாய்க்கும் பேச்சுக்கும் ஓயாமேச் சொல்றதுக்கு. வேறே உனக்கு என்ன தெரியும்?

**கோபால்:** உனக்குத்தான் ரொம்பத் தெரிஞ்சி போச்சி? பேசாமேப் போயேன், உன் சோலியைப் பார்த்துக்கிட்டு.

**செங்:** சோலியைப் பார்க்கத்தானே இங்கே வந்திருக்கேன். சோறு போட்டு வச்சிருக்காம்; எழுந்திரிச்சிப் போயி சாப்பிடுவியாம்!

**கோபால்:** எனக்கு வேண்டாம்.

**செங்:** ஏன்?

**கோபால்:** இப்ப வேண்டாம்; பசிக்கலே!

**செங்:** பசிக்காமே எங்கே போச்சி?

**கோபால்:** பறந்து போச்சி.

**செங்:** ஜப்பானைப் பார்த்தா?

**கோபால்:** இல்லே, சண்டைக்கு நிக்கிற இந்தக் கொண்டைக்காரியைப் பார்த்து! பேசாமேப் போவாளில்லே; ஓயாமே தொண தொணன்னு பேசிக்கிட்டு.

**செங்:** ஏன், சகிக்கலையோ?

**கோபால்:** இல்லே, சந்தோஷமாயிருக்கு.

**செங்:** அப்பச்சரி, அழுதுக்கிட்டே இரு!

**கோபால்:** நான் அழுவேன், சிரிப்பேன். அதை யாருடீ உன்னைக் கேட்டா?

**செங்:** என்னை யாரு கேக்கச் சொன்னு? உன் வேலையை நீ பாரு. நானும் தலையிலே கையை வச்சிக்கிட்டு உன் கூடவே உக்காந்துக்கிடுறேன். இருக்கிற வேலே எப்படிப் போனு எனக்கென்ன?

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? — நீ நேத்து வந்தவ. எனக்கில்லே தெரியும் வருத்தம்.

**செங்:** நல்லாத் தெரிஞ்சுதா வருத்தம்? அஞ்சு வருஷமா அழுதுக்கிட்டா இருந்தே?

**கோபால்:** நான் ஏன் அழப்போறேன். அமெரிக்காவிலே படிக்கிருருன்னு பெருமைப் பட்டுகிட்டு இருந்தேன்.

**செங்:** பிறகென்ன, இனி ரெண்டு மாசந்தானே? நொடியிலே ஓடிப் போகுது.

**கோபால்:** போயிடும், போயிடும். இருந்தாலும் பார்க்கப் போறோம்னு ஆவலா இருந்துட்டு, 'டக்'குன்னு இந்த மாதிரி ஆயிட்டா—

**செங்:** 'டொக்'குன்னு போச்சாக்கும் உன் மனசு. சரித்தான் எழுந்திரு. சாப்பிட்டுப் போயி வேலையைப் பாரு!

**கோபால்:** (எழுந்து கொண்டே) ம்.... என்னமோ, எங்கே இருக்காரோ? என்ன பண்ருரோ?

**செங்:** ஆமா, அவரு பச்சைப் புள்ளே; இவரு வருத்தப் படுருரு. லோகமெல்லாம் பறக்கத் தெரிஞ்சவருக்கு எங்கே போனு என்ன? உன்னேச் சொல்லு; இந்த வீட்டை விட்டு வெளியிலே போனு திரும்பி வர வழி தெரியாமேத் திண்டாடுவே—

['கோபால்' என்று சோமசுந்தரம் கூப்பிடும் குரல் கேட்கிறது]

**கோபால்:** ஆங்.... பெரியவரு வந்துட்டாரு போலிருக்கே.

**சோம:** (வந்து கொண்டே) டே, கோபால்!

**கோபால்:** ஆங், இதோ வந்துட்டேன்.

**சோம:** (வந்து நின்று) சாப்பிட்டாச்சா?

**கோபால்:** சாப்பிடப் போறேன்.

**சோம:** ஏன், துரைகளுக்குத் தீரலேயோ?

**செங்:** (கிண்டலாக) இல்லீங்க, அவருக்குக் கண்ணேத் துடைச்சிக்கிட்டு உக்காந்திருக்கவே காலம் சரியாயிருக்கு. சாப்பிட எங்கே தீருது?

**சோம:** இவருக்கு ஏன் வருத்தம்? வசந்தன் ஜப்பானுக்குப் போய்ச் சேர்ந்தானு, இல்லேயா என்கிறதுக்கு இன்னும் தந்தி வந்து சேரலேயேன்னு நான் தவியாத் தவிச்சிக் கிட்டிருக்கேன். இதிலே நீ வேறே கண்ணேக் கசக்கணு மாக்கும்? சரித்தான் போயி சாப்பிடு! (போய்க்கொண்டே) வகைக் கெட்ட புள்ளே பெத்த எனக்கு இதுவும் வேணும்; இன்னும் வேணும்!

**கோபால்:** (சோமசுந்தரம் சென்றபின், செந்தாமரை யிடம்) பார்த்தியா, தகவலே வரலேயாம்!

**செங்:** அதெல்லாம் வரும்; வா!

**கோபால்:** மனசுலே சமாதானமில்லேயே!

**செங்:** லோகத்துக்கே சமாதானத்தைத் காணேமாம்; லோல்படுருங்க! இவரு மனசைப் போயி சொல்ல வந்துட்டாரு. சரித்தான் வா! (இருவரும் செல்கின்றனர்)

●

## காட்சி 20

○

இளங்கோ மில் நுழைவாயில்—காவல்காரனேப் பொருட்படுத்தாமல் மில்லுக்குள் நுழைய முற்படுகிருன்

வரதன். குனிந்து எதையோ படித்துக் கொண்டிருந்த காவல்காரன் வரதனைப் பார்த்து கோபத்துடன் எழுந்து அவனருகில் பாய்ந்து செல்லுகிறான்.

**காவல்:** ஏய், ஏய்! ஏது, இந்த மில்லுக்கு முதலாளி மாதிரி நீ பாட்டுக்குத் தாராளமா உள்ளே நுழையுறே! — ஏம்பா, என்ன சங்கதி! ம்.... (வரதனை ஏற இறங்கப் பார்த்து) உன் மனசுலே என்னான்னு நினைச்சிக்கிட்டே? இல்லே நான் தெரியாமத்தான் கேக்கிறேன். இங்கொருத்தன் குத்துக் கல்லு மாதிரி உக்கார்ந்திருக்கிறது உன் கண்ணுலே படலே?

**வர:** படுது.

**காவல்:** பட்டா, கேக்கிறதுக்கு என்னவாம்?

**வர:** என்ன கேக்கணும்?

**காவல்:** அட, இவன் யாருடா இவன்? பெரிய மகாராஜா மாதிரி பேசிக்கிட்டிருக்கான். ஆளை பார்த்தா கூலிக்காரன்; பேச்சைப் பார்த்தா சீமான் போலே! ம்.... இந்த ஜம்பத்துக்கு வேறே கொறைச்சலா? காலம்தான் கலிகாலமாச்சே!

**வர:** எல்லாம் நல்ல காலந்தான். இப்போ நான் என்ன கேக்கணும்?

**காவல்:** எடுத்து வேறே விளக்கணுமோ?

**வர:** வேண்டாம், சும்மா சொல்லுங்க.

**காவல்:** அப்படிக் கேளேன் மரியாதையா! உள்ளே போகணும்ன்னு, என்னைக் கேட்டு, நான் 'சரி, போ'ன்னு சொன்னுத்தான் போகணும். தெரிஞ்சதா?

**வர:** தெரிஞ்சது. இப்ப நான் உள்ளே போகணும்.

**காவல்:** எதுக்கு?

**வர:** மானேஜரைப் பார்க்க.

**காவல்:** பார்த்து என்னத்தைப் புரட்டப் போறே?

**வர:** ஏதாவது வேலே கேக்கப் போறேன்.

**காவல்:** அடடே! பெரிய அசிட்டேண்டு மானேஜர் வேலே கேக்கப் போருர்டோய்! சரித்தான் போப்பா, வந்த வழியைப் பார்த்துக்கிட்டு. வேலே கேக்கப் போருனுமில்லே வேலே! வேலே என்ன இங்கே கொட்டியா வச்சிருக்கு? இருக்கிற ஜனமே பிழைக்கிறதுக்கும் இல்லாமே, சாகிறதுக்கும் இல்லாமே கிடந்து திண்டாடுது. இதிலே, இவர் வேறே வந்துட்டாரு, வேலே கெடைக்குமான்னு கேக்க!

**வர:** கொஞ்சம் சீறி விழாமேப் பேசக்கூடாதா?

**காவல்:** ஏன், உன்னைப் பார்த்துக் கொஞ்சணுமோ? சரித் தான் போ, போ! வேலே இல்லேண்ணு போயேன்!

**வர:** உங்களைப் போல நான்; என்னைப் போல நீங்க. ரெண்டு பேரும் ஒண்ணு - ஏழைகள்; கூலிகள்.

**காவல்:** ஏதுடாப்பா, உறவு முறை கொண்டாட வந்துட்டே?

**வர:** ஏழைக்கு ஏழைதானே உறவு. கூலிக்கு கூலிதானே ஆதரவு காட்டி அன்போடு பேசணும்.

**காவல்:** (சிறிது யோசித்து) ம்.... ஏன் தம்பி, அப்ப நான் அன்போடு பேசலேன்னு சொல்றயா?

**வர:** அப்படிச் சொல்வேனு?

**காவல்:** அதுதானே பார்த்தேன். ஏண்ணு, நான் எப்பவும் அன்பா, ஆதரவா பேசுற மனுசன்தான். ஆனு, எப்பவாவது ஏகதேசம் கொஞ்சம் தாட் பூட் ரோட்டுன்னு ஆரம்பிச்சிடுவேன்; அவ்வளவுதான். அதுக்கெல்லாம் கோவிச்சிக்கிடாதே தம்பி, கோவிச்சிக்கிடாதே!

**வர:** அதெல்லாம் ஒண்ணுமில்லே.

**காவல்:** ஏன் தம்பி, உனக்குச் சொந்த ஊரு இது இல்லியோ?

**வர:** இல்லே, அயலூரு.

**காவல்:** அதுதானே கேட்டேன். ஏதுடாப்பா, இவ்வளவு தூரம் நெஞ்சு துணிஞ்சி, இங்கே வந்து வேலே கேக்க வந்துட்டயேன்னு நான் அப்பவே நினேச்சேன்.

**வர:** ஏன், இங்கே வேலே கிடைக்காதா?

**காவல்:** கிடைக்கும், கிடைக்கும்! ஏன் கிடைக்காது? முதல்லே இங்கே இருக்கிற மானேஜர் கிட்டே முகங் கொடுத்துப் பேசி முழுசாத் திரும்பி வரணுமே; அதைச் சொல்லு! (மெதுவாக, ஆனுல் அழுத்தமாக) மூர்க்கன்!

**வர:** ஊம்!... அவ்வளவு கோபக்காரரா?

**காவல்:** லேசாச் சொல்லிட்டியே! கொஞ்சப் பேருக்கு மூக்குக்கு மேலே கோபம் வரும்னு சொல்வாங்க. ஆனு, இந்த மானேஜர் ஐயாவுக்கு கால் சட்டை ஜோபிக்குள்ளே தான் கோபம் — அப்படியே கொந்தளிச்சிக்கிட்டு நிக்கும்! அதுக்குள்ளே கையைப் போட்டுத் திணிச்சி (நடிப்புடன்) அப்படி ஒரு பார்வை பார்த்துட்டாரோ, அவ்வளவுதான்! யார் தலேக்குக் கொள்ளியோ? எவன் கையிலே சட்டியோ?

எந்தக் குடும்பத்து வாயிலே மண்ணே? சொல்றதுக்கு இல்லே! (வரதன் சிந்தனையுடன் மௌனமாக நிற்கிறன்) என்ன தம்பி பேசலே?

**வர:** ம்....ஒண்ணுமில்லே. வந்து....முதலாளி....

**காவல்:** இருக்காரு, இருக்காரு! இருந்து என்ன பண்ண தம்பி? அவரைத்தான் சொக்குப்பொடி போட்டு மயக்கி, நல்லா கொக்குப் பிடிச்சி வச்சிருக்கானே, இந்தக் காக்கா பிடிக்கிற பய! இவன் இந்த மில்லுக்குள்ளே வந்து உக்காந்து வருசம் மூணுச்சு! மில்லே கிடுகலங்கிப் போயித்தான் நிக்குது! என்ன பண்றது? சீமையிலிருந்து வரப்போற சின்ன முதலாளி வந்தாலும் ஏதாவது விமோசனம் ஆகா தான்னு பார்த்தா, அவர் பாட்டுக்கு ஜப்பானுக்கோ, ரங்கோனுக்கோ பறந்துட்டாராம்! ம்... அவங்களுக்கென்ன தம்பி சொல்லு, முதலாளிமார்கள்! எங்கே வேண்டுமானலும் போவாங்க. உன்னையும் என்னையும் சொல்லு; உன் கஷ்டம் எனக்குத் தெரியும்; என் கஷ்டம் உனக்குத் தெரியும். அவங்களுக்குத் தெரியுமா?

**வர:** தெரியாதுதான்! (பெருமூச்சு — சிந்தனை)

**காவல்:** பின்னே போட்டுப் பேசுறயே! (கார் ஹார்ன் சத்தம் கேட்க, திடுக்கிட்டு) தம்பி, தம்பீ! கொஞ்சம் விலகி நில்லு, ஒரு ஓரமா! காக்கா வருது, காக்கா! (அவசரம் அவசரமாக கதவுகளை நன்ருகத் திறந்து விட்டு நிமிர்ந்து நிற்கிறன்)

**வர:** (சந்தேகத்துடன்) காக்காவா?

**காவல்:** ஆமா, தம்பி! கொஞ்சம் ஓரமாப் போயி நில்லு. மேலே விழுந்து பிடுங்கினலும் பிடுங்கும்!

[மானேஜர் பாலு, காரிலிருந்து இறங்கி வருகிறன். 'கேட்'டோரம் நிற்கும் வரதனை ஓரக்கண்ணுல் அலட்சியமாகக் கவனித்து, 'டக்'கென்று நின்று, காவல்காரனை முறைத்துப் பார்க்கிறன். காவல்காரன் கலங்குகிறன்]

**பாலு:** யாருடா அவன் தடிப்பய; கேட்டுக்கு நடுவிலே நட்டமா நிக்கிறவன்?

**காவல்:** (பயத்துடன்) வந்துங்க.... வந்து.... (வரதனிடம்) நீ போப்பா! நான் அப்பவே சொல்லலே, இங்கே வேலை ஒண்ணும் காலி இல்லேன்னு.

**பாலு:** டேய்! கழுதையை விரட்டி அடிக்கிறதை விட்டுட்டு அவன்கூட என்னடா விவகாரம்? தடியன்! தரித்திரம் பிடிச்ச

சனியன்களைக் கொண்டாந்து வாசல்லே நிக்க வச்சுட்டு.... மடையன்! (மில்லுக்குள் செல்லுகிறான்)

[வரதனுக்குக் கோபம் பொங்குகிறது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு நிற்கிறான். காவல்காரன் கதவுகளைச் சாத்திவிட்டு, வரதன் அருகில் வருகிறான்]

**காவல்:** பாத்தியா தம்பி, பாத்தியா?

**வர:** இவன் தான்....

**காவல்:** மானேஜர்!

**வர:** மடையன்!

**காவல்:** மாசம் ஆயிரம் ரூபா வாங்குறான் தம்பி. மடையனா அவன்? மமதை பிடிச்சவன்!

**வர.** மண்டையிலடிச்சி....

**காவல்:** விரட்டுகிறது யாரு? ஏன் தம்பி, நீ என்னமோ அன்பா, ஆதரவாப் பேசணும் சொன்னியே, அதெல்லாம் இந்த இடத்துக்குத் தோதுப்பட்டு வருமா? அவன் எங்கமேலே சீறி விழுந்தா, நாங்க வர்றவங்க மேலே பாய வேண்டியிருக்கு. என்ன பண்றது? கோபத்துக்குப் போக்கிடம் வேணும் பாரு! (வரதன் சிந்தனையில் மூழ்கியவனாய் பேசாது நிற்க) என்ன தம்பி பேசாமே நிக்கிறே? என் மேலே கோபமா?

**வர:** ம்....இல்லே, இல்லே! நான் இவன் கிட்டே போயி....

**காவல்:** சண்டை போடப் போறியா?

**வர:** வேலை கேக்கப் போறேன்.

**காவல்:** சரித்தான் போ! இன்னும் வேலை கிடைக்கும் என்கிற ஆசை போகலே!

**வர:** இல்லே, அவனைக் கொஞ்சம் நேரிலே பார்த்து—

**காவல்:** ஊம்! உன்னைச் சொல்லிக் குத்தமில்லே. கூலிக்காரங்க மானம் மரியாதையைப் பார்த்தா முடியுதா? அடிச்சாலும், உதைச்சாலும் ஐயான்னு காலைப் பிடிச்சிக் கெஞ்சிக் கூத்தாடினாத்தானே கஞ்சி குடிக்கலாம். என்ன பண்றது? ம்....நம்மளை இப்படிப் படைச்சிருக்கான்; அவங்களை அப்படிப் படைச்சிருக்கான்!

**வர:** படைச்சவனை நொந்து என்ன செய்ய? பிறக்கும் போது சொத்தைச் சுமந்து கொண்டு பிறந்த குழந்தையுமில்லை. ஆவி பிரியும் போது அள்ளிக் கொண்டு போனவனும் கிடையாது. ஆண்டியாகப் பிறந்து ஆண்டி

யாகச் சாகிறோம். நடுவிலே நாம் செய்ற அக்கிரமங்களுக்கு நாம்தானே பொறுப்பு! ஆண்டவனா?

**காவல்:** அதென்னமோ நிசந்தான். இருந்தாலும் தம்பி, அக்கிரமம் செய்றவங்களுக்குத் தானே இப்போ காலமா யிருக்கு!

**வர:** அந்தக் காலமெல்லாம் மலையேறும் காலம் வரும்; வராமேப் போகாது!

**காவல்:** ஊம்....அந்த நம்பிக்கையாவது நமக்கிருக்கே!

**வர:** அப்போ, நான் உள்ளே போயி பார்த்துட்டு வரட்டுமா?

**காவல்:** உன் பிரியம். நான் கெடுப்பானேன்? இந்த மூர்க்கன் கிட்டே நாலு பேச்சு வாங்குவானேன்னுதான் யோசிக்கிறேன்.

**வர:** அதைப் பத்திப் பரவாயில்லே. சாக்கடையைச் சுத்தம் செய்யப் போனா, நாத்தத்தைப் பார்த்தா முடியுமா?

**காவல்:** அப்போ உன் பிரியம்! — தம்பி, எதுக்கும் கொஞ்சம் எட்ட நிண்ணே பேசு!

**வர:** சரி.

**காவல்:** ஆங், மறந்துடப் போறே.

**வர:** இல்லே, இல்லே! (செல்லுகிறான்)

●

## காட்சி 21

O

இளங்கோ மில்லுக்குள் பாலுவின் அறை — கையில் சிறிதளவு பஞ்சைப் பிடித்து பரிசோசித்தபடியே, சீட்டி யடித்துக் கொண்டு அறைக்குள் நுழைகிறான், பாலு. அங்கு கோகிலம் உட்கார்ந்திருப்பது கண்டு அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது போலிருக்கிறது.

**பாலு:** அட, கோகிலம்!

**கோகிலம்:** (அலட்சியத்துடன்) ஏன்?

**பாலு:** நீ எப்போ வந்தே?

**கோகி:** அரைமணி நேரமாச்சு.

**பாலு:** ஐயய்யோ! யாராவ்து பார்த்தால்!

**கோகி:** எதுவும் நினைக்க எதுவுமே இல்லே! உங்க கல்வரத்தை ஒரு நில்வரத்துக்குக் கொண்டு வந்து அப்படிக்

கொஞ்சம் உக்காருங்க. எல்லாம் கணக்காத்தான் வந்திருக்கேன்.

**பாலு:** (உட்கார்ந்தவாறு) என்ன கணக்கோ போ! ஒரு நாளுமில்லாதபடி நெஞ்சு துணிஞ்சி நேரா இங்கேயே வந்துட்டயே! அதில்லே எனக்கு பயமாயிருக்கு.

[இந்நேரம் வேலை கேட்க வந்த வரதன், அறைக்கு வெளியே நின்று, உள்ளே பேச்சுக் குரல் கேட்பதைக் கவனிக்கிருன்]

**கோகி:** நீங்க இப்படி பயந்து நடுங்குவதை யாராவது பார்த்தாத்தான் ஆபத்து! நம்ம குட்டு வெட்ட வெளிச்ச மாயிடும்.

**பாலு:** என்ன கோகிலம் இது, சிறு பிள்ளைத்தனமாப் பேசுறே? இங்கே எத்தனை பேரு நம்மைக் கவனிப்பாங்க தெரியுமா? அத்தனை பேரு கண்ணுலேயும்—

**கோகி:** மண்ணைத் தூவிட்டுத்தான் வந்திருக்கேன். இப்போ, நான் எதுக்கு இங்கே வந்திருக்கேன், தெரியுமோ?

**பாலு:** அது தெரியாமல்தானே முழிக்கிறேன்.

**கோகி:** தந்தி வந்திருக்கான்னு எங்கப்பா பார்த்துட்டு வரச் சொன்னாரு.

**பாலு:** தந்தியா?

**கோகி:** அதுதான் ஜப்பான் தந்தி — எனது எதிர்கால வாழ்க்கைத் துணைவர்....

**பாலு:** ஓகோகோ, வசந்தன் கிட்டேயிருந்தா! அதுக்கு உன்னையா அனுப்பினாரு?

**கோகி:** அவராவது, அனுப்பவாவது? நானுத்தான் சொன்னேன், போயிப் பார்த்துட்டு வர்றேன்னு. அவருக்கு ஒரே மகிழ்ச்சி — நம்ம பெண்ணுக்கு வசந்தன் மேலே இவ்வளவு ஆசை இருக்கேன்னு. எனக்கு ஒரே கொண்டாட்டம்!

**பாலு:** ஆங்! வசந்தன் தந்தியை வரவேற்கிறதிலே?

**கோகி:** அட நீங்க ஒண்ணு! அது எப்போ வந்தா எனக்கென்ன? இந்த சாக்கிலே உங்ககூட கொஞ்சம் நேரம் ஆனந்தமா அறட்டை அடிக்கலாம் பாருங்க!

**பாலு:** அதுக்குத்தான் மாலைநேரம் - மறைவான இடம் - பூங்கா - போக்குவரத்து—

**கோகி:** இருக்கு. இருந்தாலும் இண்ணைக்கு என்னமோ என் மனசு ஒண்ணும் சரியா இல்லே. பொழுது போறதுக்கும் வகை இல்லே. பிறகுதான் இப்படி ஒரு வழி இருக்குன்னு கண்டு பிடிச்சேன்.

**பாலு:** தந்தி வருதான்னு பார்க்கிற வழி?

**கோகி:** சரியான வழிதானே? இனி சந்தேகப்படுறது யாரு?

**பாலு:** தெருவிலே போற திருட்டு நாய்கூட நம்மைத் திரும்பிப் பார்க்காது! திருமழிசையைக் குழைச்சித்தான் தீட்டிட்டயே!

**கோகி:** எல்லாம், உங்கள் ஆசீர்வாதம்!

**பாலு:** (கோகிலத்தின் தோள்களைப் பிடித்துக் கொஞ்சுதலோடு ஆட்டியவாறு) சரியான சாமர்த்தியக்காரி!

**கோகி:** உஸ்.... யாராவது பார்க்கப் போறுங்க.

[பாலுவின் பார்வை 'சடக்'கென்று வாசல் பக்கம் திரும்புகிறது. அங்கே தள்ளு கதவுகளுக்கு அப்பால் ஒரு ஆள் நிற்பது தெரிகிறது. திடுக்கிட்டவனுய், கோகிலத்தைத் தனி அறைக்குப் போகும்படி சைகை காட்ட, அவள் பரபரப்புடன் சென்று மறைகிருள்]

**பாலு:** (கடூரமாக) யாருடா அவன், தடிப்பய?

[வெளியில் நிற்கும் வரதனின் உள்ளம் கொதிக்கிறது· அதோடு கோகிலத்தைக் கட்டிக் கொண்டு படுகுழியில் விழாமல் தப்பினேமே என்று மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிருன். அந்த வெற்றிக் களிப்பு, கொந்தளிக்கும அவனை விபரீதமாக நடந்து விடாமல் தடுத்து அமைதியுறச் செய்கிறது. பாலுவின் குரல் கேட்டு கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வருகின் வரதன்.]

**வரதன்:** நான் தான்!

**பாலு:** அட, பெரிய மில் முதலாளி! நான்தான்னு வந்து நட்டமா நிண்ணு, நான் தெரிஞ்சிக்கிடுவேன் பாரு! யாருடா நீ? எங்கே வந்தே?

**வர:** கூலி!

**பாலு:** (அருவெறுப்புடன், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு) தெருவிலே போயி நில்லு! மூட்டை கிட்டை தூக்கலாம்!

**வர:** அதை இங்கே செய்யலாம்ன்னு வந்தேன்.

**பாலு:** (எரிச்சலுடன்) உங்க அப்பன் வீட்டு மில்லு பாரு! செய்யலாம்ன்னு வந்தாராமில்லே, செய்யலாம்ன்னு! (மணியடித்து) டேய் மடையா! — செச்சே! பெரிய நியூஸன்ஸாப் போச்சே! மனுசனை நிம்மதியா வேலை செய்ய விடுறுங்களா? வெட்டிப் பசங்க!

[தன்னையும் மீறி பொங்கி எழும் கோபத்தை அடக்கிக் கொண்டு நிற்கிருன் வரதன். இந்நேரம் காப்பித்

தட்டுடன் உள்ளே நுழைந்த ஆபீஸ் பையன், அங்குள்ள சூழ்நிலையைக் கண்டு நடுநடுங்கி நிற்கிறான்]

*பாலு:* ஏண்டா, நீங்களெல்லாம் இருக்கிறீங்களா; இல்லே, செத்து ஒழிஞ்சி நாசமாப் போயிட்டீங்களா?

*பையன்:* (காப்பித்தட்டை சிறிது உயர்த்திப் பிடித்துக் காட்டி — நடுங்கியவாறு) அம்மா... காபி....

*பாலு:* (பல்லைக் கடித்துக்கொண்டு) ஷட்டப்! இவனை யாருடா உள்ளே விட்டது?

*வர:* நானாகத்தான் வந்தேன்.

*பாலு:* மூடுவாயை! (பையனிடம்) எந்தப் பயடா விட்டது இவனை? சொல்லுடா! ஏண்டா நிக்கிறே? தடிக்கழுதை!

*பையன்:* அம்மா.... காபி....

*பாலு:* ஷட்டப்! ராஸ்கல்! முதல்லே இவன் கழுத்தைப் பிடிச்சி 'கேட்'டுக்கு வெளியிலே கொண்டுபோயித் தள்ளுடா, தடிக்கழுதை! — ஆபீசா, லட்சணமா!.... மடப்பசங்க— முதல்லே மரியாதையோடே நிக்கத் தெரியுதாடா இந்த அனாதைப் பயலுக்கு? கல்தாக் கொடுத்துத் தள்ளுடா தடி முண்டம்! (வேகமாக தனி அறைக்குள் செல்லுகிறான்.)

*பையன்:* ஐயா, போங்கய்யா, கொஞ்சம் போயிடுங் கய்யா!

[வரதன் அந்தத் தனி அறைக்குள் பாய்ந்து செல்ல முற்படுகிறான். பையன் பயப்பிராந்தியுடன் அவனைத் தடுத்தவாறு, 'ஒன்றும் வேண்டாம், போய்விடுங்கள்' என்பதாக சைகை காட்டிக் கும்பிட்டுக் கெஞ்சுகிறான். பையனைக் கண்ட வரதன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் சரேலென்று வெளியேறுகிறான். பையன் அவனைப் பின்தொடருகிறான்]

●

## காட்சி 22

○

பாலுவின் அறையை விட்டு வெளியேறிய வரதன், கொந்தளிக்கும் உள்ளத்தில் குழப்பமான சிந்தனைகள் அலைமோத சிறிது நடப்பதும் நிற்பதுமாகச் செல்கிறான். இதைக்கண்ட ஆபீஸ் பையனுக்கு, வரதன் திரும்பவும் ஆபீசுக்குள் வந்து விடுவானோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே அவனைக் கவனித்தவாறு தயங்கித் தயங்கி நிற்கிறான்.

**வரதன் :** மானத்தோடு வாழப் பிறந்தவன் மனிதன் என்ற உணர்ச்சியே சிறிதுமில்லாத மிருகம் !

**காவல்காரன் குரல் :** கூலிக்காரங்க மானம் மரியாதையைப் பார்த்தா முடியுதா? அடிச்சாலும் உதைச்சாலும் ஐயான்னு காலைப் பிடிச்சிக் கெஞ்சிக் கூத்தாடினுத்தானே கஞ்சி குடிக்கலாம்!

**வர :** கூலி! அவன்தான் மனிதருள் மாணிக்கம்! வேலை செய்து பிழைப்பவனே தவிர, வேதனை தரும் திட்டு வாங்கப் பிறந்தவனல்ல! உழைத்துப் பிழைக்கும் உத்தமன்; உழைப்பவனை ஏசி மிரட்டி, ஏமாற்றிப் பறித்து உல்லாசமாக வாழும் உன்மத்தனல்ல! இது தெரியாதவன் முட்டாள், மூர்க்கன், கல்நெஞ்சன், காட்டுமிராண்டி!

**அறிவு – குரல் :** அந்தக் காட்டு மிராண்டியை ஒழித்துக் கட்ட முடியும் உன்னுல்—ஒரு நொடியில்! நீ நினைத்தால் போதும்; அந்தக் கல்நெஞ்ச வஞ்சகனைக் கல்தாக் கொடுத்தனுப்பும் அதிகாரம் உன்னைத் தேடி வரும்! ஆனுல் அவனே, உன் சொத்தையே தின்று கொழுத்து உனக்கே இழுக்கைத் தேடுகிருன்—பழிகாரப் படுபாவி!—கோகிலம் உனக்காகக் காத்திருக்கும் கல்யாணப் பெண் – நீயும் கருதியிருந்தாய்; இங்குள்ளோரும் எழுதியிருந்தனர்! காதல் கனிரசம் சொட்டச் சொட்டக் கடிதங்களை எழுதி எழுதிக் குவித்த அந்தச் செல்வச் சிங்காரியை நீ நேரிலே கண்டபோதுதான், அவள் கன்னியல்ல, கள்ளி என்பது உனக்குத் தெரிந்தது!ம்... காதல் அங்கே, கல்யாணம் இங்கே! அடுக்குமா இந்த அநீதி?

**வர :** அடுக்காது! அடுக்கவே அடுக்காது! இப்போதே சென்று ஒடுக்கியே தீருவேன்!

> [ஆபீஸ் அறையை நோக்கித் திரும்பி வேகமாக நடக்கிருன் வரதன். அவனைக் கவனித்துக் கொண்டிருந்த பையன் பாய்ந்து வந்து இடைமறிக்கிருன்]

**பையன் :** ஐயா, ஐயா! தயவு செய்து போயிடுங்கய்யா! அவன் அப்படித்தான் பேசுவான். ஈவு இரக்கமற்ற கொடும் பாவி!—நான் ஏழை; எங்கப்பா நோயாளி; அம்மா இல்லே; கூடப் பிறந்த தம்பிமாரு ரெண்டு பேரு. இத்தனை பேரையும் காப்பாத்துறது நான் ஒருத்தன்தானய்யா! என் சம்பளப் பணத்தை நம்பித்தான் அவங்களெல்லாம் பிழைக்க வேண்டியிருக்கு. இப்ப நீங்க அங்கே போனு, ஏண்டா உள்ளே விட்டேன்னு என்னை வேலையிலிருந்து தள்ளிவிடுவாங்கய்யா? என்னைக் காப்பாத்துங்க. உங்களுக்குப் புண்ணியமாப்

போகுது. போங்கய்யா. வறுமையிலே வாடுற நமக்கெல்லாம் பொறுமை அதிகம் வேணுமய்யா, பொறுமை வேணும் !

*வர :* (கருணை பொங்க) சரி, நீ போ ; நான் போறேன்.

*பையன் :* ஆமய்யா. போயிடுங்க. அந்த மிருகத்துக்கிட்டே நமக்கெதுக்கு தகராறு ? இன்னும் ரெண்டு மாசம் கழிச்சி வாங்க. சீமைக்குப்போன சின்ன முதலாளி வந்துடுவாரு. பிறகு வேலை கிடைச்சாலும் கிடைக்கும். இப்ப போயிடுங்க. நீங்க நல்லவங்களா இருக்கீங்க. போங்கய்யா !

*வர :* (தன்னையுமறியாமல் புன்முறுவல் செய்து) சரி, நீ போ ! (திரும்பி நடக்கிறான்—பையன் செல்லுகிறான்)

*மனப்புயல் – குரல் :* பையனின் பரிதாபத்தைக் கண்டா திரும்பிவிட்டாய் ! பைத்தியக்காரன்தான் போ ! வேலை வேண்டி கை கட்டி நிற்க வேண்டிய கூலிக்காரனா நீ ? அல்ல ; குபேரன் ! வெறியனை விரட்ட முடியும். இந்தச் சிறுவனை உன் பக்கத்திலே அமரும் அந்தரங்கக் காரியதரிசியாகக்கூட ஆக்க முடியும். அந்த அதிகாரம் உன் கையில் ! ஆமாம், இந்த மில்லுக்கே சொந்தக்காரனான உன் கையில் !

*வர :* ஆம், என் கையில் ! (மீண்டும் ஆபீஸ் நோக்கித் திரும்புகிறான்)

*குரல் :* இருந்தாலும் இவ்வளவு அவசரப்பட வேண்டியது அவசியந்தானா ? மாறுவேடத்தில் வந்ததால்தான் உன் மணப் பெண்ணின் குணச் சித்திர விளக்கத்தைக் காண முடிந்தது. படுகுழியில் விழ இருந்த நீ பத்திரமாகத் தப்பினாய். இன்னும் நீ பார்க்க வேண்டியவை – அனுபவித்து அறிய வேண்டியவை எத்தனை எத்தனையோ ? சகிப்புத் தன்மை இருந்தால்தான் உலக வாழ்வின் சாதக பாதகங்களை அறிய முடியும்.

*வர :* ஆம் ! அவசரப்பட்டு ஆவதென்ன ? இன்னும் இரண்டு மாதங்கள் ! பொறுத்தார் பூமி ஆள்வார். இது பொன்மொழி ! (போகிறான்)

●

## காட்சி 23

○

சோமசுந்தரம், தமது பங்களாவில் ஆழ்ந்த சிந்தனையுடனும் கவலையுடனும் கண்களை மூடியவாறு, நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்திருக்கிறார். பாலு வருகிறான்.

*பாலு :* (வந்து நின்று) வணக்கம்.

**சோமசுந்தரம்:** (சிந்தனையிலிருந்து மீண்டு) வாங்க.

**பாலு:** (வினயத்துடன்) அவசரமாக் கூப்பிட்டீங்களாம்!

**சோம:** ஆமா, உக்காருங்க! ம்... வந்து... ஏதோ வேலை நிறுத்தம் செய்யப் போறதாகவே முடிவு செய்திட்டாங்களாமே?

**பாலு:** (உட்கார்ந்தவாறு) அதெல்லாம் சும்மா, ஒரு ஒப்புக்கு! போராட்டம்ணு எழுதிக் காட்டி நம்மை மிரட்டப் பார்க்கிறாங்க. இந்தக் காலத்திலே பாருங்க, காகிதத்திலே தீர்மானம் போடுறவங்கதான் பெருத்துப் போனாங்களே தவிர, காரியத்திலே நிறைவேற்றுகிற கர்ம வீரர்கள் எங்கே இருக்காங்க? தேடித்தானே கண்டு பிடிக்க வேண்டியிருக்கு!

**சோம:** ஒரு வேளை காரியத்திலே எறங்கிட்டா?

**பாலு:** நாம கொஞ்சம் இறுக்கமா இருந்தாத் தீர்ந்தது! தானா எறங்கி வந்து கெஞ்சுவாங்க.

**சோம:** ம்... இருக்கிற கவலை போதாதுன்னு இது வேறே தொல்லை எதுக்குன்னுதான் யோசிக்கிறேன்.

**பாலு:** உங்களுக்கு ஒரு தொல்லையும் இருக்காது. இந்த விவகாரத்திலே, என்னென்ன, எப்படி எப்படியெல்லாம் செய்யணுமோ அப்படியெல்லாம் செய்து முடிச்சிட்டேன். விபரீதமா எதுவும் நடக்காது—நடக்க விடமாட்டேன்! எல்லாம் உங்க ஆசீர்வாதம்!

**சோம:** (யோசித்தவாறு) ம்... அப்படியா சொல்றீங்க?

**பாலு:** ஆணித்தரமாவில்லே சொல்றேன்! ஏன்னு கேட்கிறீங்களா? முதல்லே வேலை நிறுத்தம் தலை காட்டாமேத் தடுக்கிறதுக்கு ஒரு தினுசான ஏற்பாடு. சரி, நாம தடுக்கிறதையும் தட்டிட்டுக் கிளம்பிட்டா, அதை மட்டந்தட்ட இன்னொரு தினுசான திட்டம். இப்படி நான் தீவிரமாத்தான் போய்க்கிட்டே இருக்கிறேன். நீங்க நிம்மதியா இருக்கணும். அதுதான் என் ஆசை.

**சோம:** என்னமோ போங்க! ஜப்பானுக்குப் போன வசந்தன் கிட்டேயிருந்து ஒரு தகவலையும் காணோம்! மனசு படுற வேதனையோ சொல்லி முடியாது!

**பாலு:** என்னாலே நிம்மதியா வேலை செய்ய முடியுதுன்னு நினைக்கிறீங்களா?

**சோம:** எப்படி முடியும்? ஒரு சேதி வந்தாவில்லே யாருக்கும் ஒரு தைரியம் ஏற்படும். இந்த லட்சணத்திலே தொழிலாளிகள் வேறே போர்க்களத்திலே எறங்கிட்டா—

**கோபால்:** (வந்துகொண்டே சலிப்புடன் தனக்குத்தானே) வெளியிலே தலை காட்ட யோக்கியதை இல்லை!

**சோம:** டேய், என்னடா அது?

**கோபால்:** (அருகில் வந்து) பிறகு என்னங்க முதலாளி, வெளியிலே போனும்; நிம்மதியா வீடு வந்து சேர்ந் தோம்ன்னு இருக்கா?

**சோம:** இப்போ உன்னை யாரு என்ன செய்தாங்க?

**கோபால்:** நினைச்சவன், நினைச்சதைப் பேசுறான். பொறுக்க முடியாமே என் மனசு கிடந்து துடிச்சிப் போகுது!

**பாலு:** உன் வாய் நீண்டிருக்கும். அதுக்கு யாரு என்ன பண்றது?

**கோபால்:** (எரிச்சலுடன்) கண்டு பிடிச்சீங்களே, காரணத்தை! இப்படித்தான் இருக்கும், எல்லாம்.

**சோம:** டேய், இப்போ நீ என்னடா சொல்றே?

**கோபால்:** போனஸ் பணத்தைக் கொடுக்க உத்தரவு போடுங்க முதலாளி. இல்லே, நான் உண்ணுவிரதம் இருக்கப் போறேன் – சாகிற வரையிலே!

**பாலு:** இந்தாப்பா—

**கோபால்:** (எரிச்சலை அடக்கிக் கொண்டு) ஐயா, நீங்க கொஞ்சம் சும்மா இருங்க. பாடுபடுறவன் வயித்தெரிச்சலைக் கொட்டிகிடுறது பாவம். அது சும்மா விடாது!

**பாலு:** அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். நீ ஏன் அனுவசியமா அலட்டிக்கிடுறே?

**கோபால்:** எல்லாம் அவசியமாத்தான்! உங்களுக்கென்ன காரிலே போயி காரிலே வர்றவங்க. என்னைப் போலே நடந்து போயி நடந்து வந்தாவில்லே நாலு பேரு பேசுற நல்லது பொல்லது தெரியும்!

**சோம:** கோபால், நீ போ உள்ளே! போ!

**கோபால்:** போறேன். நீங்க மட்டும் கொஞ்சம் கேட்பார் பேச்சைக் கேட்காமே...

**சோம:** எல்லாம் எனக்குத் தெரியும். நீ போ உள்ளே!

**பாலு:** (கோபால் சென்றபின்) அதிகப் பிரசங்கி! முதலாளி என்கிற பயம்—

**சோம:** விட்டுத்தள்ளுங்க, வெகுளிப்பய.

**பாலு:** என்ன இருந்தாலும் இப்படிப் பேசுறது...

**சோம:** சரின்னுதான் எனக்குப் படுது. ஆகையினுலே நீங்க மில்லுக்குப் போயி, பொங்கலுக்குப் போனஸ்

கொடுக்கப் படும்ன்னு ஒரு அறிக்கை எழுதி நோட்டீஸ் போர்டுலே போடுங்க. வசந்தன் வராத வருத்தம் போதா துன்னு இதுவேறே வேதனை எதுக்கு?

*பாலு:* வந்துங்க...

*சோம:* (எழுந்து) ஒண்ணும் வேண்டாம். நான் சொல்ற படி செய்யுங்க! (போகிறார்)

*பாலு:* (சோமசுந்தரம் சென்றபின்) தாராளமாச் செய் றேன். எனக்கென்ன? என் கையை விட்டா கொடுக்கப் போறேன்? முதலாளிக்குத் தகுந்தபடியா தாளம் போட்டுப் பழகிய எனக்கு, இப்போ தாளம்தான் கொஞ்சம் தவறிப் போச்சு. போனுப் போகுது! இதனாலே என் கைக்கு, கூட ஒரு ஐநூறு வந்திருக்கும்; வரல்லே! போனுப் போகுது!

●

## காட்சி 24

○

சோமசுந்தரம் பங்களாவில் பின்கட்டு — கோபால் அடங்காத கோபத்துடன் அங்கும் இங்கும் நடக்கிறான்.

*கோபால்:* திருட்டுப் பய! தொழிலாளி தலையைத் தடவி, முதலாளியைக் காக்கா பிடிச்சி, தான் பிழைச்சாப் போதும்ன்னு நினைக்கிறானே, இந்த தடிப்பய! விளங்குவானா இவன்? தூ! துலங்குவானா இந்த துன்மார்க்கன்! (செந் தாமரை வந்து அதிசயித்து நிற்கிறாள்) பாடு படுறவங்க, பொங்கலும் புதியலுமா கொஞ்சம் மங்களகரமா இருக்கட்டும்; அவங்க வீட்டிலே பால் பொங்கட்டும்; குழந்தை குட்டிகள் சந்தோஷமா இருக்கட்டும் என்கிற நல்லெண்ணம் கொஞ்சமாவது இருக்கா இந்த வஞ்சகனுக்கு? சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிப்பான் என்கிறதைப் போல, முதலாளி போனஸ் கொடுத்தாலும் இவன் கெடுத்திடுவான் போலிருக்கே!

*செந்:* ஏ, அம்மாடி! இதென்ன கூத்து! அதிகார வெறி பிடிச்சவன் மாதிரி ஆடுறே!

*கோபால்:* உனக்கென்னடி தெரியும், நீ நேத்து வந்தவ! என் மனசில்லே கொதியாக் கொதிக்குது!

*செந்:* ஐய்யய்யோ! இது தெரியாமேப் போச்சே! உலையில்லே வச்சிட்டேன். உழக்கரிசியை இதிலே போட் டிருந்தாலும் வெந்து போயிருக்குமே!

**கோபால்:** ஏய், ஏளனமா செய்றே! தொலேச்சிப் போடு வேன் தொலேச்சி! ஆமா! விளேயாடுற நேரமில்லே, வினே வந்து முளேச்சிருக்கு!

**செங்:** அப்போ கொஞ்சம் தண்ணி எடுத்து ஊத்து. முளேதானே விட்டிருக்கு; தாராளமா முளேக்கட்டும்.

**கோபால்:** முளேக்கும், முளேக்கும்! கிள்ளிப் போடுவேன் கிள்ளி! தெரியுமா?

**செங்:** ஓகோ! அதுதான் ஆகோ அய்யாகோன்னு ஆடுறேயாக்கும்!

**கோபால்:** அவன் ஆடுருன், அந்த மானேஜர், பூடம் தெரியாமே சாமி! பாடு பட்டுப் பலனேக் கொடுக்கிறவங் களுக்குக் கேடு செய்ற கெட்ட பய! கொடுக்கிறதைக் கெடுக்க இவன் யாரு?

**செங்:** மானேஜர்!

**கோபால்:** மண்ணுங்கட்டி! மண்டையிலே அடிச்சி விரட்டுறதுக்கு இல்லாமே மானேஜர்! வரட்டும், வரட்டும்! வசந்துத் தம்பி வரட்டும்!

**செங்:** ஏன், வந்ததும் நீயே மானேசராயிடலாம்னு பார்க் கிறயா?

**கோபால்:** நான் ஆகிறேன், ஆகலே; அதை யாருடி உன்னேக் கேட்டா? முதல்லே இந்த அயோக்கியனே வெளி யேத்தணும்!

**செங்:** ஆமா, அவரை வெளியேத்த ஐயா கையிலேதான் அதிகாரம் போலிருக்கு!

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? நீ நேத்து வந்தவ. சின்னவரு வரட்டும்; இந்த சின்னப் பயலே சிண்டைப் பிடிச்சி மில்லுக்கு வெளியே தள்ளலே, நான் இல்லே இந்த செந்தாமரைக்குப் புருஷன்! சவால்!

**செங்:** ஆமா, வவ்வாலு! வா, வா! (போகிருர்கள்)

## காட்சி 25

முருகேசன் வீட்டுத் தெருத் திண்ணே—விடியும் நேரம் —கோமதி வாசல் தெளிக்கக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிருள்—திண்ணேயில் அலுப்பு மிகுதியால் வரதன் அயர்ந்து தூங்குகிருன். யாரோ திண்ணேயில் படுத்திருப்பதைக் கண்ட கோமதிக்கு

சிறிது அச்சமும் ஐயமும் ஏற்படுகிறது. அவனை எழுப்புகிறாள்.

**கோமதி:** (எட்ட நின்று கொண்டு) இந்தாங்க, ஓ அய்யா, இந்தாங்க - எழுந்திருங்க, வாசல் தெளிக்கணும் — எழுந்திருங்க! — அட, எழுந்திருங்கய்யாண்ணு, வாசல் தெளிக்கணும் - இந்தாங்க, நான் சொல்றது காதிலே விழலே? விடிஞ்சி வேயிலேறி வர்றது தெரியாமத் தூங்குறீங்களே! - ஊஹூம்! (சலிப்புற்று) என்னங்க, உங்களைத்தான்! - சரியாப் போச்சு போ! காலங்காத்தாலே இது வேறே தொல்லையா? ம்.... யாரு இந்த ஆளு? ம்...

[பக்கத்தில் கிடந்த ஒரு குச்சியை எடுத்து வாசல் தெளிக்கக் கொண்டு வந்திருந்த பாத்திரத்தில் தட்டி ஒலி எழுப்புகிறாள். வரதன் புரண்டு படுக்கிறான். கோமதி சலித்துக் கொள்கிறாள்]

**கோமதி:** சரித்தான் போ! இவரை எழுப்பி, வாசலைத் தெளிச்சி வேலைக்குப் போனாப்லேதான்! — ஏ, அய்யோவ்! பெரியவரே, எழுந்திருங்கய்யா! (உரக்க) வாசல் தெளிக்கணும்னு கத்திக்கிட்டிருக்கேனே, உங்க காதிலே விழுகுதா? - ஊஹூம்!

[குச்சியைக் கொண்டு வரதன் காலில் தட்டுகிறாள்— வரதன் லேசாக விழிக்கிறான்]

**வர:** சீ, நான்சென்ஸ்!

**கோமதி:** ஆமா, நல்ல சென்சுதான்! வெய்யிலு வந்தாச்சு; தூங்குறதைப் பாருங்க.

**வர:** (பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டே) ஓ... ஹோ, ஹோ! (என்றவாறு வீட்டுக்கும் உள்ளும் புறமும், மேலும் கீழும் பார்வையைச் செலுத்துகிறான். இருவர் கண்களும் சந்திக்கின்றன.)

**கோமதி:** நீங்க யாரு?

**வர:** நானா? நான் வந்து.....நான்.....ம்..... இங்கே ஒரு பெரியவரு இருந்தாரே?

**கோமதி:** எந்தப் பெரியவரு?

**வர:** அவர் வந்து...ஒரு பெரியவரு, வயசானவருதான். ராத்திரிதான் பார்த்தேன் — பேரு கேட்டேனா இல்லையா என்கிறது...

**கோமதி:** ஞாபகமில்லையாக்கும்?

**வர:** ஆமாமா! ம்... நீங்க?

**கோமதி:** யாருமில்லே! நீங்க படுத்த இடத்தைக் கொஞ்சம் காலி செய்றீங்களா? பெருக்கிக் கூட்டணும்; நேரமாகுது.

**வர:** அதுக்கென்ன! ம்... அந்தப் பக்கமாப் போயி உக்காரட்டுமா?

**கோமதி:** எந்தப் பக்கமும் உக்கார வேண்டாம்! வேலை கிலே இருந்தா போயிப் பாருங்கோ.

**வர:** எனக்கு வேலை...

**கோமதி:** ஒண்ணுமில்லையாக்கும்?

**வர:** (இல்லை என்பதாக கைகளால் சைகை காட்டி உதட்டைப் பிதுக்குகிறான்)

**கோமதி:** அப்பச்சரி, தெருவிலே இறங்கி நடையைக் கட்டுங்க. உங்க கூட பேசிக்கிட்டு நிக்க நேரமில்லே! சங்கு ஊதுற நேரமாச்சு.

**வர:** மில்லுச் சங்கா?

**கோமதி:** ஆமா.

**வர:** அப்போ, உங்களுக்கு மில்லுலே வேலையா?

**கோமதி:** ஆமா, ஆமா!

**வர:** என்ன சம்பளமோ?

**கோமதி:** இது என்ன விசாரணையோ? தனியா இருக்கிற பெண்ணோடே அனாவசியமாப் பேசுறதே ரொம்பத் தப்பு.

**வர:** தப்புதான். என்ன பண்றது? கொஞ்ச காலமா ஆண் பெண் வித்தியாசமில்லாமேப் பேசிப் பழகி—

**கோமதி:** இருப்பீங்கன்னு உங்க பேச்சைப் பார்த்தாலே பச்சையாத் தெரியுதே! அந்தப் பழக்கமெல்லாம் இங்கே வேண்டாம். பேசாமே வந்த வழியைப் பார்த்துக்கிட்டு நடங்க.

**வர:** (தன் மேனாட்டு அனுபவத்தைத் தன்னையுமறியாமல் வெளியிட்டு விட்டதை உணர்ந்து, சிறிது கலவரப்பட்டு) ஓ! தப்பு, தப்பு! வந்து...இங்கேதான் இருன்னு...

**கோமதி:** சொன்னது யாரு?

**வர:** ஒரு பெரியவரு. அவரு ராத்திரி என்னை இங்கே கூட்டிக் கிட்டு வந்தாரு. இங்கேதான் படுத்திரு, காலையிலே பேசலாம்னு, இந்த வீட்டுக்குள்ளேதான் போனாரு. (சந்தேகத்துடன் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே) ம்... ஒரு வேளை வீடே மாறிப் போச்சோ? ம்.... எப்படி மாறும்? நான் இங்கேதானே படுத்திருக்கேன்! ம்....

**கோமதி:** அந்தக் கதையெல்லாம் வேண்டாம். இப்போ, நீங்க அவசரமாச் செய்யவேண்டிய காரியம் என்னண்ணு, திண்ணையை விட்டுத் தெருவிலே இறங்கி, பேசாமே நடையைக் கட்டவேண்டியது. அவ்வளவுதான்!

**வர:** ஐயய்யோ! காலையிலே பேசலாம்னு சொன்னரே! அவரு கிட்டே முக்கியமான வேலை கூட இருக்கே!

**கோமதி:** அவரு, எவருன்னு தேடிக்கிட்டுப் போயிச் சேருங்க. (அலுத்துக் கொண்டு) செச்சே! எங்கே போனலும், இந்தத் தொந்தரவே பெரிசாப் போச்சே!

**வர:** அப்போ, அவரு இங்கே இல்லையா?

**கோமதி:** இல்லே, இல்லே, இல்லே! பேச்சை விட மாட்டார் போலிருக்கே.

**வர:** ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருது?

**கோமதி:** இந்தக் கேள்வியை இந்த உலகத்தைப் பார்த்துக் கேளுங்க. அதிலே அற்புதமா உருவெடுத்திருக்கிற அவதாரங்களைப் பார்த்துக் கேளுங்க!

**முருகேசன்:** (வீட்டுக்குள்ளிருந்து வந்துகொண்டே) ஏம்மா கோமதி, யாருகூடம்மா இப்படி வாயாடிக்கிட்டு இருக்கே?

**வர:** ஆங்!...இவர்தான் அந்தப் பெரியவரு! — என்னங்க நான்தான்! ராத்திரி உங்களோடே வரலே?

**முரு:** அட, இவரு கூடத்தான? நான்தாம்மா படுத்துக் கிடச் சொன்னேன். ஏன் தம்பி, நல்லாத் தூங்கினேயா?

**கோமதி:** அதை ஏன் கேக்றீங்க? அவரை எழுப்புறதுக் குள்ளே என் பிராணனே போச்சு.

**முரு:** பாவம், அலுப்பு! (திண்ணையில் உட்கார்ந்து) இவரு வந்து கோமதி — (வரதனைப் பார்த்து) பேரு என்ன சொன்னே தம்பி?

**வர:** வரதன்.

**முரு:** ஆங், வரதன்; (கோமதியிடம்) நம்மளைப் போலே. சொந்த ஊரு சென்னை பட்டணமாம்! வேலை தேடி கண்ட இடமெல்லாம் அலைஞ்சி திரிஞ்சி, கடைசியிலே இங்கே வந்து சேர்ந்திருக்காரு. ராத்திரி படுக்க இடம் கிடைக்காமே தெருவிலே நிண்ணு தவிச்சாரு. தற்செயலா நான் பார்த்தேன். 'அதுக்கென்ன தம்பி, வா, நம்ம வீட்டுத் திண்ணையிலே படுத்துக்கோ; பணக்காரன் வீடா, பணத்தைத் திருடிப்போடுவியோன்னு பயப்பட' அப்படீன்னு அழைச்சிட்டு வந்து சேர்ந்தேன்.

**கோமதி:** அப்ப, இவரு சொன்னதெல்லாம் நிசம்தான்!

**வர:** பிறகு, நான் என்ன பொய்யா சொன்னேன்?

**முரு:** அவரு ஏம்மா பொய் சொல்லப் போருரு? ஏழை பொய் சொல்லி என்னத்தைப் புரட்டிடப் போருன்? ஏதோ அரைக்கா, மாகாணி, அதுக்கொரு பொய்யைச் சொல்லித் தொலைப்பான்; அம்புட்டுக்கிட்டு முழிப்பான். பொய்யன்னு பேரெடுத்துச் சீரழிவான்! ஆயிரம் லட்சம்ன்னு புரட்டி உருட்டிச் சுருட்டி எடுத்து வாயிலே போட்டுக்கிட்டு மங்களம் பாடிப் போடுருங்க பாரு சில சீமான்கள், அவங்களுக்குத் தானேம்மா அசாத்தியமாப் புளுகத் தெரியும். அதைப் பூசி மெழுகி அரிச்சந்திர பரம்பரைன்னு பேரெடுக்க அறிவு இருக்கு; சட்டத்தைப் பிட்டு வைக்கத் திறமை இருக்கு; அந்தத் திறமையை விலைக்கு வாங்கப் பணமிருக்கு. ஏழைக்கு ஏது அந்த எழவு சாமர்த்தியமெல்லாம்? ம்... சரி, தம்பி, நீ எழுந்திரு, இருக்கிறதைச் சாப்பிட்டுட்டுப் புறப்படுவோம். அந்த மானேஜர் கிட்டே போயி அழுது பார்க்கலாம்.

**கோமதி:** (கலவரத்துடன்) அவருகிட்டே எதுக்கப்பா?

**முரு:** இவருக்கு ஒரு வேலை பார்த்தாகணுமே! இல்லாட்டா எத்தனை நாளைக்குத்தான் இப்படி அவதிப்படுவாரு.

**கோமதி:** என்னமோப்பா, அவரு தயவு நமக்குத் தேவை இல்லை. மனுசனுப் பிறந்திருக்கிற மிருகம்!

**முரு:** அதை நீயும் நானும் சொல்லி என்னம்மா செய்ய? பணத்தைப் போட்டு மில்லைக் கட்டி, அவரைக் கொண்டாந்து குந்த வச்சிருக்காங்க பாரு. அவங்களுக்கில்லே அது தெரியணும்.

**கோமதி:** ஆமா, அவங்களுக்குத் தெரியுது! பெரிய முதலாளி பங்களாவைச் சுத்துருரு; சின்ன முதலாளி ஆகாச வழியா லோகத்தைச் சுத்துருரு. அதை விட்டு எறங்கி வந்து நம்ம கிட்டே நெருங்கிப் பார்த்தாவில்லே தெரியப் போகுது?

**முரு:** அவங்க எறங்கி வரப் போறதுமில்லே; பார்க்கப் போறதுமில்லே! நம்மளைக் கட்டி மேய்க்கிறவன் நல்லவனே கெட்டவனே, நாம கைகட்டி நிக்கிறதிலேயும் குறைச்சலில்லே! என்ன தம்பி நான் சொல்றது?

**வர:** (சிந்தனையிலிருந்து மீண்டு) ம்ம்....கரெக்ட்!

**முரு:** அப்படின்னு?

**கோமதி:** நீங்க சொல்றது சரீன்னு சொல்ருரு.

முரு: பிறகென்ன சந்தேகமா? சரி, தம்பி வா. ஆக வேண்டியதைப் பார்ப்போம்.

கோமதி: (புன்முறுவலுடன்) வாங்க. (மூவரும் வீட்டுக்குள் செல்லுகின்றனர்.)

●

## காட்சி 26

○

ஐயம்பெருமாளும் பெருமாளும் தெருவழியே நடந்து செல்லுகின்றனர். திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவனாய் நின்று திரும்புகிறான், ஐயம்பெருமாள்.

ஐயம்: ஆங், இப்ப எனக்கொரு சந்தேகம்!

பெரு: சனியன் வந்து தொலையும்ணுதான் சந்தேகமில்லாமேத் தெரியுமே!

ஐயம்: (கோபமாக) சனியனா? சரித்தான் வா! (போய்க் கொண்டே) உன் கிட்டே வந்து என் சந்தேகத்தைச் சொன்னேனே! என் புத்தியைத்தான் செருப்பாலே அடிக்கணும்.

பெரு: அப்பச்சரி, தேடிப் பிடிச்சு விளாசு!

ஐயம்: (சென்றவன் நின்று திரும்பி) பிறகென்னப்பா நீ பேசுறது! திடீர்னு நமக்கு போனஸ் கொடுத்துட்டாங்களே, இது ஏன்—இதிலே ஏதோ மர்மம் இருக்கத்தான் இருக்குன்னு நான் மூளையைப் போட்டுக் குழப்பிக்கிட்டிருந்தா—

பெரு: மூளை கெட்ட முட்டாளுக்குக்கூடத் தெரியும், இதிலே மர்மமுமில்லே, மண்ணாங்கட்டியுமில்லேன்னு.

ஐயம்: இப்படித்தான் மெத்தனமாப் பேசப்படாதுன்னு நானும் நாள் தவறாமே சொல்லிக்கிட்டு வர்றேன். இப்போ போனஸ் கொடுத்தாங்களே, இதுக்கு என்ன காரணம்? இப்படி ஒரு கேள்வி—

பெரு: நல்ல வேள்வி போ! நாம கிளர்ச்சி செய்ததுதான் காரணம்.

ஐயம்: அப்படீன்னு நிச்சயப்படுத்த என்ன ஆதாரம்?

பெரு: ஒண்ணுமில்லையா? அப்பச்சரி, முதலாளி உத்தரவு போட்டு மானேஜர் கொடுத்தார்ன்னு வச்சிக்கோயேன்!

ஐயம்: எப்படி வச்சிக்கிடுறது? இத்தனை நாளும் இறுக்கமா இருந்தவங்களுக்கு இப்பமட்டும் மனசு என்ன இளகியா போச்சு?

பெரு: இளகிப் போச்சோ? உருகிப் போச்சோ? எப்படியோ நமக்கு போனஸ் கிடைச்சது.

**ஐயம்:** கிடைச்சது. ஆனா, அதுக்குள்ளே இருக்கிற நுணுக்கத்தை ஆராய வேண்டாமோ?

**பெரு:** இதிலே என்ன நுணுக்கம் இருக்கு நுணுக்கம்?

**ஐயம்:** இருக்கு. இருக்கப்போயித்தானே எனக்குச் சந்தேகம் வந்து சேருது.

**பெரு:** உனக்குச் சந்தேகம் வர்றதுக்கு ஒரு கணக்கா? நீ தான் சனியன் பிடிச்ச சந்தேகங்களைக் கிளப்பிக்கிட்டே இருக்கிறவனுச்சே!

**ஐயம்:** நானு கிளப்புறேன்? அதுபாட்டுக்குக் கிளம்பி என் கிட்டே வந்து சேருதே! இப்ப பாரு, முதலாளி மகன் ஜப்பானிலே தானே இருக்கிறாரு?

**பெரு:** இதை நிச்சயப்படுத்த உன்னாலே இந்த ஜன்மத்திலே முடியாது!

**ஐயம்:** அதெல்லாமில்லப்பா, அங்கேதான் இருப்பார்னு வச்சிக்கோ, ஒரு பேச்சுக்கு.

**பெரு:** சரி, வச்சிக்கோ.

**ஐயம்:** அவருக்கு நம்ம சேதி போயிருக்கலாமில்லே?

**பெரு:** எந்த சேதி?

**ஐயம்:** அதாவது நாம செய்வதாயிருந்த வேலை நிறுத்தச் சேதி?

**பெரு:** உனக்கென்ன தோணுது?

**ஐயம்:** ஒரு வேளை போயிருக்கலாமோ என்னமோன்னு ஒரு சந்தேகத்தைக் கிளப்புது.

**பெரு:** சரி, கிளப்புது! பிறகு?

**ஐயம்:** போன சேதி அவருக்குப் போயி எட்டியிருக்கலாமில்லே?

**பெரு:** யாரு கண்டா?

**ஐயம்:** யாரும் காணலே. ஆக சந்தேகப்பட்டுப் பார்க்க வேண்டிய பட்டியலிலே இதையும் வச்சிப் பாரு!

**பெரு;** சரி, பாரு!

**ஐயம்:** அப்படிப் பார்க்கிறபோது என்ன தோணுது?

**பெரு:** என்ன தோணுது?

**ஐயம்:** பெரிய படிப்புப் படிச்ச அவருக்கு நம்ம மேலே இரக்கம் ஏற்பட்டிருக்கலாமோ என்னமோண்ணு—

**பெரு:** ஒரு சந்தேகத்தைக் கிளப்புது!

**ஐயம்:** ஆகையினாலே, அவரு அங்கேயிருந்து இங்கே ஒரு தந்தி அடிச்சி—

பெரு: எதுக்கு?

ஐயம்: போனஸ் கொடுக்கச் சொல்லி.

பெரு: ஏம்பா, உன் மூளைக்கு கேடு ஒண்ணும் வந்து சேரலையே?

ஐயம்: ஆங், அதென்ன அப்படிக் கேக்கிறே?

பெரு: சந்தேகப்பட்டுக் கேட்கிறேன்.

ஐயம்: ஊம்!

பெரு: சின்ன முதலாளி எங்கே இருக்கிறார் என்கிற தகவலே தெரியாமே இங்கே கிடந்து திண்டாடுறாங்க. இந்த லட்சணத்திலே இங்கேயிருந்து சேதி போயி, அங்கேயிருந்து தந்தி வந்து — அடா அடா! உன் தலையிலிருக்கிற அவ்வளவு களிமண்ணும் தலைகீழா உருளுதப்பா, தலைகீழா உருளுது!

ஐயம்: ஓகோகோ! அதை மறந்துட்டில்லே ஆராய்ச்சியிலே இறங்கிட்டேன்!

பெரு: குட்டிச் சுவத்திலே முட்டு! பளிச்சின்னு தெளிவாகும். (வேகமாகச் செல்லுகிறான்)

ஐயம்: அட, பையன் பறக்கவில்லே செய்றான்! ம்...

●

## காட்சி 27

○

பாலுவின் அறை – பாலு சோபாவில் சாய்ந்துகொண்டு பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்கிறான் – முருகேசன் வருகிறான்.

முருகேசன்: கும்பிடுறேனுங்க.

பாலு: (திரும்பிப் பார்த்துப் புன்முறுவலுடன்) ஓ! வாப்பா, முருகேசா! ம்... ஏது சொன்னது சொன்னபடி வந்துட்டே!

முரு: நீங்க உத்தரவு போட்டா மீற முடியுமா?

பாலு: ஊம்! இப்போ அப்படித்தான் சொல்லுவே. தலை மறைஞ்சதோ அவ்வளவுதான் – மறந்தே போவே!

முரு: அதெல்லாம் இல்லீங்க.

பாலு: என்ன இல்லீங்க! நான் எத்தனை தடவை இங்கே வந்துட்டுப் போகும்படி சொல்லியிருக்கிறேன். ஒரு தடவையாவது வந்திருக்கயா?

முரு: வரணும்னு நினைக்கிறதுதான். பிறகும்...

பாலு: கிடக்காரு போன்னு போய்க்கிட்டே இருப்பே. ம்... என்ன செய்றது? என்னை நீ மறந்தாலும், உன்னை நான் மறக்க முடியுதா?

முரு: என்னமோ, உங்க தயவு. ம்... வந்து... அவரைக்கூட அழைச்சிட்டு வந்திருக்கேன். வெளியிலே நிற்கிருரு.

பாலு: அவரு எவரு?

முரு: அதுதான் உங்க கிட்டே ஆபீசிலேயே சொன்னேன் பாருங்க — மில்லுலே ஒரு வேலை போட்டுக் கொடுத்தா...

பாலு: ஓ, எவனே ஒரு அனுதைப் பயன்னு சொன்னியே?

முரு: கூப்பிடட்டுமா?

பாலு: வேண்டாம், வேண்டாம்! அவன் எதுக்கு இங்கே? அவன் மூஞ்சியைப் பார்த்தா வேலை கொடுக்கப் போறேன். எல்லாம் உன் முகத்துக்காகத்தானே முருகேசா!

முரு: ஏதோ, உங்க தயவிலே ஒரு வேலை கிடைக்க உத்தரவானு, பாவம் பிழைச்சிப் போவாரு. ரொம்ப அவதிப்படுற மனுசன்.

பாலு: ம்... அவன் உனக்குச் சொந்தக்காரனு?

முரு: இல்லே, தெரிஞ்சவருதான்.

பாலு: எவ்வளவு காலமா?

முரு: நேத்துத்தான் பார்த்தேன்.

பாலு: ப்பூ! அதுக்குள்ளாகவா ரெண்டு பேரும் சிநேகமாகி நீ சிபார்சுக்கு வந்துட்டே?

முரு: என்ன செய்றது? அவரைப் பார்த்தா பரிதாபமா இருக்கு. நீங்க கொஞ்சம் தயவு பண்ணணும்.

பாலு: ம்... என்ன பண்றது? எதுக்கும் உன் முகத்தைப் பார்க்க வேண்டியிருக்கே! – ம்.... நான் எப்படிப்பட்டவன்னு உனக்குத் தெரியுமில்லே?

முரு: ஏன், தெரியாதுங்க, நல்லாத் தெரியும்.

பாலு: எந்தப் பய சிபார்சையும் நான் சட்டை பண்றதே கிடையாது. ஆனு, நீ சிபார்சு பண்றபோது தட்ட முடியுதா? எனக்கு வேண்டிய மனுசனுயிட்டயே! ம்... இதெல்லாம் கோமதிக்குத் தெரிஞ்சிருக்கிற மாதிரி தெரியலே!

[முருகேசன் மனம் துணுக்குறுகிறது]

## காட்சி மாறுகிறது

பாலுவின் வீட்டுக்கு முன்புறம் – முருகேசனோடு வந்த வரதன் வீட்டை ஆராய்ந்தபடி கேட்டுக்கு அருகே நிற்கிறான். கோகிலம் வீட்டுக்குள் நுழைய வருகிறாள். அவளைக் கண்டு கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறான் வரதன்.

**கோகி:** (அருவெறுப்புடன், அலட்சியமாக வேறு பக்கம் நோக்கியவாறு) யார் நீ?

**வர:** ம்... நானா? வந்து... மில்லுலே வேலை—

**கோகி:** மானேஜரைப் பார்க்க வந்தவனா?

**வர:** ஆமா!

**கோகி:** (கடுகடுப்புடன்) அதுக்கு வீட்டைத்தேடி வராட்டா, மில்லுக்கு வரும்போது பார்த்துத் தொலைச்சா என்ன? விடியா மூஞ்சிகள்! மில்லுலேதான் அவருக்குத் தொல்லை கொடுக்கிறீங்கண்ணா, வீட்டிலேயாவது நிம்மதியா இருக்க விடுறீங்களா? சனியன்கள்! சரி, சரி! போ, போ! இப்போ ஒண்ணும் பார்க்க முடியாது. அவருக்கு முக்கியமான வேலை இருக்கு. போ, நிக்காதே!

[கோகிலம் வேகமாக உள்ளே செல்கிறாள். அவளை எரித்து விடுபவன்போல் பார்க்கிறான், வரதன்]

**வர:** ம்... முக்கியமான வேலை! காதல் என்பது சொக்கட்டான் ஆடும் காய் என்று எண்ணிக் கொண்டாயா - மனம்போனபடி யெல்லாம் மாற்றிவைக்க! வாழ்க்கைப் பாதையிலே ஒளிவீசும் மணிவிளக்கு அம்மணி, மணிவிளக்கு! மமதை கொண்டலையும் உனக்கெங்கே அந்த உண்மை தெரியப் போகிறது?

[கோகிலத்துக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் செல்லுகிறான் வரதன்]

## காட்சி மாறுகிறது

பாலுவின் அறை—முருகேசன் திகிலுடன் நிற்கிறான்.

**பாலு:** அப்படிச் சொல்லக்கூடாது, முருகேசா! கோமதி கூலிக்காரப் பெண்ணானாலும் நல்ல குணவதி; கோமளவல்லி! மில்லுலே வேலை செய்யும்போது, நானும் அடிக்கடி பக்கத்திலே போயி நிண்ணு கவனிக்கிறதுதான். என்ன அடக்கம்! என்ன ஒடுக்கம்! என்ன பணிவு! எனக்கென்னமோ, கோமதியை முன்னுக்குக் கொண்டாரணும் – அவளை அந்த டிபார்ட்மென்டுக்கே மேஸ்திரியாக்கணும் என்கிற நினைப்

பெல்லாம் இருக்கத்தான் செய்யுது. இருந்தாலும் காலமும் கொஞ்சம் தோதா வரணும் பாரு! ஊம்... கோமதி மனசு வச்சா காலம் வராமே எங்கே போகப் போகுது? சுறு சுறுப்பிலேயும் சொகுசாக வேலை செய்கிறதிலேயும், கோமதிக்கு இணையா இன்னொரு பெண்ணைச் சொல்றதுக்கே இல்லை!

[கோகிலம் வருகிருள் – பாலு திடுக்கிடுகிருன் – முரு கேசன் முழிக்கிருன்]

*பாலு:* ம்... அப்போ, முருகேசா நீ போ! நாளைக்கு அவனை வேலைக்கு வரச் சொல்லு. முதல்லே கழிவுப் பஞ்சு களை சுத்தம் செய்ற இடத்திலே வேலை செய்யட்டும். பின்னாலே நல்ல வேலையாக் கொடுக்கச் சொல்றேன். என்ன?

*முரு:* சரீங்க. (அரை குறையாக கும்பிடு போட்டுவிட்டுச் செல்லுகிருன்.)

## காட்சி மாறுகிறது

பாலுவின் வீட்டு முன்புற 'கேட்'டுக்கு அருகே முரு கேசன் வருகிருன். வரதனை சுற்று முற்றும் தேடுகிருன்.

*முரு:* தம்பீ! வரதா! ம்... எங்கே போயிட்டாரு இவரு? ம்... ஒருவேளை, பேசிட்டு வரட்டும்னு அவர் பாட்டுக்குப் போயிட்டாரோ! ம்... சரி, இங்கே நிக்கவே எனக்குப் பிடிக்கலே. எப்படியும் வீட்டுக்கு வந்து சேராமலா போருரு? (போகிருன்)

## காட்சி மாறுகிறது

பாலுவின் அறை – கோகிலம் வேறு பக்கம் திரும்பிய வாறு ஆத்திரம் பொங்க உட்கார்ந்திருக்கிருள். பாலு அவளை சமாதானப்படுத்த முயலுகிருன். இவர்கள் பேசுவதை மறைவிடத்தில் நின்று கவனிக்கிருன் வரதன்.

*பாலு:* என்ன கோகிலம், ஒண்ணுமே பேசாமே உட்கார்ந் துட்டே?

*கோகி:* (ஆத்திரமாக) எடை போடுகிற விவகார மெல்லாம் ஒரு தினுசா முடியட்டும்ன்னு காத்திருக்கேன்.

*பாலு:* எடையா?

*கோகி:* ஆமா, எவ எவளைவிட ஒசத்தி? இவளுக்கு அவ இணையா? அவளுக்கு இவ அழகா? மொத்தத்திலே எவ ரதிக்

குட்டி, சொகுசுக்காரச் சொக்கழகி, சுறுசுறுப்புச் சுந்தரி, இல்லே, சோம்பேறி—இப்படி யெல்லாம் எடை போட்டுக்கிட்டிருந்தீர்களே...

**பாலு:** சரியாப் போச்சு போ! சன்மார்க்கமான சங்கதியை சர்வநாசமாவில்லே அர்த்தம் பண்ணியிருக்கே?

**கோகி:** எல்லாம் சரியாத்தான் பண்ணியிருக்கேன்.

**பாலு:** அவசரப்படாதே கோகிலம்! இப்போ போனுனே இவன், மில்லுக்குள்ளே என் கையாளு மாதிரி. இவனை எப்பவும் நம்ம கைக்குள்ளேயே போட்டுக்கிட்டுக் காரியம் பார்க்கணும்ன்னு, அவனைக் கண்டபடியெல்லாம் தூக்கி வச்சிப் பேசினுத்தான் முடியும். இல்லே, கையைவிட்டே நழுவிடுவான்.

**கோகி:** அதுக்காக, கூட ஒரு கோமதியை இழுத்துப் போட்டு, அவளைப் பத்தி வர்ணிப்பானேன்?

**பாலு:** ம்... வானர வம்சத்தையா வர்ணித்தேன்னு சொல்றே? தலைவிதி! ஏதோ நாலு வார்த்தை பெரிசாச் சொன்னேன். அப்பத்தானே, அவளைப் பெத்தவனுக்கு உச்சந் தலையிலே அடிச்ச மாதிரி இருக்கும்!

**கோகி:** யாரு கண்டா? கிழவன் உங்க கையாளு; அவன் மகள்?

**பாலு:** கேட்டான்! அதைப் பத்திப் பேசுதே இந்தக் கோகிலம்! அநியாயம்! அநியாயம்! இந்த பாரு கோகிலம், என்னை இப்படியெல்லாம் அவமானப்படுத்தாதே! கோகிலத்தைப் போன்ற ஒரு கோமேதகமணியைக் காதலிக்கிற மனுசன், கோமதியைப் போன்ற ஒரு கூழாங்கல்லை நினைப்பான்னு நீ சந்தேகப்படுறயே, இதைவிட கேவலம் எனக்கு வேறே வேண்டியதில்லை கோகிலம், வேண்டியதில்லை!

**கோகி:** அப்போ, நான் நினைச்சதுதான் தப்போ?

**பாலு:** அதை நீ ஒப்புக்கொள்ளவே வேண்டாம்!

**கோகி:** ஏன்?

**பாலு:** வேண்டாங்கிறேன். ஏண்ணு, நீ கோபமாக இருக்கிறபோதுதான் உன் முகம் அளவில்லாமல் கொஞ்சுது! நெஞ்சு நிலைதடுமாறச் செய்யும் பஞ்ச வர்ண ஜாலங்களைக் பகட்டிக் காட்டுது! பலரக கோணங்களிலே, உன் அழகு பற்பல அற்புதங்களைச் செய்து காட்டி என் மனசை அப்படியே கவ்வுது! அதைப் பார்த்துப் பார்த்து, ரசிக்க ரசிக்க—

**கோகி:** (புன்முறுவலுடன்) மயக்கம் வருதோ?

**பாலு:** அந்த மடப்பய வசந்தன் வந்துவிட்டால், இந்த மான் தரும் இன்பமெல்லாம் துன்பமாக மாறிவிடுமோ என்றுதான் என் மனசு கலங்குது!

[மறைவிடத்தில் நிற்கும் வரதன் இந்தப் பேச்சைக் கேட்டு, உள்ளம் குமுறுகிறான்.]

**கோகி:** கலங்காதீர்! கன்னி இவள் கைவிடவே மாட்டாள்!

**பாலு:** கல்யாணம் ஆனாலோ?

**கோகி:** பட்டா மட்டும்தானே அவர் பேருக்கு—

**பாலு:** பலன் அனுபவிப்பதெல்லாம் என்னைத் தவிர வேறு எந்தப் பயல்? இருந்தாலும் இந்தத் தொல்லையெல்லாம் எதுக்கு— என் பெயரையே அந்தப் பட்டாவில் எழுதிக் கொண்டால் என்ன...

**கோகி:** (திடுக்கிட்டு) ஊம்!

**பாலு:** என்று சில சமயங்களில்தான் நான் நினைப்பதுண்டு.

**கோகி:** அப்படியானால் காசு – கௌரவம், ஆஸ்தி – அந்தஸ்து அவ்வளவும் அரோகரா!

[மறைவிடத்தில் நிற்கும் வரதன் ஆவேசமடைகிறான். மேலும் அங்கு நிற்கச் சகியாதவனாய், மனதை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து வெளியேறுகிறான்.]

**பாலு:** (கோகிலத்தை அணைத்தவாறு) அதனால்தானே இந்தக் கட்டழகியை விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் வந்து சேர்ந்திருக்கு! கோகிலம்.. கோகிலம்!

**கோகி:** என்ன?

**பாலு:** இப்படிப் பாரேன்! ஆகா, உன் கருவிழிகளிலே தவழ்ந்து மின்னும் இந்த மோகன மெருகின் பெருமையைக் கண்டறிந்து போற்றத் தெரிந்தவனா அந்தக் கடல் கடந்தவன்?

**சொக்கலிங்கம்:** (குரல் மட்டும்) ரொம்பத்தான் கண்டவன் மாதிரியில்லே பேசுறான்! (வந்து திரும்பிப் பார்த்துக் கொண்டே) பேசாமேப் போவானில்லே!

[பாலு—கோகிலம் திடுக்கிட்டு விலகுகின்றனர்.]

**பாலு:** டேய் கோமாளி, என்னடா அது?

**சொக்:** ஒண்ணுமில்லே முதலாளி! நான் வெளியிலிருந்து வந்துக்கிட்டே இருந்தேன். நம்ம வாசலுக்கா ஒரு பய நின்னான். என்னடான்னு விசாரிக்கப் போனா, எவனோ முருகேசன்னு ஒரு ஆளு இங்கே வந்தானாம்; அவனுக்காகக்

காத்திருக்கானும். அப்படி யாரும் இந்த வீட்டுக்கு வர மாட்டாங்கன்னு நான் சொல்றேன்; இல்லே, வந்தான்னு ரொம்பத்தான் கண்டவன் மாதிரியில்லே பேசுறான்.

**பாலு:** கண்ட்ராவிதான் போ! அந்தப் பய எங்கே?

**சொக்:** நிப்பானு இங்கே? அப்பவே போயிட்டான்! (போகிறான்)

**கோகி:** *(அலுப்புடன்)* நாசமாப் போச்சு! நான் வரும் போது ஒருத்தன் நிண்ணான். அவன்தான் போலிருக்கு!— நம்ம நாட்டுக்குத்தான் அணுகுண்டு ஆகாதுன்னு பார்த்தா, இந்தப் பயக சும்மா இருக்க மாட்டாங்க போலிருக்கே. அதைத் தூக்கி நம்ம தலையிலே யில்லே போட்டுக்கிட்டே இருக்காங்க.

**பாலு:** எங்கே போட்டா என்ன கோகிலம்? அசலான அமெரிக்க அணுகுண்டாயிருந்தாலும், அது நம்ம நாட்டுக்கு வந்து சேர்ந்ததும்தான் அணுசக்தியா மாறிப் போகுமே! இப்போ பார்த்தே இல்லே?

**கோகி:** அதனுலேதானே, இப்போ தாராளமா மூச்சுவிட முடியுது!

●

## காட்சி 28

○

வரதன் அளவற்ற வேதனையுடன் தெருவில் நடந்து செல்கிறான். அவன் மனதிலே புயல்!

**வரதன்:** (தனிமொழி) காசுக்காகக் கல்யாணம்; காதலுக்காக வேசித்தனம்! உடல் வேறு, உயிர் வேறு! ம்... என் வாழ்வுக்கே படுகுழி தோண்டும் பாதகி! நல்ல வேளை; தப்பினேன்! இதற்காக நான் யாருக்கு நன்றி பாராட்டப் போகிறேனே?

**குரல்:** யாருக்கோ அல்ல - உனக்கேதான்! நாடு செழிக்கப் பாடுபடும் தொழிலாளிபோல் நிற்கிறாயே, அந்தக் கூலிக் காரக் கோலத்துக்கு நன்றி பாராட்டு!

**வர:** ஏன்? முதலாளியாக வந்திருந்தால் மட்டும் இந்த மூடு மந்திரக் கொடுமைகளை என்னல் அறிந்திருக்க முடியாதா? அவ்வளவு மதியற்றவனு? மடையனு? முட்டாளா நான்? என்னையா ஏமாற்ற முடியும்?

**குரல்:** முடிந்திருக்குமே, நீ முதலாளியாக வந்திருந்தால்! மூடி மறைத்திருப்பார்கள் - முகஸ்துதிகளால், புகழுரைகளால், பாராட்டு மொழிகளால், பசப்பு வார்த்தைகளால்!

இப்போது நீ காணும் இந்தக் கோரக் காட்சிகளெல்லாம் அப்போது திரைமறைவிலே பதுக்கப்பட்டிருக்கும்!

**வர:** அந்தத் திரையைக் கிழித்தெறியத் திறமையற்றவனு நான்?

**குரல்:** திரை இருப்பதாகவே உனக்குத் தெரியாதே! பிறகு அதைக் கிழித்தெறிவது எங்கே? நீயோ முதலாளி. உன் பணத்தைக் கண்டு பல்லிளிப்போர் - அந்தச் செல்வம் உனக்கு அள்ளித் தந்திருக்கும் அதிகாரத்தைக் கண்டு அஞ்சுவோர், உன்னை நேரிலே புகழ்வார்கள்; மறைவிலே இகழ்வார்கள். ஆனுல், இப்போதோ நீ ஒரு உழைப்பாளி. உடல் நலிய உழைத்துக் கூலி பெற்று வயிறு கழுவுவதைத் தவிர, வேறு முக்கியத்துவம் எதுவுமில்லாத ஒரு ஜீவன்! அதனுல்தான் கோகிலம் உன்னைக் கண்டு அவ்வளவு அலட்சியமாகப் பேசினுள்; ஏசினுள்; விரட்டியடித்தாள்! நீ முதலாளியாக இருந்திருந்தால், உன் புகழ் பாடியே உன்னை மயக்கியிருப்பாளே! முகஸ்துதிகளால் மூடி மறைக்கப்படும் கோரங்களை, அக்கிரமங்களை, அநியாயங்களை அப்பட்டமாக அறியவேண்டுமானுல், அர்த்தமற்ற ஆடம்பர உச்சியிலிருந்து அர்த்தமுள்ள சமநிலைக்கு வந்தாகவேண்டும். நீ வந்தாய்; அறிந்தாய்!

**வர:** ஆமாம்! நீர் மட்டத்தின் மேல் தளம் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. அடி தளத்தில் மூழ்கிப் பார்த்தால்தானே மூச்சுத் திணறும்; முதலைகள் முழுங்கப் பார்க்கும்; அதோடு முத்துக்களும் கிடைக்கும்! (போகிறுன்.)

## காட்சி 29

முருகேசன் வீடு – முருகேசன் வீட்டுக்குள்ளிருந்து தாழ்வாரத்திற்கு வந்து சுற்றுமுற்றும் பார்க்கிறுன். அவனைப் பின்தொடர்ந்து கோமதி வருகிறுள்.

**முருகேசன்:** ம்... என்ன... வரதன் இன்னும் வரக்காணேம்! ம்... எங்கே போயிருப்பாரு?

**கோமதி:** என்னப்பா நீங்க! கூடவே கூட்டிக்கிட்டு வராமே...

**முரு:** நான் என்னம்மா செய்யட்டும்? மானேஜர் கிட்டே பேசிட்டு வர்றதுக்குள்ளே அவர் பாட்டுக்கு எங்கேயோ போயிட்டாரு. மேற்கொண்டு அங்கே நிக்கவே எனக்குப் பிடிக்கலே. சரி, எப்படியும் வீட்டுக்கு வந்து சேராமலா போயிடுவார்னு நான் பாட்டுக்கு வந்துட்டேன்.

**கோமதி:** ஊருக்குப் புதுசு; எங்கே அலையிருரோ?

**முரு:** அதுதான் நானும் யோசிக்கிறேன்.

**கோமதி:** போயி பார்த்துட்டு வாங்கப்பா.

**முரு:** ஆமாமா. அவர் வந்தாலும் இங்கேயே இருக்கச் சொல்லு. இதோ வந்துடுறேன்.

[முருகேசன் செல்லுகிருன். — கோமதி புன்முறுவல் பூக்க ஒரு பாட்டை முணுமுணுத்தபடியே சிறிது நேரம் நின்று பிறகு வீட்டுக்குள் செல்லுகிருள் – வரதன் சோர்ந்த முகத்துடன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய வனுய் அங்கு வந்து தாழ்வாரத்தில் உட்காருகிருன். பெருமூச்சு விடுகிருன். கோமதி ஒரு ஜமுக்காளத் துடன் வெளியே வந்து, வரதனைக் கவனிக்காமல், தூசியைப் போக்க உதறுகிருள். பறந்து வரும் தூசியைத் தாங்கமாட்டாதவனுய் திணறித் தும்முகிருன் வரதன். கோமதி திடுக்கிட்டுப் பார்க்கிருள். இருவர் கண்களும் சந்தித்து நிற்கின்றன.]

**கோமதி:** (வரதன் வெறுந்தரையில் உட்கார்ந்திருப்பதைக் கவனித்து) எழுந்திருங்க!

[அவளை அப்படிப் பார்த்ததால்தான் கோபப்படு கிருளோ என திடுக்கிட்டு எழுந்திருக்கிருன் வரதன். கோமதி திண்ணையில் ஜமுக்காளத்தை விரிக்கிருள்.]

**கோமதி:** உக்காருங்க!

[வரதன், சந்தேகத்துடன் கோமதியையும் ஜமுக்காளத் தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே, அதைக் கொஞ்சம் விலக்கிவிட்டு ஒரு ஓரமாக உட்காருகிருன்.]

**கோமதி:** எழுந்திருங்க!

**வரதன்:** ஊம்! (திடுக்கிட்டு எழுந்து நிற்கிருன்.)

**கோமதி:** (ஜமுக்காளத்தைச் சரியாகப் போட்டு) இப்போ உட்காருங்க - ஜமுக்காளத்து மேலே!

**வர:** (நிதானமடைந்து) நிசமாத்தானு? இல்லே, மறு படியும் 'டிரில்' பழகணுமா?

**கோமதி:** (உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு) இல்லே, இல்லே; சும்மா உட்காருங்க! (வரதன் உட்காருகிருன்) அப்பாகூட உங்களைத் தேடித்தான் போயிருக்காரு.

**வர:** ம்... அவராவது என்னைத் தேடுருரே! மத்தவங் களெல்லாம் விரட்டியில்லே அடிக்கிருங்க!

**கோமதி:** நான் கூடவா?

வர: நீதான் இப்போ சமாதானத்துக்கு வந்துட்டயே! போன இடத்திலே சொல்றேன்.

**கோமதி:** ஓகோ! அங்கேயெல்லாம் மாலே போட்டு வர வேற்க நீங்க என்ன—

வர: பெரிய முதலாளியாண்ணுதானே கேக்கிறே? ம்... நான் முதலாளியா இருந்திருந்தா இவங்களெல்லாம் இப் படியா ஆட்டம் போடுவாங்க? கொட்டத்தை அடக்கிட மாட்டேனு, அடக்கி!

**கோமதி:** அப்பாவிகளேத் தானே?

வர: அக்கிரமக்காரப் பேய்களே!

**கோமதி:** ஊம்! இப்போ அப்படித்தான் சொல்லுவீங்க. எல்லாம் முதலாளியானுத்தான் தெரியும் – செங்கோல் செம்மலா, கொடுங்கோல் பாவியான்னு.

வர: நீ வேணுமானு பாரேன்!

**கோமதி:** நான் என்னத்தைப் பார்க்க? நீங்க முதலாளி ஆகப் போறதுமில்லே; இப்போ சொல்ற மாதிரி நடக்கப் போறதுமில்லே!

வர: (தன்னேயுணர்ந்து) ஓ! வழி தவறியில்லே பேசுறேன். ம்... வந்து...

**கோமதி:** உங்களுக்கு வேலே கிடைச்சிப் போச்சாம். அப்பா சொல்லச் சொன்னுரு.

வர: (மகிழ்ச்சியுடன்) கிடைச்சிப் போச்சா? சரி, சரி! வந்த வேலே பாதி முடிஞ்சுது!

**கோமதி:** பாதி என்ன? வேலே தேடி வந்தவங்களுக்கு வேலே கிடைச்சிட்டா வேலேயே முடிஞ்ச மாதிரிதானே!

வர: அதில்லே கோமதி! நான் வந்து உலகத்திலே இது வரையிலே யாரும் செய்யாத அதிசயம் ஒண்ணு செய்து காட்டப் போறேன். அதுதான் இனி பாக்கி.

**கோமதி:** அதிசயமா? சரியாப் போச்சு! இப்போ கழிவுப் பஞ்சு சுமக்கிற வேலே கிடைச்சிருக்கு. இதிலேயிருந்து பெரிய எஞ்சினியர் ஆயிடலாம்னு பார்க்கிறீங்களாக்கும்?

வர: அதிலென்ன அதிசயம் இருக்கு? ஆர்வத்தோடே பாடுபட்டா ஆக முடியுமே! ஆனவர்களும் உண்டு!

**கோமதி:** அப்போ, சொந்தமா ஒரு மில்லே கட்டிடலாம்னு–

வர: ஆகாயக் கோட்டை கட்டவேண்டிய அவசியமே எனக் கில்லே கோமதி!

**கோமதி:** பிறகு?

வர: அதையெல்லாம் நீ பார்க்கத்தான் போறே. மூக்குக்கு மேலே விரலே வச்சி அதிசயிக்கவும் போறே!

**கோமதி:** என்னமோ போங்க!

**முருகேசன்:** (வந்துகொண்டே) அட, என்ன தம்பி நீ! நான் எங்கேயெல்லாம் தேடிட்டு வர்றேன்.

**வர:** என்னமோ மனசு ஒண்ணும் சரியாயில்லே. அப்டீ சுத்திட்டு வந்து சேர்ந்தேன்.

**முரு:** இனிமே அதெல்லாம் சரியாப் போயிடும். வேலே தான் கிடைச்சிப் போச்சே! (கோமதியை நோக்கி) என்னம்மா, நீ சொல்லலே?

**கோமதி:** சொன்னேனே!

**முரு:** ஆமா, நாளேயே வேலேக்குப் போகவேண்டியதுதான்!

**வர:** இந்த உதவியை நான் மறக்கவேமாட்டேன்.

**முரு:** இது உதவி இல்லே தம்பி; மனுசனுக்கு மனுசன் செய்யவேண்டிய கடமை.

**கோமதி:** இவரு நல்ல ராசிக்காரர்தான் போலிருக்கு அப்பா. போனவுடனே வேலே கிடைச்சிப் போச்சே!

**வர:** என் ராசிதானே! ஏன் சொல்றே? விரட்டுப் படுற வெறும்பய ராசி. எல்லாம் உங்கப்பா ராசிதான்!

**முரு:** என்ன ராசியோ போ! புலி வாயிலே தலேயைக் கொடுத்துட்டு தப்பிச்சிட்டு வர்ற மாதிரியில்லே இருக்கு நம்ம பிழைப்பு!

**வர:** இருக்கட்டும், இருக்கட்டும்! எல்லாத்தையும் நொறுக்கித் தள்ளி—

**முரு:** பொறு தம்பி! உனக்கு வர்ற இந்தக் கோபம், இளங்கோ மில் முதலாளிக்கும், அவரு பெத்த மகனுக்கும் வந்தாவில்லே தேவலே. உனக்கும் எனக்கும் வந்து என்ன செய்ய?

**கோமதி:** அவங்களெல்லாம் ரொம்ப உயரத்திலே இருக்காங்க. நம்ம தீனக்குரல் அவங்களுக்கு எட்டாது! நீங்க வாங்க சாப்பிடலாம்.

**வர:** எட்டும், எட்டும்! எட்டாமே எங்கே போகும்!

[மூவரும் வீட்டுக்குள் செல்லுகின்றனர்.]

## காட்சி 30

மில்லில் ஒரு பகுதி - கோமதி வேலே செய்துகொண்டிருக்கிறுள். பாலு, மில்லேச் சுற்றிப் பார்த்துக்கொண்டே அங்கு வந்து சேருகிறுன். அவனேக் கண்ட

கோமதி பயப்பிரராந்தியுடன் தலை குனிந்து கொண்டு தன் வேலையில் ஈடுபடுகிருள். அவள் வேலை செய்வதைக் கவனிப்பதுபோல், அவளுடைய உருவத்தை ஆராய்ந்தபடி மயங்கி நிற்கிருன் பாலு.

**பாலு:** (மோகம் நிறைந்த புன்முறுவலுடன்) என்னைக் கண்டதும் எதுக்கு இந்தப் பாசாங்கோ!

**கோமதி:** (தலைநிமிர்ந்து பார்த்து, தயங்கி நின்று பரிதாபமாக) பாசாங்கா?

**பாலு:** பயம்!

**கோமதி:** பாடுபடுகிறவர்களுக்கு பயமும் பாசாங்கும் எதற்கு?

**பாலு:** மற்றவர்களுக்கு வேண்டியதுதான் கோமதி. ஆனல், உனக்குத் தேவை இல்லை!

**கோமதி:** இப்படி சலுகை காட்டுவதும் தப்பு; பெறுவதும் ஆபத்து! வாங்கும் கூலிக்கு வஞ்சகமில்லாமல் உழைக்க வேண்டும்.

**பாலு:** இது கர்நாடகமான கருத்து கோமதி. நீ என்ன உழைக்கப் பிறந்தவளா? இல்லவே இல்லை! உல்லாசமாக வாழ உருவெடுத்தவள்!

**கோமதி:** உழைக்காமல் உல்லாசமில்லை; உல்லாசமில்லா விட்டால் உழைப்பதிலே சலிப்பு ஏற்பட்டுவிடும்.

**பாலு:** ஆங், அப்படிச் சொல்லு! நீ உல்லாசத்தை விரும்பு கிற ஊர்வசி என்று எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது!

**கோமதி:** ஆனல், வித்தியாசம் ரொம்ப!

**பாலு:** இப்படி உழைத்துச் சாகிறவளுக்கும் உல்லாசத்துக்கும் உறவே கிடையாது என்பதுதானே நீ சொல்கிற வித்தியாசம்! அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதே கோமதி! நீ 'சரி' என்று ஒரு வார்த்தை சொன்னல் போதும். பிறகு இப்படி உடல் தேய உயிர் தேய உழைத்தலைத்து வாடவேண்டியதில்லை; ஒய்யாரமாக உலவி வரலாம்! கண்ணீர்விட்டுக் கலங்கவேண்டியதில்லை; பன்னீரின் நறுமணத்திலே பகட்டாக வாழலாம்! உன் முகத்திலே அரும்பி நிற்கும் வியர்வைத் துளிகளுக்கு பதிலாக, ஜொலிக்கும் முத்தாரங்கள் உன் அழகு மேனியை அலங்கரிக்கும்! பஞ்சுத்தூசி படர்ந்த உன் கட்டழகுக் கருங்கூந்தல், மணம் துஞ்சும் மலர்ச் சோலையாக மாறும்!

**கோமதி:** (வெறுப்புடன்) அடியோடு மாறிப் போச்சு!

**பாலு:** மனம்தானே? சபாஷ்!

**கோமதி:** (கடுகடுப்புடன்) இல்லே!

**பாலு:** பிறகு?

**கோமதி:** உல்லாசத்தைப் பற்றிய உங்கள் விளக்கமும், என் எண்ணமும் ஏறுமாருக இருப்பதைப் பற்றிச் சொல்கிறேன்.

**பாலு:** உனக்கென்ன தெரியும் அதைப்பற்றி? உழைத்துச் சாகிறவள், பாவம்!

**கோமதி:** தான் உழைக்காமல், பிறர் உழைப்பைத் தன தாக்கிக்கொண்டு வாழும் உல்லாசந்தான், நீங்கள் வர்ணிக்கும் ஊதாரித்தனமான உல்லாசம்! மானம் மரியாதை மற்றவர்களுக்கும் உண்டு என்ற மதியற்ற உல்லாசம்!

**பாலு:** (சுற்று முற்றும் பார்த்தபடி) கோமதி!

**கோமதி:** ஆனல், நான் சொல்லும் உல்லாசம் அதுவல்ல! உழைத்தபின் ஓய்வு பெறுவது உல்லாசம்; பாடுபட்ட பின் பலனை அனுபவிப்பது உல்லாசம்; உலகம் உய்ய உழைப்பவர்களிலே நானும் ஒருத்தி என எண்ணி மகிழ்வதிலே உல்லாசம்; செம்மைத் தொழில் புரிந்து சீராக இல்லறம் நடத்துவதுதான் நான் கூறிய உல்லாசத்தைப் பற்றிய நேரடியான விளக்கம்!

**பாலு:** (கோபம் பொங்க) கோமதி!

**கோமதி:** ஆனல் உங்கள் உல்லாசமோ!

**பாலு:** மகிழ்ச்சி தருவது.

**கோமதி:** மனிதர்களுக்கல்ல!

**பாலு:** என்ன சொன்னய்!

**கோமதி:** இம்மாதிரி உல்லாசம் உலகில் எங்குமே இல்லே என்ருக்கினல்தான், மக்கள் சமுதாயம் படும் தொல்லேகளெல்லாம் தொலேயும் என்று சொல்லுகிறேன்!

**பாலு:** இப்போது உனக்குத்தான் தொல்லே தேடிக் கொள்கிருய்.

**கோமதி:** எனக்கது புதிதல்ல!

**பாலு:** பெரிதாக இருக்கும்.

**கோமதி:** பொறுத்துக்கொள்ளப் பார்க்கிறேன்.

**பாலு:** நாசத்தைத் தேடிக்கொள்ளாதே! நான் இந்த மில்லுக்கு மானேஜர். நீ சாதாரணக் கூலி. கூலிக்கு இருக்க வேண்டிய மட்டு மரியாதை—

**கோமதி:** மானேஜருக்கும் இருக்க வேண்டாமா? நான் இங்கு வேலே செய்யத்தான் வந்திருக்கிறேன்.

பாலு: தெரியும்! அதுவும் என் தயவால் என்பதும் ஞாபகமிருக்கட்டும்.

கோமதி: உழைக்கத் தெரியாத சோம்பேறியல்ல நான் — உங்கள் தயவு ஒன்றையே எதிர்பார்த்து நிற்க!

பாலு: சோம்பேறியாகவே இரு. அதைப் பற்றிக்கூட அக்கறை இல்லை. என் தயவு உனக்கு இருக்குமானால், நீ நாள் முழுவதும் பஞ்சணையில் படுத்துறங்கினாலும்சரி, கூலி கிடைப்பதில் தடை எதுவும் இருக்காது!

கோமதி: அது கூலி அல்ல! மானங் கெட்ட ஈனப் பிறவிகள் கையேந்தி வாங்கும் லஞ்சம்!

பாலு: ஏய்! ஏது ஒரேயடியாக மிஞ்சுகிறாய்? உன் யோக்கியதைக்குத் தகுந்தபடி பேச்சு வரட்டும்!

கோமதி: என் யோக்கியதை எனக்குத் தெரியும். உங்கள் தயவு பெற்று, லஞ்சம் வாங்கிப் பிழைக்கும் யோக்கியதை எனக்குக் கிடையாது. ஓடி ஆடி மகிழ வேண்டிய வயதிலிருந்து ஓயாது பாடுபட்டுப் பழகிய கைகள் இந்தக் கைகள்! பாடுபட்ட பலன் பெறுவதைத் தவிர, கேடுகெட்ட வாழ்வுக்கு அச்சாரம் வாங்கும் அனுச்சாரக் கரங்களல்ல, இந்தக் கரங்கள்!

பாலு: அதிகப் பிரசங்கி! வீணாக அழிந்து போகாதே!

கோமதி: ஏழையின் கற்பை ஏசி மிரட்டிப் பறிக்கப் பார்ப்பது பாவம். அது எரி நெருப்பு!

பாலு: அப்படியே எரித்து விடுமோ!

கோமதி: இதற்கு மேல் இனி நான் என்ன சொல்லட்டும்!

பாலு: மூடு வாயை! எவ்வளவோ காலமாகப் பொறுத்திருக்கிறேன். இனி நீ திருந்தாவிட்டால் தெருவில் நின்று சீரழியப் போகிறாய். ஜாக்கிரதை!

[பாலு மிடுக்காக நடந்து செல்லுகிறான். கோமதி கண்ணீர் வடித்துக்கொண்டு நிற்கிறாள். வரதன் ஒரு கூடையில் கழிவுப் பஞ்சை சுமந்துகொண்டு அங்கு வந்து திடுக்கிட்டு நின்று, கோமதியையும் சென்று கொண்டிருக்கும் பாலுவையும் மாறி மாறிப் பார்க்கிறான். அவன் உள்ளம் குமுறுகிறது.]

வர: (வெறி பிடித்தவள்போல் நிற்கும் கோமதியைப் பார்த்து) என்ன கோமதி இது? என்ன நடந்தது?

கோமதி: (கண்களைத் துடைத்துக்கொண்டே) ஒன்றுமில்லை.

[வரதன் தலையிலிருந்த கூடையை வீசி எறிந்துவிட்டு, பாலுவை நோக்கிப் பாய்ந்து செல்ல முற்படுகிறான். கோமதி, அவன் முன் சென்று வழி மறித்துக் கொள்கிறாள்.]

**கோமதி:** ஐயய்யோ! வேண்டாம், வேண்டாம்!

**வர:** ஏன், அவனையே கேட்டு மண்டையிலடித்து விரட்டுகிறேன்! நீ சும்மா இரு.

**கோமதி:** தயவு செய்து ஆத்திரப்படாதீர்கள்! நாம் கூலிகள்.

**வர:** எத்தனை நாளைக்கு?

**கோமதி:** எண்ணிக் கணக்குப் போட முடியுமா?

**வர:** முடியும்! நான் யார் என்றே உனக்குத் தெரியாது!

**கோமதி:** தெரியும்.

**வர:** (திடுக்கிட்டு) ஆங்!

**கோமதி:** அவசரப்பட்டு ஆத்திரமடையும் அன்பர். அதனால் விளையும் அனர்த்தங்கள் என்ன என்பதை எண்ணிக்கூடப் பார்க்க ஒய்வில்லாத உத்தமர்! அல்லல்படும் எனக்காகப் பரிந்து கொண்டு நீங்கள் அவரோடு சண்டை போட்டால், அதனால் அழிவது அவருடைய அந்தஸ்தல்ல; அவருடைய மானமல்ல; அவருடைய கௌரவமல்ல! மனிதர்களாகப் பிறந்து கூலிகளாக வாழும் நாம்தான் இகழப்படுவோம்; எள்ளி நகையாடப்படுவோம். எனக்கும் உங்களுக்கும் இல்லாத உறவைக் கற்பித்து, இந்த சமுதாய மக்களால் விரட்டியடிக்கப்படுவோம். அதுவும் பணபலம் துளியுமின்றி பெண்ணாகப் பிறந்திருக்கும் நான்தான் அதிகம் புண்பட வேண்டும். தயவு செய்து இதையெல்லாம் எண்ணிப் பாருங்கள். எனக்காக — இந்த அபலைப் பெண்ணுக்காக — மானத்தோடு வாழப் போராடிப் போராடித் தவிதவிக்கும் இந்தக் கூலிக்காரப் பெண்ணுக்காகவேனும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பொறுமையோடு இருந்தால் எத்தனையோ போராட்டங்களைத் தவிர்க்கலாம்.

**வர:** தவிர்ப்பது இருக்கட்டும் கோமதி! நான் வந்திருப்பது போராட்டம் நடத்த!

**கோமதி:** அதற்கும் பொறுமை வேண்டும். பொறுமையற்ற நிலையில் போராட்டத்தில் இறங்கினால்; அது புசுபுசுத்துவிடும். பொறுமைதான் நம் மனதை, செயலை, யாவற்றையும் பண்படுத்தும்.

**வர:** (சிந்தனையில் ஆழ்ந்து) பொறுமை...பொறுமை!

**கோமதி:** எல்லா விவரங்களையும் சாவகாசமாகச் சொல்லுகிறேன். துன்பங்களின் நடுவில்தான் இன்பம்!

**வர:** ஆம், பொறுத்திருக்க வேண்டியதுதான்.

**கோமதி:** தயவு செய்து போய்விடுங்கள்.

[அரை மனதுடன் கூடையைத் தூக்கிக் கொண்டு செல்லுகிறான், வரதன்.]

●

## காட்சி 31

○

பாலுவின் அறை - தனது ஆசையை நிராகரித்துவிட்ட கோமதியை எண்ணி ஆத்திரத்துடன் அங்கும் இங்கும் நடை போடுகிறான் பாலு.

**பாலு:** (தனி மொழி) ராஸ்கல்! கெஞ்சக் கெஞ்ச மிஞ்சிக் கிட்டேயில்லே போறா. மூஞ்சியை உடைச்சி எறியிறேன்—மூதேவி! நாளைக்கு வேலை இல்லேன்னு வெளியிலே பிடிச்சித் தள்ளினா பிச்சை எடுத்து அலையிறதைத் தவிர வேறே கதியில்லே! இவளுக்கு இவ்வளவு திமிரா! தடிச் சிறுக்கி!

**கோகிலம்:** (வந்து, திகைத்து நின்று ஆத்திரம் பொங்க) அது எந்தச் சிறுக்கி?

**பாலு:** (கோகிலம் வந்ததைக் கவனிக்காமல் கோபாவேசமாக) கோமதிச் சிறுக்கி! (சட்டென்று திரும்பி சிறிது திடுக்கிட்டுத் தடுமாற்றத்துடன்) ஓ!.. நீயா!

**கோகி:** நானே தான்!

**பாலு:** (சமாளித்துக் கொண்டு) நல்ல வேளை! சமயத்திலே நீ வந்து சேர்ந்தே. மனமாவது கொஞ்சம் ஆறுதலடையட்டும்.

**கோகி:** ஏன், அங்கே ஊடல் அதிகமோ?

**பாலு:** உளறாதே கோகிலம்! என் உள்ளமெல்லாம் ஒரே வேதனை மயம்!

**கோகி:** (ஏளனமாக) ஐயோ பாவம்! அது அங்கேயில்லே வட்டம் போட்டு அலையுது, கோமதிச் சிறுக்கியைச் சுத்திச் சுத்தி! பிறகு வாட்டத்துக்குக் கேட்கவா வேணும்!

**பாலு:** நல்லாச் சொன்னே போ! என் மனசுக்குள்ளே யாரு இருக்கிறாங்களோ, அவங்களே என்னை இப்படி வெறுத்துப் பேசினா, நான் எப்படிப் பொறுக்க முடியும்? பேசாமே காலணுவுக்குக் காவி மண்ணு வாங்கி காயாசத்தை நனைச்சிக் கட்டிக்கிட்டு, நடையைக் கட்டவேண்டியதுதான்!

ம்... காலம் மாறிப் போச்சு - கண்ணியவான்களுக்கும் புண்ணியவான்களுக்கும் இது காலமில்லே என்கிறது ரொம்பக் கரெக்ட், ரொம்பக் கரெக்ட்!

**கோகி:** ஓகோகோ! சன்னியாசி வேஷம் போடுற அளவுக்கு ஊடல் வளர்ந்து போச்சா? சரி, சரி! ஊடல் வந்து கூடல்தானே உவகையின் ஊற்று!

**பாலு:** அப்பச்சரி பேசு! எனக்குக் கோபம் வந்து கொந்தளிக்கிற வரையிலே பிளந்து கட்டு! நமக்குள்ளே அது வரட்டும்; இன்பம் சுரக்கட்டும்!

**கோகி:** நான் ஏன் பேசுறேன்? அவ வந்து பேசட்டும்!

**பாலு:** வேறே எவ இருக்கா பேச? பைத்தியக்காரி! நான் மனசார நேசிக்கிறதே இந்த ஒரே ஒரு கோகிலத்தைத்தான். இதைக் கெடுக்க அந்தக் கோமதிச் சிறுக்கி சுத்திச் சுத்தி வந்து தொலேக்கிருளேன்னு நான் வயித்தெரிச்சல் பட்டுச் சொல்ல வந்தா—

**கோகி:** ஆமா சுத்துவா – என்னேப்போல ஏமாந்து போயி!

**பாலு:** ஏமாந்தவளா இருந்தாத்தான் பரவாயில்லேயே! பெரிய ஏமாத்துக்காரியாவில்லே இருக்கா!

**கோகி:** அதனுலேதான் அண்ணேக்கு ஏத்திவச்சிப் பேசி காக்கா பிடிச்சிப் பார்த்தீங்களாக்கும்?

**பாலு:** என்ன செய்றது? அந்தக் கிழவனே நம்ம பக்கம் இழுத்துக்கிடலாம்னு நாலு வார்த்தை புகழ்ச்சியாச் சொல்லப் போனேன். அவன் சும்மா இருந்து தொலேயக் கூடாதோ? அதைப் போயி மகள் கிட்டே சொல்லியிருக்கான். அவ இதுதான் சமயம்னு, என் கிட்டே வர்றதும், மேஸ்திரி வேலே வேணும்னு கேட்கிறதும், பல்லேக் காட்டுறதும், குலுக்குறதும், மினுக்குறதும், ஒய்யாரமா வேறே நடந்து காட்டுறதும் – செச்சே! சகிக்கலே போ! ஒரேடியாப் புரட்டிப் போடலாம்னுதானே பார்க்கிறு!

**கோமதி:** (பல்லேக் கடித்துக்கொண்டு) ஊஹூம்! அவ்வளவு தூரத்துக்கு அவ ஆளா?

**பாலு:** நெஞ்சு துணிஞ்சி கொஞ்ச வர்ருளே அந்தப் பஞ்சப் பய மகள்ன்னுதானே நினேச்சேன். பஞ்சுப் பொதியிலே நெருப்புப் பிடிச்ச மாதிரி, கோபம் பத்திக்கிட்டு வந்தது. ரெண்டு வார்த்தை காரசாரமாப் பேசித் தீர்த்துக் கட்டுற நேரத்திலே நீ வந்து சேர்ந்தே. இப்போ அனுவசியமா

சந்தேகப்பட்டு, என் உயிரை வாங்குறே. ம்... என்ன செய்றது? உள்ளதைச் சொல்றவங்களுக்குத்தான் இந்த லோகத்திலேயே இடமில்லேயே!

**கோகி:** (ஆக்ரோஷத்துடன்) இருக்கட்டும், இருக்கட்டும்! அவளை என்ன பண்றேன் பாருங்க!

**பாலு:** ஐயய்யோ! விஷயம் விபரீதமாப் போகுதே! அவசரப்படாதே கோகிலம்; கொஞ்சம் பொறு. பொறுத்தார் பூமி ஆள்வார்.

**கோகி:** உமியை ஊதுவாங்க. அவ அப்பன் பேரு என்ன?

**பாலு:** ஏது ஏது, பிரச்னை பெரிசாப் போச்சே!

**கோகி:** பெரிசோ சிறிசோ? முதல்லே அவளைப் பெத்தவன் பேரைச் சொல்லுங்க!

**பாலு:** சொல்லாமே விடப்போறயா! ஊம்.... முருகேசன்.

**கோகி:** முருகேசன் மகள் கோமதி — முருகேசன் மகள் கோமதி.

**பாலு:** சரி, சரி! அர்ச்சனை ஆரம்பமாயாச்சு போலிருக்கே!

**கோகி:** அவ நாசமடையிற வரையிலே இந்த நாமாவளி நீடிக்கும்!

**சொக்கலிங்கம்:** (குரல்மட்டும்) ஊக்கும்; அதுதான் நடக்காது! நாலும் தெரிஞ்சவங்க நாக்கைப் பிடுங்கி நறுக்கி நொறுக்கிப் போடுவாங்க, நொறுக்கி!

[குரல் கேட்டு கோகிலம் - பாலு அதிர்ச்சியடைகின்றனர். சொக்கலிங்கம் வருகிறான்.]

**பாலு:** டே டேய், என்னடா அது?

**சொக்:** ஒண்ணு மில்லே முதலாளி — பழைய பேப்பர் வாங்குறவன்! மூணு வீசையை மொத்தமாத் தூக்கி வச்சி ஒரு வீசைன்னு நிறுத்துக் காட்டுறான்! தராசிலே இருக்கிற நாக்கு நட்டமாத்தான் நிக்குது — அவ்வளவு நேக்கா வச்சிருக்கான் முதலாளி அந்த நாக்கை! அதுதான், நாலும் தெரிஞ்சவங்க நாக்கைப் பிடுங்கி நறுக்கி நொறுக்கிப் போடுவாங்க நொறுக்கின்னு ஒரு எச்சரிக்கை கொடுத்துட்டு வர்றேன்.

**பாலு:** அட, என் இளஞ்சிங்கமே!

**சொக்:** பிறகென்ன முதலாளி! ஏமாத்துறவன் எவனுயிருந்தாலும் எனக்குப் பிடிக்காது. எச்சரிக்கை கொடுப்பேன்; மிஞ்சுனு அவ்வளவுதான்! (போகிறான்)

**கோகி:** (சொக்கலிங்கம் போன பின்) தீராத தலை வேதனை தான் போங்க.

**பாலு:** திருவாத்தனைப் போகச் சொல்லு!

**கோகி:** அவன் புத்திசாலியாச்சே! இவன் கிட்டே அந்த அறிகுறிகூடக் காணுமே!

**பாலு:** அவன் அந்தக் காலத்துத் திருவாத்தன்; புத்திசாலி யாத்தான் இருந்திருப்பான். இவன் இந்தக் காலத்துத் திருவாத்தன் பாரு! பிறகு எப்படி இருப்பான்? சரி, சரி, நீ புறப்படு! பூங்காவிலே மாங்குயில் கூவிட—

**கோகி:** போதும், போதும்; அதோடே நிறுத்துங்க! மிச்சம் மீதியை அங்கே போயிப் பார்த்துக்கிடலாம். இங்கே தான் நக்கீர பரம்பரை நடமாடிக்கிட்டே நம்ம உயிரை வாங்குதே!

[இருவரும் செல்லுகின்றனர்.]

●

## காட்சி 32

○

தெரு – கோமதி உற்சாகத்துடன் நடந்து செல்லுகிருள். எதிரே வரதன் வருகிருன்.

**வரதன்:** எங்கே கோமதி, இவ்வளவு அவசரமாப் புறப் பட்டுட்டே?

**கோமதி:** ம்.... வேறெங்கேயுமில்லே. கொஞ்சம் கோகிலம்மா வீட்டு வரைக்கும் போயிட்டு வரணும்.

**வர:** (திடுக்குற்று, சந்தேகத்துடன்) கோகிலம்மாவா!

**கோமதி:** ஆமா! சீமையிலிருந்து வரப்போருரு பாருங்க, நம்ம முதலாளி மகன், அவரைக் கட்டிக்கிடப் போறவங்க தான் இந்தக் கோகிலம்மா.

**வர:** (எரிச்சலை அடக்கி, ஏளனமாக) ஓகோகோ, அப் படியா சங்கதி! அவர் வருகிற வரையிலே இந்தம்மா காத்துக் கிட்டிருக்காங்களாக்கும், கன்னிப் பெண்ணு!

**கோமதி:** அவருக்குன்னு வளர்ந்த பெண்தானே!

**வர:** அப்படிப் போடு டப்பாசுக் குண்டை! அப்போ அவர் வந்ததும்—

**கோமதி:** அடுத்து வரும் நல்ல நாளிலேயே முகூர்த்தம்.

**வர:** அடிரா சக்கை! ம்....

**கோமதி:** தாலி கட்ட வேண்டிய சடங்கு ஒண்ணுதான் பாக்கி.

**வர:** மற்றக் காரியங்களெல்லாம் நடந்தாச்சு!

**கோமதி:** அவங்களுக்கென்ன, கல்யாணத்துக்குப் பண மில்லேயேன்னு கவலேயா? மாப்பிள்ளே கிடைக்க வழி இல்லே யேன்னு விசாரமா?

**வர:** எதைப் பற்றித்தான் அவங்களுக்கு என்ன கவலே? ம்.... பெண்ணு நல்ல பெண்ணே?

**கோமதி:** செல்வக் குடும்பத்துப் பெண்ணு மெதமாவா இருக்கும்?

**வர:** அதெப்படி இருக்கும்? பணக்கார மினுமினுப்புத்தான் மின்னிக்கிட்டிருக்குமே – கில்ட் நகைக்கு மெருகு கொடுத்த மாதிரி! பாடு படுற ஏழைப் பெண்ணு, பட்டை போடாத வைரம் போல ரத்தம் சுரண்டி வாடிப் போயி நிக்கும்!

**கோமதி:** (சிறிது வெட்கமுற்று) அதென்னவோ, அந் தம்மாளே நான் இதுவரையிலே பார்த்ததுகூட இல்லே. இண்ணைக் கென்னமோ தெரியலே, என்னேப் பார்க்கணும்னு சொல்லி அனுப்பியிருக்காங்க.

**வர:** (சந்தேகத்துடன்) ஊஹூம்! ஆமா, அவங்களுக்கு உன்னே எப்படித் தெரிஞ்சது?

**கோமதி:** அதுதானே எனக்கும் ஆச்சரியமாயிருக்கு. என் பேரு கூட தெரிஞ்சிருக்கே!

**வர:** ம்... எதுக்கு வரச் சொன்னுங்களாம்!

**கோமதி:** தெரியலேயே! நேரிலே போனத்தானே தெரியும். அப்போ நான் போயிட்டு வரட்டுமா? (போகத் திரும்பு கிருள்.)

**வர:** ஏன் கோமதி, இப்படி ஒருவருக் கொருவர் முன்பின் தெரியாமே, விஷயம் இன்னதுன்னு வேறே புரியாமே, தனியாப் போறது....

**கோமதி:** அதைப் பத்தி என்ன, பரவாயில்லே. பேச்சோடு பேச்சா இந்த மானேஜர் செய்ற அட்டூழியத்தையும் லேசா ஒரு வார்த்தை—

**வர:** சொல்லி ஆகப்போறது ஒண்ணுமே இல்லே!

**கோமதி:** அதுக்கில்லே; நாளேக்கு சின்ன முதலாளி வந்ததும் அவர் காதிலே போட்டு வைப்பாங்க பாருங்க.

**வர:** ஆமாமா; முதல்லே அத்தைக்கு மீசை முளேக்கணுமே! பிறகுதானே சித்தப்பான்னு கூப்பிடலாமா, வேண்டா மான்னு சிந்திக்கலாம்.

**கோமதி:** சரியாப் போச்சு போங்க. நான் இப்போ சொன்னு நம்ப மாட்டீங்க. எல்லாத்துக்கும் சின்ன முதலாளி வரட்டும். பிறகு தெரியும்.

**வர:** கண்டிப்பாத் தெரிஞ்சு போகும்.

**கோமதி:** பிறகென்ன்? அப்போ நான் வரட்டுமா?

**வர:** நான்கூட துணைக்கு வரட்டுமா?

**கோமதி:** வேண்டாம், வேண்டாம்!

**வர:** துணையிருக்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன்.

**கோமதி:** எதுக்கு? வேண்டாம்! கூலிக்காரன் பெண்ணைப் பாதுகாக்க பட்டாளமா வேணும்? தமிழச்சிக்கு இருக்க வேண்டிய பண்பும், அதன் வழி நடக்கவேணும் என்கிற மன உறுதியும் இருந்தால் போதும்.

**வர:** போதும்தான்! ஆனல் அந்தத் தமிழ் வழிதான் சிறந்த வழின்னு எல்லோரும் உணரும் வரையிலே கொஞ்சம் பாதுகாப்பும் இருக்கத்தான் இருக்கணும்.

**கோமதி:** நெஞ்சிலே துணிவு இருக்கிற வரையிலே துணை எதுக்கு? நீங்க போங்க. (போகிருள்)

**வர:** உங்க அப்பாவுக்குத் தெரியுமோ?

**கோமதி:** (சென்றவள் நின்று) அவர்தானே போகச் சொன்னரு.

**வர:** சரியாப் போச்சு!

**கோமதி:** ஏன்?

**வர:** இல்லே, தன்னைப் போலத்தான் லோகமெல்லாம் இருக்கும்ன்னு நினைச்சிப்பாரு. பசிக்கிறவனுக்கு லோக மெல்லாம் பசியாலே துடிக்கிற மாதிரி தோணும். சுக வாசிக்கு நாடு முழுதும் சுகபோகத்திலே ஆழ்ந்து கிடக்கிற மாதிரி தெரியும். கெட்டவனுக்கு நல்லவன்கூடக் கெட்டவன்! நல்லவனுக்கு எல்லோரும் நல்லவர்கள்!

**கோமதி:** நல்ல தத்துவம்! (போகிருள்)

**வர:** (செல்லும் கோமதியைப் பார்த்தவாறு பெருமூச்சு விடுகிருன் – தனிமொழி) கோகிலம்! கொலை செய்யக்கூட அஞ்சாத வஞ்சகி!

[கோமதிக்குத் தெரியாமல் அவளைப் பின்தொடர்ந்து செல்லுகிருன் வரதன்.]

●

## காட்சி 33

○

கோகிலம் தன் அறையில் ஒரு படத்தைப் பார்த்து மகிழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருக்கிருள். கோமதி

வருகிருள். பேச நா எழாத நிலையில் இரண்டு மூன்று தடவை கும்பிட முயல்வதும், கோகிலம் கவனிக்காமல் இருப்பது கண்டு திணறுவதுமாகத் திண்டாடுகிருள். தற்செயலாக கோகிலம் திரும்பிப் பார்க்க, கோமதி கையெடுத்துக் கும்பிடுகிருள்.

**கோகிலம்:** (ஆத்திரம் பொங்க வெறித்துப் பார்த்து) வாம்மா, பரதேவதே! இப்படி வா, என் எதுக்க!

**கோமதி:** (வரவேற்பு விபரீதமாய் இருப்பது கண்டு பயந்து) கூப்பிட்டீங்களாம்...

**கோகி:** (கடுகடுப்பாக) ஆமா, அழைச்சாங்க – எத்தனை பேரை மயக்கியிருக்கேன்னு கணக்குப் போட்டுத் தெரிஞ்சிக்கிட!

**கோமதி:** (திடுக்கிட்டு) என்னம்மா இது, இப்படிப் பேசுறீங்க?

**கோகி:** ஏன் தாயே! இடி விழுகிற மாதிரி இருக்கோ?

**கோமதி:** இல்லம்மா, நீங்க ஏதோ தவறு...

**கோகி:** சரித்தாண்டி நிறுத்து! உன் பேருதானே கோமதி?

**கோமதி:** ஆமம்மா.

**கோகி:** முருகேசன் மகள்?

**கோமதி:** ஆமாங்க.

**கோகி:** பிறகென்னடி? உன் வண்டவாளம்தான் ஊரெல்லாம் தெரிஞ்சிருக்கே. ஏண்டி நீவி வேஷம் போடுறே?

**கோமதி:** நிசமா நான் நிரபராதியம்மா!

**கோகி:** நீதானே! அடடா! நிசம் பேசுற நேர்மைக்காரி நீ ஒருத்திதாண்டி இந்த லோகத்திலே! – ஏண்டி, உன்னை மில்லுலே வேலை செய்யச் சொன்னுங்களா? இல்லே, அகப் பட்ட ஆண்களை மயக்கி வலை போட்டுப் பிடிச்சி அகப் பட்டதைச் சுருட்டச் சொன்னுங்களா?

**கோமதி:** (பரிதாபமாக) அம்மா, அம்மா! நான் அறியாத பெண்ணம்மா! என்னை இப்படியெல்லாம் சொல்லாதீங்க!

**கோகி:** (ஏளனமாக) ஆமா, பல்லு முளைக்காத பப்பா! பேசுறதைப் பாரு பேசுறதை! மினுக்கிக் குலுக்கி பல்லை இளிச்சிட்டா. பார்க்கிறவங்க மயங்கிப் போவாங்கண்ணு நினைச்சே?

**கோமதி:** நான் ஏழைப் பெண்ணம்மா! ஏதும் அறியாதவ. ஏதோ உங்க தயவாலே வயித்தைக் கழுவிப் பிழைக்கிற பேதை!

**கோகி:** ஏழையா இருந்தா என்னடி? அழகாத்தானேடி இருக்கிறே?

**கோமதி:** நான் எப்படியிருந்தாலும் அந்த மாதிரி குண மெல்லாம் இல்லாதவளம்மா. என்னை நம்புங்க.

**கோகி:** உன்னையாடி நம்பச் சொல்றே—ஊரைக் கெடுக்கப் பிறந்தவளே! உன்னைப் பத்தித்தான் ஏகப்பட்ட புகார்கள் என்கிட்டே வந்து சேர்ந்திருக்கே!

**கோமதி:** அதெல்லாம் நிஜமில்லம்மா; கொஞ்சங்கூட நிஜமில்லே! எல்லாம் பொய், பொய்! வீண் பழி!

**கோகி:** மூடு வாயை! நீதான் அரிச்சந்திரன் பரம் பரையிலே அவதரிச்சவ; மத்தவங்களெல்லாம் பொய் சொல்ற புளுகு சுருட்டுக்காரங்க. ஏண்டி!—ஒழுங்கா உன் ஒயிலாட்டங்களை ஒப்புக்கொண்டு இனிமே ஒழுங்கா நடந் துக்கோ. இல்லே, உன்னை நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது!

**கோமதி:** என்ன வேண்டுமானாலும் செய்யுங்கம்மா. நான் என்ன செய்ய முடியும்? நீங்க சொல்ற மாதிரி ஒண்ணுமே இல்லே. இனி நான் எதை ஒப்புக்கொள்ளட்டும்?

**கோகி:** நீயாடி ஒப்புக் கொள்ளுவே? அவ்வளவு நாணயம் உனக்கு இருந்தா, நீ ஏன் அவுசாரிக் கழுதையா அலையுறே?

**கோமதி:** ஏழை என்கிறதுக்காக ஏளனமாப் பேசாதீங் கம்மா!

**கோகி:** அட எழவே! அது வேறே உன் உடம்பிலே உறைக்குதோ?

**கோமதி:** கன்னிப் பெண் மீது இப்படியெல்லாம் களங்கம் கற்பிக்கிறதை நான் எப்படியம்மா சகிக்கட்டும்? ஏழை அழுத கண்ணீர் —

**கோகி:** குளம் குட்டையை உடைச்சிடாது! சும்மா நீட்டாதே!

**கோமதி:** உங்களைப் போல நானும் குமரிப் பெண்; இனிமே வாழ வேண்டியவ.

**கோகி:** அதுக்கு வழி தேடத்தானேடி இப்போ விழிகளை உருட்டுற வேலையிலே இறங்கியிருக்கிறே!

**கோமதி:** வீணா என் மேலே பழி போடாதீங்கம்மா!

**கோகி:** (ஏளனமாக) ஆமா, நீதான் எனக்கு சக்களத்தியா வந்து வாய்க்கப்போற சொக்கழகி! அதனாலே நான் பயந்து போயி, உன்மேலே பழியைத் தூக்கிப் போடுறேன். வெறுங்

கழுதைக்கு வாயைப் பாரு, வாயை! — இப்போ மரியாதையா ஒப்புக்கோ! யார் யாரை மயக்கிப் பணத்தைத் தட்டத் திட்டம் போட்டிருக்கே? அதைச் சொல்லிவிடு. உன்னை ஒண்ணும் செய்யாமே விட்டுடுறேன். இல்லே, நீ படுற பாடு நாய்கூடப் படாது.

**கோமதி:** (பரிதாபமாக) நீங்க பேசுறதைப் பார்த்தா என் குலையே நடுங்குதம்மா!

**கோகி:** கொலை செய்யக்கூட அஞ்சாதவளாச்சேடி நீ! உனக்கேண்டி குலை நடுங்குது?

**கோமதி:** (பரிதாபம், பயம், அழுகை, ஆத்திரம் ஒன்று படக் கலந்து) அம்மா, நான் பாடுபட்டுப் பிழைக்கிற ஏழை பெத்த பெண்; பணத்துக்காக நடை பிண வாழ்வு நடத்தும் நாசகாரியல்லம்மா! கந்தைத் துணி கட்டக்கூட கதியில்லாத வளாயிருந்தாலும், பட்டுக் கட்டிப் பகட்ட நினைக்கும் பரத்தை யல்லம்மா! தங்க நகைக்காக ஆசைப்பட்டு என் நகைப்பிலே நஞ்சு கலக்கத் தெரியாத பஞ்சை பெத்த பெண்ணம்மா நான், பஞ்சை பெத்த பெண்! நம்புங்க!

**கோகி:** நாடக மேடைக்குப் போடீ! நாலு காசு சம்பாதிக் கலாம். என்கிட்டே வந்து ஏன் எதுகை மோனையோடே அள்ளி வீசுறே?

**கோமதி:** நான் என்ன செய்யட்டும்? கொதிக்கும் மனசு ஆறுதலடைய—

**கோகி:** (சரேலென்று அருகில் சென்று கோமதியின் கன்னத்தில் ஓங்கி அடித்து) ஒண்ணு கொடுத்தா, தானு அடங்கிப் போகும்.

[கோமதி திக்பிரமை அடைந்து கண்ணீர் வழிந்தோட விக்கி விக்கி அழுகிறுள்.]

**கோகி:** (அலட்சியமாக வேறு பக்கம் திரும்பிக்கொண்டு) பிரசங்கம் பண்ண வந்துட்டா, பிரசங்கம்! பிச்சைக்காரக் கழுதை! — போ, என் முன்னுலே நிக்காதே! தரித்திரம் பிடிச்ச மூதேவி! இனிமே இந்த மாதிரி தறுதலையா நடந் தேண்ணு கேள்விப்பட்டேன், அவ்வளவுதான்! இந்த ஊரை விட்டே விரட்டியடிக்கச் சொல்வேன். ஜாக்கிரதை! போ... போடீ! — இப்போ போறயா, இல்லே இன்னும் ரெண்டு வேணுமா?

**கோமதி:** (அழுதவாறு) அப்பாவிகளைக் கொடுமைப் படுத்துறது — (அதற்குமேல் வார்த்தைகளுக்கு பதில் அழுகை பீறிட்டெழுகிறது.)

**கோகி:** துப்பாக்கியாலே சுட்டுப் பொசுக்காமே உன்னே சும்மா போகச் சொல்றேன் பாரு. அதைப் பெரிசா நினேடி நீலி! பிரசங்கம் பண்ணினே பிச்சிப் போடுவேன் பிச்சி!

[கோமதி செல்லுகிருள்.]

**கோகி:** (தனி மொழி) இவளைப் போல பாசாங்குக் காரியை நான் இதுவரையிலே பார்த்ததில்லே!

●

## காட்சி 34

○

கோகிலத்தின் வீட்டுக்குள் சென்ற கோமதியை எதிர் பார்த்த வண்ணம், மன அமைதியின்றி தெருவில் நிற்கிருன் வரதன். இந்நேரம் கண்களில் நீர் பொங்க அங்கு வருகிருள் கோமதி.

**வரதன்:** (திடுக்கிட்டு) என்ன கோமதி இது?

**கோமதி:** (கண்களைத் துடைத்துக் கொண்டே) ஒண்ணு மில்லே....நீங்க ஏன் இங்கே வந்தீங்க?

**வர:** ஏன் வந்தேனு!... இப்போ என்ன நடந்தது? அதைச் சொல்லு முதல்லே!

**கோமதி:** நான் என்னத்தைச் சொல்ல! (பீறிட்டெழும் அழுகையை அடக்குகிருள்.

**வர:** என்ன நடந்தது கோமதி? – சொல்லேன்!

**கோமதி:** நீங்க எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?

**வர:** உடனே செய்றேன்; சொல்லு! என்ன வேண்டு மானுலும் செய்யத் தயார்!

**கோமதி:** ம்.... நீங்க ஒண்ணும் தவரு நினேக்கக் கூடாது.

**வர:** நினேக்கவே மாட்டேன்.

**கோமதி:** (தயங்கியவாறு) இனிமே, நீங்க எங்க வீட்டுத் தாழ்வாரத்திலே படுத்துக்கிடுறதுக்கு பதிலா வேறே எங்கே யாவது...

**வர:** (திடுக்கிட்டு) ஏன்?

**கோமதி:** இந்த உதவி நீங்க செய்தா, என் மேலே இல்லாத களங்கமெல்லாம் கற்பிக்க மாட்டாங்க. கன்னத்திலே அடிபடவேண்டிய தலைவிதியும் நேராது.

**வர:** என்ன! என்னுலா உனக்குக் களங்கம்? கன்னத்திலே அடி?

**கோமதி:** கண்ணியமானவங்க யாரும் அப்படிச் சொல்ல மாட்டாங்க. ஆனு, நான் மயக்கித் திரிகிற கள்ளியாம்!

என்னைத் திட்டி கன்னத்திலே அடிச்சி, விரட்டியடிச்சா அந்தக் கோகிலம். நான் யாரை மயக்குறேன்னு எனக்கே தெரியலே. சொல்லப்போனா நீங்க ஒருத்தர்தான் எங்களோடே நெருங்கிப் பழகுறவங்க. உங்களை எனக்குத் தெரியும். என்னை உங்களுக்குத் தெரியும். ஆனால் ஊராருக்கு?

[வாதன் முகத்தில் கோபம் கொந்தளிக்கிறது. ஆவேசமடைந்தவனாய் அங்கிருந்து சரேலென்று கிளம்புகிறான். அவனைத் தடுத்து நிறுத்துகிறாள், கோமதி.]

**கோமதி:** நில்லுங்க! எங்கே போறீங்க?

**வர:** எங்கேயுமில்லே. நீ பேசாமலிரு! (பல்லைக் கடித்துக் கொண்டு) உன்னை அடித்த அவளுடைய கையை ஒடிக்கப் போகிறேன்.

**கோமதி:** ஐயய்யோ! இது தப்பு. ரொம்பத் தவறான எண்ணம்! (கைகளை நீட்டியவாறு வழி மறித்துக்கொண்டு நிற்கிறாள்.)

**வர:** தயவு செய்து என்னைத் தடுக்காதே! கூலிக்காரப் பெண்ணுக்கும் மானம் மரியாதையுண்டு என்பதை மண்டையிலடித்து அறிவுறுத்திவிட்டு வருகிறேன். மமதை கொண்டலையும் மாயா ஜாலக் கள்ளி!

**கோமதி:** வேண்டாம் வரதன்! வேண்டவே வேண்டாம்! இப்போதிருக்கும் அபவாதங்களே போதும். இனி நீங்கள் வேறு எனக்காகப் பரிந்து பேசி சண்டைக்குப் போனால் அதோடு நாம் அழியவேண்டியதுதான்! அவர்கள் பணக்காரர்கள்! அதிகாரம் படைத்தவர்கள்! அவர்களால் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.

**வர:** அதுதான் என்னிடம் நடக்காது! தயவு செய்து என்னைத் தடுக்காதே! இதனால் என்ன அபவாதங்கள், அனர்த்தங்கள், அபாயங்கள் வந்தாலும் சரி, அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை! எதுவும் என்னை அண்ட முடியாது! நான்...நான்...

**கோமதி:** ஆனால் நான்? பெண்!—கற்புக்குக் களங்கம் கற்பிக்கப்படும்போது கண் கலங்கி நிற்கவேண்டிய துர்பாக்கியவதி பெண் ஒருத்திதான்! இந்த நிலையில் எனக்காக நீங்கள் பரிந்து பேசினால் எத்தனை யெத்தனை வதந்திகள் கிளம்பும்! அதனால் என் காலம் முழுவதும் கண்ணீர் சிந்தி மடிவதைத்தவிர வேறு கதி? தயவுசெய்து பேசாமலிருங்கள்!

**வர:** என்னால் எதுவும் செய்ய முடியும் கோமதி, எதுவும் செய்ய முடியும்! நான் இந்த இளங்கோ மில்—

**கோமதி:** தொழிலாளி!

**வர:** (திடுக்கிட்டு) ஊம்!

**கோமதி:** வீரம் பேசுகிற இடமில்லே இது வரதன்! வாழ வேண்டிய பெண்ணொருத்தியை வெறும் வதந்திகளாலேயே வாட்டிக் கொன்று விடாமல் வாழவைக்க வேண்டிய கட்டம்!

**வர:** (வெறுப்புடன்) ம்... வதந்திகள்! இந்த வதந்திகளால் உன்னை என்ன செய்துவிட முடியும்?

**கோமதி:** அபவாதம் என்ற படுகுழி தோண்டி, நிந்தனை என்ற மண்ணை வாரிப் போட்டு என்னைப் புதைக்க முடியும்.

**வர:** ஒருக்காலும் முடியாது!

**கோமதி:** முடியும். காரணம் நான் பணபலம் படைத்தவளல்ல. என்மீது ஏளனக் கணைகள் எளிதாகப் பாயும்!

**வர:** பணமாவது, பலமாவது! அதையெல்லாம் மதிக்கும் காலம் மலை ஏறிவிட்டது. இப்போது குணத்தைத்தான் பெரிதாக மதிக்கிறேன். பணவசதி இருக்கிறது என்கிற அகங்காரத்தால் குணவதிகள் ஏசப்படுவதை என்னால் சகிக்க முடியாது கோமதி, சகிக்க முடியாது! சகிக்கமாட்டேன்; சகிக்கவேண்டிய அவசியமும் எனக்கில்லை!

**கோமதி:** அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! நீங்கள் மட்டும் நல்லவராக இருந்தால் போதுமா? உங்களைப் போல மற்றவர்களும் ஆக வேண்டாமா? அதற்கு வழி அவ்வப்போது ஆத்திரப்பட்டு அடங்கிவிடுவதல்ல; அமைதியோடு பாடுபடுவதுதான்!

**வர:** அமைதியின் வழியிலே அதிக தூரம் நடந்துவிட்டேன். இனியும் அமைதி என்றால்...

**கோமதி:** அமைதிதான் அறிவின் ஊற்று. ஆத்திரம் அறிவை மாய்த்துவிடும். அமைதியின் வழியிலே உருவான லட்சியம் அழியாதது; வெற்றிதர வல்லது.

**வர:** அநியாயத்தையும் அக்கிரமத்தையும் கண்டு ஆத்திரப் படாமல் ஆனந்தப்படவா சொல்லுகிறாய்?

**கோமதி:** இடம் பொருளைக் கவனிக்கும்படி சொல்லுகிறேன்.

**வர:** எனக்கும் தெரியும் அந்த இடமும் பொருளும்! உனக்காக நான் பேசினால் எனக்கும் உனக்கும் இல்லாத தொடர்பைப் பற்றிப் பொல்லாத பேச்சுப் பேசுவார்கள். அவ்வளவுதானே!

**கோமதி:** அதை அவ்வளவு எளிதில் அலட்சியப்படுத்திவிட முடியுமா?

வர: அலட்சியப்படுத்தவே மாட்டேன்! அந்த அபவாதங்களை அடியோடு ஒழித்துக் கட்டுவதையே என் லட்சியமாகக் கொள்வேன்! — கோமதி, நீ மட்டும் மறுக்காமலிருந்தால்...

**கோமதி:** இருந்தால்?

வர: உன்னையே நான் மணம் செய்துகொள்வேன்.

**கோமதி:** (வியப்பும் களிப்பும் கலந்தவாறு) ஆங்!

வர: ஆமாம்! பணப்பகட்டிலே மறைந்து கிடக்கும் குணக் கேடுகளைக் கண்டறிந்தபின், நான் கொண்ட முடிவு இது! (**கோமதி** பரபரப்புடன் ஏதோ சொல்ல வாயெடுக்கிருள்.) ஏன், நான் நாடோடி என்று பயப்படுகிருயா?

**கோமதி:** ஊஹூம்! (வெட்கத்தால் தலை குனிகிருள்.)

வர: ஆம்; நான் நாடோடிதான் — இன்னும் சில நாட்களுக்கு!

**கோமதி:** இப்போது மட்டுமென்ன! உங்களை நாடோடி என்று யார் சொல்ல முடியும்? நேர்மையாக உழைத்துப் பிழைக்கும் தொழிலாளி.

வர: ஆம்; அதிசயமான தொழிலாளி!

**கோமதி:** அதென்ன, அப்பேர்ப்பட்ட அதிசயம்!

வர: அதிசயம்தான்! இந்த உலகில் யாரும், எப்போதும், எங்கேயும் கண்டும் கேட்டும் அறியாத அதிசயம் – யாராலும் யூகித்துக்கூடப் பார்க்க முடியாத அற்புதம்!

**கோமதி:** என்னமோ போங்க! எல்லாவற்றையும் நான் பார்க்கத்தான் போகிறேன்.

வர: நிச்சயமாக! அதோடு இந்தக் கோகிலங்கள் படும் பாடுதான் வெகு வேடிக்கையாக இருக்கும்!

●

## காட்சி 35

○

சோமசுந்தரம் பங்களாவில் முன் ஹால் – வசந்தனிடமிருந்து எவ்வித தகவலும் வராததால் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருக்கிருர், சோமசுந்தரம். அவர் அருகில் அமர்ந்திருக்கும் கோகிலம் கவலைப்படுவதாக நடிக்கிருள்.

**சோமசுந்தரம்:** ம்... அமெரிக்காவிலிருந்து வந்ததும் ஆடம்பரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்கலாம்ன்னு ஆசையோடே இருந்தேன். அவ்வளவையும் கெடுத்துட்டான் அரை நொடியிலே!

**கோகிலம்:** அதுக்கென்ன மாமா, எல்லாம் நடக்கிற போதுதானே நடக்கும்!

**சோம:** என்னமோ போ! நீ மேலுக்குத்தான் இப்படிப் பேசுறே. உன் மனசுக்குள்ளே எவ்வளவு கவலே இருக்குன்னு எனக்குத் தெரியாதா?

**கோகி:** ம்... அதுக்கு அளவே இல்லே! என்ன செய்றது?

**சோம:** (கோபமாக) என்ன செய்றதா? எவன் எக்கேடு கெட்டா நமக்கென்னண்ணு அவன் பாட்டுக்குப் போயிட்டானே – போனவன் இன்ன இடத்திலே இருக்கிறேன் – இன்னது செய்றேன்னு ஒரு வரியிலே ஒரு தகவல் அனுப்புறது. இங்கே நான் ஒருத்தன் இருக்கிறேன் – கல்யாணத்துக்கு ஒரு பொண்ணு காத்திருக்கு என்கிற நினைப்பு கொஞ்சமாவது இருக்கா அவனுக்கு? ஒண்ணரை மாசமா ஒரு தகவலும் இல்லேண்ணு, அவனேப்பத்தி நாம என்ன நினைக்கிறது? ம்... பேருதான் வசந்தன்! நம்ம மனசுலே சூறுவளியையில்லே கிளப்பிவிட்டுட்டான்!

**கோகி:** ம்... அவருக்கா மனசு இரங்கி, ஒரு தகவல் அனுப்பலேன்னு, நாம அவரை எங்கேன்னு தேடிக் கண்டு பிடிக்கிறது?

**சோம:** இவனுக்குத்தான் லோகம் சுத்தத் தெரியும்; மத்தவங்களுக்கெல்லாம் ஒண்ணும் தெரியாதுன்னு நினேச்சிக்கிட்டான் போலிருக்கு! இருக்கட்டும், இருக்கட்டும்! இன்னும் சரியா ஒரு மாசம் பார்க்கப் போறேன். ஒரு தகவலும் வரலே, அவ்வளவுதான்! அவன் எங்கே இருந்தாலும் சரி, எவ்வளவு செலவழிஞ்சாலும் சரி, அவனேத் தேடிப்பிடிச்சிக் கொண்டாந்து சேர்த்திட்டுத்தான் மறுவேலே!

**கோகி:** அதுக்குள்ளே வந்துடுவார் மாமா. என்னே மறந்துட்டாலும் உங்க நினைப்பாவது இருக்காதா?

**சோம:** இருந்தா, இவன் ஏன் இப்படித் தலே மறைவா தறுதலேயா அலேயிருன்? – ஜப்பானுக்குப் போயிட்டானும், ஜப்பானுக்கு! அங்கேயிருந்து ஒரு சேதி அனுப்ப நினேப்பில்லேயே, இவன் என்னத்தைப் படிச்சவன்? இல்லே, என்னத்தைப் படிச்சிப் புரட்டிட்டான்னு கேட்கிறேன்!

**கோகி:** நீங்க இப்படியெல்லாம் நினேக்காமே கொஞ்சம் நிம்மதியா இருங்க மாமா! அவரென்ன ஒண்ணுந் தெரியாதவரா? எங்கே இருந்தாலும் சுகமா இருப்பாரு.

**சோம:** இருப்பான்! அதை இங்கே இருக்கிறவங்க தெரிஞ்சிக்கிடுறது எப்படி? – என்னமோ போ! நல்ல பிள்ளேயைப் பெத்தேன்: நல்லாக் கொண்டுபோயி படிக்கப் போட்டேன்!

இவன் நமக்கேத்த பிள்ளை இல்லே! – டேய், கோபால்! – ம்... உங்க அப்பா வேறே என்ன சொன்னுரு?

**கோகி:** வேறே என்ன சொல்லப் போருரு! இவரை எதிர் பார்த்து அவரு ஏங்குருரு.

**சோம:** இருக்காதா பிறகு? பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்ன்னு அவருக்கும் ஒரே கவலே!

**கோபால்:** (வந்துகொண்டே) கூப்பிட்டீங்களா?

**சோம:** ஆமா, அழைச்சேன் – எங்க கவலேயிலே நீயும் கொஞ்சம் பங்கு வாங்கிக்கிடுவியோண்ணு. கோகிலம் வந்து எவ்வளவு நேரமாச்சு. காப்பி கொண்டு வந்து கொடுத்தியா?

**கோபால்:** ம்.. கொடுக்கணும்னு எங்கே தோணுது?

**சோம:** ஒருவருக்கும் ஒண்ணும் தோணுதபடிதான் உங்க வசந்தன் செய்துட்டானே!

**கோபால்:** எனக்கொரு யோசனை தோணுது முதலாளி.

**சோம:** அட, என் யோசனைக்கார மன்னு!

**கோபால்:** வந்துங்க...

**கோகி:** (வெறுப்புடன்) ஆமா, இவன் ஒரு கோமாளி! இவன் யோசனை செய்துதான் இனிமே காரியம் நடக்கணு மாக்கும்! – இந்தாப்பா வேலேகிலே இருந்தாப் போயிப் பாரு!

**கோபால்:** என்னம்மா நீங்க! அதுக்குள்ளே அதிகாரம் பண்ண ஆரம்பிச்சிட்டீங்க. நாளு நட்சத்திரம் பார்க்க வேண்டாம்?

**சோம:** பார்க்கிறதென்னடா பார்க்கிறது! எல்லாத்தை யும் பார்த்துத்தான் ரெடியா வச்சிருக்கே. வசந்தன் வர்றது தான் தாமசம். பிறகு இந்தக் கோகிலம்தான் இந்த வீட்டுக்கே அதிகாரி!

**கோபால்:** (அலட்சியமாக) அது சரி! ஆனு தம்பி மனசு தான் எப்படி இருக்கோ?

**சோம:** எனக்குத் தெரியாமே வேறே எப்படி இருக்கும்? எல்லாம் பூரண சம்மதம்னு எத்தனையோ தடவை எழுதி யிருக்கிருன்.

**கோபால்:** இல்லே....இப்போ ஒருவேளை மனசு மாறிப் போயி —

**சோம:** வெள்ளைக்காரி ஒருத்தியைப் பிடிச்சி இழுத்துக் கிட்டு வந்து சேருவான்னு நினைக்கிறேயா? மண்டையிலே அடிச்சிக் கோகிலத்தைக் கல்யாணம் செய்து வைப்பேன். ஒகோ!

**கோபால்:** இதுக்கு பயந்துக்கிட்டுத்தான் அவர் ஜப்பானுக்குப் போயிட்டாரோ என்னமோண்ணு எனக்கு இப்போ ஒரு சந்தேகம் தோணுது முதலாளி!

**சோம:** தியெடுத்து வை! அவனுக்குத் துணைப்போனவன் தானேடா நீயும்! அவனைவிட உன் மூளை என்ன விசாலமாவா வேலை செய்யும்! அவன் என்னடாண்ணு பாதி வழிக்கு வந்தவன், நம்மளையெல்லாம் முழிக்க வச்சிட்டு, அவன் பாட்டுக்கு வேறே வழியிலே பறந்துட்டான். நீ என்னடாண்ணு இப்படி ஒரு அபாரமான யோசனையிலே மூழ்கிட்டே! ம்... அது அவன் மூளை செய்ற வேலை; இது உன் மண்டையிலே தாண்டவமாடுற கோளாறு!

**கோபால்:** ஆகையினுலே முதலாளி, சும்மா புறப்பட்டு வா தம்பி; கல்யாணத்தைப் பத்தி பின்னுலே பார்த்துக்கிடலாம் - அப்டீன்னு ஒரு காகிதத்தை எழுதி—

**சோம:** உன் தலையிலேதான் போடணும்.

**கோபால்:** தபாலிலே போட்டா?

**சோம:** அட மண்டூகமே போ! அந்தத் தபாலை எந்த விலாசத்துக்கு அனுப்புறதுன்னு தெரியாமேத்தானேடா, நாம கிடந்து அவதிப்படுறோம்!

**கோபால்:** ஓகோகோ! ஆமாமா!

**சோம:** அடிமுட்டாள்தனமாப் பேசித் தொலைக்காதே! காபி கொண்டுவந்து கொடு!

**கோபால்:** (போய்க் கொண்டே) சேச்சேச்சே! சின்ன முதலாளியை நினைச்சி நினைச்சி என் சிந்தனையே சின்னு பின்னமா சிதறிப்போச்சோ என்னமோ, தெரியலையே! ம்....

**கோகி:** (கோபால் சென்ற பின்) மகா மண்டைக் கர்வம் பிடிச்சவன்.

**சோம:** மட சாம்பிராணி நெம்பர் ஒன்!

**கோகி:** பிறகு ஏன் மாமா இவனைக் கட்டிக்கிட்டு அழணும்? வேலை இல்லேன்னு போகச்சொன்னு, போயித்தொலையிருன்.

**சோம:** நல்லாச் சொன்னே போ! அவன்தானே கோகிலம் இந்த வீட்டுக்கே அணையாத ஜோதி மாதிரி!

[கோகிலம் திடுக்கிட்டு தன்னை சமாளித்துக்கொள்கிருள்]

●

## காட்சி 36

○

சோமசுந்தரம் பங்களாவில் பின்கட்டு – கோபால் கவனப் பிசகாகப் பேசிவிட்டதை எண்ணி நெற்றியில் தட்டிக்கொண்டே வருகிருன்.

**கோபால்:** செச்சேச்சே! என் மூளையே தலைகீழா மாறிக் கிறிப்போயி நிக்குதோ என்னமோ தெரியலையே! ம்... ஏ, செந்தாமரை! செந்தாமரேய்! – நாசமாப் போச்சு! இவளைக் குண்டு போட்டுத்தான் கூப்பிடணும்.

**செந்தாமரை:** (சமையலறையிலிருந்து வந்துகொண்டே) இங்கே யாரும் மண்டுகள் இல்லை. ஆகையினாலே நம்ம நாட்டுக்கே குண்டுகள் தேவை இல்லை.

**கோபால்:** அட, என் தத்துவக்கார செந்தாமரை! வருகிற போதே தத்துவார்த்தங்களைப் பிட்டுப்பிட்டு வச்சிக்கிட்டே யில்லே வர்றே! – குண்டு போடுறது எதுக்குத் தெரியுமோ?

**செங்:** மண்டையைப் பிளக்க!

**கோபால்:** கிடையாது; மரியாதைக்கு!

**செங்:** அதுக்கு மட்டும் குண்டு போடுறது அந்தக் காலம். இப்போ மக்களை சித்திரவதை செஞ்சி சாகடிச்சி, குழி தோண்டிப் புதைக்க வழி இல்லாமே சீரழிஞ்சி—

**கோபால்:** போதும், போதும்! அதோடே நிறுத்து! இப்போ என் மனமே ஒரு நிலையிலே நிக்காமேத் தவிக்குது. இதிலே நீ வேறே கொலைகார குண்டைப் பத்திப் பிரசங்கம் பண்ணி என் மண்டையை ரெண்டாக்கிடாதே! மனுசனுக்குக் கவலை கட்டுக்கடங்காமே மீறிப் போச்சு போ!

**செங்:** அந்த நிலையிலே ஒரு நிலையிலே நிக்கிறவன்தான் மனுசன்.

**கோபால்:** நிசந்தான். இருந்தாலும் என் கவலை ரொம்பப் பெரிசு. சின்ன முதலாளி—

**செங்:** சீக்கிரமா வந்து சேருவாரு. ஆற அமர இருந்து பாரேன்!

**கோபால்:** ஷட்டப்!

**செங்:** நல்லா பட்டாசு விட்டே போ!

**கோபால்:** உனக்கென்னடி தெரியும் – நீ நேத்து வந்தவ! தம்பி எங்கே இருக்கிறார் என்கிற தகவலே தெரியாமே நாங்க கிடந்து திண்டாடுறோம். நீ என்னடாண்ணா திகட்டு மானத்திலே பேசுறே, திகட்டுமானத்திலே! சரி, சரி! காப்பியைக் கொண்டு போயி ஊத்தித் தொலை.

**செங்:** யாரு தலையிலே?

**கோபால்:** அந்தக் கோகிலம்மா தலையிலே!

**செங்:** ஏன், அந்தம்மா குடிக்கிறதில்லையா? அபிஷேகம்...

**கோபால்:** பிறகென்ன? வெத்திலே பாக்கு மரியாதை இப்போ காப்பிக் குடியா மாறிப் போச்சு! இதை ஒழிக் கணும் முதல்லே.

**செங்:** அப்பச் சரி, ஆரம்பி பிரச்சாரத்தை!

**கோபால்:** அதென்ன பிரமாதம்! முதல்லே வசந்துத் தம்பி வரட்டும். பிறகு இந்த சிங்கக் குட்டி செய்யப்போற—

**செங்:** சர்க்கஸ் வித்தைகளைக் கண்டு சிரிக்கத் திரண்டு வாரீர்!

**கோபால்:** ஏய், ஏய்!

**செங்:** காசு கிடையாது! ஓசி, ஓசி, ஓசி!

**கோபால்:** ஏய், என்ன இது?

**செங்:** ஒண்ணுமில்லே!

**கோபால்:** என்னை என்னண்ணு நினைச்சிக்கிட்டே? ம்... ஓடு, காப்பி கொண்டு போயிக் கொடு! ஓடு, நிக்காதே!

**செங்:** முடியாது!

**கோபால்:** முடியாதா?

**செங்:** ஆமா!

**கோபால்:** ஆமாவா?

**செங்:** ஆமா, ஆமா, ஆமா! அதிகாரத்துக்கு அடங்கினவ பெண்டாட்டியல்ல; அன்புக்குக் கட்டுப்பட்டவ! தெரிஞ் சிக்கோ!

**கோபால்:** அப்படியா சமாச்சாரம்! அப்பச் சரி; என் செங்கரும்புச் செந்தாமரை, செவந்திப்பூ மணக்கும் சிங்காரி, என் இதய ராணி, இன்பவல்லி, போ கண்ணு, கொஞ்சம் காப்பி கொண்டுபோயிக் கொடு என் கண்மணியே! போம்மா போ! என் கண்ணில்லே!

**செங்:** சரியாப் போச்சு! விரசமாய்க் கொஞ்சுறதும், விகாரமா அதிகாரம் பண்றதும் கூடாது. தாம்பத்திய ரசமாப் பழகணும்.

**கோபால்:** ஆங், இப்போ எனக்கொரு சந்தேகம்!

**செங்:** சந்தேகமா?

**கோபால்:** அதாவது, நீ சொல்றபடி தாம்பத்திய ரசமாப் பழக, இந்தக் கோகிலம்மா, நம்ம வசந்துத் தம்பிக்கு லாயக்கா இல்லையாண்ணு—

**செங்:** ஆராய்ச்சி செய்யவேண்டியது அவரு!

**கோபால்:** ஆலோசனே சொல்லவேண்டியது இவரு!

**செங்:** ஆகா, என் சொல்றே, உன் ஆலோசனேயின் ஆழத்தை! பாழுங் கிணத்திலே வாழியைப் போட்டு தண்ணி இறைச்ச மாதிரிதான்!

**கோபால்:** உனக்கென்னடி தெரியும் – நீ நேத்து வந்தவ! எனக்கில்லே தெரியும் அதிலேயிருக்கிற நுணுக்கம். ஏண்ணு, அந்தம்மா நடக்கிற நடை, குலுக்குற குலுக்கு, மினுக்குற மினுக்கு, பேசுற பேச்சு—

**செங்:** பூசுற சாயம், போடுற வேஷம், ஆடுற ஆட்டம்—

**கோபால்:** அதோடே நிறுத்து! இந்த மாதிரி விஷயங்களேயெல்லாம் நிறுத்துப் பார்த்து நிதானிச்சுத்தான் ஒரு முடிவுக்கு வரணும். நான் செய்றேன். நீ காப்பியைக் கொண்டு போயிக் கொடு!

●

## காட்சி 37

○

இளங்கோ மில்லில் ஒரு பகுதி – பாலு கம்பீரமாக மில்லேச் சுற்றிப் பார்த்துக்கொண்டே, கோமதி வேலே செய்யும் இடத்துக்கு வருகிருன். சிறிது நின்று அவளே ஓரக்கண்ணுல் கவனிக்கிருன்.

**பாலு:** (சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு) என்ன கோமதி, சௌக்கியமா? (**கோமதி** தலே நிமிர்ந்து பார்த்து மௌனமாக நிற்கிருள்) ம்... சௌக்கியமாகத்தான் இருப்பாய். இருந்தாலும், உன்னே நேரிலேயே கண்டு விசாரிக்காவிட்டால், என் மனம் சமாதானப்படுவதே இல்லே!

**கோமதி:** இதனுல் எனக்குத்தான் சங்கடம்.

**பாலு:** எதுவுமே வராது! நான் சொல்கிறேன் – இந்த மில்லுக்கு மானேஜர்!

**கோமதி:** மானேஜர் என்கிற முறையிலே பேசலாம். ஆனல் ...

**பாலு:** மன்மதன் மாதிரி பேசுகிறேன். இல்லேயா?

**கோமதி:** இதெல்லாம், பார்த்தவர்கள் பழி சொல்லித் தூற்றத் தோது!

**பாலு:** பழி சொல்வார்களா? பல்லேப் பிடுங்கிவிட மாட்டேனு!

**கோமதி:** அதோடு என் மானமும் பறிபோய் விடும்.

பாலு: அதுதான் போகாது! மானேஜர் தயவு கோமதிக்கு இருக்கிறதே என்று பிறர் பொருமைப்படுகிற அளவுக்கு உனக்குப் பெருமை வந்து சேரும்!

**கோமதி:** அந்தப் பெருமை எனக்கு வேண்டாம்! எத்தனையோ ஏழைகள் உண்டு. பிழைக்க வழி இன்றி தெருத் தெருவாக அலைவோர் அனந்தம். அவர்கள் யார் மீதாவது நீங்கள் தயவு காட்டினுல் வயிருரக் கஞ்சியாவது குடிக்க வழி பிறக்கும்.

பாலு: என்ன கோமதி, ஒன்றுமே தெரியாதவள் போல் பேசுகிருய்! கண்டவர்களிடமெல்லாம் தயவு காட்ட வேண்டுமென்று எனக்கென்ன தலைவிதியா? உன்மீதுதான் எனக்கு அளவு கடந்த —

**கோமதி:** அதை உங்கள் எதிர்கால மணைவியாரிடம் காட்டுங்கள்!

பாலு: மனைவியென்ன மனைவி! உன் போன்ற —

**கோமதி:** பெண்களிடம் முறை தவறி நடந்து கொள்வது —

பாலு: காதல் பெருகுவதின் விளைவு கோமதி! காதல் பெருகு —

**கோமதி:** காவாலித்தனம்!

பாலு: கோமதி!

**கோமதி:** போதும்! இம்மாதிரி படுபாதகச் செயலில் இறங்காதீர்கள்! நலிந்தோரை நாசப்படுத்தாதீர்கள்!

பாலு: நாசப்படுத்தவா? உன் ஏக்கத்தைப் போக்க எண்ணுகிறேன் கோமதி, ஏக்கத்தைப் போக்க எண்ணுகிறேன்! உடல் தேய, உயிர் தேய, உழைத்துச் சாகும்படி உன்னை விட்டு வைக்க என் மனம் ஒப்பவே இல்லை!

**கோமதி:** உழைப்பவள் நான் ஒருத்திதானு? ஐம்பது வயது கிழவிகூட, பாவம், இந்த மில்லில் அரும்பாடு படுகிருள். தயவு செய்து அப்பேர்ப்பட்டவர்களைக் காப்பாற்றுங்கள்! உங்களுக்குப் புண்ணியமுண்டு.

பாலு: கோமதி!

**கோமதி:** எனக்கென்ன, உடலில் வலுவிருக்கிறது; உழைக்கத் தெம்பிருக்கிறது.

பாலு: கோமதி!

**கோமதி:** போதும்! பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!

பாலு: (ஏளனமாக) ஓகோ; எல்லை மீறி விடுமோ! இதன் பலாபலன்களை நீ அனுபவிக்கப் போகிருய்!

**கோமதி:** எதையும் ஏற்றுக் கொள்ள நான் தயார்!

**பாலு:** கோபமூட்டாதே! என் கோபம் பொல்லாதது; மகாப் பொல்லாதது! மரியாதையாக நான் சொல்வதைக் கேள். இல்லாவிட்டால் அணு அணுவாக உன்னைச் சாகடிப்பேன்! நீ என் தயவால் பிழைக்க வேண்டிய கூலி! என் விரல் அசைந்தால் ஆடவேண்டிய அபலை!

**கோமதி:** அதற்காக, உங்கள் அனுச்சாரப் போக்குக்கு அடிபணியும் அறிவிலியாக வேண்டுமா?

**பாலு:** கோமதி, என் சீற்றத்தால் சீரழிந்து போகாதே!

**கோமதி:** செத்துப் போவதற்குக்கூடச் சித்தமாக இருக்கிறேன். அப்படிச் சாகும் போது என் மனச்சாட்சிப்படி நடந்த குற்றத்திற்காக மாள்கிறேன் என்ற மனத்திருப்தி ஒன்று மட்டும் இருந்தால் போதும்.

**பாலு:** அதிகப்பிரசங்கி! உன் அகம்பாவத்தால் அழிந்தொழியப் போகிறாய். (பல்லைக் கடித்துக்கொண்டு) உன்னை என்ன செய்கிறேன் பார்!

[பாலு கோபாவேசமாகச் செல்லுகிறான். கண்ணீர் வழிந்தோட அவனையே பார்த்தவாறு நிற்கிறாள் கோமதி]

## காட்சி 38

தெரு வழியே ஐயம்பெருமாள் செல்லுகிறான். பின்னால் சிறிது தொலைவில் பெருமாள் வருகிறான்.

**ஐயம்பெருமாள்:** (நின்று திரும்பி) அட, வா பெருமாளு, சேர்ந்து போகலாம். நாம ரெண்டு பேரும் ஜோடியா போயி எத்தனை நாளாச்சு? – அட, சும்மா வாப்பா!

**பெருமாள்:** (எட்ட நின்று) நீ போ, நான் பின்னாலே வர்றேன்.

**ஐயம்:** அட, சும்மா வாப்பா! இனிமே எனக்குச் சந்தேகமே வராது; இதிலே சந்தேகமில்லை! வந்தாலும் உன்கிட்டே கேட்கமாட்டேன்; இதிலேயும் சந்தேகமில்லை!

**பெரு:** சனியன் வராதே?

**ஐயம்:** சந்தேகத்துக்கு இடமில்லாமே வராது என்கிறேனே! நீ வா!

**பெரு:** (அருகில் வந்து கொண்டே) அப்பச் சரி, நட!

**ஐயம்:** (நடந்தவாறு) பின்னாலே வர்றேயில்லே? சந்தேகமில்லையே?

பெரு: வந்துக்கிட்டே இருக்கேன். உனக்கு சந்தேகம் வராமே இருந்தா போதும்!

ஐயம்: அது ஏன் வருது? நீ வா! (நின்று) ம்... ஏன் பெருமாளு, எனக்கு இப்போ ஒரு சந்தேகம்.

பெரு: (அலுப்புடன்) நாசமாப் போச்சு!

ஐயம்: ஓ! இல்லே, இல்லே! எனக்குச் சந்தேகமில்லே, சந்தேகமில்லே! நீ வா போகலாம். (சென்று நின்று திரும்பி) ம்... வந்து... உனக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமோ?

பெரு: எந்தப் பெண்ணை?

ஐயம்: அதாம்பா, அந்த முருகேசனுக்குக் கோமதின்னு ஒரு பெண்ணு இருக்காமே!

பெரு: அதுக்கு என்ன வந்திருக்கு இப்போ?

ஐயம்: பாவம், நல்ல வேலையிலே இருந்ததாம். மானேஜர் என்னமோ நினைச்சாராம்; திடீர்னு தூக்கிக் கழிவுப் பஞ்சு சுமக்கிற வேலையிலே போட்டுட்டாராம்!

பெரு: ஏன்?

ஐயம்: அதிலேதானே இருக்கு, ஏதோ சந்தேகப்பட இடமிருக்கிற சங்கதி.

பெரு: என்ன இருக்கு? வேலையிலே மட்டமோ என்னமோ?

ஐயம்: அது இப்பத்தானா தெரிஞ்சது?

பெரு: என்னமோ போ! அந்த மானேஜர் செய்ற எத்தனையோ அக்கிரமங்களிலே இதுவும் ஒண்ணு.

ஐயம்: அப்டீண்ணு அலட்சியமா விட்டுடப்படாது பெருமாளு. ஆராய்ச்சி செய்யணும்!

பெரு: ஆராய்ச்சி வேறே செய்யணுமா! அப்பச்சரி செய்.

ஐயம்: அப்படிச் செய்றபோது, எங்கிருந்தோ ஒருவன் வந்து, முருகேசன் வீட்டுலே தங்கிக்கிட்டு, நம்ம மில்லுலே வேலை செய்றான்னு சொல்றாங்க பாரு, அவன் நடவடிக்கைகளையும் கொஞ்சம் அலசணும்.

பெரு: அலசு!

ஐயம்: அப்படி அலசுறபோது என்ன தெரியும்? அவனுக்கும் இவளுக்கும் ஏதோ உறவு ஏற்பட்டு, அந்த உறவு முறை கேடானது என்கிறதாக ஊரிலே நாலு பேர் நாலு விதமாகப் பேசி, அந்தப் பேச்சு காத்துவாக்கிலே பறந்து போயி, மானேஜர் காதுக்குள்ளே நுழைஞ்சி – இப்படி ஏகப்பட்ட சந்தேகங்கள் நமக்கு வந்து சேரும்.

பெரு: சரி சேரும்.

**ஐயம்:** அந்த சந்தேகங்கள் ஒவ்வொண்ணேயும் உண்டு இல்லேன்னு பார்த்தாத்தான் —

**பெரு:** (எரிச்சலுடன்) இந்த ஜன்மத்துக்கு மோட்ச லோகத்திலே இடம் கிடைக்கும்! அட போப்பா, போக்கத்தவனே! (போகிறான்)

**ஐயம்:** அட, இவன் உருப்படப் போறதே இல்லே; ஆமா! நிச்சயமா இவன் உருப்படமாட்டான்! சந்தேகமில்லாத சங்கதி எதுன்னு அது இதுதான்! (போகிறான்)

●

## காட்சி 39

○

இளங்கோ நூல் ஆலேயில் ஒரு பகுதி – வரதன் கழிவுப் பஞ்சை அள்ளி ஒரு கூடையில் போட்டுத் திணித்துக் கொண்டிருக்கிறான். பறந்து பரவும் தூசுப் படலத்தில் மூச்சுத் திணறித் திண்டாடுகிறான். வேலே செய்வோரின் வேதனைப் பிழைப்பும், அவர்களை வஞ்சித்துத் திரிவோரின் பஞ்சணை வாழ்வும், வரதன் இதயத்தை எரி நெருப்பாக்குகிறது. ரோஜா மலரின் நறுமணத்தை நுகர்ந்து மகிழ்ந்த வரதன், வியர்வை நாற்றத்திலே புழுங்கி வதைகிறான். குப்பைமேடு போல் குவிந்து கிடக்கும் கழிவுப் பஞ்சைக் கைகளால் கோதி அள்ளும் போது அவன் விரலில் கண்ணாடித்துண்டு ஒன்று குத்தி ரத்தம் வருகிறது. வலி பொறுக்க மாட்டாதவனாய் கைவிரலே அழுத்திப் பிடித்துக்கொண்டு நிற்கிறான் – இந்நேரம் இன்னொரு கூடையுடன் அங்கு வந்த கோமதி, 'ஐயய்யோ' என்று பதறியவாறு, பரபரப்புடன் தன் புடவை நுனியைக் கிழித்து, தண்ணீரில் நனைத்துக் கட்டுப்போடுகிறாள். வரதன் முகம் லேசாக மலருகிறது.

**வரதன்:** (விரலே அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்துக்கொண்டு) ம்... எதுக்கும் கைராசி வேணும் போலிருக்கு!

**கோமதி:** ஏன்?

**வர:** இல்லே, உன் கை பட்ட மாயத்திலே என் வலி இருந்த இடம் தெரியாமே ஓடிப்போச்சே; அதுக்குச் சொல்றேன்!

**கோமதி:** நான் என்ன டாக்டரா?

**வர:** டாக்டரென்ன, காசுக்காக வைத்தியம் செய்கிறவர் தானே! ஆனா நீ...

**கோமதி:** ஓசியிலே.

வர: இல்லே! பாச உள்ளத்தின் தூண்டுதலால் செய்யும் தன்னலமற்ற தொண்டு! இதோ பார் கோமதி, மனிதன் எவ்வளவு வேண்டுமானுலும் துன்பப்படலாம்; ஆனல், அவனேக் கண்டு இரக்கப்படும் இன்னெரு ஜீவன் அருகில் இருந்தால், அந்தத் துன்பமெல்லாம் இன்பமாக மாறிவிடும்! (கோமதி வெட்கத்தால் கன்னங்கள் சிவக்க தலே குனிகிருள்) ம்.... சரி, இனி நீ போகலாம்.

கோமதி: எங்கே போறது? இனிமே எனக்கு இங்கேதான் வேலே.

வர: இங்கேயா? சரி, சரி! உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிப் போச்சு! என் பக்கத்திலேயே இருக்கணும்னு ஆசை இருந்தா அதுக்கு இந்த நரக லோகத்துக்கா நீயும் வந்து சேரணும்? பேசாமே பழைய வேலேக்கே போய்ச் சேரு! – பெண்களே இப்படித்தான்! அன்புக்காக தியாகம் செய்றதுன்னு அதுக்கு ஒரு அளவே தெரிகிறதில்லே!

கோமதி: அப்படியானுத்தான் அளவில்லாத ஆனந்த மாச்சே! ஆனு, நான் அதிகாரத்துக்கு அடிபணிஞ்சி இந்த வேலேக்கு வந்திருக்கிறேன்.

வர: அதிகாரமா?

கோமதி: ஆமா! இன்று முதல் இங்கே கழிவுப் பஞ்சு சுமக்கணும்; இல்லே மில்லுக்கு வெளியே நடக்கணும். மானேஜர் உத்தரவு!

வர: ஏன்?

கோமதி: அதை நான் எப்படிச் சொல்வது? இல்லாதவர் வீட்டுப் பெண் பொல்லாதவர் மத்தியில் பிழைப்பதென்ருல் எத்தனேயோ தொல்லேகள்! கூலிக்குப் பாடுபட வந்தால், 'கூறு உன் உருவத்திற்கு என்ன விலே' எனக் கூசாது பேரம் பேசும் பித்தர்கள்! ஆசை நிராசையாகும்போது அறிவு கெட்டவன் அயோக்கியனுகிருன். நமது மானேஜர் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

வர: (கோபம் கொந்தளிக்க) ராஸ்கல்! (பாய்ந்து செல்ல முற்படுகிருன்)

கோமதி: (வரதனேத் தடுத்து) ஐயய்யோ! இதுதான் கூடாது! கூலிக்குக் கோபம் வந்தால் வேலேயில்லாத் திண்டாட்டம்தான் மிச்சம்!

வர: யார் கூலி! கூலியுமில்லே; அந்தக் கூலிகளே உறிஞ்சிக் கொழுக்கும் கொடுமையுமில்லே! எல்லாவற்றையும் தூள் தூளாக்குகிறேன் பார்!

**கோமதி:** என்ன இது, இப்படிப் பேசுகிறீர்கள்? வேலை இல்லாமல் நீங்கள் பட்ட கஷ்டத்தையெல்லாம் மறந்து விட்டீர்களா?

**வர:** கோமதி, நான் யாரென்றே உனக்குத் தெரியாது!

**கோமதி:** நான் தடுக்காவிட்டால் மானேஜரிடம் சண்டை போடப் பாயும் சமர்த்தர் என்று தெரியும். பணபலத்தை எதிர்க்கும் வல்லமை மனித சக்திக்கு இல்லாதிருக்கும் துர்பாக்கியத்தைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!

**வர:** பணமாவது, பலமாவது! நம் வசதிக்காக நாம் உண்டாக்கியது பணம்.

**கோமதி:** உண்மைதான். ஆனல், பலருக்கும் பயன்பட வேண்டிய பணம், ஒரு சிலரிடம் குவிந்து விடுவதால்தான் அக்கிரமங்கள் அதிகரிக்கின்றன. ம்... அதைப் பற்றி நீங்களும் நானும் பேசி என்ன செய்ய?

**வர:** என்ன செய்யவா? இந்த உலகத்துக்கே ஒரு உதாரணத்தைச் செய்து காட்டுகிறேன் பார்!

**கோமதி:** ஆமாம், மானேஜரிடம் சண்டை போட்டுவிட்டு, பசி பட்டினியோடு வேலை தேடித் திரியலாம்!

**வர:** உனக்குத் தெரியாது கோமதி; உனக்குத் தெரியவே தெரியாது!

**கோமதி:** அற்ப விஷயத்துக்காக இப்படிப் பொறுமை இழப்பது நல்லதல்ல.

**வர:** இதுவா அற்ப விஷயம்? வேலை செய்து பிழைப்பவர் களை ஏசி மிரட்டி வேசிகளாக்கப் பார்ப்பது அற்ப விஷய மல்ல கோமதி — அடியோடு ஒழித்துக் கட்டவேண்டிய அக் கிரமம்! பெண் என்ன உயிரற்ற மலரா — காசு கொடுத்து நுகர்ந்து பார்த்து விட்டெறிய?

**கோமதி:** ஏழைக்குப் பிழைப்புக் காட்டுகிறோம் என்று சொல்லி எத்தனையோ அக்கிரமங்கள் செய்கிறார்கள். எல்லா வற்றையும் சகித்துக் கொண்டு தப்பிப் பிழைக்கவேண்டிய தலைவிதி ஏழைகளுக்குத்தான். நாம் ஆத்திரமடைந்தாலும், அவர்களுக்கு ஆத்திரம் வந்தாலும் அழிவு நமக்குத்தான்!

**வர:** இதை ஒருக்காலும் சகிக்க முடியாது! இதுவரையில் சகித்திருந்ததை நினைத்தாலே ஆச்சரியமாக இருக்கிறது.

**கோமதி:** உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் மீது உங்களுக்கு அன்பு இருக்குமானல், இன்னும் வெளிப்படையாகச் சொல்லுகிறேன் — காதல் இருப்பது உண்மையானல், தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்

கள்! ஆத்திரம் வரும்போது அமைதி கொள்வதுதான் அறிவுடைமை. (ஆலைச் சங்கொலி கேட்கிறது) இதோ, சங்கு ஊதியாச்சு! வாங்க, வீட்டுக்குப் போகலாம்!

[கொந்தளிக்கும் உள்ளத்தில் சிந்தனைப் புயல் வீச கோமதியைப் பின்தொடர்ந்து செல்லுகிறான் வரதன்]

●

## காட்சி 40

○

மில்லில் வேலை செய்துவிட்டு வரதனும் கோமதியும் ஜோடிப் பறவைகள்போல் வீட்டுக்குச் செல்லுகின்றனர். வழியில் தென்பட்ட ஒரு பூஞ்செடியிலிருந்து மலர் ஒன்றைப் பறித்து, கோமதிக்குத் தெரியாமல் அவள் கூந்தலில் சொருகிவிட்டுச் சிரிக்கிறான் வரதன் — கோமதி திரும்பிப் பார்த்து கன்னங்கள் சிவக்க வெட்கமுற்று நிற்கிறாள். அதோடு கோபம் வந்து விட்டதாகவும் நடிக்கிறாள்.

**கோமதி:** ஆமா, இப்படித்தானுக்கும்?

வரதன்: (கொஞ்சுதலோடு) பிறகு எப்படி? இங்கென்ன பூங்காவா இருக்கிறது — பாங்காகப் பாட்டுப் பாடி மகிழ? உலவும் தென்றலோடு நிலவும் காய்ந்தாலாவது இன்பமாகக் கொஞ்சிக் கொஞ்சி மகிழலாம்! ஒரு தடாகம் இருந்தாலும் பரவாயில்லை. படகில் அமர்ந்தாவது, துடுப்பைச் சுழற்றுகிற பாவனையில், விழிகளையும் சுழற்றிக்கொண்டு சுற்றிச் சுற்றி வரலாம். இங்குதான் அவைகள் ஒன்று மில்லையே! என்ன செய்வது? எனக்குக் கிடைத்தது இது தான் — கவனிப்பாரற்றுக் கிடக்கும் காட்டு மல்லிகை!

**கோமதி:** சரி, சரி. இன்னும் மணமாலை மாற்றவில்லை. அதற்குள்...

வர: மன அலைகள்தான் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு ஒன்றறக் கலந்துவிட்டனவே!

**கோமதி:** (புன்முறுவலுடன்) காவியமே பாடிடாதீங்க!

வர: காதலால் காவியம் உருவாகிறது. காவியத்தால் காதல் வளருகிறது.

**கோமதி:** போதும், போதும்! வாங்க போகலாம்! — ஆமா, நீங்க என்னமோ அதிசயம் செய்து காட்டப்போறேன், அற்புதம் செய்து காட்டப்போறேன்னு சொல்லிக்கிட்டே வர்றீங்களே! அதென்ன அப்பேர்ப்பட்ட அதிசயம்?

**வர:** செய்து காட்டுறதாகத்தானே சொல்லியிருக்கிறேன். செய்யும்போது பாரு.

**கோமதி:** அதெல்லாம் முடியாது. இப்பத்தான் சொல்லணும்.

**வர:** சொன்னு சுவாரசியப்படாதே! அதுக்கெல்லாம் காலம் வரட்டும்.

**கோமதி:** சுவாரசியமா இல்லாட்டாப் போகுது; சும்மா சொல்லுங்க. நான் யாருகிட்டேயும் சொல்லமாட்டேன்.

**வர:** ஊஹூம்! நான் சொல்லவேமாட்டேன். அந்த அற்புதத்தை நீ பார்க்கணும்; உனக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் போட்டி போட்டுக்கொண்டு பொங்கணும். அதைக் கண்டு நான் குதூகலப்படணும். அதுதான் என் ஆசை!

**கோமதி:** இப்படி புதிர் போட்டுப் பேசிக்கிட்டே இருங்க. ஒரு நாளைக்கு இதெல்லாம் வெத்து வேட்டு என்கிறதை வெட்ட வெளிச்சமாக்கிப் போடுகிறேன்.

**வர:** வெத்து வேட்டோ? – காதைப் பிச்சிக்கிட்டு வெடிக்கிற வெடி குண்டோ! எல்லாம் கொஞ்ச நாள் போகட்டும்.

**கோமதி:** கொஞ்ச நாள் என்ன? இப்பவே எனக்கும் தெரியும்.

**வர:** என்ன தெரியும்?

**கோமதி:** எல்லாம் தெரியும். நானும் கண்டு பிடிச்சித்தான் வச்சிருக்கிறேன்.

**வர:** அதைக் கொஞ்சம் சொல்லேன்!

**கோமதி:** நான் மட்டும் ஏன் சொல்லணுமாம்?

**வர:** சொல்லமாட்டியா? அப்பச் சரி. பத்திரமா மூட்டை கட்டி உன் கிட்டவே வச்சிக்கோ!

**கோமதி:** ம்... அதெல்லாமில்லே! இப்போ நீங்க செய்யப் போற அதிசயம் இன்னதுன்னு சொல்லிப்போடுறேன். எனக்கென்ன பரிசு தருவீங்க?

**வர:** பரிசா? பத்தாயிரம் ரூ... ம்ம்... இல்லே, இல்லே... அவ்வளவு பணம் இப்போ யாருகிட்டே இருக்கு? ம்... ஒரு நல்ல பரிசு!

**கோமதி:** அப்டீண்ணு என்ன பரிசு? இந்தத் தூக்குப் பாத்திரமா?

**வர:** சேச்சே! அதெல்லாமில்லே. உனக்கு மட்டும் என்னல் கொடுக்கக்கூடிய மிக உயர்ந்த பரிசு! வேறு யாரிடமிருந்தும் நீ வாங்க முடியாதது; வாங்கக் கூடாதது!

**கோமதி:** போதும்; புரியுது! இப்போ நான் சொல்றதுக்கு உண்டு, இல்லேன்னு கறாரா பதில் சொன்னாப் போதும்.

**வர:** சரி.

**கோமதி:** அதாவது நீங்க செய்யப்போற அதிசயம் என்னண்ணா, அட்டூழியம் செய்ற இந்த மானேஜரை –

**வர:** கல்தா கொடுத்து வெளியே தள்ளி –

**கோமதி:** ஆமா, நீங்கதான் இந்த மில்லுக்கு முதலாளி – அப்படியே செய்திடுவீங்க!

**வர:** நான் இந்த மில்லுலே தொழிலாளியாகத்தான் இருக்கப் போறேன் கோமதி; முதலாளியாக அல்ல!

**கோமதி:** பிறகு எப்படி நீங்க கல்தா கொடுக்க முடியும்? அந்த மானேஜர்தான் காக்கா பிடிக்கிற கலையிலே நிபுணராச்சே! ஆனாப்பட்ட முதலாளியே அவர் சொன்னபடி ஆடுறாரு. இனி சீமையிலிருந்து சின்ன முதலாளி வந்ததும் அவரையும் கைக்குள்ளே போட்டுக்கிட என்னென்ன திட்டமெல்லாம் போட்டு வச்சிருக்கிறாரோ! அவரு மில்லை விட்டு ஒழியிறதெல்லாம் வெறும் கதை – கனவு!

**வர:** கனவா? அதெல்லாம் கட்டாயம் நடக்கும். நீ வேணுமானா பாரேன்!

**கோமதி:** அதெல்லாம் ஒண்ணும் நடக்காது. நீங்க செய்யப் போறது இதுதான். அந்த மானேஜரைக் கோபம் தீரத் திட்டி, அடிச்சி நொறுக்கி – (திடீரென்று திடுக்கிட்டு) ஐயய்யோ! அந்த மாதிரியெல்லாம் செய்திடாதீங்க! பிறகு நம்மை சீரழிச்சிடுவாங்க. அந்த எண்ணமே நமக்கு வேண்டாம்!

**வர:** நீ நினைக்கிறது தப்பு.

**கோமதி:** அம்மாதிரி நடந்துகொள்ள மாட்டேன்னு வாக்குறுதி கொடுங்க. நீங்க அடிக்கடி சீறிப் பாயுறதைப் பார்த்தா எனக்கு பயமா இருக்கு.

**வர:** உனக்கு அந்த பயமே வேண்டாம்! நான் செய்யப் போற அதிசயம் வேறே.

**கோமதி:** என்னமோ போங்க! என்கிட்டேகூட சொல்லாத ரகசியம் அப்படி என்னதான் இருக்கோ?

**வர:** (மிக அருகில் நெருங்கி) நான் ஏதோ மறைத்துப் பேசுகிறேன் என்று வருத்தப்படாதே கோமதி! எல்லாம் உன் நன்மைக்காக – என் நன்மைக்காக – சொல்லப்போனால் எல்லோருடைய நன்மைக்காகவும்தான்! (கோமதியின்

கூந்தலை அன்போடு தடவியவாறு) நீ மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்க வேண்டும் — அதற்கு எவ்வித இடையூறும் வந்து விடக்கூடாது என்றுதான், அந்த அதிசயத்தை மறைத்து வைத்திருக்கிறேன். என்னை நம்பு. (பேச்சை மாற்ற நினைத்து) ஐயய்ய! இதென்ன ஒரே பஞ்சுத் தூசி!

**கோமதி:** எங்கே?

**வர:** (கோமதியின் தலையைக் காட்டி) இதோ!

**கோமதி:** இருந்தா இருந்துட்டுப் போகட்டும்! என்போன்ற பலருடைய தலைகளில் பஞ்சுத் தூசி படருவதால்தானே ஒரு சிலரின் தலைகளிலே பரிமளம் கமழ முடிகிறது. ஆனால், பஞ்சுத் தூசி படர்ந்தோரை பஞ்சைகளாகவும் பாமரர் களாகவும், பரிமளம் மணப்போரை அரியாசன பொம்மை களாகவும் அறிவாளிகளாகவும் இவ்வுலகம் பிரித்து வைத் திருக்கும் கொடுமைதான் சகிக்க முடியாத அக்கிரமம்!

**வர:** ஆகா, என்ன அருமையான கருத்து! கோமதி, பெரும்பாலும் ஏழைகள்தான் விளம்பரமில்லாத அறிவாளி களாக இருக்கிறார்கள் என்பதற்கு நீதான் கண்கண்ட சாட்சி!

[இந்நேரம் முருகேசன் தற்செயலாக அவ்வழியே வருகிறான் — கோமதியும் வரதனும் பரபரப்படைந்து சிறிது தூர விலகி நிற்கின்றனர். அவர்கள் உறவுநிலை கண்டு முருகேசனுக்கு உள்ளுக்குள் ஆனந்தம் பொங்குகிறது. தன் மகள் கோமதிக்கு சரியான துணைவன் வரதன் என்று பெருமிதம் கொள்கிறான்]

**முருகேசன்:** ம்... ஏம்மா, வீட்டுக்குப் போகலே?

**கோமதி:** ம்... இதோ போறேம். ம்... இதோ போறேன்.... போறேன்.

[கோமதி தயங்கித் தயங்கிச் செல்லுகிறாள். முருகேசன் புன்முறுவல் செய்கிறான். வரதன் முகத்தில் புதுமைப் பொலிவு மலருகிறது]

**முரு:** ம்... ஆண் பிள்ளையைப் பெத்தெடுத்து ஆசையோடே வளர்த்தேன். பெத்த வயிறு பத்தி எரிய அவன் வீட்டை விட்டே ஓடிப்போயிட்டான். அந்தத் துயரத்தால் நான் படுற வேதனை சொல்லி முடியாது. நீயாவது மருமகனாக வந்து அந்தக் குறையைத் தீர்த்தாப் போதும்!

[வரதன் வெட்கமும் மகிழ்ச்சியும் கலந்த நிலையில் தலைகுனிந்து நிற்கிறான். சிறிது தொலைவில் தயங்கி நிற்கும் கோமதிக்கு அளவற்ற ஆனந்தம் பொங்குகிறது]

## காட்சி 41

O

தெரு – ஐயம்பெருமாளும், பெருமாளும் மில்லுக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

**ஐயம்பெருமாள்:** (நடந்துகொண்டே) எங்கிருந்தோ வந்தவன்கிட்டே இவ்வளவு நேசமா பழகுறதுக்கு என்ன காரணம்? ம்... (நின்று பெருமாள் பக்கமாகத் திரும்பி) இதிலே ஏதோ மர்மமான சந்தேகம் இருக்கத்தான் இருக்கு! என்ன நான் சொல்றது?

**பெருமாள்:** நீதான் சொல்றயே; இதிலே நான் வேறே வியாக்கியானம் செய்யணுமாக்கும்?

**ஐயம்:** ஆங், அப்படிச் சொல்லு! நான் ஒரு சங்கதியிலே சந்தேகப்பட்டேன்னு, அது சரியா இருக்கும்.

**பெரு:** சரித்தான் நட! காலாகாலத்திலே வேலைக்குப் போயிச் சேரலாம்.

**ஐயம்:** (நடந்துகொண்டே) ஆமாமா, வா! ம்... நாலு பேரு நாலு விதமாப் பேசுறுங்கன்னு, அதுக்கு மூலகாரணம்னு ஒண்ணு இருக்கத்தானே இருக்கணும்! (நின்று திரும்பி) இருக்கணுமா, வேண்டாமா?

**பெரு:** நான் ரெண்டும் சொல்லலை. என்னைப் போட்டு ஏன் உயிரை வாங்குறே? நீ நடப்பா, நட! நேரமாகுது; சங்கு ஊதித் தொலைக்கப் போறுங்க.

**ஐயம்:** (சென்றுகொண்டே) ஆமாமா, அது வேறே கத்தித் தொலைச்சுட்டா, ஏன் 'லேட்'டுன்னு நம்மகிட்டே கத்தித் தொலைப்பாங்க! (சென்றவன் நின்று திரும்பி) ஆமா, எங்கிருந்தோ வந்தவன்கிட்டே, இவ ஏன் இவ்வளவு தூரத்துக்கு வச்சிக்கிடணும்?

[இந்நேரம் அவ்வழியே சென்ற **வரதன்**, இந்தப் பேச்சைக் கேட்டு ஒரு ஓரமாக நின்று கவனிக்கிறுன்]

**பெரு:** எவ!

**ஐயம்:** அவதாம்பா, அந்த முருகேசன் மகள் கோமதி.

**பெரு:** ஊஹூம்! இதிலே கதாநாயகன் யாரு?

**ஐயம்:** கதையா சொல்றேன்? நடக்கிற நடப்பைச் சொல்றேன்ப்பா, நடப்பைச் சொல்றேன்.

**பெரு:** அந்த நாசமாப்போன எழவிலேதான் அவன் எவன்னு கேட்கிறேன்.

ஐயம்: எழவு சனியனை எவன் கண்டான்? எங்கேயிருந்தோ வந்தவனும்! அவனுக்கு நம்ம மில்லுலே வேலை தேடிக் கொடுத்து – யாரு – இந்த முருகேசன் – அவனுக்கு சாப்பாட்டைப் போட்டு, படுக்க வேறே இடத்தைக் கொடுத்து – இந்த லட்சணத்திலே வீட்டிலே வேறே குமரிப் பெண்ணு! எப்படி யிருக்கு சங்கதி!

பெரு: ரொம்ப நல்லாத்தான் இருக்கு! இதிலே நமக்கென்ன வந்திருக்கு?

ஐயம்: நமக்கென்ன வந்திருக்கா! நாலு பேரு குசுகுசுன்னு பேசுறதை ஆராய்ச்சி செய்து பாரு!

பெரு: நல்ல ஆராய்ச்சி போ! உனக்கு எவன்ப்பா இந்த மில்லுலே வேலை போட்டுக் கொடுத்தான்?

ஐயம்: ஆங், அதென்ன அப்படிக் கேட்கிறே?

பெரு: இல்லே, துப்பறியும் இலாகாவுக்கு சர்வாதிகாரியா போக வேண்டிய மனுசனைக் கொண்டாந்து, இப்படி மில்லுலே போட்டு வாட்டி எடுக்கிருங்களேன்னு பார்க்கிறேன்.

ஐயம்: அட, அதென்ன பிரமாதம்ன்னு நினைச்சே? நானும் போகத்தான் போயிருப்பேன். ஆனு, எனக்குத் தாய்மொழி தமிழ் மட்டும்தான் தெரியும். அந்தத் தமிழ் வழியா என் திறமையைக் காட்டுறதுக்கு இப்போ வழி இல்லே. என்ன செய்றது? இன்னெரு மொழியைப் படிச்சி, அந்த மொழிவழியா நம்ம திறமையைக் காட்டினுத்தான் இந்தக் காலத்திலே மதிக்கிருங்க.

பெரு: இந்த அவமானம் நமக்கெதுக்கு இருக்குன்னு கொஞ்சம் ஆராய்ச்சி செய்துப் பாரேன்! அதை விட்டுப் போட்டு, ஏன் எதை எதையோ கட்டிக்கிட்டு அழுகிறே?

ஐயம்: ஆராயலேன்னு நினைச்சே? அப்படியொண்ணும் மெதமா நினைச்சிட வேண்டாம் தம்பி! இந்த இழிவைப் போக்கி தமிழ் உரிமையை நிலைநாட்ட ஒரு படையே கிளம்பி யிருக்குதாக்கும் – தமிழ் அரசுப் படை! அது வெற்றி யடைஞ்சுதோ, நமக்கெல்லாம் விமோசனந்தான். இதிலே சந்தேகமே இல்லேன்னு சத்தியம் பண்ணிச் சொல்ல நான் தயார்!

பெரு: நல்ல வேளை! இதையாவது சந்தேகமில்லாத சங்கதின்னு சொல்றயே, அது வரையிலே ரொம்ப சந்தோஷம்!

ஐயம்: சந்தேகமில்லாமே சந்தோசந்தானே! சரி, வா! (சென்று நின்று திரும்பி) ஆமா, எங்கிருந்தோ வந்த—

**பெரு:** அந்த ஆளை நீ பார்த்திருக்கயோ?

**ஐயம்:** வேறே சோலிக் கழுதை இல்லையோ? ரெண்டாயிரம் பேருக்கு மேலே வேலை செய்ற இடத்திலே, ஏதோ போனோம், நம்ம வேலையைப் பார்த்தோம், வந்தோம்னு இருக்கிறதை விட்டுட்டு நமக்கெதுக்கப்பா ஒவ்வொருத்தனுடைய பூர்வோத்திரமும்?

**பெரு:** ரொம்பச் சரியான பேச்சு.

**ஐயம்:** சந்தேகத்துக்கு இடமில்லாமே!

**பெரு:** (ஏளனமாக) ஐயோ! ஆசாமி யாருண்ணே தெரியாது. தெரிஞ்சிக்கிட அக்கறைப்படுறதும் அனுவசியமான வேலை. ஆனா, அவனைப் பத்திக் கிளம்புற வதந்திகளை ஒண்ணுக்குப் பத்தா, பத்தை நூறு, நூறை ஆயிரமா பெருக்கிப் பார்த்துப் பேசுறதிலே ஒரு ஆனந்தம்!

**ஐயம்:** அட என்னப்பா நீ, மனுசன் சந்தேகப்பட்டு —

**பெரு:** பாழாப் போறது உன்னோடேயே இருக்கட்டும். என்னையும் கொண்டுபோயி அந்தப் படுகுழியிலே தள்ளிடாதே! சங்கு ஊதுற நேரமாச்சு; நீ நட!

**ஐயம்:** இப்படித்தான் அலட்சியமாப் பேசப்படாதுண்ணு நானும் அழுத்தந் திருத்தமா, ஆணித்தரமா, அடிக்கடி சொல்லிக்கிட்டு வர்றேன். நீ என்னடாண்ணா ..

**பெரு:** நமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களிலே மண்டையைப் போட்டுப் பிளக்கிறது அவ்வளவும் தண்டம் தண்டம்னு தண்டோரா போட்டுக்கிட்டு வர்றேன்.

**ஐயம்:** நல்லா போட்டே போ! இதனாலே என்ன ஆகுது தெரியுமோ? நம்மைச் சுத்தி நடக்கிற நடப்புகள் ஒண்ணுமே தெரியாமேப் போகுது. அதாவது பொது அறிவே மட்டமாப் போகுதுண்ணு வச்சிக்கோயேன்!

**பெரு:** ஆகா, ஏன் சொல்றே உன் பொது அறிவை! பளிச் பளிச்சின்னு டால் அடிச்சிக்கிட்டில்லே இருக்கு!

**ஐயம்:** டால் அடிக்காமே, உன்னைப்போலே டல்லடிச்சிப் போயிருக்குதுண்ணு நினைச்சே? இப்போ பாரு, ஒரு முக்கியமான விஷயம் நடக்கப்போகுது — நம்ம முதலாளி விஷயம். அதைப் பற்றி உனக்கு ஒரு துளியாவது தெரியுமோ?

[வேறு எங்கோ நோக்குவதுபோல் நிற்கும் வரதன் இவர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனிக்கிறான்]

**பெரு:** உனக்குத் தெரியுமாக்கும்?

**ஐயம்:** தெரியுமாக்குமாவது! தெரியுமப்பா தெரியும்; ரொம்பத் தெளிவாத் தெரியும்.

**பெரு:** தெரிஞ்சாக் கொஞ்சம் சொல்லேன்!

**ஐயம்:** அப்படி வா வழிக்கு! இப்போ ஜப்பானிலே இருக்கிற சின்ன முதலாளியைக் கையோடே கூட்டிக்கிட்டு வர்றதுக்காக நம்ம பெரிய முதலாளி ஜப்பானுக்கே போகப் போருராம். பிரயாண ஏற்பாடுகளெல்லாம் ரொம்ப தீவிரமாச் செய்துக்கிட்டிருக்கிருங்களாம்!

**பெரு:** அப்டீங்களா! இதுதான் உங்க பொது அறிவிலிருந்து சிதறிய சிறு பொறியாக்கும்?

**ஐயம்:** பிறகு என்னண்ணு நினைச்சே! நான் ஒரு விஷயத்தை ஆராயுறதுண்ணு ஆரம்பிச்சா—

**பெரு:** அவ்வளவும் தலைகீழ்ப் பாடம்தான்! அட போப்பா போக்கத்தவனே! பெரிய முதலாளி ஜப்பானுக்குப் போகப் போருர் என்கிறது எல்லோரும் கேள்விப்படுகிற சேதி. இதிலென்ன இருக்கு ஆராய்ச்சியும், பொது அறிவும்? இந்தாப்பா, உன்னைப் பிடிச்சிருக்கிற இந்தப் பீடை உன்னோடேயே இருக்கட்டும். எனக்கும் வந்து தொத்த வேண்டாம்! நான் வர்றேன். (செல்லுகிருன்)

**ஐயம்:** அட, எனக்கா பீடை பிடிச்சிருக்கு? இல்லே கேட்கிறேன். (அழுத்தமாக) சந்தேகப்பட்டுக் கேட்கிறேன்!— ஏ பெருமாளு, இருப்பா, நானும் வர்றேன்.

[ஐயம்பெருமாள் செல்லுகிருன். வரதன் சிந்தனையோடு அங்கும் இங்கும் நடை போடுகிருன்]

**அறிவு – குரல்:** இனி வேஷத்தைக் கலைத்துவிட வேண்டியதுதான். மேலும் தாமதித்தால், வீணுக அப்பா ஜப்பானுக்குச் சென்று ஏமாற்றமடைவார். அதோடு கோமதியைச் சுற்றி வளர்ந்து வரும் வதந்திகளால் விபரீத விளைவுகள் ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

**வரதன்:** ஆம்; மேற்கொண்டு நீடிப்பது தவறு; அதற்கு அவசியமுமில்லை. ஆனுல்...

**குரல்:** தொழிலாளி வரதன், முதலாளி வசந்தனுக மாறுவது எப்படி என்றுதானே யோசிக்கிருய்?

**வர:** ஜப்பானிலிருந்து திரும்புவதாக நடிக்க வேண்டுமே!

**குரல்:** அதென்ன பிரமாதம்! நேராக பம்பாய்க்குச் செல். அங்கு பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உன் முதலாளித்துவ உடைகளையும் உடைமைகளையும் எடுத்துக் கொள். "இப்பொழுதுதான் ஜப்பானிலிருந்து பம்பாய் வந்திருக்கிறேன்; விரைவில் ஊருக்குப் புறப்படுகிறேன்" என்று தந்தி கொடு.

**வர:** அதுதான் சரி. ஆனுல், கோமதியிடம்....

**குரல்:** *சொல்வதற்கு என்ன இருக்கிறது? ஒரு வாரத்திற்குள் திரும்பிவிடப் போகிருய். அதற்குள் இங்கென்ன புரட்சியா ஏற்பட்டுவிடும்? முதலாளிக் கோலத்தில் உன்னைக் காணப்போகும் கோமதி, அப்படியே அசந்துபோய் நிற்பாள். கூலிக்காரப் பெண்ணைக் கைப்பிடித்தவன் வெறும் கூலி அல்ல; கோமகன் என்று கண்டால் களிப்பு மிகுதியால் துள்ளி ஆடுவாள்!*

**வர:** *ஆமாம்; இப்பொழுதே சொல்லி ஏன் வீண் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும்? திடீரென்று அவள் முன் முதலாளியாக வந்து நின்ருல் அப்படியே பிரமித்து விடுவாள். அந்தக் கோலாகலக் காட்சியைக் கண்டு ரசிப்பதை விட வேறு இன்பம் என்ன இருக்கிறது! (எல்லையற்ற மகிழ்ச்சியோடு செல்லுகிருன்.)*

●

## காட்சி 42

○

முருகேசன் வீடு — வரதன் எதுவும் சொல்லாமல், திடீரென்று எங்கோ போய்விட்டதை எண்ணி திகிலும் குழப்பமும் மேலிட்டவளாய் துக்கமே உருவாக நிற்கிருள் கோமதி. தெருவில் காலடி ஓசை கேட்கிறது. பரபரப்புடன் சென்று எட்டிப் பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்து, இதயத்தில் சோகக் கடல் அலை மோத சோர்ந்து உட்காருகிருள். நேரம் ஆக ஆக அவள் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி வேதனைப்படுகிருள். இறுதியில் எதையோ நினைத்துக் கொண்டவளாய் பரபரப்புடன் வீடெல்லாம் தேடிப் பார்க்கிருள். கொடியில் தொங்கிக்கொண்டிருந்த புடவையில் கடிதம் ஒன்று இணைக்கப்பட்டிருக்கிறது. கருத்திலே கலக்கம், கண்களிலே நீர் பொங்க அதைப் பிரித்துப் படிக்கிருள்.

**வசந்தன் குரல்:** *அன்பே, நான் செய்து காட்டப் போவதாகச் சொன்ன அதிசயத்தை இன்னும் ஒரு வாரத்திற்குள் நீ கண்ணுரக் காண்பாய்! சென்று வருகிறேன் —* ***வரதன்.***

[கடிதத்தின் பொருள் கோமதியை கதிகலங்கச் செய்கிறது. கைவிட்டு ஓடிவிட்டார் என்று எண்ணுவதா, அல்லது களிப்பூட்டத் திரும்பி வருவார் என நம்புவதா என்று அவள் சித்தம் தடுமாறுகிறது. 'அப்பா' என்று அலறிய வண்ணம் அருகில் இருக்கும் கட்டிலில்

சோர்ந்து விழுந்து, முகத்தை புதைத்துக்கொண்டு விம்முகிருள். மீண்டும் எழுந்து உட்கார்ந்து, பொங்கி வழியும் கண்ணீரைத் துடைத்தவாறு மறுபடியும் கடிதத்தைப் பார்க்கிருள்.]

**கோமதி:** (தனிமொழி) இந்தக் கடிதத்திற்கு என்ன அர்த்தம் என்று நான் யாரைப் போய்க் கேட்கட்டும்!– என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய்விட்டீர்களே, இதைப்பற்றி நான் என்ன எண்ணட்டும்? கைவிட்டுப் போய் விட்டீர்கள் என்று கதறியழுவதா, அல்லது....? — இன்னும் ஒரு வாரத்திற்குள் நான் என்ன பார்க்கப் போகிறேன்? கண்டவர் கண்டபடி ஏசுவதைக் காணப்போகிறேனு. அல்லது...? நான் எதைக் காணப்போகிறேன்! (கட்டிலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுகுரலில்) நீங்கள் சொல்லாமல் போய்விட்டது பற்றி நான் என்ன நினைப்பது?– எங்கு போயிருக்கிறீர்கள் என்று கூடச் சொல்லவில்லையே! இனி நீங்கள் திரும்பி வருவீர்கள் என்று நான் நம்பிக் கொண்டிருப்பதா, அல்லது...? நான் இனி என்ன செய்வது – என்ன செய்வது!

[இந்நேரம் துயரப் புயலில் அடிபட்ட கோலத்தோடு முருகேசன் வருகிருன். கட்டிலில் விழுந்து கிடக்கும் கோமதியின் நிலைகண்டு நெஞ்சு நிலைதடுமாற அவள் அருகில் செல்லுகிருன்]

**முருகேசன்:** அம்மா, கோமதி!

**கோமதி:** (எழுந்து, 'அப்பா' என்று முருகேசன்மீது சாய்ந்து) அப்பா, ஏதாவது தகவல் கிடைச்சதாப்பா? (முருகேசன் 'ஒன்றுமில்லை' என்பதாக தலையாட்டுகிருன்) ஒண்ணுமே தெரியலையா அப்பா? இனி நான் என்ன செய் யட்டும் அப்பா! இனி நான் என்ன செய்யப்போறேன்!

[துக்கம நெஞ்சை அடைக்க பேச நா எழாதவனுய் சிலை போல் நிற்கிருன் முருகேசன். கோமதி கடிதத்தைக் கொடுக்க அதை வாங்கிப் பார்க்கிருன். கோமதியை கட்டிலில் உட்காரவைத்து அருகில் அமருகிருன்.]

**முரு:** இது என்னம்மா அதிசயம்?

**கோமதி:** எனக்குத் தெரியாதப்பா!

**முரு:** உன்கிட்டே ஒண்ணுமே சொல்லலையா?

**கோமதி:** அதிசயம் ஒண்ணு செய்து காட்டப்போறேன்னு சொன்னரு. அவ்வளவுதான்.

**முரு:** அது என்ன அதிசயம்னு நீ கேக்கலையா?

**கோமதி:** கேட்டேன். சொல்லக்கூடாது; பின்னாலே நீயே தெரிஞ்சிக்கிடுவேண்ணு மறைச்சிட்டாரு.

**முரு:** ஆங்! (திடுக்கிடுகிறான். இருந்தாலும் தன்னை சமாளித்துக்கொண்டு, கோமதியை அன்போடு தழுவியவாறு) அம்மா, அழாதேம்மா! எல்லாம் நடக்கிறபடி நடக்கும். மனசை சமாதானப்படுத்திக்கோம்மா. இன்னும் ஒரு வாரத்திலே தெரியும்னு எழுதியிருக்கிறாரே, அதுவரையிலே பொறுத்துப் பார்ப்போம். நீ கண்ணீர்விட்டுக் கலங்குறதை என்னாலே பார்க்கமுடியலேம்மா, பார்க்கமுடியலே! உனக்கு ஒரு குறையும் வராது. எல்லாம் அவன் செயல்!

●

## காட்சி 43

○

சோமசுந்தரம் பங்களா — சோமசுந்தரம் ஜப்பான் செல்லவிருப்பதை முன்னிட்டு, கோபாலும் செந்தாமரையும் பிரயாண ஏற்பாடுகளைச் செய்வதில ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு பெட்டியில் சலவைத் துணிகளை அடுக்கி வைத்துக்கொண்டிருக்கிறாள் செந்தாமரை. அருகில், காகிதமும் பென்சிலுமாக எதையோ ஆழ்ந்து யோசித்தவாறு நிற்கிறான் கோபால்.

**கோபால்:** (பென்சிலால் தலையில் தட்டிக்கொண்டே) ம்... கணக்கு ஒண்ணும் சரியா வரலையே!

**செ:** எந்தக் கணக்கு?

**கோபால்:** உன் தலைக்கணக்கு! உனக்கென்னடி தெரியும்?— நீ நேத்து வந்தவ! வாயை மூடிக்கிட்டுப் பேசாமேக்கிடயேன்! இங்கே கணக்கு என்னைப்போட்டு மிரட்டுது. இவ என்னடாண்ணா குறுக்கே குறுக்கே பேசி என் மூளையைக் கலக்கிக்கிட்டே இருக்கிறா!

[செந்தாமரை ஒழுங்கு காண்பித்துவிட்டு துணிகளை அடுக்கிக் கொண்டிருக்கிறாள். கோபால் கணக்குப் போடுவதில் ஈடுபடுகிறான்.]

**கோபால்:** ம்....ஆமா, அண்ணைக்கு எத்தனை துணி சலவைக்குப் போச்சு! (பதில் வராததைக் கண்டு செந்தாமரையைப் பார்த்து) அட, உன்னைத்தான் கேக்கிறேன்; அண்ணைக்கு எத்தனை துணி வெளுக்கப் போட்டே? அட, மனுசன் கேக்கிறது காதிலே விழலே? அட, (உரக்க) ஏ செந்தாமரே!

**செ:** நான் நேத்து வந்தவ. முந்தாநாத்து வந்தவ எவளாவது இருந்தா அவளைப் போயிக் கேளு!

**கோபால்:** அட, இதென்னடா இது, சங்கடமாய் போச்சு! இந்தா பாரு, சலவைக்குப் போனதும் வந்ததும் இங்கே கணக்கிலே வந்து முட்டுது. போட்ட துணியெல்லாம் வந்தாச்சா, இல்லையா?

**செங்:** எல்லாம் வந்தாச்சு. உன் கணக்கிலேதான் உதைக்குது. ஒண்ணு ரெண்டை ஒழுங்காக் கூட்டவே உன் மண்டையிலே ஏருது. இந்த லட்சணத்திலே காகிதத்தையும் பென்சிலையும் தூக்கிக்கிட்டாரு!

**கோபால்:** ஆமா, இவ கணக்கிலே பெரிய புலி! சரி சரி! நான் சொன்ன கணக்குப்படி சட்டை வேட்டியெல்லாம் எடுத்து வச்சிருக்கிறேயா!

**செங்:** வச்சிருக்கிறேன்.

**கோபால்:** மற்ற சாமான்கள்?

**செங்:** எல்லாம்தான். ஒண்ணு பாக்கியில்லே.

**கோபால்:** ரொம்பச் சரி. ம்...செண்ட் புட்டி?

**செங்:** இப்போ ஜப்பானுக்குப் போகப் போறது யாரு? பெரிய முதலாளியா, நீயா?

**கோபால்:** ஏன், நான் போறதாயிருந்தாத்தான் செண்ட் புட்டி வேணுமா?

**செங்:** அவசியம் வேணும். ஏண்ணு? நேத்து வந்தவ, முந்தாநாத்து வந்தவ, முந்தாநாத்துக்கு முந்தாநாத்து வந்தவ, அதுக்கும் முந்தி வந்தவ அத்தனை பேரையும் ஒரு சுத்து பேட்டி கண்டுட்டு வரணும் பாரு!

**கோபால்:** உனக்கென்னடி தெரியும்? – நீ நேத்...அட (சிரித்துக்கொண்டு) இவளைப் பார்த்தா சிரிப்புத்தான் வருது!

**சோமசுந்தரம்:** (வந்துகொண்டே) தாராளமாச் சிரிடா, தாராளமாச் சிரி!

**கோபால்:** (திரும்பிப் பார்த்து) வந்து....

**சோம:** வசந்தன் வந்தாச்சிடா, வந்தாச்சி!

**கோபால்:** வந்தாச்சா? (பரபரப்புடன் நடமாடியவாறு) எங்கே முதலாளி? எங்கே, எங்கே?

**சோம:** டேடேடேய்!

**கோபால்:** நீங்க கொஞ்சம் இருங்க முதலாளி. ம்ம்.... எங்கேடி மாலே? மாலே எங்கே? ம்ம்... ஓகோ! மாலே வாங்கி வைக்கலேயோ!

**சோம:** டேடேய்! ஏண்டா குதிக்கிறே? வசந்தன் பம்பாய்க்கு வந்திருக்கானும், பம்பாய்க்கு. தந்தி வந்திருக்கு.

**கோபால்:** ஆங், பம்பாயிலேயா இருக்காரு; இன்னும் நம்ம ஊருக்கு வந்து சேரலையா? அப்பச்சரி, இனி ஒரு நிமிஷம் கூட தாமசம் கூடாது. நேரா பம்பாய்க்குப் போய்ச்சேர வேண்டியதுதான். இல்லாட்டா, அவர்பாட்டுக்கு அங்கே இங்கே போறேன்னு பறந்துடுவாரு.

**சோம:** ஆமா, பறப்பான்! அதுக்குள்ளே நான் பறந்து போயி அவனைக் கையோடே இழுத்துக்கிட்டு வந்து சேருவேன். டேய், நீயும் கூட புறப்படு. இன்னும் அரை மணி நேரம்கூட இல்லே; ஏரோப்ளேன் புறப்பட்டுடும். சிக்கிரம்! (போகிறார்)

**கோபால்:** இதோ, அரை நொடியிலே ரெடி! (செந்தாமரையிடம்) ம்... ஏண்டி மரமாட்டமா நிக்கிறே? மளமளன்னு காரியம் ஆகட்டும். (படுக்கையைப் பரபரப்புடன் சுற்றிக் கட்டிக்கொண்டே) தம்பி, இந்தத் தடவை நீ எங்கேயும் பறக்க முடியாது. இந்த ஐயாவே அங்கே வரப்போறுரு. ஊக்கும்!

**செ்:** (தயங்கி) ரயில்லே போனா என்ன?

**கோபால்:** ஏன், கட்டை வண்டியிலே போறது! பேசுறதைப்பாரு, பேசுறதை! உன் மண்டையிலே களிமண்ணு தான் இருக்கு!

**செ்:** இல்லே, விமானம் வந்து அடிக்கடி—

**செ்:** விழுந்து நொறுங்கிட்டா அடுத்ததிலே ஏறிக்கிட்டு அவசரமாப் போய்ச் சேருறோம், என்ன கெட்டுப் போச்சு என்கிறேன். ம்ம்......சீச்சி! அதெல்லாமில்லே, அதெல்லாமில்லே! அபசகுனமாப் பேசித் தொலேக்காதே! ஆகவேண்டியதை பாரு!

●

## காட்சி 44

○

இளங்கோ மில்லில் பாலுவின் அறை – வெறி பிடித்தவன்போல் உட்கார்ந்திருக்கிறான் பாலு.

**பாலு:** (ஓங்கி மணியடித்து) டேய்!

**ஆபீஸ் பையன்:** (ஓடோடியும் வந்து) சார்!

**பாலு:** எங்கேடா அவ?

**பையன்:** இதோ வர்றேன்னு சொன்னுங்க. வந்த்—

**பாலு:** ஷட்டப்! சொன்னுங்க என்னடா, சொன்னுங்க! சொன்னுண்ணு சொல்லித் தொலேயேண்டா சோணகிரி! பெரிய பட்டத்து இளவரசி, 'அவங்க' போட்டு அழைக் காட்டா, அவ அந்தஸ்து அந்தரத்திலே தொங்கும் பாரு!—டேய், ஒழுங்கா வர்ருளா, இல்லே குடுமியைப் பிடிச்சி இழுத்தாரணுமா? ரெண்டுலே ஒண்ணு கேளுடா மண்டு! ஓடு.

**பையன்:** சரீங்க. (பயப்பிராந்தியுடன் செல்கிருன்)

**பாலு:** (எழுந்து அப்படியும் இப்படியும் நடைபோட்ட வாறு) ராஸ்கல்! நாடகமாடுரு, நாடகம்!

**பையன்:** (திரும்பி வந்து) இதோ வந்துட்டாங்...

**பாலு:** ஷட்டப்! (ஏளனமாக) வந்துட்டாங்களோ! (கோப மாக) வடிகட்டின முட்டாள்! — விலகி நில்லுடா விவேகம் கெட்டவனே. பட்டமகிஷி பவனி வரும்போது பரதேசிப் பயமாதிரி ஏண்டா எதுக்க நிற்கிறே?

[பதறியவனுய் ஒரு ஓரமாக ஒதுங்கி நிற்கிருன் பையன். துயரக்கடலில் மூழ்கி எழுந்த கோலத்தோடு **கோமதி** வருகிருள்.]

**பாலு:** ஆகா, வர்றபோதே ஜிலு ஜிலுன்னு ஜொலிச்சிக் கிட்டேயில்லே வர்ரு!

[கோமதி அதிர்ச்சியுற்று நின்று, சிறிது ஏறிட்டுப் பார்க் கிருள். பொங்கிக்கொண்டு வரும் கண்ணீரை அடக் குவதற்காக இமைகளே லேசாக மூடித் திறக்கிருள்.]

**பாலு:** (ஏளனமாக) ஐயோ பாவம்! சிந்தை தடுமாறச் செய்யும் வேல் விழிகள், இன்று கண்ணீர் சிந்தி நொந்து போவதைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லேயே! (கோப மாக) எத்தனே நாளாக இந்தக் கள்ளக் களியாட்டம்? சொல்! கற்புக்கரசி என்று பாவலாப் போட்டுக் கூத்தாடினுயே, இந்தத் திரைமறைவுத் திருநாடகம் எப்போதிருந்து திருமதி? சொல்! கேட்டதற்கு பதில் சொல்!

**கோமதி:** அது என் சொந்த விஷயம்.

**பாலு:** ஆகா, சொ...ந்...த விஷயம்! சோரம் போவது சொந்த விஷயமல்ல சொக்கழகி, சொந்த விஷயமல்ல! சந்து பொந்தெல்லாம் பரவி நாலு பேர் காறித் துப்பும் மானங் கெட்ட நடத்தை!

**கோமதி:** அதன் பலாபலன்களே அனுபவிக்கப் போகிற வள் நான். அதில் நீங்கள் தலேயிடுவது—

**பாலு:** கூடாது என்று கொக்கரிக்கிருயா? வெட்கங்கெட் டவளே!—பாவம் பிழைக்கட்டும் என்று பரிதாபப்பட்டு வேலே

கொடுத்தால், மில்லேயே சல்லாபக் கூடமாக்கவா பார்க்கிருய்? இது, கருத்தை மயக்கித் திருட்டுத்தனமாகக் கொஞ்சித் திரியும் பூஞ்சோலேயல்ல அம்மணி! பருத்தியை நூலாக்கும் பஞ்சாலே! நெஞ்சிலே கொஞ்சம் நிறுத்து!

**கோமதி:** (தயக்கத்துடன்) என் கருத்துக் கிசைந்தவரை—

**பாலு:** காதலித்தேன்; ஆகவே குற்றமிலேன் என்று கூறுகிருயா? பேஷ்! உன் கருத்தைக் கவர்ந்த அந்தக் கண்ணுளன் எங்கே? எங்கே உன் மாஜிக்காதலன்? மாயமாய் மறைந்து விட்ட மர்மமென்ன மாதரசி?

**கோமதி:** வருவார்.

**பாலு:** வாயைப் பிளந்து கொண்டிரு! வண்டு பறந்து தோடிவிட்டது வனிதாமணியே, பறந்தோடிவிட்டது! தேனருந்திய வண்டு இனி திரும்பாது. புது மலரை நாடிச் செல்லும்.

**கோமதி:** அப்படியெல்லாம் நடக்கமாட்டார். அவர் என் வருங்கால கணவர்.

**பாலு:** கணவர்! கண்டவனேயெல்லாம் கணவன் என்று கொண்டாடுவாய். அதைக் கண்டு நாங்கள் பூச்செண்டு தந்து மகிழவேண்டும்? கணவராம் கணவர்! யாருக்கும் தெரியாமல் தற்காலிகக் கணவனுயிருந்தான்; இப்போது கைவிட்டு ஓடி விட்டான் என்று சொல்! காலிப்பயல்!

**கோமதி:** தயவுசெய்து கண்டபடியெல்லாம் பேச வேண்டாம்! அவர்கண்ணியமானவர்.

**பாலு:** ஆகாகா! என்ன காதல், என்ன காதல்! கணக்கில்லாமல் பெருக்கெடுத் தோடுகிறதே! அவ்வளவு கண்ணியம் அவனிடம் இருந்தால், அவன் ஏன் யாரிடமும் சொல்லாமல் ஓடுகிருன்? வேலே செய்த கூலியும் வாங்காமல், விடுமுறைக்கு விண்ணப்பமும் போடாமல் மறைந்துவிட்டானே, அந்தத் திருடன் திரும்பி வருவான் என்று நீ கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கலாம். ஆனுல் அதை நம்ப இங்கே யாரும் தயாராக இல்லே. அவனேடு காதல் நாடகமாடிய உனக்காவது தெரியுமா, அவன் எங்கே போனுன், எங்கே இருக்கிருன், என்ன செய்கிருன், எப்பொழுது திரும்புவான் என்று? தெரியுமா உனக்கு? ஏன் மௌனம் சாதிக்கிருய்? பதில் சொல்!

**கோமதி:** தெரியாது.

**பாலு:** பிறகு ஏன் பேசுகிருய்? ஓடுகாலிகளேக் கண்டால் இனிக்கிறது; என்போன்ற உயர்ந்தோரைக் கண்டால் கசக்கிறதோ? (வினயமாக) கோமதி, போனது போகட்டும். இன்

னும் காலம் கடந்துவிடவில்லை. எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்; மன்னித்துவிடுகிறேன். காதல் பருவம் கண் ணீரில் கரைந்து வீணுவதைக் கண்டு பேசாமலிருப்பது என் போன்ருேருக்கு அழகல்ல. காப்பாற்றவேண்டியது கடமை; செய்கிறேன். நீ மட்டும்...

**கோமதி:** சரி என்று சொல்லவேண்டும்.

**பாலு:** (மகிழ்ச்சி பொங்க) ஆங், அதுதான், அதுதான், அதேதான்! அந்த ஒரே ஒரு வார்த்தை போதும்! பிறகு உன்னைச் சுற்றிக் கிளம்பியிருக்கும் இந்த வதந்திகளையெல் லாம் ஒழித்துக்கட்டுவேன். ஏளனமாகப் பேசுவோர் எவ ராயிருந்தாலும், பளார் என்று அவர் கன்னத்திலே பரிசு தருவேன். கழிவுப் பஞ்சைக் கோதி அள்ளும் உன் கைகள் கனகாம்பர மலரோடு கொஞ்சிக்கொண்டிருக்கும். உன்னை மயக்கி ஏமாற்றிய அந்த மடையன் ஓடிவிட்டான். ஒழியட் டும்; பரவாயில்லை; மறந்துவிடு. மனம் முறிந்துவிட்டது என்று வேதனைப்படுவது மடத்தனம். அது என்ன மரமா, முறிந்துவிட்டால் ஒட்ட முடியாது—ஒட்டினுலும் உயிர் இருக் காது என்று கவலைப்பட? அல்லது கண்ணுடியா, உடைந்து விட்டால் திரும்ப உருவாகாது என்று உருகிக்கொண்டிருக்க? அது இழுத்த இழுப்புக்கெல்லாம் வரும் ஜவ்வுமிட்டாய்! நாம் பார்த்து எப்படி வேண்டுமானுலும்—

**கோமதி:** போதும்!

**பாலு:** வர்ணனையா?

**கோமதி:** வஞ்சக வார்த்தைகள்! போரும் காதலும் தமி ழகப் பெண்களின் முன்னுள் சரித்திரம் என்று கேள்விப்பட் பட்டிருக்கிறேன். இப்போது அந்த முனையும் முறையும் மாறியிருக்கலாம்! ஆனுல் நிலை மாறவில்லை. ஓடுகாலி என்று வாய்கூசாது ஏசுகிறீர்களே, அந்த ஒருவரைத்தான் காதலிக் கிறேன். அதற்குக் குறுக்கே நிற்பவர்கள் யாராயிருந்தாலும் சரி, எதிர்த்துப் போராடத் தயங்கமாட்டேன்!

**பாலு:** கோமதி!

**கோமதி:** இன்பமும் துன்பமும், அழுகையும் சிரிப்பும், நட் பும் பகையும், அன்பும் துரோகமும் அருகருகே இருப்பது போல காதலும் போரும்! சீராகப் பிழைக்க முடியாவிட்டால் போராடிச் சாவதே மேல்.

**பாலு:** உனக்கு இன்னும் திமிர் அடங்கவில்லை!

**கோமதி:** தற்காப்புக்காகப் போராடும் எனக்கா? படை யெடுத்துவரும் உங்களுக்கா?

**பாலு:** மூடு வாயை! இந்த விநாடியே உன்னை இங்கிருந்து விரட்டியடிப்பேன். ஜாக்கிரதை!

**கோமதி:** பிறகு?

**பாலு:** தெருத் தெருவாக அலைந்து பிச்சை எடுத்துச் சீரழியப் போகிறாய்!

**கோமதி:** அதற்குமேல்?

**பாலு:** உன்னை உருவே இல்லாது ஒழிக்கவும் முடியும். தெரிந்துகொள்!

**கோமதி:** அவ்வளவுதான் செய்யமுடியும்! அதற்குமேல் எனக்கும் நிம்மதி; உங்களுக்கும் நிம்மதி!

**பாலு:** எதிர்த்துப் பேசாதே! எலும்பு நொறுங்கிவிடும்!

**கோமதி:** எதிர்பார்க்கிறேன்.

**பாலு:** உன்னை இப்போதே வேலையிலிருந்து நீக்குகிறேன்.

**கோமதி:** ஏற்றுக்கொள்கிறேன்.

**பாலு:** ஷட்டப்! சீமையிலிருந்து சின்ன முதலாளி வரப் போகும் நேரத்தில் உன்னைப்போன்ற சிங்காரிகளால் இந்த மில் களங்கமடைய அனுமதிக்கமாட்டேன். இப்போதே வெளியில் நட! (மணியடித்து) டேய் யாரடா அவன், இவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுடா!

**கோமதி:** அவ்வளவு சிரமம் உங்களுக்கு வேண்டாம். நானே போய்விடுகிறேன். போகும்போது ஒரே ஒரு வார்த்தை. அதிகாரங்கள் வகுப்பதும், அவற்றைக் கையாள அதிகாரிகள் இருப்பதும், ஆதிக்க வெறிகொண்டு அக்கிரமங்கள் செய்வதற்கல்ல! அதிகாரம் அளித்த மக்களை அடிமைகளாக்கிக் கொடுமைப் படுத்துவதற்கல்ல! அன்பு வழியில் தொண்டு செய்து அமைதி ஏற்படுத்தத்தான். இந்த முறை தவறிய அதிகாரபீடங்கள் மக்கள் கொதிப்பிலிருந்து தப்பியதில்லை; தப்பமுடியாது! என்றாவது ஒருநாள் நொறுங்கியே தீரும்!

**பாலு:** ஷட்டப்!

**கோமதி:** வருகிறேன். (போகிறாள்)

**பாலு:** வரவேண்டாம்; அப்படியே ஒழிந்துபோ! (தனிமொழி) ராஸ்கல்! இவளை இந்த ஊரில் விட்டுவைப்பதே தவறு. (பல்லைக் கடித்துக்கொண்டு) இப்போதே விரட்டியடிக்கச் சொல்லுகிறேன்!

## காட்சி 45

O

தெருவழியே, ஐயம்பெருமாளும் பெருமாளும் முன்னும் பின்னுமாக நடந்து செல்லுகின்றனர்.

**ஐயம்பெருமாள்:** (நடந்துகொண்டே) இதுக்குத்தான் நான் சொல்றது! எந்த ஒரு விஷயத்தையும் சந்தேகத்துக்கு இடமிருக்கிற சங்கதியாண்ணு அடிக்கொரு தரம் ஐயப்— (திரும்பிப் பார்த்து) அட, என்ன பெருமாளு நீ, நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டே போறேன்; நீ பாட்டுக்குச் சாவகாசமா வர்றே?

**பெருமாள்:** (வந்துகொண்டே) உன் மூளை ஆராய்ச்சியிலே இறங்கியிருக்கிறபோது நான் விலகி நிக்கிறது நல்லது பாரு. அதுக்குத்தான் கொஞ்சம் எட்டியே நடந்து வர்றேன். இல்லாட்டா, அந்த வேதனையை எவனாலே தாங்கமுடியும்?

**ஐயம்:** நல்ல ஆளப்பா நீ! நான் ஆராய்ச்சி செய்றது எதுக்குத் தெரியுமோ? எல்லாம் உன் நன்மைக்குத்தான். முக்கியமா நீ சீர்திருந்தணும்.

**பெரு:** ஆகா, என் சொல்றே! என்னைப்போல இன்னும் நாலு பேரு உன் பின்னாலே திரிய ஆரம்பிச்சாங்களோ அவ்வளவுதான்; பைத்தியக்கார ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டியதுதான்!

**ஐயம்:** இந்தா பாரு பெருமாளு, நீ பேசுறது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கலே; ஆமா! சந்தேகத்துக்கு இடமில்லாத சங்கதி எதுண்ணா, அது இதுதான்!

**பெரு:** அதெப்படிப் பிடிக்கும்? ஊர்ப்பட்ட சங்கதியை ஒண்ணை ஒன்பதாக்கிக் கூட்டிக் குறைச்சி நீட்டிப் பேசினா உனக்குப் பிடிக்கும்!

**ஐயம்:** நானா நீட்டுறேன்? உள்ளது உள்ளபடி தெள்ளத் தெளியத் தெரிஞ்சிக்கிடுறேன் பெருமாளு, தெரிஞ்சிக் கிடுறேன்!

**பெரு:** நீதானே! விளக்கெண்ணையிலே வெண்டைக் காயைப் போட்டுக் குழப்புற மாதிரி குழப்புறே, இதுவரையிலே உனக்குத் தெளிவான சங்கதி ஒண்ணு உண்டா?

**ஐயம்:** ஒன்பதினாயிரம் இருக்கு. நான் ஒரு விஷயத்திலே சந்தேகப் பட்டேண்ணா, அது சரியா இருக்கும்!

[இந்நேரம் அவ்வழியே சென்ற **முருகேசன்**, இவர்கள் பேசுவதைக் கேட்டு நின்று கவனிக்கிறான்]

**பெரு:** உதாரணத்துக்கு ஒண்ணு சொல்லேன்!

**ஐயம்**: சொல்லட்டுமா? அதாவது நான் அண்ணைக்கு என்ன சொன்னேன்?

**பெரு**: என்னே சொன்னே?

**ஐயம்**: அந்த முருகேசன் மகள் கோமதி என்கிற பொண்ணு, எங்கிருந்தோ வந்தவன் கிட்டே ரொம்ப நேசமாப் பழகுறு; இதிலே ஏதோ மர்மம் இருக்கத்தான் இருக்குண்ணு சந்தேகப்பட்டுச் சொன்னேன். இல்லையா?

[முருகேசன் மனம் பதை பதைக்கிறது]

**பெரு**: அது அவங்க ரெண்டு பேருடைய விருப்பம்.

**ஐயம்**: விருப்பத்தை விட்டுத் தள்ளப்பா; அதிலேயிருக்கிற மர்மத்தைப் பாரு!

**பெரு**: மண்ணுங்கட்டியைப் பாரு! இதிலென்ன இருக்கு மர்மமும் கர்மமும்?

**ஐயம்**: இல்லேண்ணு, அந்த மன்மதன் எங்கே மறைஞ்சிட்டான்? இல்லே கேட்கிறேன். உன் மண்டையிலே இருக்கிற மூளையைக் கொஞ்சம் செலுத்திப் பாரு!

**பெரு**: போனவன் வரமாட்டானுக்கும்?

**ஐயம்**: ஆங், இங்தோன் இருக்கு உனக்கு அறிவு குறைவு, ஆராய்ச்சி மட்டம் என்கிற நுணுக்கம்! ஏம்பா திரும்பி வர்றவனயிருந்தா அவன் ஏன் யார்கிட்டேயும் சொல்லாமே ஓடுருன்? இல்லே கேட்கிறேன்! வேலே செய்த கூலிகூட வாங்காமே போயிட்டானே, அவனு திரும்பி வர்ற மனுசன்? ஏதோ ஏமாத்தின வரையிலே மிச்சம். இனி அவ எக்கேடு கெட்டா அவனுக்கென்ன? இதையெல்லாம் ஆராஞ்சி பார்க்காமே என் மேலே சீறிப்பாயிறதுண்ணு தயார்.

**பெரு**: ஏதாவது அவசரமான வேலே இருந்திருக்கும். சொல்றதுக்கு சந்தர்ப்பம் கிடைச்சிருக்காது.

**ஐயம்**: நல்லாச் சொன்னே போ! கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கிட்டுத் திரிஞ்சானே, அந்தப் பஞ்ச வர்ணக் கிளிகிட்டே கூடவா சொல்றதுக்கு நேரமில்லே? பரிதவிக்க விட்டுட்டில்லேப்பா பறந்துட்டான்!

[அவமானத்தால் உடல் குன்றிய நிலேயில் நிற்கிருன் முருகேசன்]

**பெரு**: அந்தப் பொண்ணுக்குக்கூடத் தெரியாதா?

**ஐயம்**: அட அப்பாவிப் பெருமாளு போ! இதுக்குத்தான் நான் சொல்றது! எந்த ஒரு விஷயத்தையும் சந்தேகத்துக்கு இடமிருக்கிற சங்கதியாண்ணு—

**பெரு:** ஆராய்ச்சி செய்து ஆகவேண்டியது இதிலே என்ன இருக்கு? ஏதோ அவங்க ரெண்டு பேரும் பிரியப்பட்டுக் காதலிச்சாங்க. இப்போ அவன் எங்கேயோ போயிருக்கிருன். போனவன் திரும்பி வருவாஞ, மாட்டாஞ என்கிறது பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம். இதை விட்டுப் போட்டு மர்மம் மண்ணுங்கட்டின்னு, ஏன் மண்டையைப் போட்டு உடைச்சிக்கிடுறே?

**ஐயம்:** பொறுத்துப் பார்க்கிறதா! அதுக்கு எங்கே இருக்கு இடம்?

**பெரு:** இல்லாட்டா தேடிக்கிட்டு நில்லு! (போகிருன்)

**ஐயம்:** அட, பேசப் பேச போய்க்கிட்டே யில்லே இருக்கிருன் – கொஞ்சங்கூட மரியாதை இல்லாமே!—காதலிச்சாங்களாம் காதல்! காதல் எங்கிருந்து கிளம்புதுண்ணு கேட்கிறேன்!—ஆங், இப்போ எனக்கொரு சந்தேகம்! இந்தக் காதலாகப்பட்டது கல்யாணத்துக்குப் பின்ஞலே வளருதா? அல்லது கல்யாணத்துக்கு முந்தியே முளைக்குதா? ம்... (சலிப்புடன் வெறுப்பாக) அட, என்னடா இது, பெரிய சந்தேகமா வந்து மாட்டிக்கிட்டு மனுசனைப் போட்டு வாட்டுது! பெருமாளு இருந்தாலும் கேட்டுத் தொலைக்கலாம்; அவன் கூடப்போயித் தொலைஞ்சிட்டானே! ம்.... (எறிட்டுப் பார்த்து) ஏ, பெருமாளு! (போகிருன்)

[கண்களில் நீர் பொங்க நிற்கும் முருகேசன் ஒரு முடிவுக்கு வந்தவனுய், துயர மிகுதியால் தள்ளாடிக்கொண்டு அங்கிருந்து செல்லுகிருன்]

●

## காட்சி 46

○

முருகேசன் வீடு - கண்ணீர் வழிந்தோட கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்திருக்கிருள் கோமதி. அவள் இதயத்திலே துயரப்புயல் கோரத்தாண்டவம் ஆடுகிறது.

***மனப்புயல் – பாலுவின் குரல்:*** எத்தனை நாளாக இந்தக் கள்ளக் களியாட்டம்? — கற்புக்கரசி என்று பாவலாப் போட்டுக் கூத்தாடினுயே, இந்தத் திரைமறைவுத் திரு நாடகம் எப்போதிருந்து திருமதி? — சோரம் போவது சொந்த விஷயமல்ல சொக்கழகி, சொந்த விஷயமல்ல! நாலுபேர் காறித்துப்பும் மானங்கெட்ட நடத்தை! — வண்டு பறந்தோடிவிட்டது வனிதாமணியே, பறந்தோடிவிட்டது!

தேனருந்திய வண்டு இனி திரும்பாது; புது மலரை நாடிச் செல்லும்! — எங்கே உன் மாஜிக் காதலன்? அவனோடு கொஞ்சிக் குலாவிய உனக்காவது தெரியுமா - அவன் எங்கே போனான், எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான், எப்பொழுது திரும்புவான் என்று?— எதிர்த்துப் பேசாதே! எலும்பு நொறுங்கிவிடும்!

**கோமதி:** (பயப்பிராந்தியுடன் ‘அப்பா’ என்று அலறியவாறு வாசல் பக்கம் ஓடோடியும் சென்று பார்க்கிறாள். தாங்க முடியாத சோகத்தால் தள்ளாடியவாறு திரும்புகிறாள்.) அப்பா, என்னை எல்லோரும் ஏசுகிறார்களே அப்பா! நான் இனி என்ன செய்யட்டும்! என்ன செய்யப் போகிறேன்! நான் ஒன்றும் தவறுதலாக நடக்கவில்லையப்பா! நீங்கள் தலைகுனியும்படி நான் எதுவும் செய்துவிடவில்லை! (சுவற்றில் மாட்டப்பட்டிருக்கும் முருகன் படத்தருகே சென்று கைகூப்பி வணங்கியவாறு) ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் நிரபராதி! (கண்களை மூடியவாறு) பிள்ளைப் பருவத்தில் பெற்ற தாயை இழந்த குறை தெரியாமல் வளர்த்த உங்களுக்கு பெரும் வேதனை தரும் பாவியாகிவிட்டேனே! என்னை மணக்கோலத்தில் கண்டு மகிழவேண்டிய உங்களுக்குத் தீராத கொடுமை செய்துவிட்டேனப்பா, கொடுமை செய்துவிட்டேன்! நான் படுபாவி! (‘அப்பா, அப்பா’ என்று முணுமுணுத்தவாறு லேசாக கண்களைத் திறந்து பார்க்கிறாள். முருகன் படத்திற்குமேல் சொருகி வைக்கப்பட்டிருந்த கடிதத்தைப் பார்த்து, பரப்பரப்புடன் எடுத்துப் பிரித்துப் படிக்கிறாள்.)

**கடிதம் — முருகேசன் குரல்:** “என் செல்வமே, மனதைத் திடப்படுத்திக் கொள்ளம்மா! வரதனைத் தேடி சென்னைப் பட்டணம் செல்லுகிறேன். அவர் எங்கிருந்தாலும் சரி, தேடிப்பிடித்துக் கையோடு அழைத்துக்கொண்டுதான் திரும்புவேன். இது உறுதி. கண்டவர்கள் கண்டபடி பேசுவதை என்னால் சகிக்க முடியவில்லையம்மா. நம்மீது கூறப்படும் பழிகளெல்லாம் ஒழிய வழி செய்தாகவேண்டும். ஏசிப் பேசுவோரின் எதிரிலே என் மகள் சீராக வாழவேண்டும். துன்பங்களின் நடுவிலே வளர்ந்த என் மகள் இன்பமாக வாழ்வதை நான் கண் குளிரப் பார்க்கவேண்டும். அதைத் தவிர எனக்கு வேறு லட்சியம் எதுவுமே இல்லை. உன்னிடம் நேரில் சொன்னால் நான் புறப்பட்டிருக்க முடியாது. ஆகவே உன்னைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டுச் செல்லுகிறேன். கண்ணீர் விட்டுக் கலங்காதே! தைரியமாக இரு. விரைவில் திரும்புவேன். கடவுள் இருக்கிறார்.”

**கோமதி :** அப்பா! (என்று அலறியவாறு கட்டிலில் 'தொப்'பென்று சாய்ந்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுகிருள். கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட ஏறிட்டுப் பார்த்து) நான் இனி எப்படியப்பா தனியாக இருக்கப் போகிறேன்? இருக்கவிட மாட்டார்களேயப்பா, இருக்கவிட மாட்டார்களே!

[கதவு தட்டும் சப்தம் கேட்கிறது, தொடர்ந்து 'யாரது வீட்டிலே' என்று அதிகார மிரட்டலுடன் கூடிய ஒலி எழும்புகிறது. கோமதி பரபரப்புடன் எழுந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, புடவையைச் சரி செய்து கொள்ளுகிருள். இரண்டு முரட்டு ஆசாமிகள் வீட்டுக்குள் நுழைகின்றனர். கோமதியைப் பார்த்து ஒருவருக்கொருவர் கண்ணடித்துக் கொள்ளுகின்றனர்]

**முதல் ஆசாமி :** எங்கே உங்க அப்பன்?

**கோமதி :** இல்லே.

**இரண்டாவது ஆசாமி :** சரி, ஒழியட்டும்! ரொம்ப நல்லதாப் போச்சு! நீ இப்பவே, இந்த நிமிஷமே இந்த வீட்டைக் காலி செய்தாகணும்.

**கோமதி :** ஏன்?

**முதல் ஆசாமி :** இது என்ன அனுவசியமான கேள்வி! காலி செய்யணும்னு செய்தாகணும். அதுக்குமேலே ஏன், எதுக்குன்னு குறுக்குக் கேள்வி கேக்கிறதை எங்க கிட்டே வச்சிக்கிடாதே; ஆமா!—என்னடா தம்பி நான் சொல்றது?

**2-வது ஆசாமி :** ஆமோ, ஆமோ!

**கோமதி :** என்னய்யா இது, அநியாயமா இருக்கு!

**முதல் ஆசாமி:** அநியாயம் எது, நியாயம் எதுண்ணு நினைச்சிப் பார்க்கக்கூட எங்களுக்கு நேரமில்லே! முதல்லே நீ வீட்டைக் காலி செய்றதைப் பாரு. வீணு ஏன் பேசிக்கிட்டு நிக்கிறே?

**கோமதி :** அப்பாகூட இல்லே! எங்கேயோ போயிட்டாரு.

**2-வது ஆசாமி :** அதைப்பற்றி எங்களுக்கு என்னம்மா கவலே? மானேஜர் உத்தரவு போட்டாச்சு—அதை நிறைவேத்த நாங்களும் வந்தாச்சு. இனி பேசுறதுக்கே இடமில்லே.

**முதல் ஆசாமி:** நீயே காலி செய்துட்டா நல்லது. அந்தக் கைங்கர்யத்தை நாங்களே செய்யும்படி வச்சிக்கிடாதே! ஆமா, சொல்லிட்டோம்!

**கோமதி:** ஏவி விட்டவன் சொகுசாக இருக்க, ஏழையை நசுக்க இன்னொரு ஏழை—

**முதல் ஆசாமி:** இந்தா பாரு, வேதாந்தம் கீதாந்தம் பேசிக்கிட்டு நிண்ணே, பிறகு பார்த்துக்கோ; ஆமா! வீட்டைக் காலி செய்யிண்ணு 'டக்'குண்ணு செய்யேன்! ஏன் நீட்டி நீட்டிப் பேசுறே?

**கோமதி:** நான் தனியே எங்கே போறது?

**2-வது ஆசாமி:** ஏன், ஒரு பெரிய பங்களா கட்டித் தர்றோம். அதிலே போயி குடி இரேன்!

**முதல் ஆசாமி:** உனக்கென்னடியம்மா குறைவு? சோக்கான உருப்படி; எங்கே போனாலும் சொகுசாப் பிழைக்கலாம்.

**2-வது ஆசாமி:** அதிலேதான் நீ கைகாரியாச்சே!

**கோமதி:** போதும்! அதோடே நிறுத்துங்க!

**முதல் ஆசாமி:** அடேடேய்! சிணுங்கவில்லே செய்ரு!— நீ வாடா தம்பி!— இந்தா பாரு, நாங்க ஒரு 'தம்' அடிச்சி முடிக்கிறத்துக்குள்ளே உன் மூட்டை முடிச்சு, சட்டி பொட்டி, சப்புச் சவறு எல்லாத்தையும் தூக்கிக்கிட்டு தெருவிலே நீக்கணும். அதோடே இந்த ஊரைவிட்டே தொலையணும். திரும்ப இந்தப் பக்கம் தலையைக் காட்டினே, அவ்வளவுதான்! அதுக்குமேலே என்ன நடக்கும்னு நாங்க சொல்லவேண்டிய தில்லே; எங்க சரித்திரம் சொல்லும்!

[இருவரும் பீடி பற்றவைத்துக் கொண்டு தாழ்வாரத்துகுச் செல்லுகின்றனர். கோமதி நிலைகுலைந்தவளாய் வெறித்துப் பார்த்துக்கொண்டு நிற்கிருள். பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவளாய், தன் துணிகளை ஒரு சிறு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வெளியேற ஆயத்தமாகிருள்.]

**2-வது ஆசாமி:** என்ன ஆச்சா, இல்லே இன்னும் ரெண்டு ஆளு வேணுமா?

**முதல் ஆசாமி:** அட, இவன் யார்டா இவன்? பெரிய அரண்மனை; காலி செய்ய ஆளு வேணுமாக்கும், ஆளு! ரெண்டு கந்தைத்துணியை சுத்திக் கட்டிக்கிட்டு கிளம்புறதை விட்டுட்டு இன்னும் என்னடா செய்ரு வீட்டுக்குள்ளே?

**கோமதி:** (இடுப்பில் துணி மூட்டையுடன் அவர்கள் அருகில் சென்று) அக்கிரமம் செய்ய கூலி ஆள் கிடைக்கிற வரையிலே இந்த நாடு உருப்படப் போறதில்லே!

*முதல் ஆசாமி :* முதல்லே நீ உருப்படுறதைப் பாரு. போன இடத்திலேயாவது உன் கண்ணை மூக்கை கவனமா வச்சிக்கிட்டு பதனமாப் பிழை. இங்கே மாதிரி தப்புத் தண்டாவா நடந்து விரட்டுப்பட்டுத் திரியாதே!

*கோமதி :* போதும். ஈவிரக்கமில்லாத நெஞ்சிலே என்ன சொல்லி என்ன உரைக்கப் போகுது! (செல்லுகிருள்)

*முதல் ஆசாமி :* (கோமதியைப் பார்த்தவாறு) அடே!... (2-வது ஆசாமியிடம்) டேய், கதவைச் சாத்திப் பூட்டுப் போடுடா. சாவியைக் கொண்டுபோயி அந்த மானேஜர் மூஞ்சியிலே எறிஞ்சிட்டு நமக்குச் சேரவேண்டியதை நாம வாங்கிக்கிட்டுப் போகலாம்.

## காட்சி 47

இளங்கோ மில் அலுவலகத்திற்கு முன்புறம்— அதிர்ச்சியுற்ற நிலையில் தன்னை சமாளித்துக்கொண்டு களைப்படைந்த முகத்தோற்றத்துடன் நடந்துவருகிறுன் வசந்தன். அவனுேடு, மகிழ்ச்சிப் பூரிப்புடன் கம்பீர மாக சோமசுந்தரமும், பயபக்தியுடன் நடப்பதாக நடிக்கும் பாலுவும், அளவற்ற ஆனந்தத்தால் தன்னையே மறந்துவிட்ட கோபாலும், மற்றும் இருவரும் வருகின்ற னர். வரவேற்பில் கலந்துகொள்ள வந்த பிரமுகர் ஒருவர் எதிரில் வருகிறுர். அவரைப் பின் தொடர்ந்து வேலையாள் ஒருவன் பெரிய பூமாலையையும், பூங் கொத்தையும் ஏந்தியவாறு வருகிறுன்.

*பிரமுகர் :* வாங்க தம்பி, வாங்க, வாங்க! (திரும்பி வேலை யாளிடமிருந்த பூமாலையை வாங்கிப் பிரித்தவாறு) நான் அப்பவே வந்திருப்பேன். வழியிலே இன்னெரு டீ பார்ட்டி. அதை முடிச்சிட்டு வர்றதுக்குள்ளே கொஞ்சம் நேரமாயிப் போச்சு. வரவேற்புக் கூட்டத்திலே கலந்துக்கிடுறதுக்கு வாய்ப்பில்லே. (மாலை அணிவிக்கப் போகிறுர்)

*வசந்தன் :* (தடுத்து) மன்னிக்கணும். இதெல்லாம் எனக்கு வேண்டாம்!

*பிரமுகர் :* அட, நீ சும்மா இரு தம்பி! நாங்க செய்ற மரியாதையைச் செய்யவேண்டாமா? கடலைக் கடந்துபோயி அஞ்சு வருஷத்துக்குப் பின்னுலே சுகமா வந்து சேர்ந்தயே, அதில்லே எங்களுக்கு ஆனந்தக் கடல்லே மூழ்கின மாதிரி இருக்கு. சும்மா மாலையைப் போட்டுக்கோ தம்பி; பரவாயில்லே! (மாலையை நீட்டுகிருர்)

**வச :** *(தடுத்து)* இல்லே, வேண்டாம்! பல பேருடைய கூந்தலிலே மணக்கவேண்டிய மலரெல்லாம் ஒண்ணுச் சேர்ந்து ஒருவன் கழுத்திலே விழுறதும், பிறகு அது ஒரு நிமிஷத்திலே ஒண்ணுக்கும் உபயோகமில்லாமேப் போறதும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே!

**பிரமுகர் :** அட, என்ன தம்பி நீ! நமக்குப் பிடிக்காத விஷயத்தைப் போட்டு இப்படிப் பிரமாதமாப் பேசுறே!

**சோமசுந்தரம் :** நீங்க ஒண்ணும் வித்தியாசமா நினைச்சிடக் கூடாது. சீமைக்குப் போயிட்டு வந்ததிலிருந்து அவன் மனசே ஒரு தினுசா மாறிப் போயிருக்கு. சும்மா, பேருக்குத் தான் வரவேற்புக் கூட்டமே தவிர, அதிலே ஒரு உப்புமில்லே, சப்புமில்லே! ஆடம்பரம் எதுவுமே கூடாதுண்ணு ஒரே அடியா அடிச்சுட்டான்! என்ன பண்றது!

**பிரமுகர் :** அட என்ன தம்பி இது, அதிசயமா இருக்கு! அப்படியெல்லாம் மாறிட்டா, பிறகு நம்ம வண்டி எப்படி ஓடும்?

**வச :** தாராளமா ஓடும். எத்தனேயோ பேருடைய வண்டி ஓடலேயா, அதுமாதிரி! ஆனு, நம்ம வண்டி மட்டும் சிமெண்ட் ரோடிலே பறக்கணும் என்கிறதுக்காக, மத்த வண்டிகளே யெல்லாம் சேத்திலே தள்றது கொஞ்சங்கூட நியாயமில்லே! சொல்லப்போனு அக்கிரமம்!

**பிரமுகர் :** அடாடாடா! அடியோடே மாறிட்டாரே! — இதெல்லாம் நமக்கு அழகில்லே தம்பி!

**சோம :** அப்டீண்ணு அவன் எங்கே நினைக்கிறுன்? இப்படி யெல்லாம் புத்தியைக் கடன் கொடுப்பான்னு தெரிஞ்சிருந்தா, அமெரிக்காவிலே கொண்டு போயி படிக்கப் போட்டிருக்க மாட்டேன். பேசாமே ஒரு அறைக்குள்ளே தள்ளி இறுக்கிப் பூட்டி, சாவியைத் தூக்கி என் இடுப்பிலே சொருகிக்கிட்டு இருந்திருப்பேன்.

**வச :** ம்... உடலேப் பூட்டிட்டா உள்ளத்தை என்னப்பா செய்றது? பொங்கி வரும் உலக மாறுதலே என்ன செய்யப் போறீங்க? அந்த மாறுதலுக்குத் தகுந்தபடியா நம்ம மனசையும் மாத்திக் கொள்றதுதான் விவேகம்; தர்மம்!

**சோம :** போதுண்டா, போதும்! *(பிரமுகரைப் பார்த்து)* வாங்க போகலாம்! இவன் பேசுறதைக் கேட்டுக் கேட்டு என் மூளேயே கலங்கிக்கிட்டு வருது.

**பிரமுகர் :** என்னமோ போங்க! இந்தக் காலத்திலே தலே யெடுக்கிற பிள்ளேகள் மலர்ச்சி, புரட்சிண்ணு நம்ம ஜரிகைத் தலேப்பாகைக்கே வேட்டு வச்சிடுவாங்க போலிருக்கே!

## காட்சி 48

O

தெரு வழியே ஐயம்பெருமாளும், பெருமாளும் செல்லுகின்றனர்.

**ஐயம்பெருமாள் :** (நடந்தவன் நின்று திரும்பி) ஏம்பா!

**பெருமாள் :** என்னப்பா?

**ஐயம் :** எனக்கொரு சந்தேகம்.

**பெரு :** வந்திருக்கணுமே!

**ஐயம் :** வந்தாச்சு!

**பெரு :** நாசமாப் போச்சு ; உடைச்சித் தள்ளு!

**ஐயம் :** இப்போ, நம்ம சின்ன முதலாளி சீமையிலிருந்து வந்தாரே, ஏன் ஆடம்பரமா வரவேற்புச் செய்யலே?

**பெரு :** அதெல்லாம் அனுவசியம்னு அவரே சொல்லிட்டாராம்!

**ஐயம் :** ஆங், அங்கேதான் இருக்கு ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயம்!

**பெரு :** உன் தலையிலே இருக்கு! ஏதோ பணத்தைச் செல வழிக்க மனசு வரலே. எத்தனையோ பணக்காரங்க இல்லியா, பணத்தைப் பூட்டி வச்சிட்டு நடைபிணமா நடமாடுறவங்க?

**ஐயம் :** அப்பேர்ப்பட்டவரா நம்ம சின்ன முதலாளி? லட்ச மானாலும் லட்சியமில்லாமே செலவழிச்சவ ராச்சேப்பா! போனதடவை வரவேற்பு ஏற்பாடுன்னு ஆயிரக்கணக்கிலே கரியாக்கினாங்களே, அப்போ ஏதாவது சொன்னாரா? இப்போ மட்டும் ஏன் அனுவசியம்னு சொல்லிட்டாரு? இல்லே நான் கேக்கிறேன்!

**பெரு :** (யோசித்தவாறு) ம்.... நீ சொல்றதும் சரின்னு தான் படுது. ஏன்னா, பணக்காரன் வீட்டுப் பிள்ளைக்கு திடீர்னு இப்படி மனசு மாறுறதுன்னா அதுக்கொரு காரணம் இருக்கத்தான் இருக்கணும்.

**ஐயம் :** கட்டாயம் இருக்கணும்! இல்லாமே இவருக்குச் சந்தேகமே வராது! அதோடே பாரு பெருமாளு, இன்னொரு விஷயம். அதாவது அவரு வரவேற்புக் கூட்டத்திலே வந்து உட்காரும்போது எப்படி இருந்தாரு?

**பெரு :** குதூகலமா இருந்தாரு.

**ஐயம் :** ஆங், முகத்திலே புன்னகை பூத்துக்கிட்டிருந்தது! அம்தாட்டே அடிக்கொரு தரம் பொம்பளைங்க உட்கார்ந்திருந்த பக்கமா வேறே பார்த்துக்கிட்டிருந்தாரு; இல்லையா?

பெரு : ஆமாமா ; நான்கூட கவனிச்சேன். இப்பத்தான் எனக்கு ஞாபகம் வருது.

ஐயம் : ஆங், அங்கேதான் இருக்கு சந்தேகப்பட எடமிருக்கிற சங்கதி !

பெரு : (ஏளனமாக) ஆமா இருக்கு ! நம்ம மில்லுலே வேலே செய்ற பொம்பளேங்க அத்தனே பேரும், சிவப்புச் சாயமும் பவுடர் டப்பாவுமா சிங்காரிச்சிக்கிட்டு அலேயுருங்க. பிறகு இடமில்லாமே எங்கே போகும் ? ஆளேப்பாரு, ஆளே ! தலேயிலே படிஞ்சிருக்கிற பஞ்சுத் தூசியைப் போக்க நேரமில்லாமேத் தவிக்கிருங்க. இந்த லட்சணத்திலே அவர் என்னமோ பார்த்தாராம்; இவருக்கென்னமோ சந்தேகம் வந்து முளேச்சிட்டதாம் ! சரித்தான் நட, வாயை மூடிக்கிட்டு !

ஐயம் : அட என்னப்பா நீ, அவசரப்படுறே ! அப்படிப் பார்த்துக்கிட்டு இருக்கிறபோதே அவர் முகம் சடார்னு வாடிப் போச்சு; தெரியுமா உனக்கு ?

பெரு : ஏன் ?

ஐயம் : அதுதானே தெரியலே ! ஒரே சந்தேகப்படலமாவில்லே இருக்கு !

பெரு : அப்பச்சரி, ஆராய்ச்சியிலே இறங்கு ! (போகிருன்)

ஐயம் : அட, இறங்கி ஒரு முடிவுக்கு வர்றதுக்குள்ளே அவன் பாட்டுக்கு விர்ட்டுன்னு பறந்துட்டானே ! ம்.... சுத்த... (போகிருன்)

●

## காட்சி 49

○

இளங்கோ மில் அலுவலகம் — எதையோ பறிகொடுத்துவிட்டு வேதனேப்படும் மனேஜரின் முகத்தில் பிரதிபலிக்க வசந்தன் வருகிருன். அவனேத் தொடர்ந்து பயந்து நடுங்குபவன்போல் பாவலாப் போட்டுக்கொண்டு பாலு வருகிருன்.

பாலு : நம்ம மில்லுலே பாருங்க, நூத்துக்கு எழுபத்தஞ்சி பேரு ரதிகள்ன்னு, ரதிக்குட்டிகள்தான் !

வசந்தன் : (கோபம் கொந்தளிக்க) ஷட்டப் !

பாலு : (பயந்து நடு நடுங்கி) ம் ம்...வந்துங்க...வ ந் து...

வச : கெட்டவுட் !

[திடீர் அதிர்ச்சியால் உடல் பதற வெளியேறுகிருன்.]

வச : மிஸ்டர் மானேஜர் !

பாலு: (திகிலுடன் வந்து) சார்!

வச: ஏனய்யா, உனக்கு இந்த மில்லுலே என்ன வேலே?

பாலு: (தன்னே சமாளித்துக் கொண்டு) அதென்னங்க, அப்படிக் கேட்டுட்டீங்க? உங்க ஆசீர்வாதத்தாலே அடியேன் தான் இந்த மில்லுக்கு மானேஜர்.

வச: ஆலேயில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாம்!—அது கிடக்கட்டும்; அதைத் தவிர?

பாலு: அந்த வேலேயைப் பார்க்கிறதுக்கே நேரம் பத்தலேயே!

வச: ஒளி மறைவு இல்லாமே உண்மையைச் சொல்லு. இல்லே உன்னே ஒழிச்சிப் போடுவேன். ஜாக்கிரதை!

பாலு: ஐயய்யோ! வந்ததும் வராததுமா இப்படிப் பிடிச்சித் தாக்குறீங்களே! முழுக்க முழுக்க மானேஜர் வேலே யிலேதான் என் முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிறேன். இதுதவிர வேறெதிலேயும் நான் தலேயிடுறது கிடையாது.

வச: அப்பேர்ப்பட்ட உனக்கெதுக்கு ரதி மன்மத வர்ணனேப் படலம்?

பாலு: அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க. தாங்க வரவேற்புக் கூட்டத்திலே பெண்கள் பக்கமா அடிக்கடி பார்த்துக்கிட்டிருந் தீங்க. அதிலேயிருந்து உங்க மனசு ஒண்ணும் சரியாயில்லே. உங்களேக் குஷிப்படுத்த ஏதாவது செய்யலாம்ண்ணு...

வச: ஊஹூம்! என்னேக் குஷிப்படுத்த உன்னுல் முடியு மாக்கும்?

பாலு: இல்லேங்க, சும்மா முயற்சி செய்து பார்க்கிறேன். உங்க ஆசீர்வாதத்தாலே அடியேன் சொல்றபடி இந்த மில்லே ஆடும்!

வச: ஷட்டப்! கெட்டவுட்!

['ஐயய்யோ' என்று பயந்து நடுங்கி முணு முணுத்த வாறு செல்லுகிறுன் பாலு.]

வச: இந்தாய்யா, மானேஜர் பாலு.

பாலு: (வந்து) இதோ வந்துட்டேன் சார்!

வச: இப்படி வா, என் எதுக்க! ஏனய்யா, உன்க்கு இங்கே ரதி மன்மத ஜோடி சேர்த்து வேடிக்கை பார்க்கிறதுதான் வேலேயா?

பாலு: அதெல்லாமில்லேங்க. எல்லாம் நீங்க சந்தோஷமா இருக்கணும் என்கிறதுக்காகத்தான் சொல்ல வந்தேன்.

வச: ஷட்டப்! இது என்ன மில்லா, இல்லே சல்லாபக் கூடமா?

பாலு: இதே கேள்வியை நானே இன்னொருத்தியைப் பார்த்துக் கேட்டிருக்கிறேன் முதலாளி.

வச: மூடு வாயை! இங்கே முதலாளியுமில்லே; பணக் கொள்ளையுமில்லே!

பாலு: ம்ம்... அந்த விவரத்தைக் கொஞ்சம் சொன்னா, நான் எப்பேர்ப்பட்டவன்னு உங்களுக்குத் தெரிஞ்சிபோகும். பிறகு இப்படிக் கோபமா பேசமாட்டீங்க.

வச: நீ சொல்லித்தான் தெரியணுமாக்கும்! ஆளைப்பார்த் தாலே லட்சணம் பளிச்சிடுதே!

பாலு: (திக்குமுக்காடிய போதிலும் தன்னை சமாளித்துக் கொண்டு) வந்துங்க, இந்த மில்லுலே கோமதி கோமதின்னு ஒரு பொண்ணு இருந்தா.

வச: (திடுக்கிட்டு) ஊம்!

பாலு: ஆமாங்க; அவ பேரு கோமதி. ஆதியிலிருந்தே அவ நடை, உடை, பாவனை ஒண்ணும் எனக்குப் பிடிக்கலே. சரி, பிழைச்சிப் போருன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். நடுவிலே இன்னொரு பய வந்து சேர்ந் தான் – அனாதைப் பய! பசி பட்டினி, வேலே வேணும்னு கெஞ்சினன். சரி, ஏதோ பிழைக்கட்டும்னு இரக்கப்பட்டு நம்ம மில்லுலே வேலே போட்டுக் கொடுத்தேன். கொஞ்ச நாளைக்குள்ளே இந்த ரெண்டு பேரும் கிரமமா வேலே பார்க் காமே தாறுமாரு நடக்க ஆரம்பிச்சிட்டாங்க. கண்டிச்சித் திருத்த நினைச்சேன். அதுக்குள்ளே அந்தப் பய அவளைக் கைவிட்டுட்டு சொல்லாமேக் கொள்ளாமே ஓடிப் போயிட் டான். இனி அவ இங்கே இருந்தா மத்தவர்களும் கெட்டுக் குட்டிச்சுவராயிடுவாங்கன்னு நினைச்சி, அவளை ஊரைவிட்டே விரட்டியடிக்கச் சொல்லி நம்ம மில்லோடே கௌரவத்தை நிலே நாட்டியிருக்கிறேன்.

வச: (அடங்காத கோபம் பொங்க) உன்னை டிஸ்மிஸ் செய்திருக்கிறேன்!

பாலு: (பதறி) என்னையா?

வச: ஆமாம், உன்னைத்தான்! இப்போதே வெளியில் நட.

பாலு: ஏன்?

வச: அந்தக் கேள்வியைக் கேட்க நீ அருகதையற்றவன்.

பாலு: நான் இந்த மில்லுக்காகப் பாடுபட்டவன். மில் லாபகரமாக நடப்பதற்கு உழைத்தவன். இதெல்லாம் உங் களுக்குத் தெரியாது.

வச: நீ சொல்லி, நான் தெரிந்துகொள்ள வேண்டியது எதுவுமில்லை.

பாலு: என் வேலையை மெச்சி என் சம்பளத்தை இரட்டிப் பாக்கினார்கள் உங்கள் அப்பா.

வச: அதற்காக எத்தனை பேருடைய சம்பளத்தை வெட்டினாயோ?

பாலு: எல்லாம் அவர்களுக்குத் தெரியும். உங்களுக்கு உதவியாக நான் இருக்கணும்னு அடிக்கடி சொல்வார்கள்.

வச: அவருக்குத் தெரியாது உன் பகல் வேஷம்.

பாலு: நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!

வச: உன் நெஞ்சை நீயே தொட்டுப் பார்! உன்னை நல்லவன் என்று சொல்ல யாராவது இருந்தால் அவரை இங்கே கொண்டு வந்து நிறுத்து; பிறகு பேசு! போ, இனி இங்கு நிற்கக்கூட உனக்கு யோக்கியதை இல்லை. போ, நிற்காதே!

[உணர்ச்சிவசப்பட்டவனாய் நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து மேஜை மீது தலை கவிழ்த்துக் கொள்கிறான் வசந்தன். வர்மம் கூறுவதுபோல் தலையாட்டியவாறு, பெரு மூச்சு விட்டுக்கொண்டே செல்லுகிறான் பாலு.]

வச: (தனிமொழி – அளவற்ற துயரத்துடன்) கோமதி, நீ எங்கு போனாயோ; என்ன ஆனாயோ! எனக்குத் தீராத பழி ஏற்படுத்தி விடாதே கோமதி, தீராத பழி ஏற்படுத்தி விடாதே! உன்னைத் தேடிக் கண்டு பிடிக்கும்வரை எனக்கு நிம்மதியில்லை!

●

## காட்சி 50

○

நீண்டு செல்லும் ரோடு வழியே, கால்கடுக்க நடந்து செல்லுகிறாள் கோமதி. அவள் மேனியெல்லாம் ஒரே புழுதி மயம்! இடுப்பில் துணி மூட்டை; பறட்டைத் தலை; உலர்ந்துபோன உதடுகள்; வியர்வை கசிந்து வழியும் முகம்; நெஞ்சிலே நெருப்பு போல் பற்றி எரியும் வேதனை; அந்த வேதனையின் நடுவிலே ஓர் நம்பிக்கை; உறுதி! இந்தக் கோலத்தோடு நடக்கிறாள்; நடந்துகொண்டே இருக்கிறாள். எதிரில் ஒருவர் கக்கத்தில் பத்திரிகை ஒன்றை இடுக்கியவாறு குனிந்த தலையுடன் வேகமாக நடந்து வருகிறார். அவரைக் கண்டு தயங்கி நிற்கிறாள் கோமதி.

**கோமதி** : ஐயா, இந்த வழியிலே போனு பட்டணத்துக்குப் போய்ச் சேரலாமா?

**ஒருவர்** : (நடந்துகொண்டே தலை நிமிராமல்) போகலாம்; நேராப் போ! (சென்றவர் திடீரென்று எதையோ யோசித்த வாறு நின்று திரும்பி) இந்தாம்மா, கொஞ்சம் நில்லு! (கோமதி நின்று திரும்ப, அவள் அருகில் சென்று) ஆமா, இப்போ நீ எங்கே போறே?

**கோமதி** : சென்னைப் பட்டணத்துக்கு.

**ஒருவர்** : பட்டணத்துக்கா! சரியாப் போச்சு. இப்படி நடந்து நடந்து நீ எந்தக் காலத்திலே பட்டணம் போயிச் சேரப்போறே? இந்தா பாரு, நான் சொல்றபடி செய். இங்கிருந்து நேராப் போயி, வலது கைப் பக்கம் திரும்பி. கொஞ்ச தூரம் நடந்தா ஒரு மைலுக்குள்ளே ஒரு ரயில் கெடி இருக்கு, அங்கே போ; ரயில் வந்து நிக்கும்; ஏறி உக்காந்துக் கிட்டு ஜம்னு பட்டணத்திலே போயி எறங்கு.

**கோமதி** : அதுக்கெல்லாம் வழி இல்லேய்யா!

**ஒருவர்** : இல்லாமே எங்கே போச்சு! விஞ்ஞானம் அது பாட்டுக்கு வளர்ந்துக்கிட்டே போகுது, நீ என்னடாண்ணு அந்த விஷயமே தெரியாதவ மாதிரி நடந்து சாகிறே?

**கோமதி** : என்னய்யா செய்றது? விஞ்ஞான வசதி நாளுக்குநாள் பெருகிக்கிட்டேதான் போகுது. ஆனல், அதை என்னைப்போல இருக்கிறவங்க அனுபவிக்கிறதுக்குத்தான் வழி இல்லே!

**ஒருவர்** : ம்... இப்ப பட்டணத்துக்கு எதுக்குப் போறே?

**கோமதி** : சும்மாதான்.

**ஒருவர்** : என்னம்மா இது! தன்னந்தனியாப் புறப்பட் டிருக்கே; ஆளைப் பார்த்தா அலங்கோலமா இருக்கு; காரண மில்லாமே ஒரு காரியம் நடக்குமா? சும்மா சொல்லம்மா! வீட்டிலே ஏதாவது மனவருத்தம் கினவருத்தம்...

**கோமதி** : அதெல்லாமில்லேய்யா. என் வீட்டுக்காரரைத் தேடிப் போறேன்.

**ஒருவர்** : வீட்டுக்காரரையா!— ஏம்மா பொய் சொல்றே? கழுத்திலே பார்த்தா ஒண்ணையும் காணும்!...

**கோமதி** : (திடுக்கிட்டு) தயவு செய்து அதையெல்லாம் கேட்காதீங்கய்யா! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. நான் வர்றேன். (போகிருள்)

**ஒருவர்** : (தனிமொழி) சரித்தான் போ! காலையிலே எழுந் திரிச்சிப் பேப்பரைப் பிரிச்சா, இந்த மாதிரி சேதிகள்தான்

கொட்டை எழுத்திலே கண்ணைப் பிடுங்குது! இதிலே பாதி நிசம், பாதி கப்சாவா இருக்கும்னு நினைச்சிக்கிட்டிருந்தேன். இப்போ என்னடாண்ணு நிசம்மாவே இம்மாதிரி விஷயங்கள் ஏராளமா நடக்கு போலிருக்கே! (நடந்து கொண்டே) ம்... பெண்டாட்டியை விட்டுட்டு ஓடுற புருஷன்! புருஷனை ஏமாத்திட்டுப் பறக்கிற பெண்டாட்டி! தாலியைக் கட்டாமே காதல் ஆட்டம்! சீச்சீச்சீ! இதைச் சீர்திருத்தம் செய்ய ஒரு பிள்ளை பிறக்கக் காணோம்! சும்மா உபதேசம் செய்யக் கிளம்பிடுறாங்க, உபதேசம்! இந்த உபதேசத்தாலே யாருக்கு என்ன உபயோகம்னு கேட்கிறேன். ('டக்'கென்று நின்று) அட, இப்போ நான்தான் அந்தப் பெண்ணுக்கு என்ன உபகாரம் செய்துட்டேனும்! வெறும் உபதேசம், உபதேசம், உபதேசம்! மண்ணுப் போச்சு போ! (போகிறான்)

●

## காட்சி 51

○

சோமசுந்தரம் பங்களாவில் வசந்தன் அறை — கவலை தோய்ந்த முகத்துடன் புத்தகங்களையும் மற்ற சாமான்களையும் பரிசீலனை செய்து ஒரு ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறான் வசந்தன். ரேடியோ சோக கீதமொன்றை இசைத்துக் கொண்டிருக்கிறது. கோகிலம் சந்தடி செய்யாமல் மெதுவாக அறைக்குள் வந்து, ரேடியோவை நிறுத்துகிறாள். வசந்தன் ஏறிட்டுப் பார்க்கிறான். கோகிலம் வெட்கப்படுபவள் போல் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறாள்.

**கோகிலம்:** வாங்க அத்தான்!

**வசந்தன்:** ஆமா, அத்தே!

**கோகி:** (வசந்தனை நோக்கி) அத்தையா!

**வச:** (தன் வேலையில் ஈடுபட்ட வண்ணம்) அத்தான், ஆண்பால்; அத்தை, பெண்பால்!

**கோகி:** நல்ல இலக்கணம்! உங்களை அத்தான்னு கூப்பிடுற பெண்பால், உங்களுக்கு அத்தையா?

**வச:** (வெறுப்புடன்) ஏதோ ஒரு நத்தை! எதாயிருந்தால் என்ன?

**கோகி:** போங்க அத்தான்! இப்படித்தான் கேலி செய்றதாக்கும்?

**வச:** கொஞ்சம் சொல்லிக் கொடேன்!

**கோகி :** சீமையிலே சொல்லிக் கொடுக்கலையோ?

**வச :** கற்ற பாடத்தைத்தானே ஒப்பிக்கிறேன்.

**கோகி :** நல்லா ஒப்பிச்சீங்க போங்க! அத்தான் – அத்தே! முறையிருக்கா இதிலே?

**வச :** ஏன், குறையிருக்கோ?

**கோகி :** குதர்க்கமாவும் இருக்கு.

**வச :** ரொம்பச் சரி!

**கோகி :** என்ன அத்தான் இது? வந்ததும் வராததுமா இப்படி ஒரேடியா கேலி செய்றீங்க. எனக்கு வெட்கமா யிருக்கு!

**வச :** (கிண்டலாக) ஐயோ!

**கோகி :** இப்படியே பேசிக்கிட்டிருந்தீர்களோ அவ்வளவு தான், நான் அழுதுடுவேன்.

**வச :** அதைப் பார்க்கணும்னுதானே எனக்கு ரொம்ப நாளா ஆசை!

**கோகி :** சரி, சரி! கேலி செய்துக்கிட்டே இருங்க.

**வச :** சேச்சே! எனக்கு வேறே வேலை இல்லையா? உன்னை யாவது நானாவது கேலியாவது செய்றதாவது?

**கோகி :** பிறகு இது என்னவாம்?

**வச :** குபேர சம்பத்து படைத்த கோகிலாம்பா தேவியா ருடன் பேசுகிற நாகரீக முறை!

**கோகி :** போங்கத்தான்! உங்களோடே பேசி, என்னாலே ஜெயிக்க முடியுமா? அமெரிக்காவிலே படிச்சவங்களாச்சே!

**வச :** அதிலே என்ன இருக்கு? அதுக்குப் பின்னாலே படிச்சதிலேதானே அவ்வளவும் அடங்கியிருக்கு.

**கோகி :** அதாவது ஜப்பனிலேயா?

**வச :** ஜப்பான் என்ன, நாம இருக்கிற ஆசியாக் கண்டத் திலேதானே இருக்கு. அந்தக் கண்டத்திலேதான் நம்ம இந்தியாவும் இருக்கு. அந்த இந்தியாவிலேதான் நம்ம செந் தமிழ் நாடும் இருக்கு. அந்தத் தமிழ் நாட்டிலேதான் நம்ம சொந்த ஊரும் இருக்கு, ஆக நம்ம ஊர் படிப்பு என்றே வைத்துக் கொள்ளலாம்!

**கோகி :** ஆமாமா! ஆகாய விமானம் வந்த பிறகு ஜப்பான் என்ன, நமக்குப் பக்கத்து ஊர் மாதிரிதானே! அதுசரி அத்தான், உங்களை நான் எவ்வளவு காலமா எதிர்பார்த்துக் கிட்டிருக்கிறேன் தெரியுமா?

**வச :** நீதானே! இருக்கும், இருக்கும்! கிட்டத்தட்ட ஒரு அறுபது வருஷமாவது இருக்குமா?

**கோகி :** எடுத்ததுக் கெல்லாம் கேலிதான்! போங்கத்தான்! நான் என்ன அறுபது வயசுக் கிழவியா?

**வச :** எழவை எவன் கண்டான்?

**கோகி :** ஆமா, நான் கிழவிதான்! அஞ்சு வருஷமா உங்களை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏங்கி ஏங்கித் தவிச்சி, இப்போ நான் கிழவி மாதிரிதான் ஆயிட்டேன்!

**வச :** ஐயோ பாவம்! முகத்தைப் பார்த்தாலே லட்சணம் தெரியுதே!

**கோகி :** எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்க. எனக் கென்ன?

**வச :** உனக்கென்ன! இனிமே உன்னை யாரு பெண் பார்க்க வரப்போறாங்க?

**கோகி :** ஏன் வரணும்? அதுதான் தீர்ந்துபோன விஷய மாச்சே!

**வச :** அப்படிச் சொல்லு, வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா!

**கோகி :** அது சரி அத்தான், எனக்காக அமெரிக்காவிலி ருந்து என்ன வாங்கிக்கிட்டு வந்தீங்க?

**வச :** உனக்குத்தானே?

**கோகி :** இல்லே, ஊராருக்கு! (கொஞ்சுதலாக) என்ன கொண்டு வந்தீங்க அத்தான்னு...

**வச :** அவசரப்படாதே அம்மணி! — ஏ கோபால்!

**கோகி :** சொல்லுங்கத்தான்! எனக்கு என்ன வெகுமதி தரப் போறீங்க?

**வச :** வெகுமதிதானே! அதைச் சமயம் தெரிஞ்சி நாலு பேருக்குத் தெரியரூப்லே வெளிப்படையாக் கொடுக்க லாம்னு நினைக்கிறேன். — ஏ கோபால்!

**கோகி :** இப்போ அவனை ஏன் கூப்பிடுறீங்க? — நீங்க வெகுமதி கொடுக்கிறபோது கொடுங்க. இப்போ அது என்னன்னு நான் பார்க்கணும்.

**வச :** பார்க்கணுமா? குடிகெட்டது போ! — ஏ கோபால்! இவன் வேறே வந்து தொலையிற வழியாக் காணோம். (கோகிலம் வாசலை நோக்க அவளைக் காட்டி) இந்தத் தொல்லை தீர வழியும் தெரியலே!

**கோபால் :** (வந்துகொண்டே) சபாஷ் தம்பி, சபாஷ்! இப்பத்தான் கேள்விப்பட்டேன். வெரி குட், வெரி குட்!

**வச:** என்ன இது, ஆனந்தப் பெரு வெள்ளத்திலே நீந்திக் கிட்டு வர்றே?

**கோபால்:** என்ன தம்பி நீ, இவ்வளவையும் செய்துட்டு என்கிட்டே ஒரு வார்த்தைகூடச் சொல்லலையே! ம்... நான் நினேச்சேன், நீ செய்திட்டே!

**வச:** நீ என்ன நினேச்சே? நான் என்ன செய்திட்டேன்?

**கோபால்:** இந்த மானேஜர் மில்லை விட்டு ஒழியணும், அப்பத்தான் மில் உருப்படும்னு நினேச்சேன். நீ காரியத் திலே நிறைவேத்திட்டே! அதுபோதும்; அடியேன் மனசு குளு குளுன்னு குளுந்த் ... (அறைக்குள் கோகிலம் இருப் பதைக் கவனித்து சிறிது திடுக்கிட்டு) ம்ம்... யாரது? கோகிலம்மாவா? வாங்கம்மா, வாங்க!

[கோகிலம் எரித்துவிடுபவள் போல் பார்க்க கோபால் மெல்ல வெளியேற முயல்கிருன்.]

**வச:** என்ன இது, பெரிய சனியனுப் போச்சு! மூட்டைப் பூச்சிக்கு மருந்து வாங்கிக்கிட்டு வந்தேனே. அது எங்கே? செச்சே! பெரிய நச்சரிப்பாப் போச்சே!

**கோபால்:** அதை எதுக்குத் தம்பி வாங்கிக்கிட்டு வந்தே? நம்ம வீட்டிலேதான் மூட்டைப் பூச்சி என்கிற பிறப்பே கிடையாதே!

**வச:** நீ என்னத்தைக் கண்டே? ஒண்ணு இருந்தாலும் போதாதா? உயிரையே வாங்கிடுமே!

**கோபால்:** லேசாச் சொல்றயே! ரத்தத்தை உறிஞ்சி டாதா!

**வச:** அதுக்குத்தான் முன் ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்றது.

**கோபால்:** ஆமாமா! கண்டிப்பா இருக்க வேண்டியதுதான்! ஏன் தம்பி, கொஞ்சம் காப்பி கொண்டாரட்டுமா?

**வச:** யாருக்கு?

**கோபால்:** உனக்குத்தான்.

**வச:** சரித்தான் போ! என் வயித்தை உண்டு இல்லேன்னு ரெண்டிலே ஒண்ணு பார்த்துப் போடுவே போலிருக்கே. ஓயாமே காப்பிக் குடிக்கிறது உடம்புக்கு ஆகாது!

**கோபால்:** அப்படிச் சொல்லு! அடியேன் நினேப்பு அப்படியே வருது. (போகிருன்).

**கோகி:** என்ன அத்தான் இது! எனக்குப் பிரசன்டாக என்ன வாங்கிக்கிட்டு வந்தீங்கண்ணு, மூட்டைப் பூச்சிக்கு மருந்தைத் தேடுறீங்க!

வச: உனக்குத்தானே; கையோடே கொண்டு வந்திருக்கிறேன். கட்டாயம் தர்றேன். நீ ஏன் கவலைப்படுறே?

கோகி: அப்போ கட்டாயம் கிடைக்கும்?

வச: சந்தேகமே வேண்டாம்! நான் கொடுக்கப் போற பரிசைப் பார்த்து நீ அப்படியே அதிர்ச்சியடைஞ்சி...

கோகி: ஆங்! அவ்வளவு அற்புதமான பரிசா? அதை எங்கே தேடிக் கண்டு பிடிச்சீங்களோ?

வச: எல்லாம் இங்கேதான்! அதைக் கண்டு பிடிக்க மூணு மாசமா நான் பட்டபாடு, அப்பப்பா! அதை ஏன் கேட்கிறே?

கோகி: எனக்காக ஏன் அத்தான் இவ்வளவு கஷ்டம்?

வச: அப்படிக் கஷ்டப்பட்டதினுலேதானே, இப்போ கல்யாணப் பந்தலையே கிடுகலங்கச் செய்ற மாதிரி பிரசன்ட் ஒண்ணு தயாரிக்க முடிஞ்சது!

கோகி: என் மேலே உங்களுக்கு இவ்வளவு அக்கறை இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை அத்தான்!

வச: நினைச்சிருக்கவே மாட்டே! எனக்குத் தெரியும். அதிலேயும் பரிசு இன்னதுண்ணு தெரிஞ்சி போச்சோ, அவ்வளவுதான்!

கோகி: ஆனந்தம் பொங்குமாக்கும்?

வச: அந்த மட்டோடே மயக்கம் போட்டுக் கீழே விழாமே இருந்தாப் போதும்! — கோபால்!

கோகி: அவனை ஏன் சும்மா சும்மா கூப்பிடுறீங்க? இப்பவே தலைக்கனம் பிடிச்சிப் போயி அலையிருன். இனி நீங்க வேறே அவனைத் தூக்கி வைங்க! என்னை மதிக்கிறதே இல்லை; மடப்பய!

வச: ஆஹூம், அக்கிரமமாயிருக்கே!

கோகி: ஒரு விதத்திலேயா? சுத்த அயோக்கியப் பயு! திமிர்பிடிச்சவன். கர்வம் தலைக்கேறி யிருக்கு!

வச: ஆங், இப்பவே கீழே இறக்கி வைக்கச் சொல்றேன். கர்வத்தைத் தூக்கித் தலையிலே வச்சிக்கிட்டா அவன் கழுத்து என்னுகிறது? இரு இரு, அவனை என்ன செய்றேன் பாரு! — கோபால், கோபால்! – அம்மாவோடே வரலாறு தெரியாமே ஆட்டமா போடுருன்!

கோகி: என்னைக் கண்டாலே அவனுக்கு இளப்பம்.

வச: ஆங், சரி சரி! இந்த வீட்டுக்கு எந்த முட்டாக் கழுதை வந்தாலும் அதுக்கு முன்னலே கூட பல்லை இளிச்சிக்கிட்டு நிக்கணும் என்கிற விவரம் அவனுக்குத் தெரியாதுபோலிருக்கு. இருக்கட்டும், இருக்கட்டும்!

**கோபால் :** (வந்து) என்ன தம்பி, என்ன வேணும்?

**கோகி :** உன் மூஞ்சியைக் கொஞ்சம் இங்கே காட்டாமே இருக்கணும்.

**கோபால் :** (முகத்தைத் துடைத்துக் கொண்டு) ஏன், வேஷமா போட்டிருக்கிறேன்?

**வச :** வேஷம் போட்டு ஜாலம் பண்றது எத்தனை நாளைக்கு கோபால்? எல்லாம் கூடிய சீக்கிரம் வெளுத்துப் போகும். அது இருக்கட்டும்; இந்த நங்கை யாரு தெரியுமா?

**கோபால் :** என்ன சொல்றே தம்பி? அர்த்தம் சரியாப் பிடி படலே. நங்கையா, வேங்கையா?

**வச :** இரண்டையும் இணைச்சுப் பாரு. நான் சொல்றது இந்த அம்மாதான்னு உனக்குப் பளிச்சின்னு புரியும்.

**கோபால் :** நம்ம கோகிலம்மாவையா சொல்றே? சரியாப் போச்சு. எனக்குத் தெரியாதாக்கும்?

**வச :** உனக்கு என்ன தெரியும்?—அது சரி, நான் இப்போ அவசரமா வெளியூருக்குப் போகணும். அதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் கொஞ்சம் செய்யேன் !

**கோபால் :** எந்த ஊருக்கு ?

**வச :** எந்த ஊருன்னு நான் என்னத்தைச் சொல்றது ?

**கோபால் :** என்ன தம்பி இது, வந்ததும் வராததுமா வெளியூர்ப் பயணம். வேறே யாரையாவது அனுப்பினுப் போச்சு !

**வச :** (சலுப்புடன்) ம்... யாரை அனுப்புறது ! நான்தான் போயாகணும்.

**கோபால் :** முந்தி மாதிரி ஜப்பானுக்கு கிப்பானுக்குப் போயிட மாட்டியே ?

**வச :** போகவே மாட்டேன். நீ பயப்படாதே !

**கோபால் :** சாமி மேலே ஆணையாச் சொல்லு.

**வச :** உன் மேலே எனக்கு இருக்கிற அன்புமீது ஆணை. போதுமா ?

**கோபால் :** அது போதும், அது போதும்! சரி, வா போகலாம்.

**வச :** புறப்படு.

**கோகி :** போறீங்களா?

**வச:** கோபால், நாம என்ன செய்யப் போறோம் என்கிறதை இந்தம்மாவுக்குக் கொஞ்சம் விளக்கிச் சொல்லு!

**கோபால்:** அதுதான் தெரியுதே தம்பி, நீ வா! (இருவரும் செல்கின்றனர்)

**கோகி:** (தனிமொழி) இவர் பேசுறதைப் பார்த்தா என் நெஞ்சே கலங்குதே! செச்சே! சீமானுக்கு இருக்க வேண்டிய மதிப்புன்னு, சேர் என்ன விலேன்னு கேட்பார் போலிருக்கு. ம்... வேலேக்காரன் உத்திரவுப்படி வெட்க மில்லாமேப் போறவருக்கும் எனக்கும்...

●

## காட்சி 52

○

காய்கறிக் கடை — பாலு வீட்டு வேலேக்காரனை சொக்கலிங்கம் காய்கறி வாங்க வருகிறுன். அங்கு ஏற்கனவே பொறுக்கி தனியாக வைக்கப்பட்டிருந்த குவியல் ஒன்றைப் பார்க்கிறுன்.

**சொக்கலிங்கம்:** (கடைக்காரனிடம்) இந்தாப்பா, இந்தக் குமியிலே இருக்கிற காயை எடுத்து நிறுத்துப் போடு.

**கடைக்காரன்:** இல்லேப்பா; அதை இன்னெருத்தர் பொறுக்கி வச்சிட்டுப் போயிருக்காரு.

**சொக்:** அவருக்கென்ன கொம்பா முளேச்சிருக்கு? நீ சும்மா போடு. அரையணு அதிகம் தர்றேன்.

**கடை:** அந்த ஆளு கோபிச்சிக்கிடுவாரே!

**சொக்:** அட, அது யாரப்பா, அப்பேர்ப்பட்ட கோபக் காரரு! அரையணு அதிகம் வாங்கிக்கோண்ணு போடேன்.

**கோபால்:** (வந்துகொண்டே) அது யாரப்பா, அளவில் லாமே அள்ளிக் கொடுக்கிற வள்ளல்?

**சொக்:** ஏன், நான்தான்.

**கோபால்:** நான்தான்னு தெரியலேயே!

**சொக்:** தெரியலேயா? சொல்றதுக்கு இவருக்கு நேர மில்லே. (கடைக்காரனிடம்) இந்தாப்பா, நீ நிறுத்துப் போடு. ஒரு அணு வேணுமானுலும் அதிகம் வாங்கிக்கோ!

**கோபால்:** அட, அவ்வளவு தூரத்துக்குக் கொட்டி வச்சிருக்கா? சரி, சரி!

**சொக்:** பிறகென்ன, குறைஞ்சவங்கன்னு பார்த்தியோ? முதல்லே நான் யாருன்னு தெரிஞ்சிக்கிட்டுப் பேசு!

**கோபால்:** அது தெரியாமத்தானே முழிக்கிறேன்.

**சொக்:** இப்போ முழிப்பே, தெரிஞ்சி போச்சோ. அவ் வளவுதான், வாயை மூடிக்கிட்டுப் பேசாமே நடப்பே.

**கோபால் :** ஊஹூம்! நான் யாருன்னு உனக்குப் புரியலே. புரிஞ்சதோ, அவ்வளவுதான் !

**சொக் :** முதல்லே என்னைத் தெரிஞ்சிக்கோ !

**கோபால் :** என்னைத் தெரிஞ்சிக்கோ முதல்லே !

**சொக் :** முடியாது ! என்னைத் தெரிஞ்சிக்கோ !

**கோபால் :** சரி, தொல்லே எதுக்கு ? தெரிஞ்சிக்கிடுறது.

**சொக் :** இந்த ஊரிலே ஒரு மில்லு இருக்கு, தெரியுமா ?

**கோபால் :** எத்தனையோ இருக்கு.

**சொக் :** இளங்கோ மில் !

**கோபால் :** சரி, சொல்லு !

**சொக்:** அந்த மில்லுலே ஒரு மானேஜர் இருக்கிறார் பாரு !

**கோபால் :** இருந்தாத்தானே பார்க்கிறதுக்கு ?

**சொக் :** இல்லாமே எங்கே போயிட்டாரு ?

**கோபால் :** கல்தா ! நாற்காலி காலி !

**சொக் :** அதெல்லாம் ரெண்டே ரெண்டு நாளேக்குத்தான் என்கிற ரகசியம் எனக்குத்தான் தெரியும். திரும்ப அதிலே போயி குந்தப் போறவர் இருக்காரு பாரு, அவரு வீட்டு உக்கிராண அறைக்கு அதிகாரி யாரு தெரியுமோ ?

**கோபால் :** தெரியாதே !

**சொக் :** சொக்கலிங்கம்.

**கோபால் :** அந்த லிங்கத்துக்கு இப்போ என்ன வந்திருக்கு ?

**சொக் :** அவருதான் இவரு.

**கோபால் :** ஓகோ !

**சொக் :** இனிமே உன் வாய் நீளுறதைப் பார்க்கிறேன்.

**கோபால் :** பலே பேஷாப் பாரு! நான் யாருன்னு தெரிஞ்சிக்கிட வேண்டாமா ?

**சொக் :** வேண்டியதுதான்.

**கோபால் :** அந்த மானேஜர் இருக்கிறாரு பாரு மானேஜர், மாஜி மானேஜர், அவருக்கு மாசாமாசம் படியளந்த முதலாளி ஒருத்தர் இருக்கிறாரே, தெரியுமா ?

**சொக் :** இது தெரியாத மட்டமான கட்டை இது இல்லே !

**கோபால் :** ரொம்பச் சரி. அந்த முதலாளி வீட்டுப் படிக் கட்டைத் தாண்டி உள்ளே போகணும்னு அங்கொருத்தர் கிட்டே உத்தரவு வாங்கணும்.

**சொக் :** எவரு கிட்டேயும் உத்தரவு கேட்கிற ஜன்மம் இது இல்லையாக்கும். தெரிஞ்சிக்கோ !

**கோபால் :** ஜென்மம் கிடக்கட்டுமப்பா ; விவரத்தைக் கேளு ! அந்த உத்தரவு தரக்கூடிய அதிகாரிதான் இவரு — பேரு கோபால்.

**சொக் :** அட, அப்டீண்ணு பயந்துடுவேன்னு நினைச்சே ? அதுதான் இவருகிட்டே நடக்காதாக்கும் ! அந்த வீட்டுக்கு மருமகளா வரப்போறது யாரு தெரியுமா ?

**கோபால் :** வந்தாவில்லே தெரியும்.

**சொக் :** இது தெரியலே, சும்மா அளக்கிறே. அவங்க தான் கோகிலம் என்கிற அம்மா. அந்த அம்மா எங்க ஐயா கையிலே அடக்கம்; தெரியுமா?

**கோபால் :** (திகைத்து) அப்படியா !

**சொக் :** பிறகு எப்படி ? நாள் தவறினாலும் அந்தம்மா எங்க வீட்டுக்கு வர்றது தவறாது ; கொஞ்சிப் பேசுறதுக்கும் பஞ்சம் கிடையாது ! இப்போ என்ன சொல்றே ; என் சுண்டு விரலை ஆட்டிக்கிட முடியுமா உன்னாலே ?

**கோபால் :** ஆங் !

**சொக் :** ஏன், பயம் வருதோ ?

**கோபால் :** இல்லே, இல்லே. ம்ம்... எனக்கு ஒரு யோசனை தோணுது.

**சொக் :** என்ன தோணுது, சொல்லு ! இண்ணைக்கு ரெண்டிலே ஒண்ணு பார்த்துப் போடுவோம், பார்த்து.

**கோபால் :** நாம சமாதானமாப் போயிட்டா என்ன ?

**சொக் :** போயிட்டா என்ன ?

**கோபால் :** போறது இப்போ ரொம்ப அவசியம்.

**சொக் :** சரி ரொம்ப அவசியம்.

**கோபால் :** ஆகையினாலே, இனிமே நமக்குள்ளே சண்டை வேண்டாம் ; சமாதானம் !

**சொக் :** சரி, சமாதானம்.

**கோபால் :** வா போகலாம். உன்னோடே கொஞ்சம் தனியா பேச வேண்டியதிருக்கு.

**சொக் :** சரி, புறப்படு. (போகின்றனர்)

**கடை :** என்னங்க, காய் வாங்கலையா ?

**கோபால் :** (போய்க்கொண்டே) வேண்டாம்பா ! நாங்க சமாதானமாப் போயிட்டோம். சண்டையைக் கிளப்பிவிட்ட அந்தக் காயி உன் கிட்டேயே இருக்கட்டும்.

சொக் : ஆமாமா, வேண்டவே வேண்டாம்!

கடை : (தனிமொழி) அட, நல்ல ஆளுங்கய்யா இவங்க! அரையணு தர்றேன், ஒரு அணு தர்றேன்னு, கடைசியிலே நம்ம ஏயாபாரத்திலேயில்லே கையை வச்சிட்டுப் போயிட்டாங்க. இவங்க சமாதானத்திலே இடி விழ! சண்டை வந்தாவில்லே ஏயாபாரத்துக்கு ஜோர்!

●

## காட்சி 53

○

பாலுவின் அறை - கண்ணாடிக்குமுன் நின்று அலங்காரம் செய்து கொண்டிருக்கிருன் பாலு. கோகிலம் வருகிருள்.

கோகிலம் : வரலாமா?

பாலு : தாராளமா!

கோகி : (அறைக்குள் வந்து சுற்று முற்றும் பார்த்தவாறு) அக்கம் பக்கத்திலே யாரும் இல்லையே?

பாலு : என்ன இது, ஒரு நாளுமில்லாத புதுச் சந்தேகம்?

கோகி : இனிமேல் சந்தேகப்பட்டுத்தான் ஆகவேண்டியதிருக்கு. ஏண்ணு, நம்ம நாடகம்—

பாலு : ஒரு திரும்பு முனையிலே நிற்கிறது. இனிமேல்தான் சுவாரசியமான சூருவளிக் கட்டம்!

கோகி : என்னவோ, எல்லாம் வெட்ட வெளிச்சமாயிட்டு வருதோ என்ன எழவோ?

பாலு : கிடக்குது குப்பை!

கோகி : எனக்கு எவ்வளவு திகிலாக இருக்குது தெரியுமா?

பாலு : ஏன்?

கோகி : அவர் பேசுவதைப் பார்த்தால்......

பாலு : எவரு?

கோகி : அவர்தான், வசந்தன் – என் தலையே சுத்துது!

பாலு : அது ஏன் சுத்துது?

கோகி : பிறகென்ன? என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர் மாதிரியா பேசுகிருர்?

பாலு : வேண்டா வெறுப்பாயிருக்கோ?

கோகி : அப்படித்தான் யூகிக்க வேண்டிருக்கு.

பாலு : ரொம்ப நல்லதாப் போச்சு. அவன் உன்னை வெறுத்தால், நீ அவனைக் காறித் துப்பு!

**கோகி :** அது முடியுமா? எப்படியாவது அவர் மனசை மாத்தியாகணுமே!

**பாலு :** அதெல்லாம் வீண் முயற்சி. விட்டுத் தள்ளு; கிடக்கிறுன் பொடியன்!

**கோகி :** அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?

**பாலு :** பிறகென்ன, காலுக்கு வராத செருப்பைக் கழற்றி எறிவதுதான் விவேகம்.

**கோகி :** அப்படியானல் என் கதி? காலில் விழுந்து கெஞ்சியாவது காரியத்தைச் சாதிக்க வேண்டுமே!

**பாலு :** வேண்டவே வேண்டாம்! இந்த இடத்திலேதான் நமது திட்டத்திலே சிறு மாறுதல் கட்டம் உருவாகியிருக்கு!

**கோகி :** மாறுதல் கட்டமா?

**பாலு :** ஆமாம். இனிமேல் நீ முழுக்க முழுக்க எனக்குத்தான் சொந்தம். இன்னெருவன் மனைவியாவதை நான் அனுமதிக்கப் போவதில்லை.

**கோகி :** (அதிர்ச்சியுற்று) ஆங்! விளையாடுகிறீர்களா?

**பாலு :** காதல் விளையாட்டு கல்யாணமாக உருவெடுக்கப் போகிறது. அதுதான் முறை; நேர்வழியும்கூட.

**கோகி :** நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?

**பாலு :** நான்தான்; பாலு பேசுகிறேன்.

**கோகி :** உங்கள் முடிவு இதுதானு?

**பாலு :** சொல்லிவிட்டேனே!

**கோகி :** மாற்றிக்கொள்ள முடியாதா?

**பாலு :** வழி இல்லை.

**கோகி :** நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன்.

**பாலு :** அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

**கோகி :** இதென்ன அநியாயம்!

**பாலு :** அநியாயத்தைப் பற்றி நாம் இது வரையில் கவலைப் பட்டதுண்டா? இனிமேல் கவலைப்படத்தான் போகிறுேமா?

**கோகி :** தயவுசெய்து அப்படியெல்லாம் பேசாதீர்கள். நான் என்றுமே உங்களை மறக்க மாட்டேன். இன்றுபோல் என்றும் நம் காதல் நிலைத்து நீடித்து நிற்கும்.

**பாலு :** காதல் கிடக்கட்டும். முதலில் என் வாழ்க்கை வசதிகளை இழந்துவிட முடியாது.

**கோகி :** எல்லா வசதிகளையும் நான் செய்கிறேன்.

**பாலு :** கோகிலம், எனக்கு வேலை போய் விட்டது. இனி நான் வசதியோடு வாழ வேண்டுமானால், உன்னைப் போல பணக்காரி எனக்கு மனைவியாக வாய்க்க வேண்டும். கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு, 'நெய், நெய்' என்றலையும் மடையனல்ல நான்.

**கோகி :** இன்னும் கொஞ்ச நாள் பொறுங்கள். உங்களுக்கு அதே மானேஜர் வேலை கிடைக்கும்படி நானே ஏற்பாடு செய்கிறேன்; கட்டாயம் செய்கிறேன்.

**பாலு :** உன்னால் முடியாது! முடிந்தாலும், மறுபடியும் அவனிடம் போய் கைகட்டி சேவகம் செய்ய நான் தயாராக இல்லை. என் கட்டிக் கரும்பை இழந்து விடவும் மனமில்லை.

**கோகி :** பாலு, என் பொறுமையைச் சோதிக்காதீர்கள்! உங்கள் எண்ணம் ஈடேற வேண்டுமானால், அதற்கு நானும் சம்மதிக்க வேண்டும். ஞாபகமிருக்கட்டும்.

**பாலு :** அவ்வளவு மடையனல்ல நான். எல்லாம் எனக்குத் தெரியும் கண்மணி, எனக்குத் தெரியும்.

**கோகி :** நான் சம்மதிக்கவில்லை என்றால்....

**பாலு :** எங்கே சொல்லிப் பார்!

**கோகி :** இதோ, சொல்கிறேனே.

**பாலு :** சும்மா, வெறும் பேச்சு.

**கோகி :** வெறும் பேச்சல்ல; காரியத்திலும் செய்து காட்டுகிறேன். உங்களை நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை.

**பாலு :** அது உன் கையில் அல்ல கோகிலம்; என் கையில்! என்னை மணந்து கொள்ள மறுத்தால், உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பைப் பற்றி ஊரெல்லாம் பறை சாற்றுவேன். பிறகு, தெருவில் சுற்றும் அனாதைப் பயல் கூட உன்னைச் சிந்தமாட்டான்.

**கோகி :** இது நம்பிக்கைத் துரோகம்!

**பாலு :** நீ செய்ததைவிடவா? செய்வதை விடவா? செய்யப் போவதை விடவா?

**கோகி :** பாலு, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை வாழ விடுங்கள்! வேடன் கையில் சிக்கிய புறா போல் என் வாழ்வு உங்கள் கையிலிருக்கிறது.

**பாலு :** சிபிச் சக்கரவர்த்திகள் வாழும் காலமல்ல இது கோகிலம்!

**கோகி:** அப்படியானால், வேடனைப் போல் இரக்கமில்லாமல்தான் நடந்து கொள்வீர்களா?

**பாலு:** நான் வேடனுமல்ல; நீ புறவுமல்ல, காதல் மணம் வீசும் மலர் நீ. அது கல்யாணம் என்னும் கனியாகப் பழுக்க வேண்டும். அதுதான் என் கனவு, ஆசை, லட்சியம்!

**கோகி:** (பாலுவின் கரங்களைப் பிடித்துக் கொண்டு) பாலு, உங்கள் காலில் விழுந்து வேண்டுமானாலும் கெஞ்சுகிறேன். என்னை வாழ விடுங்கள். என் வாழ்வும் தாழ்வும் உங்கள் கையில்! உங்களை நம்பி என் காதலை அர்ப்பணித்த இந்த அபலை மன்றாடுகிறேன். என் வாழ்நாள் முழுதும் கண்ணீர் சிந்தி வாடும்படி விட்டு விடாதீர்கள்! பாலு, பாலு! நான் நன்றாக வாழ வேண்டுமென்று உங்களுக்கு விருப்பமில்லையா?

**பாலு:** இருக்கிறது, நிறைய இருக்கிறது. அதோடு நானும் வாழ்ந்தாக வேண்டும்.

**கோகி:** உங்கள் வாழ்வு என்றென்றும் வளமாக இருக்க என் வாழ்நாள் முழுதும் பாடுபடுவேன். என்னை நம்புங்கள்.

**பாலு:** தாராளமாக நம்புகிறேன். உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் நம்புவதற்கு?

**கோகி:** நம்பிக்கைத் துரோகம் செய்யவே மாட்டேன், பாலு! உங்களை என் காதல் தெய்வமாகப் போற்றுவேன்; பூஜிப்பேன்.

**பாலு:** கோகிலம், பறந்து செல்லும் பச்சைக் கிளி திரும்பி வரும் என்று எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும் இளிச்சவாயனல்ல நான். நீ என் ஆசைக் கிளி; என் அருகிலேயே இருக்க வேண்டிய கூண்டுக்கிளி.

**கோகி:** பாலு, இதனால் என் அந்தஸ்து, குடும்ப கௌரவம், பணக்காரன் மனைவி என்ற மதிப்பு எல்லாமே சீர்குலைந்து விடாதா? என் மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள், பாலு!

**பாலு:** கோகிலம்! காதலிக்கும்போது சீர்குலையாத உன் கௌரவங்கள், காதலித்தவனைக் கல்யாணம் செய்து கொள்ளும்போது மட்டும் அழிந்து விடுமா? கல்யாண வழியில் வீசுவதுதான் காதல் தென்றல். திக்குத் தெரியாத காட்டுப் பாதையில் வீசினால் அது தென்றல் அல்ல; புயல், கோரப் புயல்!

**கோகி:** அதை இப்போதுதான் உணருகிறேன். காதல் வேறு, கல்யாணம் வேறு என்று பிரித்துப் பார்த்த மடத்தனத்தினால்தான் இப்போது கண்ணீர் சிந்திக் கெஞ்சிக் கொண்டு நிற்கிறேன். பாலு, போனால் திரும்பப் பெற

முடியாத இளமைப் பருவத்தை உங்கள் காலடியில் அர்ப்பணித்துவிட்ட இந்த அபலைக்கு ஒரே ஒரு உதவி செய்யுங்கள். இழக்கக் கூடாத செல்வமான கற்பை உங்களுக்குக் காணிக்கையாக்கி விட்ட நன்றிக்காகவேனும் எனக்கு வாழ்வுப் பிச்சை அளியுங்கள் பாலு!

**பாலு :** கோகிலம், வீணுகப் பேசிப் பயனில்லை. இளமையும் கற்பும் விலைமதிக்க முடியாத செல்வங்கள் என்று இப்போதாவது உணர்ந்து கூறுகிருயே, அதுவரையில் நல்லது தான்! அப்பேர்ப்பட்ட செல்வங்களை வெறும் இன்பம் தரும் கருவிகளாக மட்டும் பயன்படுத்த நீ விரும்பினுலும் நான் விரும்பவில்லை.

**கோகி :** அப்படியானுல் நமது ஒப்பந்தம் மண்ணேடு மண்ணுக வேண்டியதுதானு?

**பாலு :** ஆனுனப்பட்ட ஒப்பந்தங்களே தவிடுபொடியாகின்றன. நம்முடையதென்ன – சுண்டைக்காய்!

**கோகி :** இப்படியெல்லாம் என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள், பாலு!

**பாலு :** சித்திரவதையல்ல கோகிலம், சித்திரவதையல்ல! சீரான வாழ்க்கைக்கு வழி காட்டுகிறேன். கோகிலம், நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இனி யாராலும் அதை மாற்ற முடியாது! நீயும் நின்று நிதானித்து யோசித்து ஒரு முடிவுக்கு வா. ஒன்று கல்யாணம்; இல்லாவிட்டால்... அதைத்தான் முன்பே சொல்லிவிட்டேனே! (போகிருன்)

**கோகி :** பாலு!

**பாலு :** (நின்று) இதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை! (போகிருன்)

**கோகி :** பாலு, பாலு!

[தொப்பென்று சோபாவில் சாய்கிருள் கோகிலம். அவள் தலை சுழல்கிறது.]

●

## காட்சி 54

○

தெரு வழியே பெருமாளும், ஐபம்பெருமாளும் முன்னும் பின்னுமாக நடந்து செல்லுகின்றனர்.

**பெருமாள் :** (நடந்து கொண்டே) நான் சொல்றது என்னண்ணு, எடுத்ததுக்கெல்லாம் சந்தேகப்படுறது சர்வ முட்டாள்தனம்; மடத்தனம்; பைத் — (திரும்பிப் பார்த்து)

இந்தாப்பா, ஏன் இப்படி தலையிலே கையை வச்சிக்கிட்டு நின்னுட்டே? வா, போகலாம்.

ஐயம்பெருமாள்: (இரண்டு கைகளாலும் தலையை அழுத்திப் பிடித்தவாறு வந்து கொண்டே) என்னமோ போ, என் தலை அப்ட நாட்டியமாடுது, நாட்டியம்!

பெரு: அதுக்கென்ன, அரங்கேத்தம் செய்துட்டாத் தீர்ந்தது. பிரபலம் தானு வந்து உன் காலடியிலே மண்டியிடுது!

ஐயம்: அட போப்பா, உனக்கு எப்போ பார்த்தாலும் கிண்டல்தான்! நாலா பக்கத்திலேயிருந்தும் சந்தேகங்கள் வந்து என் மண்டையைத் தாக்குது; தெளிவடைய வழி தெரியாமேத் திண்டாடுறேன். நீ என்னடாண்ணு....

பெரு: ஐயோ, பாவம்! முந்தியெல்லாம் ஒரு பக்கமா சந்தேகங்கள் உதயமாகும். இப்போ நாலா பக்கத்திலிருந்தும் கிளம்புதோ! உருப்பட்டாப்லேதான்!

ஐயம்: இப்படித்தான் குதர்க்கமாப் பேசப்படாதுண்ணு நானும் சொல்லிக்கிட்டே வர்றேன்; நீயும் பேசிக்கிட்டே போறே. பேசு, பேசு! எல்லாம் நல்லதுக்குத்தான்.

பெரு: பிறகென்ன, ஆதி முதல் இந்தத் தேதி வரையிலே உனக்கு வந்த சந்தேகங்களுக்குக் கணக்கே இல்லே! அதிலே ஒண்ணாவது உருப்படியானது உண்டா?

ஐயம்: இல்லாமே எங்கே போச்சு? வரிசையா சொல்லட்டுமா?

பெரு: வேண்டாம்பா, வேண்டாம்! தற்காலத்திலே உன் தலையைக் குடையிறதை மட்டும் சொல்லு. அதிலே ஏதாவது சாரமிருக்கான்னு நானும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து பார்க்கிறேன்.

ஐயம்: சரி, பாரு. இப்போ சின்ன முதலாளி வந்ததும் வராததுமா மானேஜரை டிஸ்மிஸ் பண்ணிட்டாரே, ஏன்?

பெரு: அவன் கெட்டவன்னு தெரிஞ்சி போயிருக்கும்.

ஐயம்: அதெப்படியப்பா அதுக்குள்ளே கண்டு பிடிச்சிட்டாரு? அதில்லாமே, அவன் தொழிலாளிகளுக்குத்தான் கெட்டவனே தவிர முதலாளிகளுக்கு ரொம்ப நல்லவனுக, அவங்க மனம் கோணுதபடி நடக்கிறவனுச்சே!

பெரு: சரி, சந்தேகம் நம்பர் ஒண்ணு.

ஐயம்: ஒண்ணு? ரெண்டாவது, அவருக்காகக் காத்திருந்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள சால்ஜாப்பு சொல்லிக்கிட்டு வர்றாராமே. இது ஏன்?

பெரு: சரி, சந்தேகம் நம்பர் ரெண்டு.

ஐயம் : ரெண்டா ? மூணுவதாக, அவர் ஊரிலேயே தங்குற தில்லையாம். ஏதோ திகில் பிடிச்சவர் மாதிரி கண்ட காடெல்லாம் அலையிறதும், திரும்பி வர்றதும், உடனே போறதுமா இருக்கிருராம்! இது ஏன் ?

பெரு : சரி, மூணு.

ஐயம் : சந்தேகம் நம்பர் மூணு. நாலாவதாக, எப்போ பார்த்தாலும் எதையோ பறி கொடுத்தவர் மாதிரி கவலையா உட்கார்ந்திருக்கிருராம். நான்கூட அண்ணைக்கொரு நாள் ஜாடையா ஆபீஸ் பக்கமாப் போயி ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். மனுசன் பேயறைஞ்சவர் மாதிரி உக்காந்திருக்காரு. இதுக்கெல்லாம் என்ன காரணம்னு நானும் ஆராஞ்சி ஆராஞ்சி பார்க்கிறேன், ஒண்ணும் அகப்பட மாட்டேங்குது.

பெரு : ம்....சந்தேகம் நம்பர் நாலு. அவ்வளவுதானு ? அதுக்கு மேலே ஏதாவது இருக்கா ?

ஐயம் : இப்போதைக்கு அவ்வளவுதான். இனிமே ஏதாவது கிளம்பினுலும் கிளம்பும்.

பெரு : ஆமா கிளம்பும்! ஏம்பா, ஊரார் விஷயத்தைப் போட்டு இப்படிக் கிளறிக்கிட்டு இருக்கிறதிலே நமக்கு என்ன லாபம் ?

ஐயம் : (சந்தேக தொனியில்) ம்...என்ன லாபம் ?

பெரு : மண்டை வறண்டு போறதுதான் மிச்சம்! (போகிருன்)

ஐயம் : (விறு விறுப்புடன் நடந்து கொண்டே) அட, நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துக்கிட்டிருக்கிறேன்; இவன் என்னடாண்ணு நம்ம வழிக்கு வர்றதாகக் காணோம்! இவன் சிநேகிதத்தைக் 'கட்' பண்ணித் தொலைக்கிறதுதான் எனக்கு லாபம்! ('டக்'கென்று நின்று) ம்....இதனுலே எனக்கு லாபமா, நஷ்டமா? ம்....இதையும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து பார்க்கிறேன். (போகிருன்)

●

## காட்சி 55

○

சோமசுந்தரம் பங்களா - சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிருர் சோமசுந்தரம்—வெளியூர் சென்றிருந்த வசந்தன் பெருங் கவலையோடு வருகிருன். தன் தந்தையைக் கண்டதும் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு, மெதுவாக

அவரைத் தாண்டிச் செல்ல முற்படுகிறான். சோமசுந்தரம் ஏறிட்டுப் பார்க்கிறார்.

**சோமசுந்தரம் :** வசந்தா, இங்கே வா! இப்படி உட்கார்.

**வசந்தன் :** (வந்து உட்கார்ந்தவாறு) என்னப்பா?

**சோம :** என்னடா இது, எப்போ பார்த்தாலும் வீட்டிலே தங்காமே எங்கே போயி இப்படி ஊரூரா சுத்திட்டு வர்றே? அமெரிக்காவிலிருந்து வந்த நாள்முதலா நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கிறேன்; எதையோ பறி கொடுத்துட்டு ஏங்குறவன் மாதிரி இருக்கிறயே தவிர, கொஞ்சங்கூட முகத்திலே களையைக் காணுமே! இப்போ, உனக்கு என்ன கவலை?

**வச :** (கவலையுடன்) எனக்கென்ன கவலை; ஒண்ணுமில்லே.

**சோம :** உன் முகத்திலேதான் எழுதி ஒட்டியிருக்கே! ஒண்ணுமில்லேன்னு மழுப்பிட்டா எப்படி நம்புறது? இந்தா பாரு வசந்தா, நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. பேசாமே கல்யாணம் செய்துக்கோ. எல்லாக் கவலையும் ஒழிஞ்சி போகும்; நானும் நிம்மதியாயிருப்பேன்.

**வச :** அதுக்குத்தானப்பா முயற்சி செய்கிறேன்.

**சோம :** முயற்சி என்னடா செய்றது முயற்சி! கல்யாணப் பெண்ணே தயாராயிருக்கு. நீ சரின்னு சொல்லிட்டா அரை நொடியிலே எல்லாம் ரெடி!

**வச :** இதைப் பத்திக் கொஞ்சம் யோசிக்கணும்.

**சோம :** யோசிக்கணுமா? அப்படி யோசிக்க வேண்டியது என்னதான் இருக்குண்ணு எனக்குப் புரியலையே!

**வச :** இப்போ புரியாதுதான்!

**சோம :** ஆமா, உனக்குத்தான் ரொம்பப் புரிஞ்சி போச்சு. ஏதோ சீமைக்குப் போயிட்டு வந்தோம்; நாலு பேருக்கு மதிப்பா நல்ல இடத்திலே கல்யாணத்தைப் பண்ணிணோம்; ஜம்னு இருந்தோம் என்கிறதை விட்டுட்டு, நினைச்சா பெட்டியும் படுக்கையும் தூக்கிக்கிட்டு கிளம்பிடுறே! இதுதான் பணக்காரன் வீட்டுப் பிள்ளைக்கு அழகாக்கும்?

**வச :** அப்பா, இன்னும் கொஞ்ச நாள் பொறுங்கப்பா! எல்லாம் சரியாப் போயிடும்.

**சோம :** அதுவரையிலே என்ன செய்யப் போறே?

**வச :** என்ன செய்றது? எல்லாம் என் தலைவிதி.

**சோம :** உன் தலைவிதி இல்லேடா, உன் தலைவிதி இல்லை. எல்லாம் என் தலைவிதி! மகனைப் பார்த்து மகிழ்ந்திருக்க

வேண்டிய வயசிலே இப்படி மனம் நொந்து வாடுறேன் பாரு, இது என் தலைவிதிதான்!

**வச :** அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா. உங்க மனசு நோகும்படியா நடக்கவே மாட்டேன்.

**சோம :** ம்... என்னமோ போ! வந்த கையோடே மானேஜரை டிஸ்மிஸ் பண்ணிட்டே; உனக்காகக் காத்திருக்கிற கோகிலத்தை ஏறிட்டுக்கூட பார்க்க மாட்டேங்கிறே; போதாக்குறைக்கு கண்ட காடெல்லாம் வேறே சுத்துறே! இதையெல்லாம் பார்த்தா என் மனசு எவ்வளவு வேதனைப் படுது தெரியுமா?

**வச :** எல்லாம் நன்மைக்குத்தான். இன்னும் கொஞ்ச காலம் பொறுங்கப்பா.

**சோம :** நல்லாப் பொறுக்கச் சொன்னே போ! இப்போ நான் ரெண்டிலே ஒண்ணு கேட்கிறேன். எப்போ இருந்தாலும் சரி, நீ நம்ம கோகிலத்தைக் கட்டிக்கிட முடியுமா, முடியாதா?

**கோபால் :** (குரல் மட்டும்) முடியாது, முடியாது, முடியாது! பேசாமே ஒரு மூலையிலே குந்துன்னு குந்து! (வந்து கொண்டே) ஒகோண்ணும்!

[வசந்தன் புன்முறுவல் செய்கிறான். சோமசுந்தரம் திகைப்பும் கோபமும் அடைகிறார்.]

**சோம :** டேய், மூடுடா வாயை; முட்டாள்ப் பயலே!

**கோபால் :** பிறகென்னங்க முதலாளி!.... இதுதான் அம்மா வீட்டுக்குப் போற சமயமா? நானும் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன்; கேட்டாத்தானே! போகத்தான் போவேன்னு ஒத்தைக் காலிலே நிக்கிறா. இப்படி ஒரு போடு போட்டாத் தான் அடங்குவா. ம்... பேருதான் செந்தாமரை; புத்தி மகா மந்தம், மகா மந்தம்! — நீ எப்போ வந்தே தம்பி?

**சோம :** (தெளிவடைந்து) ஆமா, வந்தாரு; நீ வரவேற்க வந்துட்டே! அவனைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்க உனக்குத் துப்பில்லே; சும்மா, பேச்சு மட்டும் பெரிசா இருக்கு.

**கோபால் :** அதுக்கென்ன முதலாளி, செய்துட்டாப் போச்சு. பெண்ணு, நல்ல பெண்ணா குதிர வேண்டாமா?

**சோம :** இனிமே, ஆகாசத்திலேயிருந்துதாண்டா குதிக்கணும்.

**கோபால் :** அதெல்லாம் ரொம்ப காலத்துக்கு முன்னாலேயே

குதிச்சிருக்கும். இருந்தாலும் மனசுக்குப் பிடிக்கிற மாதிரியாப் பார்த்து—

**சோம:** மண்டையிலே அடிடா அவனை! எல்லாப் பசங்களும் கோகிலத்தை மறந்துட்டிலே பேசுறாங்க. அந்தப் பெண்ணுக்கு என்னடா வந்திருக்கு இப்போ?

**கோபால்** (அலட்சியமாக) வந்திருக்கு, வந்திருக்கு!

[கோகிலம் வருகிறாள்.]

**சோம:** இதோ, கோகிலமும் வந்தாச்சு.—இந்தாம்மா, இனிமே உன்பாடு, அவன்பாடு. நீங்க ரெண்டு பேரும் எப்படியாவது பேசி முடிச்சி ஒரு நல்ல முடிவுக்கு வாங்க. (எழுந்து) டேய் கோபால், நீ போயி... (சிறிது திகைத்து) ம்... வா சொல்றேன்.

[சோமசுந்தரம் செல்ல, கோபால் சிறிது தயங்கியவாறு அவரைப் பின் தொடருகிறான். வசந்தனும் கோகிலமும் தனித்து நிற்கின்றனர். சிறிது அமைதி நிலவுகிறது. வசந்தன் அங்கிருந்து செல்ல முற்படுகிறான்.]

**கோகிலம்:** போறீங்களா?

**வசந்தன்:** (நின்று) ஏன்?

**கோகி:** நீங்க வீட்டிலேயே தங்குறதில்லையாமே!

**வச:** ஆமா.

**கோகி:** ஏன் எப்போ பார்த்தாலும் கவலையா இருக்கிறீங்க?

**வச:** அதைப்பத்தி உனக்கெதுக்கு இவ்வளவு அக்கறை?

**கோகி:** எனக்கில்லாத அக்கறை இனி யாருக்கு?

**வச:** இதெல்லாம் உனக்கு அனாவசியம்.

**கோகி:** ஏன் இப்படி வெறுப்பாப் பேசுறீங்க?

**வச:** ஒரு பெண்ணோடே எப்படிப் பேசணுமோ அப்படிப் பேசுறேன்.

**கோகி:** அவ்வளவுதானா? உங்ககிட்டே எனக்கு உரிமை இல்லையா? உங்க கவலையை என்னிடம் சொல்லக் கூடாதா? என்னைக் கண்டா உங்களுக்குப் பிடிக்கலையா? நான் அழகா இல்லையா?

**வச:** (வெறுப்புடன்) இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அடிப்படையே இல்லை! (வேகமாகச் செல்லுகிறான்)

[கோகிலம் அதிர்ச்சியடைந்தவளாய் தொப்பென்று சோபாவில் உட்கார்ந்து, இரு கைகளையும் கன்னங்

களில் ஊன்றிக் கொண்டு வெறித்துப் பார்க்கிருள் கண்ணீர் பொங்குகிறது.]

●

## காட்சி 56

○

சென்னையில் நடுத்தரமான ஒரு வீடு - வீட்டுக்குச் சொந்தக்காரி கூடத்தில் ஒரு பெஞ்சு மீது உட்கார்ந் திருக்கிருள். அவளுக்கு சுமார் நாற்பத்தைந்து வயதிருக் கும். அவள் அருகே துயரமே உருவாக நிற்கிருள் கோமதி.

**வீட்டுக்காரி :** *(அனுதாபத்துடன்) உன்னைப்போல வயசுப் பெண்களை வீட்டு வேலைக்கு வச்சிக்கிடுறதுண்ணு யாரும் கொஞ்சம் யோசிக்கத்தான் செய்வாங்க. நான் யார் கிட்டே போயி சிபார்சு பண்ணட்டும்? – உட்காரம்மா; ஏன் நிற்கிறே? சும்மா உட்காரு.*

**கோமதி :** இல்லம்மா, பரவாயில்லே.

**வீட்டுக்காரி :** நம்ம வீட்டிலேயோ வேலைக்காரி வச்சிக்கிடுற பழக்கமே கிடையாது; அதுக்குத் தேவையும் இல்லே! நாங்க இருக்கிறது ரெண்டே பேரு. ம்... உன்னைப் பார்த்தா பரி தாபமாயிருக்கு; அதுக்கு மேலே உன் கதையைக் கேட்டா ஒரே துக்கமாயிருக்கு. ம்... என்ன செய்றது?

**கோமதி :** எனக்குத் தெரிஞ்சவங்க யாரும் இங்கே இல்லம்மா. வீடுவீடா ஏறி இறங்கிட்டேன். எல்லோரும் விரட்டியடிக்கிருங்களே தவிர, உங்களைப் போலே இரக்கப் பட்டுப் பேசுறவங்க யாருமில்லே. நீங்கதான் கொஞ்சம் தயவு பண்ணணும்.

**வீட்டுக்காரி :** ம்... அப்போ ஒண்ணு செய். ஐயா வெளி யூருக்குப் போயிருக்கிருரு. இண்ணைக்கு வந்துடுவாரு; வரக்கூடிய நேரமுமாச்சு. அவருக்கு மில்லுலே தெரிஞ்ச மனுஷாள் இருக்கிருங்க. உனக்குத்தான் மில் வேலை தெரியும்ன்னு சொல்றயே. எப்படியும் மில்லுலே சேர்த்துடச் சொல்றேன்.

[வீட்டுக்குச் சொந்தக்காரர் பிரயாணம் செய்த கோலத் தோடு வருகிருர்.]

**வீட்டுக்காரி :** *(எழுந்தவாறு)* இதோ ஐயாவும் வந்தாச்சு.

**வீட்டுக்காரர் :** *(தனக்குத்தானே)* உஷ், அப்பப்பா, மனுசன் ரயிலே விட்டு இறங்கி நிம்மதியா வீடு வந்து சேர்ற மாதிரி இருக்கா? காரும், சைக்கிளும், கட்டை வண்டியும்

மனுசனை விரட்டு விரட்டுன்னு விரட்டுது! பேருதான் பட்டணம்; ஒரு நிம்மதியைக் காணேம்! — என்ன இது ஆச்சரியமாயிருக்கு! யாரு இந்தப் பொண்ணு?

**வீட்டுக்காரி:** (புன்முறுவலுடன்) உங்களுக்கு எதுதான் ஆச்சரியமாயிருக்காது! எல்லாத்தையும் சாவகாசமாச் சொல்றேன். முதல்லே நீங்க குளிச்சிட்டுப் பலகாரம் சாப்பிடுங்க.

**வீட்டுக்காரர்:** (கோமதியிடம்) ஏம்மா நிக்கிறே? உட்காரம்மா, உட்கார்! ரொம்பக் கஷ்டப்படுற பொண்ணு போலிருக்கு!—(வாசல் பக்கமாகத் திரும்பி) அட, என்னடா இது ஆச்சரியமாயிருக்கு! பெட்டியும் படுக்கையும் தூக்கிக்கிட்டு வந்தவன் தாழ்வாரத்திலேயே வச்சிட்டு உக்காந்துட்டான் போலிருக்கே! – டேய் தம்பி, உள்ளே கொண்டு வந்து வை. சும்மா வா, பரவாயில்லே.

[பெட்டி, படுக்கை, பழக் கூடை முதலிய சாமான்களை ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு வந்து வைக்கிருன் பூங்காவனம்.]

**வீட்டுக்காரர்:** (மனைவியிடம்) இந்தப் பையன் கதையைக் கேட்டா ஒரே ஆச்சரியமாயிருக்கு. பெரிய நாவலே எழுதலாம்! (பூங்காவனத்திடம்) இந்தா, உன் குணத்துக்காக கூட ஒரு ரெண்டு அணு. (சில்லரை கொடுக்கிருர்)

**பூங்காவனம்:** (மகிழ்ச்சியோடு இரு கைகளையும் ஏந்தி வாங்கிக்கொண்டு வணங்கி) போயிட்டு வர்றேனுங்க.

**வீட்டுக்காரர்:** சரி, போய் வா. பாடுபட்டு முன்னுக்கு வா தம்பி. நீ ரொம்ப நல்ல பையனு இருக்கே.

[பூங்காவனம் தற்செயலாக கோமதியைப் பார்க்கிருன். அப்படியே அதிர்ச்சியுற்று நிற்கிருன். கோமதி வேறெங்கோ பார்த்தவாறு நிற்கிருள்.]

**வீட்டுக்காரர்:** என்னடா இது ஆச்சரியமாயிருக்கு! ஏன் அப்படி நிக்கிறே?

[கோமதி திரும்பிப் பார்க்கிருள். மெய்சிலிர்க்க "தம்பீ" என்று அலறியவண்ணம் பாய்ந்து செல்கிருள். 'அக்கா' என்றவாறு அருகில் வருகிருன் பூங்காவனம். இருவரும் ஒன்றுமே பேச முடியாத நிலையில் தேம்பித் தேம்பி அழுகின்றனர். வீட்டுக்காரரும் வீட்டுக்காரியும் அளவற்ற ஆச்சரியத்துடன் வாயடைத்துப் போய் நிற்கின்றனர்.]

**வீட்டுக்காரர்:** என்னடா இது ஆச்சரியத்துக்கு மேலே

ஆச்சரியமாயிருக்கு! நீங்க ரெண்டு பேரும் அக்கா, தம்பியா?

**பூங்கா:** ஆமாங்க.

**கோமதி:** (அழுகுரலில்) எங்களையெல்லாம் தவிக்கவிட்டுட்டு எங்கே போயிட்டே தம்பீ? உன்னைக் காணுமே அப்பா பட்ட பாடு...

**பூங்கா:** அப்பா எங்கே அக்கா?

**கோமதி:** அப்பாவா? அப்பா, அப்பா, அப்பா! (கதறுகிருள்)

**பூங்கா:** என்ன அக்கா சொல்றே? சொல் அக்கா, சொல்லு! அப்பா எங்கே இருக்கிருரு அக்கா?

**கோமதி:** நான் என்னத்தைச் சொல்லட்டும்?

**பூங்கா:** சொல் அக்கா, சொல்லேன்!

**கோமதி:** எங்கேயோ போயிட்டாரு. நானும் தேடித் தேடி அலையிறேன். தந்தை இருக்கும்போது தம்பியைக் காணும்! தம்பியைப் பார்த்துட்டேன்; தந்தையைக் காணும்! நான் என்ன பாவம் செய்தேனே?

[பூங்காவனம் கண் கலங்கியவனாய் மெய்மறந்து நிற்கிறன். கோமதி விக்கி விக்கி அழுகிருள்.]

**வீட்டுக்காரர்:** (பூங்காவனம் அருகில் சென்று அவன் முதுகில் தடவியவாறு) வருத்தப்படாதே தம்பி! வா, எல்லாம் நடக்கிறபடி நடக்கும். உங்க அப்பாவைத் தேடிக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்றேன். (ஒரு பக்கமாக அழைத்துச் செல்லுகிருர்)

**வீட்டுக்காரி:** (கோமதி அருகில் சென்று) அழாதேம்மா! இதுக்கெல்லாம் அழலாமா? ரொம்ப நாளைக்குப் பிறகு தம்பியைப் பார்த்ததுக்கு சந்தோஷப் படணும். நீ தன்னந்தனியா கஷ்டப் படுறேண்ணு கடவுளே பார்த்து உன் தம்பியை இங்கே கொண்டாந்து சேர்த்திருக்கிருரு. இனி உனக்கு ஒரு கவலையுமில்லே. (தன் கணவனை நோக்கி) என்னங்க, கோமதிக்கு மில் வேலை தெரியுமாம். உங்களுக்குத் தெரிஞ்சவங்களைப் பிடிச்சி ஒரு வேலை பாருங்களேன்!

**வீட்டுக்காரர்:** அட, என்னடீ இது, ஒரே ஆச்சரியமாயிருக்கு! கோமதிக்கு மில் வேலைகூட தெரியுமா? நான் வீட்டு வேலை செய்ற பொண்ணு போலிருக்குண்ணு நினைச்சேன். பேஷ், பேஷ்! கைத்தொழில் கட்டாயம் சோறு போடும்! எம்மா, இதுக்கு முன்னலே எந்த மில்லுலே வேலை செய்தே?

**வீட்டுக்காரி :** *அதையெல்லாம் இப்போ ஏன் கேக்கிறீங்க? எல்லாம் சாவகாசமாக் கேக்கலாம். முதல்லே அவங்க மனசு சமாதானமடையட்டும்.*

**வீட்டுக்காரர் :** *அதுசரி, அதுசரி. இன்னைக்கே போயி வேலைக்கு ஏற்பாடு செய்றேன்.*

**பூங்கா :** *இல்லைங்க; இனி எங்க அக்கா வேலை செய்ய வேண்டாம். என் கையாலே சம்பாதிச்சு அவங்களுக்கு சோறு போட்டாத்தான் என் மனசு நிம்மதியாகும். ரிக்ஷா இழுத்தாவது காப்பாத்துவேன்.*

**வீட்டுக்காரர் :** *அட, என்னடா இது ஆச்சரியமாயிருக்கு! நீ எந்த வேலைக்கும் தயார்தான் போலிருக்கு! அதுசரி, இன்னைக்கு உங்க ரெண்டு பேருக்கும் நம்ம வீட்டிலே சாப்பாடு. திவ்வியமா சாப்பிட்டுட்டு, பிறகு மற்றதை யோசிக்கலாம். உனக்கு ஒரு ரிக்ஷா, நீங்க குடியிருக்க ஒரு சிறு குடிசை, எல்லாத்துக்கும் நான் ஏற்பாடு செய்றேன். இதெல்லாம் குதிர்ப்பாடு ஆனவுடனே உங்க அப்பாவை எப்படியும் தேடிக் கண்டு பிடிக்கலாம். இனி உங்களுக்குக் கவலையே வேண்டாம்!*

**பூங்கா :** *(வணங்கி) நீங்க தெய்வம் மாதிரி. உங்களை நாங்க மறக்கவே மாட்டோம்!*

**வீட்டுக்காரர் :** *கடவுளைக் கும்பிடு தம்பி, காப்பாற்றுவார்.*

●

## காட்சி 57

○

சோமசுந்தரம் பங்களாவில் முன் கட்டு — மார்க்கெட்டுக்குச் சென்றிருந்த கோபாலை எதிர்பார்த்து சலிப்புற்று நிற்கிறாள் செந்தாமரை.

**செந்தாமரை :** *(தனிமொழி) மார்க்கெட்டுக்குப் போன மனுசன் காய்கறிதான் வாங்குறாரா; இல்லே...? இன்னைக்கு வரட்டும் அவரை. உடம்பிலே உறைக்கும்படியா நல்லா கேட்டுப் போடுறேன்.*

[தலை, தோள், கை ஆகியவைகளை காய்கறிகள் ஆக்கிரமித்துக் கொண்ட நிலையில் கோபால் வருகிறான். அவனைப் பார்க்காததுபோல் வேண்டுமென்றே நடிக்கிறாள் செந்தாமரை.]

**கோபால் :** *செந்தாமரை!*

**செந் :** *அட, நீங்க போங்க உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு! நான் எங்க வீட்டுக்காரரை எதிர்பார்த்துத்*

தவிச்சிக்கிட்டிருக்கிறேன். இவரு வந்துட்டாரு, செந்தாமரென்னு!

**கோபால்:** ஏ, செந்தாமரெ! உனக்கென்ன மூளெ குழம்பிப் போச்சா?

**செங்:** குழம்புமாகலே, சட்டினியுமாகலே!

**கோபால்:** அட!

**செங்:** பிறகென்ன, நீங்களே சொல்லுங்க; அவருக்குக் கொஞ்சமாவது (தன் தலையைச் சுட்டிக் காட்டி) இது இருக்கா?

**கோபால்:** எவருக்கு?

**செங்:** அவருக்குத்தான் – எங்க வீட்டுக்காரருக்கு! மார்க்கெட்டுக்குப் போனேம்; மள மளன்னு சாமானெ வாங்கிட்டு வீடு வந்து சேர்ந்தோம்னு இருந்தாவில்லே மனுசன்! இனிமே எப்போ வர்றது; எப்போ சமையல் ஆகிறது?

**கோபால்:** ஆஹூம்! அப்டீங்களா? ரொம்பச் சரி. நீங்க உங்க வீட்டுக்காரரை எதிர்பார்த்து கதை அளந்துக்கிட்டு நில்லுங்க. நான் போயி காரியத்தைக் கவனிக்கிறேன். (போகப் புறப்படுகிறான்)

**செங்:** நான் ஒண்ணும் கதை அளக்கலே. நீதான் காய்கறி வாங்கப்போன இடத்திலே கதை பேசிட்டு இந்நேரம் வந்து சேர்ந்திருக்கே.

**கோபால்:** (நின்று) நல்ல வேளெ! உன் பித்தம் தெளிவடைஞ்சதைப் பத்தி ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி. இந்தா பாரு செந்தாமரை, நான் ஒண்ணும் வெட்டிக் கதை பேசலே; எல்லாம் காரண காரியமான கதைதான்!

**செங்:** ஆகா, மகா காரீயத்தைக் கண்டவருதான்! இத்தனெ நாளும் மில்லுக்கு மானேஜராயிடலாம்னு கொட்டாவி விட்டுக்கிட்டிருந்தே. இப்போ மார்க்கெட்டையே விலெக்கு வாங்கிடலாம்னு திட்டம் திட்டுறேயாக்கும், திட்டம்!

**கோபால்:** ஆமா, தீட்டுறுங்க! உனக்கென்னடி தெரியும்? - நீ நேத்து வந்தவ! விஷயம் எவ்வளவு தூரத்துக்கு விபரீதமாப் போயிருக்கு என்கிற விவரமே தெரியாமே, ஏண்டி இப்படி வீணுப் பேசித் தொலெக்கிறே! ஒய்யாரக் கொண்டையாம், தாளம் பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்! அப்படி யிருக்குது கதை! அதைப் பத்தித்தான் நம்ம நண்பர் சொக்கலிங்கத்துக்கிட்டே நித்த நித்தம் பேசிட்டு வர்றேன். ஒவ்வொரு நாளும் அவரு சொல்றதைக் கேட்கக் கேட்க என் தலெயே கிர்ரு கிர்ருன்னு சுத்துது!

**செங் :** அதென்ன அப்பேர்ப்பட்ட கதை — நித்த நித்தம் பேசுற தொடர் கதை!

**கோபால் :** இடர்ப்பாடு நிறைஞ்ச கதை செந்தாமரை — ரொம்ப ரொம்ப இடர்ப்பாடுகள்! எல்லாத்தையும் சாவ காசமாச் சொல்றேன்.

**செங் :** ஏன் இப்பவே சொல்லேன்! உன் மாதிரி எனக் கொண்ணும் தலே சுத்தாது!

**கோபால் :** அம்மாடீ! குடி கெட்டது போ! உன் காதிலே அது விழுந்தா மனசுக்குள்ளே நிக்காது. 'டமார்'னு வெடிச்சி நம்ம மானம் மரியாதையெல்லாம் 'படார்'னு பறந்துடும். முக்கியமா நம்ம சின்ன முதலாளி... (திடுக்கிட்டுத் தன்னே உணர்ந்து பேச்சை மாற்றி) ம்ம்... ஆமா, சின்னவரு வீட்டிலே இருக்கிறாரா, இல்லே வெளியிலே போயிட்டாரரா?

**செங் :** இருக்கிறுரு, இருக்கிறுரு.

**கோபால் :** அதுதானே கேட்டேன். வழக்கம் போல அறையைப் பூட்டிக்கிட்டு உக்காந்திருக்கிறுரா, இல்லே முகத்திலே ஏதாவது சந்தோஷக் களே தட்டுற மாதிரி —

**செங் :** இருக்கா, இல்லேயான்னு, நீயே போயி போட்டோ எடுத்துப் பாரு! பட்டணத்துக்குப் புறப்படணும்னு துடிச்சிக் கிட்டிருக்கிறுரு. நீ எங்கேன்னு இதுவரையிலே இருபதி னுயிரம் தடவை கேட்டாச்சு!

**கோபால் :** ஐயய்யோ! இப்பத்தானே வந்தாரு. அதுக் குள்ளே ஊர் சுத்தக் கிளம்பிட்டா அவரு உடம்பு என்னத் துக்கு ஆகும்! இரு, இரு, நான் போயி வேண்டாம்னு சொல்லிப் பார்க்கிறேன். (போகிறுன்)

**செங் :** இந்தா பாரு, இப்போ அங்கே ஏன் போறே?

**கோபால் :** (நின்று) ஏன்?

**செங் :** கூட அந்தம்மா இருக்காங்க.

**கோபால் :** எந்தம்மா?

**செங் :** கோகிலம்மா.

**கோபால் :** ஆங் அப்போ நான் அவசியம் போயாகணும். (போகிறுன்)

**செங் :** நாசமாப் போச்சு! புதுசாக் கல்யாணம் பண்ணிக் கிடப்போறவங்க, தனியாப் பேசிக்கிட்டிருக்காங்க. முந்திரிக் கொட்டை மாதிரி உன் தலேயைக் கொண்டு போயி அங்கே ஏன் நீட்டுறே?

**கோபால் :** (நின்று) உனக்கென்னடி தெரியும்? — நீ நேத்து வந்தவ! வாயை மூடிக்கிட்டு உன் சோலியைப் பாரு!

**செங் :** இரும்படிக்கிற இடத்திலே ஈயிக்கு என்ன வேலே?

**கோபால் :** (போய்க் கொண்டே) குரங்கு கையிலே கரும்பைக் கொடுக்க இவரு விரும்பலே!

**செங் :** (தனிமொழி) அட பாவி மனுசா! இருக்க இருக்க இவருகிட்டே கூட மர்மங்கள் வந்து தொத்திக்கிட்டது போலிருக்கே! இருக்கட்டும், இருக்கட்டும்! எல்லாத்தையும் என் கிட்டே சொல்லலே, பிறகு பார்த்துக்கிடுறேன்.

●

## காட்சி 58

○

சோமசுந்தரம் பங்களாவில் வசந்தன் அறை — அளவற்ற கவலேயோடு கன்னத்தில் கை ஊன்றியபடி உட்கார்ந்திருக்கிறுன் வசந்தன். ஏக்கமும் துக்கமும் ஒன்றையொன்று மிஞ்சுவது முகத்தில் பிரதிபலிக்க, வசந்தனே நோக்கியவாறு நிற்கிருள் கோகிலம்.

**கோகிலம் :** நான் கேட்டதற்கு பதில் சொல்ல மாட்டீர்களா?

**வசந்தன் :** (ஏறிட்டு கோகிலத்தை வெறித்துப் பார்த்து) நீ பேசாமல் போய்விட்டாலே போதும்! நான் ஆனந்தமாய் இருந்தால் என்ன; அழுது கொண்டிருந்தால் என்ன? தயவு செய்து என்னேத் தொந்தரவு செய்யாதே! எனக்கு நிம்மதியே இல்லே!

**கோகி :** நான் இருந்தால் உங்கள் நிம்மதி கெட்டு விடுமா?

**வச :** (எழுந்து) குட்டிச்சுவராகி விடும்!

**கோகி :** ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? வருஷக்கணக்காக உங்களே நினேத்து நினேத்து ஏங்கிக் கொண்டிருந்ததற்கு நான் கண்ட பலன் இதுதானு? நீண்ட நெடு நாட்களாகக் காதலித்தவளின் கதி இதுதானு?

**வச :** காதல் என்ருல் என்ன அர்த்தம்? உனக்குத் தெரியுமா?

**கோகி :** தெரியாமலென்ன! ஆண்கள் தங்கள் விருப்பம் போல் வியாக்கியானம் செய்து கொள்ள வளேந்து கொடுக்கும் ஒரு சொல்! — பெண்கள் மனதை சுக்கு நூருக உடைத்தெறியும் ஒரு கோரக் கனவு! — கண்ணுக்குத் தெரிந்தாலும் கைக்கு எட்டாத கானல் நீர்! - நிறைவேருத சபல எண்ணம்!

**வச :** அதெல்லாம் இல்லே! உன் காதல் நிறைவேறும்.

**கோகி :** நிஜமாகவா? நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?

**வச :** நான் ஏன் பொய் சொல்லப்போகிறேன்? கட்டாயம் நிறைவேறும்; நிறைவேறத்தான் வேண்டும்.

**கோகி :** (மகிழ்ச்சியுடன் கை நீட்டி) எங்கே, வாக்குக் கொடுங்கள்!

**வச :** வாழ்த்துகிறேன்.

**கோகி :** (திகைத்து) வாழ்த்துகிறீர்களா! நம்மை நாமே வாழ்த்திக் கொள்வதா?

**வச :** நம்மை அல்ல! உன்னை — உன் காதலை வாழ்த்துகிறேன் — அது நிறைவேற வேண்டுமென்று — நிறைவேறிய பின் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று!

**கோகி :** நீங்கள் இல்லாமல் எனக்குக் காதல் ஏது?

**வச :** இல்லாமலா சொல்கிறேன்?

**கோகி :** இசையின்றி பாட்டு பிறக்குமா?

**வச :** பிறக்காது.

**கோகி :** சூரியனின்றி தாமரை விரிவதுண்டா?

**வச :** விரிவதில்லை.

**கோகி :** மலரின்றி கனி பழுப்பதுண்டா?

**வச :** ஒருக்காலுமில்லை.

**கோகி :** அதுபோல்தான்! நீங்கள் இல்லாமல் எனக்குக் காதல் பிறக்காது; விரியாது; கனியாது!

**வச :** இன்னிசையோடு கூடிய தரங்கெட்ட பாடலை அரங்கேற்ற முடியுமா? அருணோதயத்தைப் பற்றி அழுகல் தாமரைக்கு அக்கறை இருக்குமா? கொய்யாப் பூவில் எட்டிக் காய் பழுப்பதுண்டா?

**கோகி :** அப்படியானால், நான் தரங்கெட்ட பாடல், அழுகல் தாமரை, எட்டிக்காய்....

**வச :** இல்லை இல்லை! நீ தெவிட்டாத தேனமுதம்; தித்திக்கும் தீங்கனி; சுவை மிக்க காதல் காவியம்! ஆனால், எனக்கல்ல!

**கோகி :** வசந்தன்!... நான் பெண்!

**வச :** அதனால்தான் நீ கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையோடு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**கோகி :** எனக்கும் உணர்ச்சி உண்டு.

**வச :** இல்லை என்று சொல்லவில்லை; அதற்குக் குறுக்கே நிற்கவும் தயாராக இல்லை!

**கோகி :** நீங்கள் என்னைப்பற்றி தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**வச :** அதற்கு அவசியமே இல்லையே!

**கோகி :** யாராவது புகார் கூறியிருக்கலாம்.

**வச :** அந்த அளவுக்கு நீ தவறாக நடந்து கொண்டாலும் அதைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

**கோகி :** (கெஞ்சும் பாவனையில்) வசந்தன், நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் தயவு செய்து மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்காக காத்திருந்தவள் – காத்திருப்பவள். அமெரிக்கப் படிப்பாளியின் மனைவி என்று பெருமைப் படுவதற்குப் பதிலாக, சிறுமைப்படும்படி என்னை விட்டு விடாதீர்கள்! உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். என் வாழ்வும் தாழ்வும் உங்கள் கையிலிருக்கிறது.

**வச :** அவரவர் வாழ்வு அவரவர் கையில். அதைப் பிறர் கையில் ஒப்படைப்பது மதியீனம். உன் வாழ்வு உன் கையில்! (உணர்ச்சி வசப்பட்டு) சொல்லப் போனால் அந்த... (திடுக்கிட்டுத் தன்னையுணர்ந்து) ஓ....ம்ம்... கோபால்!

**கோபால் :** (வந்து கொண்டே) இதோ ரெடியா, தயாரா காத்திருக்கிறேன்.

**வச :** அப்போ ரொம்ப நேரமா இங்கேதான் நிக்கிறேயா?

**கோபால் :** இல்லே, கொஞ்சம் மறைவா நின்னேன். அது தான் நடக்குதே தம்பி கதை, பாரதக் கதை!

**வச :** பாரதப் போர்தான் போ! அதுசரி, நான் இப்போ அவசரமா பட்டணத்துக்குப் புறப்படணும்...

**கோபால் :** என்ன தம்பி இது! நீ செய்றது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே! எங்கெங்கேயோ சுத்திட்டு இப்பத்தான் வந்து சேர்ந்தே. அதுக்குள்ளே புறப்படணும்னு சொல்றயே; இது நியாயமா?

**வச :** நான் என்ன செய்யட்டும்! என்னாலே நிம்மதியா இருக்க முடியலே; இருக்கவும் முடியாது.

**கோபால் :** அதெப்படி முடியாமேப் போகும்னு கேட்கிறேன். இந்த கோபால் இருக்கிற வரையிலே உனக்கு ஒரு கவலையும் வேண்டாம்! இப்போ உனக்கு என்ன கவலை? அதைச் சொல்லு முதல்லே! ஒரு கை பார்த்துப் போடுறேன்.

**வச :** அதெல்லாம் இருக்கட்டும். இப்போ நான் புறப் படணும் - நேரமாச்சு. நீ போயி சலவைத் துணிகள் வந்திருந்தா எடுத்துட்டு வாயேன்!

**கோபால் :** தம்பி, இண்ணைக்கு ஒரு நாளைக்கு மட்டும் இருந்துட்டு நாளைக்குப் புறப்படேன்! அமெரிக்காவிலிருந்து வந்ததிலேயிருந்து ஒரு நாளாவது சந்தோஷமா இருந்திருக்கிறேயா? பெரியவர் படுற வேதனையோ பார்க்கச் சகிக்கிலே!

**வச :** கோபால், இது வரையிலே நீ சொன்னதை நான் மறுத்துப் பேசினதில்லை! ஆனால், இன்னும் கொஞ்ச நாளைக்கு என் விருப்பப்படி விட்டுடு. போ, கொஞ்சம் சீக்கிரம் வா.

**கோபால் :** (கோகிலத்திடம்) அம்மா, அடியேன் ஒரு சிறு விண்ணப்பத்தை சமூகத்திலே தெரிவிக்கலாமா? (கோகிலம் வெறுப்புடன் நோக்க) தம்பி மனசு ஒண்ணும் சரியா இல்லை. நீங்க கொஞ்சம் அவரு கிட்டே பேச்சுக் கொடுக்காமே இருந்தா நல்லது.

**கோகி :** (ஆத்திரத்துடன்) மூடு வாயை! நீ யார் அதைப் பற்றிப் பேச? போ வெளியே!

**வச :** (கோபால் செல்வதைப் பார்த்து) நில் கோபால்! (கோகிலத்திடம்) அவர் யார் என்று உனக்குத் தெரிய வேண்டுமா? சின்னஞ் சிறு வயதில் தாயை இழந்து விட்ட என்னைப் போற்றி வளர்த்த பெரிய மனிதன். காசுக்காக வேஷம் போடாமல் கருத்தில் வளர்ந்த அன்புக்காக கடமையைச் செய்யும் கண்ணியவான். இந்த வீட்டிலே ஒருவர். புரிந்ததா இப்போது? நீ யார், அவரை வெளியே போகச் சொல்ல?

**கோகி :** உங்கள் எதிர்கால மனைவி—

**வச :** என்று சொல்லிக்கொண்டே இரு. ஆகப்போவது ஒன்றுமில்லை!

**சோமசுந்தரம் :** (திடீரென்று வந்து கொண்டே கோபமாக) நானுந்தாண்டா சொல்றேன். கோகிலம்தான் உன் பெண்டாட்டி—இந்த வீட்டுக்கு மருமக; தெரிஞ்சிக்கோ! நீ வாம்மா கோகிலம். என் பேச்சை இவன் கேட்கிறனா, இல்லையா என்கிறதை ரெண்டிலே ஒண்ணு பார்த்துப் போடுறேன்.

[சோமசுந்தரம் செல்ல கோகிலம் பின் தொடருகிறாள். அளவற்ற வேதனையோடு கோபாலும், அதிர்ச்சியுற்ற நிலையில் வசந்தனும் அவர்களையே பார்த்துக் கொண்டு நிற்கின்றனர்.]

**கோபால் :** ஏன் தம்பி, இண்ணைக்கே பட்டணம் போகணுமா?

**வச :** இப்பவே புறப்படணும்.

**கோபால் :** அவ்வளவு அவசரமான காரியம்...

***வச:*** இருக்கு, எல்லா விவரமும் விளக்கமா பின்னலே தெரியும்.

**கோபால்:** (போய்க் கொண்ட) என்ன விளக்கமோ போ! ஒரே வேதனையா இருக்கு.

●

## காட்சி 59

○

சென்னை - தெரு ஓரமாக ரிக்ஷாவை நிறுத்தி விட்டு அதில் சாய்ந்து உட்கார்ந்தவாறு அரைத் தூக்கத்தில் இருக்கிறன் பூங்காவனம். அந்தப் பக்கமாக வந்த வசந்தன் சற்று நின்று சுற்று முற்றும் பார்த்து ரிக்ஷா நிற்பதைக் கண்டு அருகில் செல்லுகிறன்.

***வசந்தன்:*** ஏம்பா, இங்கே டாக்ஸி கிடைக்காதோ?

***பூங்காவனம்:*** (குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்து நின்று) டாக்ஸியா? டா...க்....ஸி... நம்ம வண்டியிலே ஏறுங்க. டாக்ஸிக்கு மேலே பறக்கும். (ரிக்ஷா மெத்தையைத் தட்டிப் போட்டவாறு) நீங்க எங்கே போகணும் சொல்லுங்க, டாக்ஸிக்கு முன்னலே கொண்டு போயி நிறுத்துறேன்.

***வச:*** (அரைமனதுடன்) ம்... சரி,

[வசந்தன் ரிக்ஷாவில் உட்காரப் போகிறன். அவன் முகத்தைப் பார்த்த பூங்காவனம் திகைத்து நிற்கிறன்.]

***பூங்கா:*** (தயக்கத்துடன்) ம்... உங்களை எங்கேயோ...

***வச:*** பார்த்திருக்கிறேயா?

***பூங்கா:*** பார்த்த ஞாபகம் வருது. நீங்க பம்பாய்க்கு...

***வச:*** ம்... பம்பாயா? (பூங்காவனத்தை உற்று நோக்கி முகத்தில் மகிழ்ச்சி மலர) உன் பேரு பூங்கா...

***பூங்கா:*** ஆமாங்க, நான்தான் பூங்காவனம். ஒட்டலிலே உங்களைப் பார்த்திருக்கிறேன். ரொம்ப நேரம் பேசிக்கிட்டுக் கூட இருந்தோம்.

***வச:*** அட, என்னடா இது, ஒரேயடியா கறுத்துப் போயிட்டே. ஆளே அடையாளம் தெரியலேயே!

***பூங்கா:*** என்ன முதலாளி செய்றது? சோறு கிடைக்கும் என்கிற நிச்சயம் இல்லாமே பாடுபட வேண்டியிருக்கு.

***வச:*** நான்கூட திரும்ப பம்பாய்க்குப் போயிருந்தேன். ஒட்டலிலே உன்னைப் பற்றி விசாரிச்சா, போயிட்டான்னு சொன்னுங்களே தவிர அதுக்கு மேலே ஒரு விவரமும் கிடைக்கலே!

**பூங்கா :** அந்தக் கொடுமையை ஏன் கேக்கிறீங்க? அண்ணைக்கு என்னை நீங்க மன்னிச்சிட்டீங்க. ஆனா, பக்கத்து அறையிலே வேலை செய்ற தொழிலாளித் தோழன் என்னை மண் கவ்வ வச்சிட்டான். நேரா ஓட்டல் முதலாளி கிட்டேயே போயி, நான் உங்களைத் திட்டினேன், அது இதுன்னு கோள் மூட்டிட்டான். எப்படி யிருக்குது பாருங்க, தொழிலாளிக்குத் தொழிலாளி ஒற்றுமையும் உதவியும்!

**வச :** பிறகு?

**பூங்கா :** பிறகென்ன, நீங்க ஊருக்குப் புறப்பட்ட மறு நாளே நான் பிளாட்பாரவாசியா மாறிட்டேன். மிச்சம் மீதி சம்பளப் பணம் கையிலே இருக்கிற வரையிலே தெருத் தெருவா வேலை தேடி அலைஞ்சி திரிஞ்சேன். ஒண்ணும் நடக்கலே! பிறகுதான் உங்க நினைப்பு வந்தது. நேரா உங்க கிட்டே வரலாம்னுதான் புறப்பட்டு வந்தேன். ஆனா, நீங்க மில் முதலாளின்னு தெரியுமே தவிர, எந்த மில்லுக்கு முதலாளின்னு ஞாபகமில்லே. என்ன செய்றது? பேசாமே இந்தப் பட்டணத்திலேயே கிடைச்ச வேலையைச் செய்றதும், கிடைச்சதைச் சாப்பிட்டுட்டு கண்ட இடத்திலே தூங்குறதுமா காலத்தைக் கடத்தினேன். எப்படியும் உங்களைக் கண்டு பிடிக்கணும் என்கிற நினைப்புத்தான். நடுவிலே இந்த ரிக்ஷா இழுக்க வேண்டிய நிலைமை வந்து சேர்ந்தது.

**வச :** இப்போ என்கூட வாயேன்! மில்லுலே வேலை செய்யலாம்.

**பூங்கா :** வேண்டாங்க; இதுவே போதும். ரொம்ப நிம்மதியாவும் மனசுக்குச் சந்தோஷமாவும் இருக்கு.

**வச :** ரிக்ஷா இழுக்கிறதா உனக்கு சந்தோஷமா இருக்கு?

**பூங்கா :** கஷ்டந்தான். இருந்தாலும் மனசுக்கு ஒரு திருப்தி இருக்கு. ரெண்டாவது, மில் வேலைன்னா அங்கே மானேஜர்கள், அவங்க இவங்க எல்லாம் இருப்பாங்க. அவங்க அதிகாரத்துக்குக் கீழே தாக்குப் பிடிச்சி நிக்கிறது அவ்வளவு லேசில்லே.

**வச :** நம்ம மில்லுலே அதிகாரம் செய்றவங்க இப்போ யாருமே இல்லை!

**பூங்கா :** இருந்தாலும் இந்த ரிக்ஷாவே போதும் முதலாளி. இதை விட்டுட்டு வர்றதுக்கும்... ம்... அதெல்லாம் எதுக்கு? பின்னாலே பார்த்துக்கிடலாம். உங்க விலாசம் மட்டும் கொஞ்சம் எழுதிக் கொடுத்துட்டுப் போங்க. வரவேண்டிய அவசியம் வந்தா கட்டாயம் வர்றேன்.

**வச:** *(ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து கொண்டே) அதெல்லாம் முடியாது. எப்படியும் உன்னைக் கையோடே கூட்டிக்கிட்டுத்தான் போகப் போகிறேன்.*

**பூங்கா:** *(புன்முறுவலுடன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே) எங்கே போகணும் முதலாளி?*

**வச:** *(நகைச்சுவையுடன்) நீங்க பாட்டுக்கு உங்களுக்குத் தோணுறபடி போய்க்கிட்டே இருங்க முதலாளி.*

[இருவரும் சிரிக்கின்றனர்]

## காட்சி மாறுகிறது — தெருவில் மற்றொரு பகுதி.

[உடம்பெல்லாம் வியர்வையில் நனைந்தபடி ரிக்ஷா இழுத்து வருகிறான் பூங்காவனம். ரிக்ஷாவில் உட்கார்ந்திருக்கும் வசந்தன், கவலையும் ஏக்கமும் முகத்தில் பிரதிபலிக்க வேறெங்கோ கவனமாக சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே வருகிறான். ரிக்ஷாவை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு கைகளை முன்னும் பின்னும் நீட்டி நீட்டி மடக்கி அலுப்பையும் வலியையும் போக்கிக் கொள்ள முயலுகிறான் பூங்காவனம்.]

**வச:** *(ரிக்ஷாவிலிருந்து இறங்கி) சரி, இனி நான் நடந்து வர்றேன்.*

**பூங்கா:** *இல்லைங்க, நீங்க சும்மா உக்காருங்க. எனக்கொண்ணும் அலுப்பு இல்லை.*

**வச:** *இல்லை, இல்லை! நீ கொஞ்சநேரம் உட்காரு. நல்லா அலுப்பு தீரட்டும். நானும் உன் கூடவே நடந்து வர்றேன்.*

**பூங்கா:** *சரியாப் போச்சு போங்க. அதுக்கு ரிக்ஷா எதுக்குங்க?*

**வச:** *ரிக்ஷா வேண்டாம்; நீ வேணும்!*

**பூங்கா:** *சும்மா உக்காருங்க, இது பாடுபட்ட கட்டை முதலாளி. இன்னும் எவ்வளவு நேரமானாலும் இழுக்கத் தயார். ஆனா, நீங்க ஒரு இடத்துக்கும் போகாமே தெருத் தெருவா சுத்திச் சுத்தி வரச் சொல்றீங்களே, அதுதான் எனக்கு ஒண்ணும் புரியலே. நீங்க எங்கே போகணும்?*

**வச:** *நான் எங்கே போகணும்னு எனக்கே தெரியலே. இப்டி சுத்துனா, ஒரு வேளை நான் இழந்துவிட்ட செல்வம் திரும்ப என் கைக்குக் கிடைக்காதான்னு ஒரு ஆசை.*

**பூங்கா:** *(திடுக்கிட்டு) என்ன சொல்றீங்க, ஏதாவது திருடு போயிட்டதா?*

**வச :** ஆமா, மனசு!

**பூங்கா :** (புன்முறுவலுடன்) என்ன சொல்றீங்க?

**வச :** ம்...... ஒண்ணுமில்லே. புறப்படலாமா?

**பூங்கா :** ஏறி உக்காருங்க.

**வச :** வேண்டாம். நடந்தே வர்றேன்.

**பூங்கா :** ம்... நடந்தா வரப்போறீங்க? அப்போ...நானும் கொஞ்சம் வீட்டு வரைக்கும்...

**வச :** உனக்கு இங்கே வீடு இருக்கா?

**பூங்கா :** இல்லீங்க, சும்மா... சிறு மண் குடிசை.

**வச :** அதுசரி; அதை இந்நேரம் வரைக்கும் என்கிட்டே சொல்லலேயே!

**பூங்கா :** சொல்ற மாதிரியா ஒண்ணும் இல்லே; சொல்லலே.

**வச :** ஏன், குடிசைன்னு வெட்கப்படுறியா?

**பூங்கா :** நான் ஏன் வெட்கப்படப் போறேன்? நம்ம நாட்டு மக்கள் இப்படி இருக்கிறுங்களேன்னு நாடாளுறவங்க வெட்கப்படணும்.

**வச :** இந்தக் குடிசைகளெல்லாம் கூடிய சீக்கிரம் வீடுகளா மாறப் போகுது; மாறித்தான் ஆகணும். வேறே வழியில்லே.

**பூங்கா :** அதுக்கு முதலாளி, இந்த... சோஷலிசம்னு சொல்றுங்க பாருங்க, அது வரணும்.

**வச :** அட, நீயும் கூட சோஷலிஸ்ட் ஆயிட்டேயா?

**பூங்கா :** இப்பத்தான், எங்கே பார்த்தாலும் அந்த வார்த்தைதானே முதலாளி அடிபடுது!

**வச :** அடிபட்டா மட்டும் போதாது; அமுலாகணும். உடனடியா நம்ம நாடு சோஷலிச நாடா மாறணும்.

**பூங்கா :** இந்த இடத்திலேதான் ஒரு திருத்தம். நம்ம தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே **சோஷலிசத் தமிழ் அரசு** வரணும்.

**வச :** சந்தேகமே இல்லே. அப்பத்தான் தமிழ் நாடு பெருமையோடு வாழமுடியும். நம்ம மில்லேப் பொறுத்த வரையிலே சோஷலிசத்தை அமுல் நடத்திப் பார்க்கணும்னு எனக்கு ஒரே வெறி. இதுக்கெல்லாம் வழி காட்டினது யார் தெரியுமோ?

**பூங்கா :** படிச்சவங்க, தலேவருங்க.

**வச :** அதெல்லாமில்லே. நீதான்!

**பூங்கா :** போங்க முதலாளி, சும்மா என்னைப் போட்டுப் பிரமாதப்படுத்திப் பேசிக்கிட்டு...! வாங்க போகலாம். வீட்டிலே காலையிலேகூட சாப்பாட்டுக்குக் காசு கொடுக்கலே. இப்போ போயி ஏதாவது கொடுத்தாத்தான் அடுப்பு எரியும்.

**வச :** அப்படியா? (ஐந்து ரூபாயை நீட்டி) இந்தா!

**பூங்கா :** என் கிட்டே சில்லரை இல்லையே!

**வச :** பரவாயில்லை, வச்சிக்கோ!

**பூங்கா :** இல்லேங்க! ரொம்ப ஜாஸ்தி!

**வச :** பரவாயில்லை, சும்மா பிடி.

**பூங்கா :** (மகிழ்ச்சியோடு பணத்தை வாங்கிக் கொண்டு) ரொம்ப அதிகமாக் கொடுத்திட்டீங்க. அப்போ... நான் வரட்டுமா?

**வச :** நானும் கூட வர்றேன்.

**பூங்கா :** நீங்களுமா? வேண்டாங்க. ரொம்ப தூரமிருக்கு. இதைக் கொண்டு போயி வீட்டிலே கொடுத்துட்டு, நீங்க எங்கே வரச் சொல்றீங்களோ அங்கே வந்துடுறேன்.

**வச :** இல்லை, இல்லை. எனக்கு வேறே வேலை ஒண்ணுமில்லை. சும்மா உன்கூட அப்டீ பேசிக்கிட்டே வந்தா மனசாவது நிம்மதியா இருக்கும்.

**பூங்கா :** (ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே) அப்பச்சரி, வாங்க போகலாம். ரிக்ஷாவுக்குக் கூலியும் கொடுத்துட்டு இப்படி நடந்து வர்றவங்களை நான் பார்த்ததே இல்லை.

**வச :** நியாயப்படி பார்த்தா, நான் இந்த ரிக்ஷாவிலே ஏறியிருக்கவே கூடாது. என்ன செய்றது? ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.

**பூங்கா :** அப்படியானு, நாங்களெல்லாம் பிழைக்கிறது எப்படி முதலாளி?

**வச :** அதுக்கெல்லாம் வேறே வழி செய்யணும் முதலாளி. மனுசன் வாழப் பிறந்தானு? இப்படி வதையப் பிறந்தானு?

**பூங்கா :** உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு முதலாளி, ரொம்ப ரொம்ப நல்ல மனசு! (செல்லுகின்றனர்)

## காட்சி மாறுகிறது — ஒரு சாலை

[பூங்காவனம் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு வந்து சாலையோரமாக நிறுத்துகிருன். வசந்தன் பின்னுல் நடந்து வருகிருன்.]

**பூங்கா :** அதோ தெரியுது பாருங்க. கசாமுசான்னு ஏழெட்டுக் குடிசைங்க. அதுக்குள்ளேதான் எங்க குடிசையும் இருக்கு. (மெத்தை எடுத்துப் போட்டு) நீங்க இப்படி உக்காருங்க. இந்தப் பணத்தைக் கொண்டு போயிக் கொடுத்துட்டு ஒரு நொடியிலே ஓடியாறேன்.

**வச :** சரி. ம்... ஒண்ணு கேக்க மறந்துட்டேனே. உங்க வீட்டிலே யாராரு இருக்கிரு?

**பூங்கா :** அது பெரிய கதை. எல்லாத்தையும் வந்து சொல்றேன். உங்க கிட்டே சொல்லாமே வேறே யாரு கிட்டே சொல்லப் போறேன்.

**வச :** பணம் போதுமா? இல்லே, இன்னும்...

**பூங்கா :** வேண்டாங்க. இதுவே ஏராளம். (போகிருன்)

●

## காட்சி 60

○

ஒரு சிறு குடிசை வீடு — கோமதி கைராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருக்கிருள். பூங்காவனம் அளவற்ற மகிழ்ச்சியோடு பரபரப்புடன் வருகிருன்.

**பூங்காவனம் :** அக்கா, அக்கா! (ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து) இந்தாக்கா. இண்ணைக்கு சமையல் ரொம்பப் பிரமாதமா இருக்கணும். திருப்தியாச் சாப்பிட்டு எத்தனையோ நாளாச்சு.

**கோமதி :** (மகிழ்ச்சியோடு பணத்தை வாங்கிக்கொண்டு) ஏது தம்பி இவ்வளவு பணம்?

**பூங்கா :** எல்லாம் நான் சம்பாதிச்சதுதான். இண்ணைக்கு ஒரு பெரிய முதலாளியே நம்ம வண்டியிலே சவாரி வந்தாரு.

**கோமதி :** அதுக்கு இவ்வளவு பணமா கொடுத்தாரு?

**பூங்கா :** சும்மா கொடுப்பாரா? எனக்குத் தெரிஞ்சவரு; அதிலேயும் என் மேலே அவருக்குக் கொஞ்சம் பிரியம். இன்னும் வேணுமான்னு வேறே கேட்கிருர் போயேன்!

**கோமதி :** யாரு தம்பி அவரு?

**பூங்கா :** எல்லாம், பம்பாயிலே ஏற்பட்ட பழக்கம். ரொம்ப ரொம்ப நல்லவர்.

**கோமதி :** பம்பாய்க்காரரா?

**பூங்கா :** இல்லே, இல்லே; தமிழர்தான். கோவையிலே இளங்கோ மில்லுன்னு ஒரு மில்லு இருக்கு பாரு...

**கோமதி :** (திடுக்கிட்டு) இளங்கோ மில்!

**பூங்கா :** ஆமக்கா — நீதான் கேள்விப் பட்டிருப்பயே — அந்த ஊரிலேதானே நீயும் அப்பாவும் இருந்ததாகச் சொன்னே — அந்த இளங்கோ மில் முதலாளிதான் இவரு. (கோமதி உள்ளம் கொதித்தவளாய் பேசாமல் நிற்க) அப்போ, நான் வர்றேன் அக்கா. அவரை ரோட்டோரத்திலே நம்ம வண்டியிலேதான் உட்கார வச்சிட்டு வந்திருக்கிறேன். இன்னும் சவாரி இருக்கு; அவசரமாப் போகணும். (போகிறான்)

**கோமதி :** தம்பீ!

**பூங்கா :** (நின்று) என்னக்கா?

**கோமதி :** (கோபாவேசத்துடன்) இந்தா, இந்தப் பணத்தை அவரிடமே கொடுத்து விடு. நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய கூலியை மட்டும் வாங்கிக் கொண்டு வா!

**பூங்கா :** என்ன அக்கா இது? என் மேலே பிரியப்பட்டுக் கொடுத்தாரக்கா! - எனக்குத் தெரிஞ்சவரு.

**கோமதி :** அவர்களுடைய பிரியம் நமக்கு வேண்டாம்! ஈவு இரக்கமற்ற கொடும்பாவியின் அதிகாரத்தில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் சிக்கிச் சித்திரவதைப் படுகிறார்கள். அதைப் பார்த்தும் பார்க்காதது போலிருக்கும் படுபாவி, இந்த இளங்கோ மில் முதலாளி! அபலைப் பெண்கள் கண்ணீர் வடிப்பதைக் காணக் கண்ணில்லாத கபோதி! கதறியழுவதைச் கேட்கச் செவியில்லாத செருக்கர்!

**பூங்கா :** ஐயய்யோ! என்னக்கா இது, இப்படிப் பேசுறே? கொஞ்சம் மெல்லப் பேசக்கா! அவர் காதிலே விழப்போகுது.

**கோமதி :** தாராளமாக விழட்டும். 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்' என்ற மூதுரையை மறந்து விட்டோரின் காதுகளில் என் சொல்லம்புகள் சீறிப் பாய்ந்து தாக்கட்டும். அந்த ஆவேசத்தால்தான் இப்படிப் பேசுகிறேன். பெண்களுக்குரிய சகல குணங்களும் பொருந்திய கண்ணகி கூட கொடுமைக்குள்ளானபோது பொங்கி எழுந்தாள். அந்தப் புரட்சி வரலாற்றின் வழியிலே வந்த மக்கள், நீண்ட காலம் பொறுத்திருக்க மாட்டார்கள் என்பதை அறிவுறுத்தவே இப்படிக் கதறுகிறேன்.

**பூங்கா :** அக்கா, அவர் ரொம்ப நல்லவரக்கா! இதையெல்லாம் அவரு காதிலே கேட்டா என்ன நினைப்பாரு?

**கோமதி :** ஏழைக்கு இவ்வளவு திமிரா என்று ஆத்திரப் படுவார். படட்டுமே! அதோடு நம்மை ஒழித்துக் கட்டப் பார்ப்பார்; பார்க்கட்டுமே!

[ரோடோரத்தில் ரிக்ஷா மீது உட்கார்ந்திருந்த வசந்தன் காதில், கோமதியின் குரல் அரை குறையாக விழுகிறது. சந்தேகமும் மகிழ்ச்சியும் மனதைக் குழப்ப அங்கிருந்து குடிசையை நோக்கி வருகிறுன் வசந்தன்.]

**பூங்கா :** அதெல்லாமில்லக்கா! நீ சொல்றது ரொம்பத் தப்பு. அவரை எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும்; பழகி யிருக்கிறேன். மேல் நாடெல்லாம் சுத்திப் பார்த்தவரு. நம்மைப் போலே பாடுபடுறவங்க மேலே ரொம்பப் பற்றுதல் உடையவரு.

**கோமதி :** இல்லே; உனக்குத் தெரியாது! நம்மைக் கண்டால் பேசக்கூட மாட்டார்கள்.

**பூங்கா :** இல்லே அக்கா; எதாயிருந்தாலும் அவரை தாராளமாக் கேட்கலாம். இப்போ என்ன கேட்கணும் சொல்லு. இப்பவே கேட்டு பதில் சொல்றேன்.

**கோமதி :** அப்படியானுல், கேள்! முதலாளி வாழவும் நாடு செழிக்கவும் பாடு படுகிருனே தொழிலாளி-அவனுடைய துயர் துடைக்கத் துப்பில்லாத முதலாளியும் நாடும் இருந் தென்ன போயென்ன என்று கேள்! பாடு பட்டுப் பிழைக் கும் பெண்ணுக்குக் கற்பில்லேயா? அவள் கருத்துக் கிசைந் தவனேடு வாழ வகையில்லேயா? இவற்றுக்குக் குறுக்கே நின்று கெடுக்கும் கயவன்தான் உங்கள் மில்லுக்கு மானே ஜரா என்று கேள்!

**வசந்தன் :** (அளவற்ற மகிழ்ச்சியோடு வந்து கொண்டே) கேட்க வேண்டிய அவசியமே இல்லே! அந்தக் கயவனும் ஒழிந்தான். என் கண்மணியையும் கண்டு கொண்டேன்!

**கோமதி :** (திக்பிரமையடைந்து) நீங்களா! (பரபரப் புடன்) தம்பீ, இதோ உங்க அத்தான்; உங்க அத்தான்!

**பூங்கா :** இல்லக்கா, இவர்தான் மில் முதலாளி. நீ பாட்டுக்கு யாரோன்னு நினேச்சிக்கிட்டு... உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிப் போச்சு! (வசந்தனிடம்) உட் காருங்க... ம்... உட்காருறதுக்குக்கூட வசதியான இட மில்லே.

**கோமதி :** இல்லே தம்பி, இவர்தான் உங்க அத்தான். முதலாளி இல்லே.

**பூங்கா :** சும்மா இரு அக்கா; எனக்குத் தெரியாதாக்கும்! இவர்தான் முதலாளி. பேரு வசந்...

**கோமதி :** இல்லே வர....

**வச :** கோமதி!

**கோமதி :** (பேச நா எழாத நிலையில்) உம்!

**வச :** பூங்காவனம்தான் உங்க தம்பியா?

**கோமதி :** ஆமா.

**வச :** கண்ணன்னு சொன்னியே.

**கோமதி :** கூப்பிடுறதுதான் அப்படி.

**வச :** சரியாப் போச்சு! ரெண்டு பேரு என்னைத் திண்டாட வச்சிட்டது. உனக்கு முன்னாலே, உங்க தம்பிதான் எனக்குப் பழக்கம்.

**பூங்கா :** சரியாப்போச்சு! கடைசியிலே நீங்கதான் எங்க அத்தானு? நம்பவே முடியலையே! சரி, எனக்கு மூச்சே நின்னுடும் போலிருக்கு! (போகிறான்)

**கோமதி :** என் தம்பியை நல்லா ஏமாத்திட்டீங்க போலிருக்கே — முதலாளின்னு வேஷம் போட்டு!

**வச :** இல்லே, இல்லே; உன்னைத்தான் ஏமாத்திட்டேன் - தொழிலாளின்னு வேஷம் போட்டு!

**கோமதி :** (ஆச்சரியமடைந்து) ஆங்! இதுதான் நீங்க செய்து காட்டப் போறேன்னு சொன்ன அதிசயமா?

**வச :** அதிசயம்தான் அவதியாப் போச்சே!

**கோமதி :** அத்தான், இனிமே என்னை விட்டுட்டுப் போயிட மாட்டீங்களே?

**வச :** கையோடே கூட்டிக்கிட்டுப் போகப் போறேன். உடனே புறப்படு — பூங்காவனம் எங்கே? — பூங்காவனம்! — எல்லாக் கதையையும் ரயில்லே சாவகாசமாப் பேசிக்கிட்டுப் போகலாம்! ம்... மாமா எங்கே?

**கோமதி :** (துயரத்துடன்) உங்களைத் தேடி எங்கே அலையுறாரோ? அவரையும் உங்களையும் தேடி நான் இங்கே வந்து சேர்ந்தேன். யார் செய்த புண்ணியமோ தம்பியைப் பார்த்தேன்.

**வச :** ம்... சரி; இப்போ நேரா கோவைக்குப் போய்ச் சேரலாம். எப்பாடு பட்டாவது மாமாவைக் கண்டு பிடிக்கணும். பிறகுதான்...

●

## காட்சி 61

○

ஐயம்பெருமாள் முன்னும், பெருமாள் பின்னுமாக தெரு வழியே நடந்து செல்லுகின்றனர்.

**பெருமாள் :** ஏம்ப்பா, ஏன் கொஞ்ச நாளா மௌனச் சாமி ஆயிட்டே?

ஐயம்பெருமாள்: என்ன செய்றது? ஏகப்பட்ட சந்தேகங்கள் வந்து குவியுதே தவிர, துளிகூட தெளிவடைய வழியைக் காணும்!

பெரு: ஆராய்ச்சியிலே இறங்குறதுதானே?

ஐயம்: ஒரேடியா மூழ்கியிருக்கிறேன். மூச்சுத்தான் திணறுது! அதிலேயும் நம்ம சின்ன முதலாளி நடக்கிற நடப்பைப் பார்த்தா ஒண்ணுமே புரியலே! ரொம்ப நாளா ஒரே விசாரமா இருந்தவரு, இப்போ திடீர்னு ஒரே ஆனந்தமயமா இருக்கிறாராம்! ஆனால், அந்தக் கோகிலம்மாவை கட்டிக்கிட மட்டும் இன்னும் சம்மதப்படலேன்னு கேள்வி. ஏன் பெருமாளு, ஒரு வேளை வெள்ளைக்காரிச்சி எவளையாவது பிடிச்சி இழுத்துட்டு வந்து சேர்ந்திருப்பாரோ?

பெரு: அப்படி இருந்தா இன்னுமா வெட்ட வெளிச்சம் ஆகாமே இருக்கும்?

ஐயம்: ஒரு வேளை மர்மமா இருந்தாலும் இருக்கும்.

பெரு: இருக்கும், இருக்கும்!

ஐயம்: ஆங், அந்த சந்தேகந்தான் எனக்கு - ரொம்பத் தீவிரமா ஏற்பட்டிருக்கு. எதுக்கும் இன்னும் ரெண்டு நாளைக்குள்ளே விஷயத்தை வெட்டவெளிச்சமா உடைச்செறியிறேன் பாரு!

பெரு: (கேலியாக) நீதானே; கட்டாயம் செய்வே! ஆராய்ச்சி ஆராய்ச்சின்னு உனக்குப் பைத்தியம் பிடிக்காமே இருந்தாப் போதும்.

ஐயம்: என்னமோ, நீயே பாரு. இந்த ஒரு விஷயத்திலே நான் துப்பறியும் நிபுணன்னு பேரு வாங்கலே, என் பேரை மாத்தி வச்சிக் கூப்பிடு. வா, போகலாம். (சிறிது நடந்து ஏறிட்டுப் பார்த்து நின்று சந்தேகத்துடன்) ஆங்... பெருமாளு, எதுக்கே வர்றது யாரு தெரியுதா?

பெரு: யாரு? நம்ம முருகேசன் மாதிரி இருக்கே.

ஐயம்: சந்தேகமில்லாமே அவரேதான். மனுசன் ரொம்ப நாளா தலைமறைவா இருந்துட்டு திடீர்னு வந்து சேர்ந்திருக்கிறாரே! ம்... அவரு மட்டுந்தான் வர்றாப்லே இருக்கு. மகள் எங்கே காணும்? சந்தேகத்திலே சந்தேகம் இது மகாப் பெரிய சந்தேகமாயிருக்கே?

பெரு: எல்லாத்துக்கும் அவரே வரட்டும்; விவரமா கேட்கலாம். அதுக்குள்ளே ஏன் மண்டையைப் போட்டு உடைச்சிக்கிடுறே?

ஐயம்: அதுக்கில்லப்பா! பார்த்தவுடனே பளிச்சின்னு சந்தேகம் வந்தது. அதுதான்...

**பெரு :** சரி, சரி! (முருகேசன் அருகில் வர) வாங்க அண்ணே ; வணக்கம்.

**ஐயம் :** வணக்கம்.

**முருகேசன் :** வணக்கம். சௌக்கியமா?

**பெரு :** ஏதோ இருக்கிறோம்.

**ஐயம் :** என்ன அண்ணே, எங்களையெல்லாம் மறந்துட்டு நீங்கபாட்டுக்குச் சொல்லாக் கொள்ளாமேப் போயிட்டீங்க. ம்...

**முரு :** என்னமோ எல்லாம் என் தலைவிதி! ம்... வீட்டு வரைக்கும் போயிட்டு வர்றேன். குழந்தையைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. ஏதோ ஒரு வெறியிலே கோமதியை தனியாத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டேன்!

**ஐயம் :** அப்போ... உங்களுக்கு விஷயமே தெரியாதுண்ணு சொல்லுங்க!

**முரு :** (பரபரப்படைந்து) என்னப்பா, என்ன விஷயம்? கொஞ்சம் சொல்லப்பா!

**ஐயம் :** மனசைக் கொஞ்சம் கல்லாக்கிக்கிட்டா நல்லது!

**முரு :** (கலவரமடைந்து) என்னப்பா இது, விஷயத்தைச் சொல்லேன்!

**பெரு :** (ஐயம் பெருமாளிடம்) நீ கொஞ்சம் சும்மா இரு. (முருகேசனிடம்) வேறொண்ணுமில்லே. நீங்க போன ரெண்டு நாளைக்கெல்லாம்... இந்த மானேஜர் பாலு...

**முரு :** என்ன செய்தான் ; என்ன செய்தான் அந்தப் பாவி?

**பெரு :** இந்த ஊரிலேயே இருக்கக் கூடாதுண்ணு...

**முரு :** ஆங்!....

**பெரு :** பாவம், எங்கே போச்சோ? நீங்ககூட பார்க்கலே போலிருக்கு.

**முரு :** (ஆவேசமடைந்து) படுபாவி! அவனைப் பழிக்குப் பழி வாங்குகிறேன் பார்! பெத்த வயிறு பத்தி எரியுதடா படுபாவி! (செல்லுகிறான்)

**பெரு :** அண்ணே, அந்த மானேஜர் இப்போ இல்லே. மில்லே விட்டே ஒழிஞ்சிட்டான். சீமையிலிருந்து வந்த சின்ன முதலாளிதான் இருக்கிறாரு.

**முரு :** (சிறிது நின்று) யாராயிருந்தா என்ன? அவரையே கேட்கிறேன். இந்தக் கொடுமைக்கு என்ன பதில் சொல்லப்போறாருன்னு பார்க்கிறேன். (போகிறான்)

பெரு : பாவம், மனசு ரொம்ப நொந்து போயிருக்கிருரு.

ஐயம் : ஏன் பெருமாளு, இப்போ எனக்கு ஒரு சந்தேகம்.

பெரு : வாயை மூடு! (போகிருன்)

ஐயம் : அட, புரட்சி செய்யப் போறவர் மாதிரியில்லே பிள்ளையாண்டரும் போருரு!

●

## காட்சி 62

○

இளங்கோ மில்லில் வசந்தன் அறை – புதுத் தெம்போடும் உற்சாகத்தோடும் காணப்படும் வசந்தன். சிந்திப்பதும் எழுதுவதுமாக இருக்கிருன். பின் எழுதி முடித்ததை வாய்விட்டுப் படிக்கிருன்.

வசந்தன் : அன்புமிக்க அப்பா, நீங்கள் எங்கிருந்தாலும் சரி, உடனே புறப்பட்டு கோவை வந்து சேர வேண்டியது. இங்கு நாங்களும், உங்கள் மருமகனும் சுகமாக இருக்கிறோம். உங்களை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கோமதி – பூங்காவனம். பின் குறிப்பு – இந்த விளம்பரத்தைக் கண்ணுறும் அன்பர்கள் முருகேசன் என்பவரை தேடிக் கண்டு பிடிப்பதில் உதவி புரிந்தால் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாகத் தரப்படும். அன்னுருடைய அங்க அடையாளங்கள் வருமாறு: (மீண்டும் எழுதுவதில் ஈடுபடுகிருன்.)

[இந்நேரம் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வெறியோடு வருகிருன் முருகேசன். அறைக்குள் நுழைய முயன்ற அவனை கை நீட்டித் தடுக்கிருன் ஆபீஸ் பையன்.]

பையன் : இப்போ யாரும் போகக் கூடாது. முதலாளி வேலையா இருக்கிருரு.

முருகேசன் : அதைவிட என் வேலே முக்கியம்; அவசரம்! என்னைப் போக விடு; தடுக்காதே!

பையன் : யாராயிருந்தாலும் உள்ளே விடக் கூடாதுண்ணு உத்தரவு.

முரு : உத்தரவு கிடக்கட்டும். உள்ளம் கொதிக்கும்போது உத்தரவாவது, மண்ணுங்கட்டியாவது! வழி விடு.

பையன் : முடியாது.

முரு : நான் இப்போது மனிதனல்ல; மிருகம்! (பையனின் கையைத் தட்டி விட்டு தள்ளு கதவுகளைப் படாரென்று தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்து) நான் பெற்று

வளர்த்த மகளை ஓடோட விரட்டியடித்த அந்தக் கொடும் பாவி எங்கே? அந்தக் கொடுமையைத் தடுக்கத் துப்பில்லாத நீயும் ஒரு முதலாளியா?...நீயும் ஒரு மனிதனா? (அதிசயமும் ஆனந்தமும் முகத்தில் தாண்டவமாட எழுந்து நிற்கும் வசந்தனைப் பார்த்து திக்பிரமையடைந்து) ஆங்! நீ...?

**வசந்தன் :** வரதன்.

**முரு :** ஆங்! நீயா இந்த மில்லுக்கு முதலாளி?

**வச :** முன்னாள் முதலாளி; இப்போதைய தொழிலாளி.

**முரு :** எனக்கு ஒண்ணுமே புரியலையே!

**வச :** எல்லாம் புரியும்படி சொல்றேன். வாங்க போகலாம். கோமதியும் பூங்காவனமும் உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருக்கிறாங்க.

**முரு :** என்ன சொல்றே! என் மகள் கோமதியா? என் மகன் பூங்காவனமா?

**வச :** ஆமா.

**முரு :** (மகிழ்ச்சியுடன்) ரெண்டு பேருமா? ரெண்டு பேருமா?

**வச :** ஆமா, ரெண்டு பேருந்தான். வாங்க, அவங்க இருக்கிற இடத்துக்குப் போகலாம். எல்லாத்தையும் அங்கே போயி சாவகாசமாப் பேசலாம். இங்கே பேசுறதுக்கு சந்தர்ப்பம் ஒண்ணும் சரியாயில்லை. வாங்க!

[இருவரும் பரபரப்புடன் செல்லுகின்றனர்.]

●

## காட்சி 63

○

சோமசுந்தரம் பங்களா — கோபம் கொந்தளிக்க, ஆத்திரம் பீறிட்டெழ அப்படியும் இப்படியும் நடை போட்டுக் கொண்டிருக்கிறார் சோமசுந்தரம் — அப்பாவின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தவண்ணம் ஒரு சோபாவுக்கருகில் நிற்கிறான் வசந்தன்.

**சோமசுந்தரம் :** கூலிக்காரன் பெண்ணை மில்லுக்காரன் கட்டிக்கிடுறது எந்தக் காலத்திலே நடந்திருக்கு?

**வசந்தன் :** இனிமே நடக்கக்கூடாதா, அப்பா?

**சோம :** நடக்கிறதை நான் பார்க்க முடியாது! தலைமுறை தலைமுறையா தனவான்கள் வீட்டிலே சம்பந்தம் செய்தவங்க. இப்போ நீ தலையெடுத்ததும் தரித்திரன் வீட்டிலே பெண்

ணெடுத்து தலை இறக்கமாப் பிழைக்க இங்கே யாரும் பைத்தியம் பிடிச்சிப் போயி அலையலே. நம்ம கௌரவம் என்ன! அந்தஸ்து என்ன! இதையெல்லாம் கொஞ்சங் கூட நினைச்சிப் பார்க்காமே, முதலாளி மகன் போயி தொழிலாளி மகளைக் கல்யாணம் பண்ணிக்கிடணும்னு சொல்றயே, இதென்ன சுரக்கா வியாபாரமா? – சீமான் வீட்டுப் புள்ளே, இந்தமாதிரி காரியத்தைச் சிந்திச்சாவது பார்க்கலாமா? இல்லே, சிந்திச்சுப் பார்க்க யோக்கியதை இருக்கிற காரியமா இது?

**வச:** சிந்தித்துப் பார்த்தால், உங்களுக்கு இவ்வளவு சீற்றம் வராதப்பா!

**சோம:** டேய், போதுண்டா நிறுத்து! உன் சித்தாந்தங் களைக் கொண்டாந்து ஒரேடியா என்கிட்டே விரிச்சிடாதே! உன்னைப் போல சீமையிலே படிச்சவங்க, இந்த மாதிரி சீரழிய வழி பார்க்கலே; ரொம்பச் சீராகப் பிழைக்கிருங்க.

**வச:** மனச்சாட்சிப்படி நேர்மையான வழியிலே நடக்கிறது தான் சீரான வாழ்க்கை!

**சோம:** உன் மனச்சாட்சி சொல்லுதாக்கும், குடிசையைக் கொண்டாந்து கோட்டையிலே முடிச்சி போடுன்னு! ஏண்டா உன் புத்தி இப்படித் தடுமாறிப் போச்சு?

**வச:** தடுமாறவில்லையப்பா; தர்ம நியாயத்துக்குப் பணியுது.

**சோம:** நல்லா பணிஞ்சுது போ! இதைப் போயி நாலு பேரு கிட்டே சொல்லிப் பாரு; உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சிப் போச்சின்னு நையாண்டி செய்வாங்க. பணக்காரன் வீட்டுப் புள்ளே, நம்ம தரத்துக்குத் தகுந்தபடியா பணக் காரன் வீட்டைப் பாரு–பெண்ணைத் தேடு–கட்டிக்கோ! இது பிழைக்கிற பிள்ளைக்கு லட்சணம். இதை விட்டுப்போட்டு எவளோ ஏழையாம்; பாடுபட்டுப் பிழைக்கிற கூலிக் காரியாம்; அவளைப் போயி கல்யாணம் செய்து கொள்ளப் போருனும். அப்படி, அவ மேலே உனக்கு இரக்கம் இருந்தா, ஆயிரமில்லே, ரெண்டாயிரத்தைத் தூக்கி விட்டெறியேன்! பிழைச்சிட்டுப் போகட்டும்! அதெல்லாமில்லாமே, அவளைக் கொண்டாந்து எனக்கு மருமகளாக்கணும்னு நீ பார்த்தா. நான் என்ன இளிச்சவாயனா, இல்லே ஏமாந்த சோணகிரியா? அப்பேர்ப்பட்டவனா இருந்திருந்தா, இவ்வளவு பெரிய மில்லைக் கட்டி, இத்தனையிரம் பேரை வச்சி வேலை வாங்கி, பெத்த மகனைக் கொண்டுபோயி சீமையிலே

படிக்கப் போட்டிருக்க மாட்டேன்டா—சீமையிலே படிக்கப் போட்டிருக்க மாட்டேன்! தெரிஞ்சிக்கோ! புரட்சின்னு நினைச்சிக்கிட்டு புரியாத்தனமாப் பேசித் தொலைக்காதே! ம்... முதலாளி எங்கே! தொழிலாளி எங்கே! குபேரனுக்கு முன்னாலே, கூலிக்காரன் நிக்கிறதுக்காவது யோக்கியதை இருக்கா? வேலை செய்றவங்க கிட்டே நெருங்கிப் பேசுறதே மதிப்புக் கம்மின்னு விலகி நிற்பாங்க முதலாளிகள். நீ என்னடான்னா, அவங்களைக் கொண்டாந்து நடு வீட்டிலே வைக்கணும்னு நியாயம் பேசுறே, நியாயம்!

**வச:** அப்பா, முதலாளி — தொழிலாளி, பணக்காரன் — ஏழை, குபேரன் — கூலி, உயர்வு — தாழ்வு, அந்தஸ்து — அகௌரவம் —

**சோம:** எல்லாத்தையும் ஒரேடியா ஒழிச்சிக் கட்டணும்னு நீ பார்க்கிறே. அதுக்கெல்லாம் உனக்கு ஆயுசு பத்தாது!

**வச:** என்னைப் பொறுத்த வரையிலே அந்த பேதமெல்லாம் கிடையாதப்பா; தேவையில்லை!

**சோம:** உனக்குத் தேவை இல்லை - உலகத்தைச் சுத்திப் பார்த்தவராச்சே! என் மதிப்பு என்னாகிறது? அமெரிக்கப் படிப்பாளிக்கு அப்பன்னு பெருமைப் படுறதுக்குப் பதிலா, அனாதைப் பெண்ணுக்கு மாமான்னு சிறுமைப்படச் சொல்றே? அதெல்லாம் ஒண்ணுமே நடக்காது!

**வச:** பிறகு, என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

**சோம:** கோகிலத்தைக் கட்டிக்கிடச் சொல்றேன். நம்ம அந்தஸ்துக்கு ஏற்ற பெண்.

**வச:** ஆனால்...

**சோம:** ஆனா என்னடா, ஆனால்....?

**வச:** அதனால் நமது கௌரவம் உயராது!

**சோம:** ஏன் உயராது? தானா உயரும்! கோகிலம், சீமான் வீட்டுப் பெண்ணு. நீ சொல்ற மாதிரி சோத்துக்குச் சாகிறவ அல்ல.

**வச:** செல்வம் இருந்தால் மட்டும் போதுமா?

**சோம:** இப்போ, கோகிலத்துக்கு என்ன குறைச்சல்?

**வச:** நான் எப்படிச் சொல்வது? கன்னிப் பெண்.

**சோம:** அடே, கண்டுபிடிச்சிட்டாண்டா கன்னிப் பெண்ணுன்னு! உனக்காகக் காத்திருந்தா கல்யாணம் எப்படி ஆகும்?

**வச:** இல்லவே இல்லையப்பா! உங்களுக்குத் தெரியாது.

**சோம :** ஆமா, சீமையிலேயிருந்து நேத்து வந்து குதிச்ச உனக்குத்தான் எல்லாம் தெரிஞ்சி போச்சு! ஏண்டா, இந்தப் பிடிவாதம்?

**வச :** அப்பா, என்னை வாழ விடுங்களப்பா! எனக்குப் பிடித்த பெண்ணை மணந்து கொள்ள அனுமதித்து ஆசீர் வதியுங்கள்! நீங்கள் பெற்றெடுத்து வளர்த்த உங்கள் மகன் கெஞ்சுகிறேன்!

**சோம :** இது என்ன பேச்சின்னு பேசுறே? கோகிலத்தைக் கட்டிக்கிடுறதாக நீ பூரண சம்மதம் கொடுத்த பிற்பாடு, நான் வாக்குக் கொடுத்தேன். உன்னை நம்பி அது கன்னிப் பெண்ணுக் காத்திருக்கு. இப்போ நீ திடீர்னு மாறிப் பேசுனு அவங்க முகத்திலே எப்படி முழிக்கிறது?

**வச :** வாக்குக் கொடுத்தது உண்மை. ஆனு ...

**சோம :** உன் மனசுதான் இப்போ வகை கெட்டுப் போச்சு! சரி, சரி! எவளோ உன்னை ரொம்ப நல்லா சொக்குப் பொடி போட்டு மயக்கி இருக்கா. இப்போ புரிஞ்சுதுடா புரிஞ்சுது! இந்தா பாரு வசந்தா, காதல் கீதல் எல்லாம், சும்மா கதை காவியத்தைக் கவர்ச்சிகரமா எழுதுறதுக்குத்தான் லாயக்கு. கண்கண்ட பிழைப்பிலே கடைப்பிடிக்கணும்னு நினைக் கிறவன் சுத்தப் பைத்தியக்காரன். பேசாமே அந்த மயக் கத்தை மறந்துட்டு, கோகிலத்தை கட்டிக்கோ!

**வச :** அவளை மணக்க வேண்டியவன் இன்னொருவன்; நானல்ல! இப்போதைக்கு இதைத் தவிர வேறெதுவும் சொல்ல என்னல் முடியாது - கூடாது!

**கோபால் ;** (இந்தப் பேச்சு எதையும் கவனிக்காமல் அங்கு வந்து கொண்டே) தம்பி சொன்னதுதான் சரி!

**சோம :** மண்டையிலே அடிச்சி விரட்டுடா அவனை; சுத்த மடப்பய!

**கோபால் :** (திடுக்கிட்டு) ஏன் முதலாளி?

**சோம :** நீ என்னத்தைடா சரியைக் கண்டுட்டே? இல்லே என்னத்தைச் சரியைக் கண்டுட்டேன்னு கேட்கிறேன்.

**கோபால் :** அதென்ன முதலாளி அப்படிச் சொல்றீங்க? சரின்னு கண்டபிறகுதானே —

**சோம :** மூடுடா வாயை, முட்டாப் பயலே! அவரு சொல் றதுதான் இவருக்குச் சரியாம்!

**கோபால் :** சந்தேகமில்லாமேச் சரிதான் முதலாளி. தம்பி வந்து ...

**சோம:** பாழுங் கிணத்திலே பாயச் சொல்ருன். போயிப் பாயேன்!

**கோபால்:** தம்பி அப்படிச் சொல்லலையே! வெள்ளைக் காரனை விரட்டுற வேலையை முதல்லே துவக்கினது யாருன்னு தம்பியைக் கேட்டேன். கட்டபொம்மன்னு சொன்னுரு. டக்குன்னு எனக்கு ஒரு சந்தேகம் வந்து சேர்ந்தது. சரித் தான்னு போயி, சந்தேகத்தைத் தீர்த்துக்கிட சிலம்புச் செல்வர் எழுதின புத்தகத்தைப் படிச்சிக் காட்டுன்னு செந்தாமரையைக் கேட்டேன். படிச்சிக் காட்டிஞ. தம்பி சொன்னதுதான் சரின்னு திரும்பி வந்து சேர்ந்தேன். இதி லென்ன முதலாளி குத்தம்?

**சோம:** சரித்தான் போ! சிரிச்சித்தான் ஆறணும்.

**கோபால்:** கண்டிப்பா சிரிக்கத்தான் வேணும் முதலாளி - எப்பவும் சிரிச்சிக்கிட்டே இருக்கணும்.

**சோம:** ஆமா, உங்க சின்ன முதலாளியைப் பார்த்தா சிரிக்கத்தான் தோணுது! மேல் நாட்டிலே படிச்சவன் கிழ்நோக்கிப் போருன்.

**கோபால்:** அது ரொம்ப அவசியம் முதலாளி. அப்பத் தானே பாதையிலே கிடக்கிற கல்லு முள்ளு கண்ணுக்குத் தெரியும்!

**சோம:** போடாப்போடா பித்துக்குளி! கூலிக்காரியைக் கட்டிக்கிடப் போருனும், கூலிக்காரியை! செல்வக் குடும் பத்துப் பிள்ளையோடே சிந்தனை போற போக்கைப் பார்த்தியா?

**கோபால்:** ஆங், அப்படியா! அப்போ, அதிலே ஏதோ நல்லது இருக்கத்தான் இருக்கு.

**சோம:** உன் மண்டையிலே களிமண்ணு இருக்கு. போங்கடா போக்கத்த பசங்களா!

**கோபால்:** அது சரி! - ஏன் தம்பி, அது யாரு தம்பி அந்தப் பொண்ணு? என்கிட்டே இது நாள் வரையிலே ஒரு வார்த்தைகூடச் சொல்லலையே!

**சோம:** ஆமா, இவரு கிட்டே சொல்லாததுதான் இப்பக் குறைச்சல். ஏண்டா வயித்தெரிச்சலைக் கிளப்புறீங்க?

**கோபால்:** அதென்ன முதலாளி, அப்படிச் சொல்றீங்க? என்கிட்டே சொல்லியிருந்தா கல்யாணத்தை முடிச்சி வச்சிட்டில்லே மறு வேலை பார்த்திருப்பேன்!

**சோம:** மூடுடா வாயை, மூதேவி பிடிச்சவனே!

**கோபால் :** என்ன முதலாளி நீங்க! கல்யாணத்தையே வெறுத்துப் பேசினவரு, இப்போ செய்துக்கிடுறேன்னு சொல்றுரு. அதைப் பெரிசா நினைக்காமே, நீங்க என்னமோ...

**சோம :** ரொம்ப லட்சணமாத்தான் இருக்குடா உங்க புத்தி போற போக்கு! நீயும் அவனேடே சேர்ந்துக்கிட்டுத் தாளம் போடு! புத்தியைக் கடன் கொடுத்துட்டு அலையிற பசங்க – கல்யாணம் செய்றதாயிருந்தா கோகிலம்தான் பெண்ணு. இல்லே –

**கோபால் :** தம்பி சொல்ற பெண்ணு கழுத்திலே தாலியைக் கட்டிட வேண்டியது.

**சோம :** கோபால் !

**கோபால் :** ரெண்டிலே ஒண்ணு ஏதாவது நடந்தாச் சரிதான் முதலாளி !

**சோம :** வாயை மூடு! பேச்சு வெளியிலே வரப்படாது! (வசந்தனிடம்) என்ன, நீ என்ன சொல்றே?

**வச :** என்னை மணக் கோலத்திலே பார்க்க வேண்டுமானல் மணப்பெண்ணுக சீமாட்டி கோகிலம் இருக்க முடியாது – இருக்கக் கூடாது! அந்த இடத்துக்கு உரியவள் கோமதி – முருகேசன் மகள் – மில் தொழிலாளி – உயர்ந்த எண்ணத் திறமும், தாழ்ந்த வாழ்க்கைத் தரமும் படைத்தவள்.

**சோம :** அடாடாடா! கோமதி, கோமதி, கோமதி! யார் இந்தக் கோமதியோ? எப்பேர்ப்பட்டவளோ? யார் கண்டா?

**கோகிலம் :** (வந்து கொண்டே ஆவேசத்துடன்) அவள் ஒரு விபசாரி !

**சோம :** (அதிர்ச்சியடைந்து) ஆங் !

**வச :** (கோகிலத்தைக் கோபாவேசத்துடன் பார்த்து) யார் என்பதை நீயே உன் நெஞ்சைத் தொட்டுப் பார் !

**கோகி :** தொட்டுப் பார்க்க வேண்டியவள் அவள்! பகட்டித் திரிந்து மில்லிலிருந்து விரட்டியடிக்கப் பட்டாளே, அந்தக் கடைகேட்ட தட்டுவாணியைத் தொட்டுப் பார்க்கச் சொல்லுங்கள் !

**சோம :** ஆங், அப்பேர்ப்பட்ட மாயக்காரியா !

**வச :** அவளல்ல, இவள்! – நாவை அடக்கிப் பேசு கோகிலம்! என் எதிர்கால மனைவி அந்தக் கோமதி என்கிற

எண்ணத்தை உன் நெஞ்சிலே கொஞ்சம் நிறுத்தி, நிதானித்து, வார்த்தைகளை நிறுத்துப் பார்த்துப் பேசம்மா தாயே! அவள் ஒழுக்கங் கெட்டவள் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது? கடல் கடந்து சென்றவனுக்காகக் காத்திருக்கும் கன்னிப் பெண்ணுச்சே நீ! உனக்கெப்படி யம்மா அந்தக் கூலிப் பெண்ணின் சீலத்தைப் பற்றி ஆராய வேண்டிய அவசியம் வந்தது — அவகாசமும் கிடைத்தது? இதற்கு பதில் சொல்ல முடியுமா உன்னுல்?

**கோகி:** நான் சொல்ல வேண்டியதில்லை! இந்த ஊரே சொல்லும்; மில்லில் வேலை செய்யும் அத்தனை பேரும் சொல்வார்கள்.

**சோம:** பிறகென்ன, எல்லோரையும் வரிசையா நிறுத்தி வச்சிக் கேட்டுப் பார்த்துட்டாத் தெரிஞ்சி போகுது. இப்பேர்ப்பட்டவளைப்பற்றியா இவ்வளவு தூரம் வாதாடுறே! சரி, சரி! ரொம்பச் சரியாக் கெட்டுப் போயிருக்கே!

**வச:** அப்பா, பழி சொல்லி ஊரெல்லாம் புரளி செய்தால் சூருவளி போல் பரவுவதை யாருமே தடுக்க முடியாது! நல்ல விஷயமா, நாலு பேரோடு நிற்க?

**கோகி:** பழி சொல்ல நான் என்ன அவளுக்குச் சக்களத்தியா?

**வச:** ஆக வேண்டுமென்று நீ தலை கீழாக நின்ருலும், அதற்கு வாய்ப்புமில்லை; வகையுமில்லை. அவள் கற்பிழந்தவள் என்பதை உன்னுல் நிரூபிக்க முடியுமா? ஒரே ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடு, பார்க்கலாம்!

**கோகி:** அவள் மில்லிலிருந்து விரட்டப் பட்டதற்குக் காரணம்?

**வச:** (கடூரமாக) காரணம்!... மிருகத்தனம்!

**கோகி:** மற்றப் பெண்கள் யாரும் இந்த கதிக்கு ஆளாக வில்லையே!

**வச:** அவர்களெல்லாம் அதிகாரியின் நச்சுப் பார்வையிலிருந்து தப்பியிருக்கலாம். ஆனுல் அந்தக் கோமதியோ, மானேஜரின் ஆசை நிராசை ஆனதால் ஏற்பட்ட வெறிக்குப் பலியான அபலை!

**கோகி:** எல்லாம் அந்தப் பாவி கொடுத்த வாக்குமூலம் போலிருக்கிறது!

**வச:** அவளா பாவி? அவளைப் பாவி என்று வாய் கூசாது கூறும் நீ வஞ்சகி! கண்ணியமாக உழைத்துப் பிழைத்த உத்தமியைக் கன்னத்திலடித்துப் பழி தூற்றிய நீ பாதகி!

கல்யாணத்திற்காகக் காத்திருக்கும் மணப்பெண் போல் பாவலாப் போட்டு, மானேஜர் பாலுவின் கள்ளக் காதலியாக உல்லாசபுரியில் பவனி வரும் நீ படுபாவி! பணத்துக்காக மணமும், இன்பத்துக்காகப் பரத்தை வாழ்வும் நடத்தத் திட்டமிட்ட நீ சதிகாரி! சண்டாளி!

**கோபால்**: சரி, சரி! நம்ம நண்பர் சொக்கலிங்கம் சொன்னது...

**கோகி**: ஐயய்யோ! இதெல்லாம் பொய்! கட்டுக் கதை! வீண் பழி! ஐயோ! அந்தப் படுபாவி இப்படியெல்லாம் என் மீது பழி சொல்லி, உங்களை மயக்கி யிருக்கிறுளே!

**வச**: மூடு வாயை! மயக்கித் திரிபவள் நீ! அந்தக் கலையில் கை தேர்ந்தவள் நீ!

**சோம**: ஏ, கோபால், யாரு அது சொக்கலிங்கம்?

**கோபால்**: அவன்தாங்க, நம்ம மாஜி மானேஜர் வீட்டு சமையல்காரன்.

**சோம**: அவன் என்ன சொன்னுன்?

**கோபால்**: வேறே என்னத்தைச் சொன்னுன்? தம்பி சொன்னதைத்தான் சொன்னுன்.

**சோம**: சரி சரி, பிரச்னை பெரிசா இருக்கே!

**கோகி**: இல்லை, இல்லை! இதெல்லாம் பொருமையால் ஏற்பட்ட விளைவு. அந்தச் சொக்கலிங்கம் கோமதியின் சொந்தக்காரன்.

**கோபால்**: அவன் சோழ நாட்டுக்காரனுச்சே! ஏன் தம்பி அந்தப் பொண்ணு?

**வச**: பாண்டி நாடு!

**கோபால்**: பலே பேஷ்! பலே பேஷ்!

**சோம**: போதுண்டா நிறுத்து! உடம்பே பற்றி எரியுது!

**கோகி**: இது அவ்வளவும் பொய்! புனைச் சுருட்டு! என்னையும் உங்களையும் பிரித்து வைத்து, அந்த இடத்தைக் கைப்பற்ற அந்தக் கூலிக்காரி போட்ட திட்டம். அந்தத் திட்டப்படி செய்த சூழ்ச்சி. சூழ்ச்சி செயல்பட உங்களுக்குக் கொடுத்திருக்கும் மயக்க மருந்து.

**வச**: மரியாதையோடு பேசு! உன் மமதை செல்லுபடியாகும் இடமறியாது உளருதே! உன் மாய்மால ஜால

வேடிக்கைகளைக் கண்டு பல்லை இளிக்கும் இளிச்சவாயனல்ல இந்த வசந்தன். வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய்? நீ யார், எப்பேர்ப்பட்டவள் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்.

**சோம:** இதென்ன இது, பெரிய வம்பாப் போச்சே! கொஞ்சம் நிதானமாத்தான் பேசுங்களேன்! (கோகிலத்திடம்) ஆமா, அந்தப் பெண்ணை மில்லிலிருந்து விரட்டிட்டதாகச் சொன்னியே, அது எப்போ?

**கோகி:** இவர் சீமையிலிருந்து வருவதற்கு முன்பே.

**சோம:** (வசந்தனிடம்) பிறகெப்படி உனக்கு அவளைத் தெரியும்? இதுவரையிலே எந்த அறிகுறியும் இல்லாமே, இப்போ நீ திடீர்னு புரளியைக் கிளப்பினா யாரு நம்புறது? வீணா கோகிலத்தை ஏசாதே! நம்ம வீட்டிலே விளக்கேத்தி வைக்கப்போற பெண்ணு.

**கோபால்:** என்னைப் போல கேள்விப் பட்டதைத்தான் தம்பியும் சொல்றாரு. இதிலென்ன தப்பு?

**சோம:** கேட்பார் பேச்சைக் கேட்டுத்தான் குட்டிச் சுவராப் போச்சே!

**வச:** கேள்விப்பட்டதல்ல! என் கண்களால் கண்டதைத் தான் சொல்லுகிறேன். நான் ஜப்பானுக்குப் போவதாக அனுப்பிய தந்தியைக் கண்டு நீங்கள் கவலைப் பட்டீர்கள். கவலைப் பட்டதாக நடித்ததுண்டு - கண்மறைவாக காதல் ஆட்டம் போடும் இந்தக் கோகிலமும், இவளது கண்ணாளன் பாலுவும்! நான் ஜப்பானுக்கா போனேன்? இல்லை; நேராக இங்கேதான் வந்தேன் — ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் படும் அவதியை அனுபவத்தில் அறிந்து கொள்வதற்காக! மூன்று மாத காலம் முதலாளி வசந்தனாக அல்லாமல், தொழிலாளி வரதனாக வேலை செய்திருக்கிறேன் — எனக்குச் சொந்தமான இந்த இளங்கோ மில்லில்! ஆஜர் பட்டியைப் புரட்டிப் பாருங்கள்! அங்கே, கை நீட்டி கூலி கொடுக்க வேண்டிய இந்த முதலாளி வசந்தனின் பெயர், கையேந்திக் கூலி வாங்கும் தொழிலாளி வரதனாகப் பதிவாகியிருக்கும்.

**கோகி:** இதெல்லாம் வெறும் சப்பைக் கட்டு. கோமதியின் சதிகாரச் செயல்களை மூடி மறைக்க நீங்கள் கூறும் கற்பனைக் கதை!

**வச:** நீ கதைப்பதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை!

**சோம:** பிறகென்னடா நீ பேசுறது? வெள்ளைக் காக்கா பறக்குதுன்னா எங்கே பறக்குதுன்னா வாயைப் பிளப்பாங்க?

முதலாளி மகன், தலைமறைவா தொழிலாளியா இருந்தான்னு சொன்னு யாரு நம்புவாங்க ?

**வசு :** நம்ப மாட்டார்கள். இந்தமாதிரி நடக்கும் என்று யாருமே கனவில்கூட கருத மாட்டார்கள். அதனால்தான் நான் வரதனுக வந்தபோது மில்லுக்குள் நுழைய விடாமல் தடுத்த அந்தக் காவல்காரனுக்குக் கூட என்னைக் கண்டால் அந்த வரதன் ஞாபகமே வருவதில்லை.

**கோபால் :** என்ன தம்பி இது ; என் தலையே சுத்துற மாதிரி இருக்கே! இதெல்லாம் நிசமா ?

**வசு :** பொய்யா என்று இந்தப் புண்ணியவதியைக் கேட்டுப் பார்—பதில் கிடைக்கும்! வேலைவேண்டி மானேஜரிடம் கெஞ்சி நின்ற போது, அவனோடு கொஞ்சிக் கொண்டிருந்த இந்தக் கோகிலத்தை விசாரித்துப் பார்—விவரம் தெரியும்! காசுக்காக என்னிடமும், காம வெறிக்காக அவனிடமும் இரட்டை வாழ்வு நடத்தத் திட்டமிட்டு, திருமழிசையை எனக்குத் தீட்டக் குழைத்துக் கொண்டிருந்த நேரத்திலே, இடைஞ்சலாக நான் செல்ல, என்னை எவனோ ஒரு கூலிக் காரன் என எண்ணிக்கொண்டு ஏசி மிரட்டி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ள உத்தரவிட்டானே அந்தக்கயவன், மானேஜர் பாலு—அப்போது கதவுக்குப் பின்னல் ஒளிந்து கொண்டிருந்த இந்தக் கன்னியிடம்—அல்ல, கள்ளியிடம் வினப்போடு—விடை கிடைக்கும்!

[கோகிலம் திக்பிரமை பிடித்தவளாய் சோபாவில் தொப்பென்று உட்காருகிருள்.]

**சோம :** என்னடா இது, நீ சொல்றதைப் பார்த்தா தலையே சுத்துறமாதிரி இருக்கு! நீ தொழிலாளியா வேலை செய்தபோதுதான் அந்தப் பெண்ணோடே பழக்கம் ஏற்பட்ட தாக்கும் ?

**வசு :** ஆமாம்! அனுதை போல் நடித்த என்னை ஆதரித்து, இருக்க இடம் கொடுத்து, மில்லில் வேலையும் தேடித் தந்தவர் முருகேசன்—கோமதியின் தந்தை—நம் மில்லில் தொழிலாளி. கோமதியைக் கெடுக்க முயன்ற பாலு, முருகேசனிடம் முகம் மலர்ந்து பேசினன். அந்த முறையில்தான் எனக்கு வேலை கொடுத்தானே தவிர, என் கோலத்தைக் கண்டு இரக்கப் பட்டு அல்ல! வேலை கேட்பதற்காக நானும் முருகேசனும் பாலுவின் வீட்டுக்குச் சென்றபோது அங்கே கேளிக்கைக் காக வந்த இந்தக் கோகிலம் என்னை ஏசினள்! மறந்து விட்டாளா இந்தச் சிங்காரி, அந்த இறுமாப்புச் சிலுசிலுப்புப்

பேச்சை! மறைமுகக் காதலனோடு கொஞ்சித் திரியும் இவளும் ஒரு மணப் பெண்!

**கோபால்:** சரி, சரி! நம்ம நண்பர் சொக்கலிங்கம் சொன்னது ...

**சோம:** அவன் என்ன சொன்னுன்னு சொல்லித் தொலேயேன்!

**கோபால்:** அவர் சொன்னரு — இந்த அம்மாவை அந்த மானேஜரே கட்டிக்கிடணும்னு வலுக்கட்டாயப் படுத்தின தாகவும், அதைத் தவிர மத்தப்படி வழக்கம்போல நடந்துக் கிடலாம்னு இந்தம்மா சொன்னதாகவும், அதெல்லாம் முடியாது, கட்டின என்னேக் கட்டிக்கோ, இல்லே நம்ம குட்டை நாலு பேருக்கு முன்னலே உடைச்சிப் போடுவேன்னு அந்த ஆத்மா மிரட்டினதாகவும், அந்த மட்டிலே இந்தம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டதாகவும் — (கோகிலம் மயக்கம் போட்டு சாய) ஐயய்யோ! நிசமாவே சாஞ்சிட்டாங்களே!

**சோம:** சரி, சரி! அவங்க அப்பாவுக்குத் தகவல் கொடு! அவனேக் கொண்டாந்து மானேஜராக்க இவங்க ஏன் அவ் வளவு தூரத்துக்கு சிபார்சு செய்தாங்க என்கிறது எனக்கு இப்பத்தான் புரியுது!

**வச:** இப்போ, என்னப்பா சொல்லுகிறீர்கள்? கோகி லத்தைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதான?

**சோம:** ரொம்ப லட்சணமாத்தான் இருக்கும்! சரி சரி, முதல்லே அந்தக் கோமதியை அழைச்சிட்டு வா! அடுத்த நல்ல நாளிலேயே முகூர்த்தத்தை வச்சிப் போடுறேன். மைனரிட்டி மதிக்கலேன்ன, மெஜாரிட்டி மதிச்சிட்டுப் போகுது!

●

## காட்சி 64

○

வசந்தன் — கோமதி திருமண விழாவில் கலந்து கொள் வதற்காக ஐயம்பெருமாளும் பெருமாளும் தெரு வழியே செல்லுகின்றனர்.

**ஐயம்பெருமாள்:** என்னப்பா இது, ஊர்ப்பட்ட சந்தேகங் கள் வந்து சேருதே தவிர, நம்ம சின்ன முதலாளிதான் வாதன வந்திருப்பார் என்கிற சந்தேகம் என் தலைப்பக்கமே தலகாட்டலே பார்த்தியா!

**பெருமாள்:** அது ஏன் காட்டுது? உன் மண்டையைக் குடையிற சந்தேகங்கள் அத்தனையும்தான் வெறும் குப்பை யாச்சே!

**ஐயம்:** இனிமே இந்த சந்தேகப்படுற தொழிலேயே விட்டுத் தொலேச்சி தலே முழுகிடப் போறேன் பார்!

**பெரு:** அதுதான் ரொம்பச்சரி!

**ஐயம்:** இருந்தாலும் பெருமாளு, எனக்கு வந்து... ஒரே ஒரு சந்தேகம் - ரொம்பப் பெரிய சந்தேகம்!

**பெரு:** நாசமாப் போச்சு! எடுத்ததுக்கெல்லாம் சந்தேகப் படுறது ஒரு பெரிய வியாதி. அது மனுசனே நிம்மதியா வாழ விடாதப்பா, வாழ விடாது!

**ஐயம்:** அதுதான் சந்தேகமில்லாமேத் தெரிஞ்சிபோன சங்கதியாச்சே! இருந்தாலும் பெருமாளு, ஒரு பெரிய முதலாளி மகன், தொழிலாளியா வந்து வேலே செய்தார்னு சொன்னு, அதைச் சந்தேகத்துக்கு இடமில்லாத சங்கதின்னு எப்படி நம்புறது?

**பெரு:** இப்போ நம்புறேயா, இல்லேயா?

**ஐயம்:** நம்புறேன், நம்புறேன். அவரே எல்லாத்தையும் விவரமா — சந்தேகத்துக்கு இடமில்லாதபடி விளக்கமாச் சொல்றபோது நம்பாமே எப்படி இருக்க முடியும்?

**பெரு:** பிறகென்ன, பேசாமே நட; காலாகாலத்திலே கல்யாணத்துக்குப் போய்ச் சேரலாம் — முதலாளியும் தொழிலாளியும் ஒண்ணு சேரப்போற அதிசயத்தைப் பார்க்கலாம்!

**ஐயம்:** (சென்றுகொண்டே) ஆமாமா, வா போகலாம். இனிமே சந்தேப்படுற புத்திக்கு சரியான சவுக்கடி கொடுக்கப் போறேன். (நின்று) ஏன் பெருமாளு, நம்ம சின்ன முதலாளி சொல்ற விஷயங்கள்—

**பெரு:** சிந்திச்சுப் பார்த்தா, சந்தேகப் பட்டியலுக்குத் தாவுதோ?

**ஐயம்:** தாவுற மாதிரி இருக்கு.

**பெரு:** (எரிச்சலுடன்) ஆமா, உன் தலேயிலே இருக்கு! இனிமே சந்தேகம்னு வாயைத் திறந்தே...

**ஐயம்:** இல்லே, இல்லே! வா, போகலாம்! (சென்று மறு படியும் நின்று) வந்து.... இன்னெரு...

**பெரு:** சந்தேகமா?

**ஐயம் :** இல்லே இல்லே, விளக்கம்.

**பெரு :** அப்படிக் கேளு ; தாராளமாச் சொல்றேன்.

**ஐயம் :** வந்து... இனிமே நம்ம மில்லுக்கு முதலாளின்னு யாருமே கிடையாது ; எல்லோரும் தொழிலாளிகள்தான்னு நம்ம சின்ன முதலாளி சொல்லிட்டாரே – இதுக்கு பணம் போட்டிருக்கிற மத்த டைரக்டர்கள் சம்மதிப்பாங்களோ ?

**பெரு :** சம்மதிக்காமே, குதிப்பாங்களோ ? அதுதான், வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா சொல்லிட்டாரே ! இருந்தா, தொழிலாளியா இருங்க - உங்களாலே முடிஞ்ச வேலையைச் செய்துக்கிட்டு! இல்லே, நீங்க போட்ட பணத்தைக் கையிலே வாங்கிக்கிட்டு கம்பியை நீட்டுங்க. இனிமே கொள்ளே கொள்ளேயா லாபம் வரும்; பங்கு போடலாம் என்கிற நினைப்பை அடியோடே விட்டுத் தொலேங்க. இப்படி கரூரா சொல்லிட்டாரு என்கிறது உன் காதிலே விழலேயா ?

**ஐயம் :** ஆமாமா, இனிமே அவங்களாலே என்ன செய்ய முடியும் ? என் பெருமாளு, இந்த மாதிரி மத்த முதலாளி களும் மாறிட்டா...

**பெரு :** இந்தத் துன்ப லோகம் இன்ப லோகமாக் காட்சி யளிக்கும்.

**ஐயம் :** அதிலே வேறே சந்தேகமே இல்லே ! (இருவரும் செல்லுகின்றனர்)

●

## காட்சி 65

○

சோமசுந்தரம் பங்களாவில் பின்கட்டு. நாதசுவர ஒலி இனிமையாகக் கேட்கிறது. கோபால், கையில் ஒரு புடவையுடன் வருகிறுன்.

**கோபால் :** செந்தாமரை, செந்தாமரை !

**செந்தாமரை :** (வந்து) ஏன் ?

**கோபால் :** இந்தா, இதைக் கட்டிக்கோ. சீக்கிரம் புறப் படு. நீதான் பெண்ணழைக்கப் போகணும்.

**செந் :** எனக்குப் பழைய புடவையே போதும் ! இது எதுக்கு, கைத்தறிப் புடவை ?

**கோபால் :** அட, பட்டுப் பீதாம்பரங்கள் வேணுமோ - பகட்டுறதுக்கு ?

**செங் :** பிறகென்ன, இது முதலாளி வீட்டுக் கல்யாணம் மாதிரியா இருக்கு ?

**கோபால் :** மூடு வாயை ! முதலாளி வீட்டுக் கல்யாணம்னு எந்த மடப்பய சொன்னுன் ? இது தொழிலாளி வீட்டுக் கல்யாணம் மண்டு, தொழிலாளி வீட்டுக் கல்யாணம் ! அதுக்கேத்த புடவைதான் உனக்கும் வந்திருக்கு ! வசந்துத் தம்பி சொன்னது இன்னும் உன் மந்தபுத்தியிலே ஏறலேன்னு அதுக்கு நான் என்ன செய்றது ? (புடவையை செந்தாமரையின் கைகளில் திணித்து) பேசாமேக் கட்டிக்கிட்டுக் கிளம்பு; திருப்பூட்டுறதுக்கு நேரமாச்சு. முதலாளி முதலாளின்னு பேசிக்கிட்டு நிண்ணே, பிறகு பார்த்துக்கோ ! அந்த முதலாளி என்கிற நாமதேயமே எங்கேயும் தலைகாட்டாமேச் செய்றதுக்கு நானும் சின்னவரும் கிளம்பிடுவோம் ! பிறகு உங்க அம்மா வீட்டுக்கு மூட்டையைக் கட்டிக்கிட்டு நீ கிளம்ப வேண்டியதுதான் ஜாக்கிரதை !

[கோபால் வேகமாகச் செல்லுகிருன். செந்தாமரை புன்முறுவலோடு நிற்கிருள். பின், புடவையைப் பிரித்து அழகு பார்க்கிருள்.]

## காட்சி மாறுகிறது — மணப் பந்தல்.

[சோமசுந்தரம், முருகேசன், பூங்காவனம், கோபால் - செந்தாமரை, ஐயம்பெருமாள் - பெருமாள், சொக்கலிங்கம் மற்றும் பலர் இருக்கின்றனர். கொட்டு மேளம் முழங்க வசந்தனும் கோமதியும் மகிழ்ச்சிப் பெருக்கோடு மாலை மாற்றிக் கொள்கின்றனர். சோமசுந்தரம் முருகேசனை உற்றுப் பார்க்கிருர். சைகைசெய்து கோபாலை அழைத்துக் கொண்டு ஒரு ஓரமாகச் செல்லுகிருர்.]

**சோமசுந்தரம் :** ஏண்டா, (முருகேசனைக் குறிப்பிட்டு) அவருக்குப் பட்டுச் சட்டை தைக்கச் சொன்னேனே, ஏன் தைக்கலே ?

**கோபால் :** நம்ம தம்பி, அதெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டாரே !

**சோம :** அவன் சொல்லுவான் – அவனுக்கு என்ன வேலை ? இத்தனை நாளும்தான் அவரு தொழிலாளி, இப்போ நம்ம சம்பந்தியாச்சேடா ! அதுக்குத் தகுந்தபடி மதிப்பா இருக்க வேண்டாம் ?

**கோபால்:** அதைத்தான் நானும் சொல்லிப் பார்த்தேன். கேட்டாத்தானே? மிஞ்சிப் பேசுனு, என்ன சொல்ருரு தெரியுமோ? நாமெல்லாம் துணிக்குச் செலவழிக்கிறதைச் சுருக்கிக்கிட்டா கட்டத் துணியில்லாத எத்தனேயோ பேருக்கு துணி கிடைக்குமாம்!

**சோம:** சரியாப் போச்சு! கடைசியிலே எல்லாப் பசங் களும் சேர்ந்துக்கிட்டு நம்மளேயே மாத்திப் போடுவாங்க போலிருக்கே. ம்... சரி... எப்படியோ எல்லோரும் சுகமா இருந்தாச் சரி. போகும்போது நாமென்ன தலையிலா கட்டிக் கிட்டுப் போருேம்!

**கோபால்:** ஆங், அப்படிச் சொல்லுங்க. அதுதான், தம்பி சொல்ற இன்பலோகத்துக்கு வழி. எல்லோருடைய சுகம் தானே நம்ம சுகம்!

[சோமசுந்தரம் புன்முறுவல் பூக்கிருர். இதைக் கவனித்துக் கொண்டிருந்த மற்றவர்களும் மகிழ்ச்சி யடைகின்றனர்.]

சுபம்!

மதுரை காமராசர் பல்கலை... அவ்வை ... ச... சண்முகம் நூல... மதுரை.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் – வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்!

— பாரதியார்

நூலகம்.

**ஐயம் :** இல்லே இல்லே, விளக்கம்.

**பெரு :** அப்படிக் கேளு ; தாராளமாச் சொல்றேன்.

**ஐயம் :** வந்து... இனிமே நம்ம மில்லுக்கு முதலாளின்னு யாருமே கிடையாது ; எல்லோரும் தொழிலாளிகள்தான்னு நம்ம சின்ன முதலாளி சொல்லிட்டாரே – இதுக்கு பணம் போட்டிருக்கிற மத்த டைரக்டர்கள் சம்மதிப்பாங்களோ ?

**பெரு :** சம்மதிக்காமே, குதிப்பாங்களோ ? அதுதான் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டா சொல்லிட்டாரே ! இருந்தா, தொழிலாளியா இருங்க - உங்களாலே முடிஞ்ச வேலையைச் செய்துகிட்டு! இல்லே, நீங்க போட்ட பணத்தைக் கையிலே வாங்கிகிட்டு கம்பியை நீட்டுங்க. இனிமே கொள்ளை கொள்ளையா லாபம் வரும் ; பங்கு போடலாம் என்கிற நினைப்பை அடியோடே விட்டுத் தொலைங்க. இப்படி கருரா சொல்லிட்டாரு என்கிறது உன் காதிலே விழலையா ?

**ஐயம் :** ஆமாமா, இனிமே அவங்களாலே என்ன செய்ய முடியும் என் பெருமாளு, இந்த மாதிரி மத்த முதலாளி களும் மாறிட்டா...

**பெரு :** இந்தத் துன்ப லோகம் இன்ப லோகமாக் காட்சி யளிக்கும்.

**ஐயம் :** அதிலே வேறே சந்தேகமே இல்லை ! (இருவரும் செல்லுகின்றனர்)

●

## காட்சி 65

○

சோமசுந்தரம் பங்களாவில் பின்கட்டு. நாதசுவர ஒலி இனிமையாகக் கேட்கிறது. கோபால், கையில் ஒரு புடவையுடன் வருகிறுன்.

**கோபால் :** செந்தாமரை, செந்தாமரை !

**செந்தாமரை :** (வந்து) ஏன் ?

**கோபால் :** இந்தா, இதைக் கட்டிக்கோ. சீக்கிரம் புறப் படு. நீதான் பெண்ணழைக்கப் போகணும்.

**செந் :** எனக்குப் பழைய புடவையே போதும் ! இது எதுக்கு, கைத்தறிப் புடவை ?

**கோபால் :** அட, பட்டுப் பீதாம்பரங்கள் வேணுமோ - பகட்டுறதுக்கு ?

அடுத்து வெளிவரவிருக்கும்
இந் நூலாசிரியரின்
நாடகங்களும் நாவல்களும்

★

காணி நிலம்
தாயில்லாப் பிள்ளை
அன்னையும் மகனும்
வாழ்வும் தாழ்வும்
அன்டளிப்பு
மங்கள தீபம்
இவன்தான் மனிதன்
பெண்ணும் மண்ணும்
தேசத்தொண்டன் ஆண்டியப்பன்
இன்ப லோகம்
தமிழ் மகன்

★

Jacket Printed at Nathans Press, Madras - 2.